
# தீவக ஒளி



வெளியீடு:-
வலயக்கல்வி அலுவலகம்
தீவகம்
வேலணை
2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக ஒளி

## ஆசிரியர் மகாநாட்டு மலர்

## 2016

PUBLIC LIBRARY
JAFFNA

PUBLIC LIBRARY
JAFFNA

8590(P)

**வலயக் கல்வி அலுவலகம்,**

**தீவகம் - வேலணை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் முகம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **"தீவக ஒளி"** |
| பதிப்பாசிரியர்கள் | : | திரு.த.க.பிரபாகரன் - ISA (Art) |
| | | திரு.சி.சிவகுமார் - ISA (Tamil) |
| ஆண்டு | : | சித்திரை - 2016 |
| விடயம் | : | ஆசிரியர் மகாநாடு - 2016 இன் கட்டுரைகள் மற்றும் கவிதைகளின் தொகுப்பு. |
| அட்டைப்பட ஓவியம் | : | திரு.T.K.பிரபாகரன் |
| அச்சு எழுத்து | : | 12 |
| தாள் | : | (B5- 80gsm) வெள்ளைத்தாள் |
| பக்கங்கள் | : | xx +260 =**280** |
| வெளியீடு | : | வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை. |
| உரிமை | : | தீவக வலயக்கல்வி அலுவலகத்துக்கு. |
| பிரதிகள் | : | **700** |
| அச்சுப்பதிப்பு | : | தீபம் பிறிண்டேர்ஸ்,<br>717,கே.கே.எஸ்.வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>021 222 6818. 077 250 6234 |
| மின்னஞ்சல் | : | theepam2014@gmail.com |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக ஒளி
## மலர்வெளியீட்டுக் குழு

*நிர்வாகமும் மேற்பார்வையும் :*
**திரு.சு.சுந்தரசிவம்**
(வலயக்கல்விப் பணிப்பாளர், தீவகம்)

PUBLIC LIBRAR
JAFFNA

*வழிகாட்டல் ஆலோசனை*
**திரு.ச.பாஸ்கரன்**
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் - நிர்வாகம்)
**திரு.அ.ஸ்ரனிஸ்லாஸ்**
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் - கல்வி அபிவிருத்தி)
**திருமதி.ம.நிறைஜா**
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் - திட்டமிடல்)

**பதிப்பாசிரியர்கள்**
**திரு.த.க.பிரபாகரன்**
(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் -சித்திரம்)
**திரு.சி.சிவகுமார்**
(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் -தமிழ்)

**சரவைநோக்குநர்கள்**
**திரு.இ.ஜெயகரன்**
(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் -விசேட கல்வி)
**திரு.சி.சிவகுமார்**
(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் -தமிழ்)
**திரு.த.தயாபரன்**
( ஆசிரியர் - யா/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்)

*மலர்க்குழுவினர்*
**திரு.த.க.பிரபாகரன்**
**திரு.சி.சிவகுமார்**
**திரு.இ.ஜெயகரன்**
**திரு.பு.ஸ்ரீஸ்கந்தராஜா** (ISA - Science)
**திரு.த.தயாபரன்**
**திரு.ந.சசிகுமார்**
( ஆசிரியர் - யா/ புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் செயலகம்
வடக்கு மாகாணம், 124, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

OFFICE OF THE MINISTER OF EDUCATION, CULTURAL AFFAIRS, SPORTS & YOUTH AFFAIRS
Northern Province, 124, Adiyapatham Road, Kalviyankadu, Jaffna.

எனது இல. / My No. } வமா/அ.அ/கபவிஇ/ க/02 உமது இல / Your No } திகதி / Date. } 2016.04.11

18 APR 2016



# கல்வி அமைச்சரின் வாழ்த்துச்செய்தி

தீவகக் கல்வி வலயத்தினால் சித்திரை மாதம் 23, 24 ஆம் திகதிகளில் நடாத்தப்படும் ஆசிரியர் மகாநாட்டு மலருக்கு ஆசிச்செய்தியை வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

ஆசிரியர்களுடைய வாண்மை விருத்திய்ை மேலோங்கச் செய்வதற்காக வலயங்கள் தோறும் ஆசிரியர் மகாநாட்டை நடாத்தி, அதன் மூலம் சம்பந்தப்பட்ட வலயங்களில் உள்ள ஆசிரியர்கள், தாங்கள் எதிர்கொள்ளும் தடைகள், கற்றல் கற்பித்தலுக்காக புதிய உத்திகளை கையாள்தல் ஆகியவற்றோடு, தமது கல்வி வலயத்தில் மாணவர் அடைவு மட்டத்தை அதிகரிக்கச் செய்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிதல் போன்ற கல்வி தொடர்பான பிரச்சினைகளை இனம் கண்டு தீர்வை நோக்கி நகர இம் மகாநாடு உதவும் என நம்புகின்றேன்.

*த. குருகுலராசா*
*அமைச்சர்*

T.Gurukularajah
Minister
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs,
Northern Provincial Council

அமைச்சர் / Minister } 021-205 4094
அலுவலகம் / Office } 021-205 4091(Private Secretary) 021-205 4093(P.R.O) 021-205 4092(General)
தொலை நகல் / Fax } 021-205 4093



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

தீவகவலயக் கல்வி அலுவலத்தினால் எதிர்வரும் ஏப்ரல் 23, 24 திகதிகளில் நடைபெறவுள்ள ஆசிரியர் மகாநாட்டை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வி அபிவிருத்தியில் மேலும் முன்நோக்கிச் செல்லும் முகமாக ஆசிரியர்களின் கற்பிக்கும் மனப்பாங்கு மற்றும் ஆற்றலை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் சகல வலயக்கல்வி அலுவலகங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டு ஆசிரியர் மகாநாடு நடாத்தப்படுகின்றது.

"தீவகஒளி" என்ற மலரானது தீவகவலய ஆசிரியர்களின் ஆக்கங் களைத் தாங்கி வெளிவருகின்றது. ஆசிரியர்களுக்குப் பயன்தரும் வகையில் அனுபவம் மிக்க ஆசிரியர்களால் இவ்வாக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது மாணவர்களிடமிருந்து சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அந்தவகையில் பயன்மிக்க இம்மலரினைவெளியிடும் தீவகவலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் எனதுபாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், இம்மலரானது ஆசிரியர்களுக்குப் பயன்மிக்கதாக அமைந்து, சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொடுப்பதனூடாகத் தீவகவலயம் கல்வியில் மென்மேலும் அபிவிருத்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி , எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"நன்றி"

**திரு.இ.இரவீந்திரன்**

செயலாளர்,

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் –

– இளைஞர் விவகார அமைச்சு,

வடமாகாணம்.

12.04.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

மாணவர்களை கற்றலின்பால் செலுத்துகின்ற ஆசிரியர் களின் திறன்களை வெளிக்கொணரும் முகமாக வருடாந்தம் ஆசிரியர் மாநாடுகள் நடைபெற்று வருவது யாவரும் நன்கறிந்த விடயமாகும்.

ஆனால் இந்த வருடம் வடமாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் வலய ரீதியில் ஆசிரியர் மாநாட்டைக் கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது. அத்திட்டத் திற்கு அமைவாக தீவக வலயத்தினால் ஏப்ரல் 23, 24 ஆம் திகதிகளில் ஆசிரிய மாநாடு கொண்டாடப்படுவதையிட்டு பெருமையடைகின்றேன்.

அத்துடன் இவ் ஆசிரியர் மகாநாட்டின் முக்கிய அம்சமாகத் திகழ்வது ஆசிரியர்களின் பல்வேறு வகையான ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்ற “தீவக ஒளி” என்னும் நூல் வெளியீடாகும். இந்நூல் வெளியீட்டுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

மேலும் இம்மலருக்கு ஆக்கங்களை வழங்கிய ஆசிரியர்கள் என்றும் போற்றுதற்குரியவர்கள். அவர்கள் கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகளிலும் முன்னின்று செயற்படுகிறார்கள் என்றால் அதில் மிகையேதுமில்லை. அவர்களின் பணி சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன் ஆசிரியர் மகாநாட்டை முன்னிட்டு “தீவக ஒளி” என்ற நூலினை வெளியீடு செய்வதற்கு உழைத்த இதழாசிரியர்கள், மலர்க்குழுவினர் மற்றும் அவர்களோடு தோளோடு தோள் கொடுத்து உழைத்த அத்தனைபேருக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, மலர்க்குழுவினரை நெறிப்படுத்தி, வழிப்படுத்திய தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் கூறுவதில் மனநிறைவு அடைகிறேன்.

“தீவக ஒளி எங்கும்
பொங்கிப் பரவட்டும்!”

**திரு.செ.உதயகுமார்**
மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவக வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

மானுட வாழ்வின் பரிணாம வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்ற நாகரிக, தொழில்நுட்பம் சார் மாற்றங்களை அவ்வப்போது உள்வாங்குவதுடன் மட்டுமன்றி அவற்றினைச் சமூகமயப்படுத்துதல் மற்றும் சர்வதேச மயப்படுத்தலுடனும், தொடர்புபட்டு அறிவியலின் பல்வியாபகத் தன்மையான மேம்பாட்டிற்கு ஆதார சுருதியாக கல்வி விளங்குகின்றது. எனினும் 1950 களிற்குப் பின்னர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட விரிவான, விரைவான முன்னேற்றங்களை முழுமையாக உள்வாங்குவதற்கு கல்வி நிறுவன முறைமையும், கல்வி அளிக்கும் முறைமையும் தவறிவிட்டதெனக் கல்வியியல் ஆய்வாளர்களால் அண்மையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதோர் விடயமாகும்.

கால ஓட்டத்திற்கேற்ப எதிர்காலத்தில் மாறுநிலைப்பாங்கான வாழ்வியற் சூழ்நிலைகளைத் தன்னம்பிக்கையுடனும், பற்றுதியுடனும் எதிர்கொண்டு சமூகத்தில் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்குத் தேவையான திறமைகளை இன்றே பாடசாலைகளில் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பான களங்களைக் கல்வி முறைமை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்த வகையில்சகல மாணவர்களதும் தேர்ச்சியடைதலினை உறுதிப்படுத்துவதாக பாடசாலைகள் விளங்க வேண்டும். இதனை நிறைவேற்று வதில் எமது பாடசாலைகள் இன்று என்ன நிலையில் உள்ளன என்பதனை நாம் முதலில் உணர்ந்து கொள்ளல் வேண்டும். தேர்ச்சிமிகு கற்றலை உறுதிப்படுத்தி, கற்றல் இலக்குகளை அடையவேண்டுமாயின் மிக உயர்வாகத் தொழிற்படுகின்ற கல்விமுறைமை (High Performance Educational Level) அவசியமாகின்றது. வாழ் நாள் முழுவதும் கற்கவும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் தன்மை கொண்டதாகக் கல்வி முறைமை இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தலில் ஒரு "கூட்டுச்சிந்தனை" ஏற்பட வேண்டும். தனிநபர் களுக்கிடையில், பாடசாலைகளுக்கிடையில் வேலை செய்யும் முறைமையில் (Working Style) மாற்றம் அவசியமாகின்றது. ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தங்களைத் தலைவர்களாக நினைத்துக் கொள்ள வேண்டும். நிறுவன ரீதியான தலைமைத்துவத்தில் (Institutional Leadership) உன்னத நிலையினை அடைதல் வேண்டும். ஆசிரியர்களது சிந்தனைப்போக்கில் மாற்றங்கள் ஏற்படுவதன் மூலமே இது சாத்தியமாகும். இத்தகைய எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில் வடமாகாணக் கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர் மகாநாடு வலயங்கள் தோறும் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டதன்படி தீவகக்கல்வி வலயத்தின் ஆசிரியர்களால் சித்திரை மாதம் 23,24 ஆகிய இரு தினங்களில் நடாத்தப்பெறுகின்றது. வெவ்வேறு களங்களில் ஆசிரியர்கள் பெற்றுக் கொண்ட வெவ்வேறான அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் புத்தூக்கம் பெற்றுத் தம்மைச் சுய மதிப்பீட்டுக்கு உட்படுத்தி, புடம் போடச்செய்து அவர்களின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளால் மாணவர் சமூகம் செழுமை பெறச்செய்வதற்கும் இவ்ஆசிரியர் மகாநாடு உதவுமென எதிர்பார்க்கப் படுகின்றது. எனவே இம்மகாநாட்டினை முன்னிட்டு ஆசிரியர்களது பன்முகக் களநிலை அனுபவங்களை உள்வாங்கிச் சுடர்விட்டு பிரகாசிக்கவுள்ள "தீவக ஒளி" எனும் நம்பிக்கை ஒளிக்கு எனது நல்லாசிகளை நல்குகின்றேன்.

"சுபம்

**திரு.சு.சுந்தரசிவம்**
வலயக்கல்விப்பணிப்பாளர்,
தீவக் கல்வி வலயம்,
வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

தீவகக்கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை காலமும் ஆசிரியர் மகாநாடு நடைபெறவில்லை. எமது வலயத்தில் 23.04.2016, 24.04.2016 ஆகிய நாட்களில் இம்மகாநாடு நடைபெறுவதையிட்டு மகிழ்வடைகின்றேன். அத்துடன் இம்மாநாட்டின் இதயமாகத் "தீவக ஒளி" வெளிவருவதையிட்டு இன்பமடைகின்றேன்.

மாணவர்களின் இருளை அகற்றி, ஒளியேற்றும் ஆசிரியர்கள் கௌரவப்படுத்தப்படவேண்டியவர்கள் என்பதில் எந்தவிதமான மாற்றுக்கருத் துக்கும் இடமில்லை. இந் நன்முயற்சி பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். இத் "தீவக ஒளி" மலர் ஆசிரியப் பெருந்தகைகளின் ஆக்கங்களைத் தாங்கி வருகின்றது. இது வருங்காலச் சமுதாயத்திற்கு ஆவணமாக விளங்கும் என்பது கண்கூடு. இம்முயற்சி எதிர்வரும் காலங்களிலும் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கு ஆவனசெய்ய வேண்டும் என்று கூறி, மீண்டும் வாழ்த்துத் தெரிவிக்கிறேன்.

"நன்றி"

**திரு.அ.ஸ்ரனிஸ்லாஸ்**
பிரதிக்கல்விப்பணிப்பாளர்
(கல்வி அபிவிருத்தி),
வலயக்கல்வி அலுவலகம்,
தீவகம் – வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலணைக் கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

2016 ஆம் ஆண்டு சித்திரை 23, 24 ஆம் திகதிகள் தீவகக் கல்வி வரலாற்றில் மறக்கமுடியாத நாட்களாகப் பதிவாகின்றது. கார்மேகம் கலைந்து போர் மேகம் சூழ்ந்து நிலப்பரப்பு எல்லாமே நிர்மூலமான பொழுது இறையருள் இனிதே நிரம்பப் பெற்ற தீவகம் அவன் ஆசிகளாலே கட்டிக்காக்கப்பட்டது.

தக்கவழிச் சான்றோர் சமூகம் கல்வி, அரசியல், கலை எனத் தடம் பதித்திருந்தது. நாட்டிற்கு நல்ல தலைவர்களும், கல்விமான்களும் எம் தீவகத் தாயின் கருவிலே உருப்பெற்றிருக்கிறார்கள். எனினும் நடந்தவற்றையோ அல்லது கடந்தவற்றையோ நினைத்து அல்லது பேசிப் பெருமை கொள்வதைவிட இப்பொழுது நடப்பவற்றைச் சிந்திப்பதே காலத்தின் சாலச் சிறந்த செயற்பாடாகும்.

இங்கே ஆசிரியர் மகாநாட்டின் "தீவகஒளிக்கு" வாழ்த்துரை வழங்குவது என் கடனாக இருந்தாலும், காலத்தின் தேவை கருதி ஆசிரியர் மனங்களில் மாற்றங்கள் தேவை என்பதையும், ஆசிரியர்கள், ஆசிரியர்களாக இருக்கவேண்டும் என்பதையும் இவ்வாழ்த்துரையில் வலியுறுத்துவதே என் தார்மீகக் கடமையாகக் கருதுகின்றேன்.

அளப்பரிய கட்டிடங்களும், மிகப்பெரிய ஆசிரியர் வளமும், நிதிக் கையாளுகையும் என்பவற்றைக் கவனிப்பது இப்போது அவசரமோ, அவசியமோ கிடையாது. வகுப்பறைச் செயற்பாடு, மாணவர் பண்பாடு, ஒழுக்கம் என்பவற்றிலே அதீத கவனம் எடுப்பதே அதிகாரிகளின் அவசரக் கடமையாகின்றது.

"எழுத்தறிவித்தவன் இறைவன்." ஆனால் அந்த எழுத்தறிவுத் தொழிலைக்கூட இறைவனால் ஆற்றமுடியாது. இறைவனுக்கு மேலாகத்தான் எம் பணி என்பதை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் புரிதலுக்கு உட்படுத்தியிருத்தல் வேண்டும். எனினும் போக்குவரத்தும் குடிநீரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சாரமும், இயற்கையும் இயன்றவரை நிலையாக இல்லாத வேளையிலும் தீவக மாணவர்களைத் தம் கருவறைப் பிரசவங்களாக நினைத்து, அர்ப்பணிப்போடு அரும்பாடுபட்ட ஆசிரியர்களுக்கு இச்சந்தர்ப்பத்திலே நான் தலைவணங்கிக் கொள்கின்றேன்.

நிறைவாக குடிசை வாழ்க்கையும், ஏழ்மையும் இருந்தாலும் எதிர்கால இலட்சியக் கனவுகளைக் கண்களிலே சுமந்து நிற்கும் எம் தீவகச் செல்வங்களின் கல்விக்காய் ஒற்றுமையாய் ஒன்றுகூடி உழைப்போம் என்று கூறி, ஆசிரியப்பணி சிறக்க வாழ்த்தி, தீவக ஒளி சப்த தீவுகளிலும் பிரகாசமாய் ஒளி விட்டுப் பரவப் பாராட்டி நிறைவு செய்கின்றேன்.

"சுபமங்களம்"

**திரு. பொ.சிவானந்தராஜா**
கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
வேலணைக் கோட்டம்,
வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊர்காவற்றுறைக் கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கலை, கலாசார விழுமியங்களும், பாரம்பரிய பண்பாடுகளும் திறன்பட ஓங்கும் யாழ்.குடா நாட்டிற்கு எழில் சேர்ப்பது கலைநயமிக்க சப்த தீவுகள் ஆகும். தேசம் புகழ்ந்த கல்வியாளர்கள், நிர்வாகிகளை எமக்களித்த தீவகமானது கடந்த கால யுத்த அழிவினால் கல்வியிலும் பாரிய வீழ்ச்சியைப் பின்நோக்கி நகர்த்தி இருள் சூழ்ந்த யுகமாக மாற்றியது. எனினும் தீவகத்தின் களத்தை நன்கறிந்த கல்விப்பணிப்பாளர்கள், துறைசார் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விமான்களின் செயற்பாடுகளும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம் யாவற்றினதும் பெரு முயற்சியாலும் மீண்டும் தீவகம் கல்வியில் புத்துயிர் பெறுவதைப் பெறுபேறுகள் சான்று பகிர்கின்றன.

சமூகத்தின் தேவைப்பாடுகளை நிறைவு செய்ய ஆசிரியர்களின் பணியானது முன்னிலை வகிக்கின்றது. அந்த வகையில் தீவகத்தில் கடமையாற்ற முன்வருகின்ற ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவர்களுடைய தியாக உணர்வானது மேலும் கல்வியில் பெருமாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியர்களுடைய அர்ப்பணிப்பான சேவையைக் கௌரவிக்கவும், அவர்களின் வாண்மை விருத்தியை அதிகரிக்கும் நோக்குடனும் ஆசிரியர் மகாநாட்டு நிகழ்வில் வெளியிடப்படும் "தீவக ஒளி" மலர் காத்திரமான படைப்புக்களைத் தாங்கி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இந்நாளில் நிகழ்வு சிறப்புறவும் , தீவகம் சகல வளங்களைப் பெற்று கல்வியில் ஓங்கி, மணம் வீச இறையாசி வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

"நன்றி"

**திரு. முருகேசு சத்தியசீலன்**
கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம்,
ஊர்காவற்றுறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெடுந்தீவு
# கோட்டக்கல்விப் பணிப்பாளரின்
# வாழ்த்துச் செய்தி

தீவகக்கல்வி வலய வரலாற்றில் "ஆசிரியர் மகாநாடு" நடைபெறுவது வரலாற்று முக்கியத்துவமுடைய ஒரு நிகழ்வாகும். "தீவக ஒளி" என்னும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். தீவகத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழ்வாழும் மாணவர்கட்கு கல்வி ஒளியூட்டும் ஆசிரியர்கள் வாழ்த்தப்பட வேண்டியவர்கள், போற்றப்படவேண்டியவர்கள்.

தீவக வலயம் ஏனைய வலயங்களைவிட மிகவும் சவால்கள் நிறைந்த பகுதியாக இருந்தாலும் இங்கு சேவையாற்றிச் செல்லும் ஆசிரியர்கள் தீவகத்தை மறப்பதில்லை. ஏனெனில், அவர்கள் தங்களை வளப்படுத்திக் கொள்வதற்கான ஒரு களமாகவும் அமைந்திருந்தது.

எமது கோட்டமாகிய நெடுந்தீவில் சேவையாற்றிய, சேவையாற்றும் வெளிப்பிரதேச ஆசிரியர்கள் பலர் தங்களின் வாண்மையை விருத்தி செய்துள்ளதோடு, பதவி உயர்வுகட்கும் வழிசமைக்கும் தளமாகத் தீவகம் இருக்கின்றது. "ஆசிரியர்கள் ஞான விளக்குகள்" என்பதற்கொப்ப ஆசிரியர் மகா நாட்டில் பங்குபற்றும் இக்காலப்பகுதி ஆசிரியர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

ஆசிரியப்பணி சிறக்கவும், "தீவக ஒளி" மலர் சிறக்கவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

"நன்றி"

**திருமதி. சா.கிருஸ்ணதாஸ்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நெடுந்தீவுக் கோட்டம்,
நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைநகர்
# கோட்டக்கல்விப் பணிப்பாளரின்
# வாழ்த்துச் செய்தி

தீவகக் கல்வி வலய ஆசிரியர் மகாநாட்டுக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையின் வட மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் அதிகஷ்டப் பிரதேசமாக விளங்கும் சப்த தீவுகளை ஒருங்கே கொண்ட தீவகக் கல்வி வலயத்தில் பின்தங்கிய ஏழை மாணவர்களுக்கு வசதிகள் வாய்ப்புக்கள் குறைந்த சூழலில், போக்குவரத்து வசதி குறைந்த, கஷ்டத்தின் மத்தியில் மிக நீண்ட தூரம் பயணம் செய்து தன்நலம் பாராது பொதுநலம் கருதி, கற்றல் - கற்பித்தல், பௌதீக வளப்பற்றாக்குறை நிறைந்த பாடசாலையின் வகுப்பறைச் சூழலில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தங்களது அறிவு, திறன், மனப்பாங்கு, ஆற்றல்களை வெளிப்படுத்துகின்ற ஒரு கல்விக் களமாக விளங்குகின்ற தீவகக் கல்வி வலய ஆசிரியர் மகாநாடு - 2016 மிகச்சிறப்பாக நடைபெற எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

"நன்றி"

**திரு.ஆ.குமரேசமூர்த்தி (J.P)**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
காரைநகர் கோட்டம் ,
காரைநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதிப்புரை



அறிவியல் உலகின் சிந்தனைத் திறன்விருத்தி தொடுவானைத் தொடுமளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது. உலக நகர்வின் ஓட்டத்தில் விரையும் கணப்பொழுதுடன் ஒன்றிணைய வேண்டிய காலம் இது. காலத்தின் தேவைகளைச் சுமந்து காரியமாற்ற வேண்டியதும், காலத்தின் கட்டாய நியதியாகி விட்டது. காலக் கருத்துக்களின் கண்ணாடி போல்வன ஆக்கத்திறன்கள்.

அந்தவகையில் 2016ஆம் ஆண்டில் ஆசிரியர் மகாநாடு புதிய செயல்வடிவம் பெற்று வலயரீதியாக கொண்டாடுவதற்கு வடமாகாணத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டபொழுது, தீவக வலயத்தின் ஆசிரியர் மகாநாட்டை புத்தாக்கங்களுக்குக் களம் அமைக்கும் முயற்சியாக மாற்ற வேண்டுமெனத் தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.சு. சுந்தரசிவம் அவர்களின் சிந்தனைக்கு ஒளியாக விளங்குவது “தீவக ஒளி” எனும் வரலாற்று ஆவணப்பொக்கிசம் என்றால் மிகையாகாது.

“தீவக ஒளி” என்ற மலரிலே இடம் பெறுகின்ற ஆய்வுக்கட்டுரைகள், பிற கட்டுரைகள், கவிதைகள் மற்றும் ஆக்கங்கள் யாவும் தீவக வலய ஆசிரியர்களின் சுயஆக்கங்களாகவும் பல்வேறு உசாத்துணை நூல்களிலிருந்தும் பெறப்பட்ட அறிவியல், சிந்தனைகளின் வெளிப்பாடுகளாகவும் அமைந்துள்ளமை பாராட்டப் படவேண்டிய விடயமாகும். பாடசாலைகளின் பல்வேறு வேலைப்பளுக்களின் மத்தியிலும் இந்நூலுக்கான ஆக்கங்களைத் தந்துதவிய அத்தனை ஆசிரியப் பெருந்தகைகளையும் காலதேவனின் பயணத்துக்கு ஈடுகொடுத்துச் சளைக்காது சாதிக்கக்கூடிய ஆற்றல் கொண்டவர்களாக மதிப்பதோடு , தீவக ஒளியில் சுடராக மிளிர்வதையும் காணலாம்.

“வாழ்க்கையில் வெற்றியின் இரகசியம் என்பது
ஒருவருக்கு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஆயத்தமாக இருத்தலாகும்.”

(பெஞ்சமின் டிஸ்ராஸலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலருக்கு ஆக்கங்களைத் தந்துதவிய அதிபர், ஆசிரியர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் யாருவருக்கும் என்றென்றும் நன்றிகள் உரித்தாகட்டும். அதற்கும் மேலாக, இந்நூலுக்கு ஆசிச்செய்தி, வாழ்த்துச்செய்திகள் வழங்கி உதவிய கல்வியமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப்பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப்பணிப்பாளர் யாவரும் பாராட்டுக்கும், நன்றிக்கும் உரியவர்களாவர்.

மேலும் இம்மலர் சிறப்பாக வெளிவர பல்வேறு வழிகளிலும் அல்லும் பகலும் பாடுபட்டு உதவிய மலர்க்குழுவினரும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

எம்மை இப்பணியில் ஊக்குவித்து, வழிகாட்டி, சகல வழிகளிலும் நெறிப்படுத்திய எங்கள் பெருமதிப்புக்குரிய தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.சு.சுந்தரசிவம் அவர்களுக்கு இதய பூர்வமான நன்றிகளைக் கூறுவதுடன், என்றும் நலன்கள் பெருக இறையருளை வேண்டுகிறோம்.

"நன்றி"

"நம்பிக்கையோடு உன் முதலடியை எடுத்துவை :
முழுப்படிக்கட்டையும் நீ பார்க்கவேண்டிய
அவசியமில்லை. முதல் படி ஏறு!"
- (மார்ட்டின் லூதர்கிங்)

**பதிப்பாசிரியர்கள்**

**திரு.த.க.பிரபாகரன்** (ISA-Art)

**திரு.சி.சிவகுமார்** (ISA-Tamil)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# ஆசிரியர் கீதம்

முத்து முத்தான சித்திரங்கள் - இலங்கை
முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள் ஆ...
பற்றும் பாசமும் வைத்தவற்றை - நல்ல
பாதையில் சேர்க்கும் பணி எமதே.

(முத்து முத்தான...)

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாம் - அவன்
தன்னந் தனிமையைப் போக்கி உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம்.

(முத்து முத்தான...)

எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் - உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் - அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்.

(முத்து முத்தான...)

கற்பித்தல் கற்றல் நிகழ்த்திடவே - நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் - தினம்
பெற்ற கடமையைப் பேணி ஏற்றே - ஞாலம்
போற்றும் சமூகத்தை நாம் படைப்போம்.

(முத்து முத்தான...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே....


| | | பக்கம் |
|---|---|---|
| ☞ | நூன்முகம் , ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்திகள் | i - xvii |
| 01. | மாணவரின் கற்றல் செயற்பாட்டுக்கு ஊக்கலின் பங்களிப்பு | 01 - 04 |
| 02. | தடம் மாற இனி விடோம் | 05 - 06 |
| 03. | ஆசிரிய வாண்மையும் ஆசிரியர்கள் அறிந்து கொள்ள வேண்டியவைகளும் | 07 - 11 |
| 04. | கற்றல் செயற்பாட்டில் நேரமுகாமைத்துவத்தின் முக்கியத்துவம் | 12- 16 |
| 05. | ஆரம்பக்கல்வி மாணவர்களின் வளர்ச்சிக்கும் கற்றலுக்கும் இடையிலான தொடர்புகள் | 17 - 19 |
| 06. | முறைசாராக்கல்விப் பிரிவும் சமூகமும் | 20 - 23 |
| 07. | ஏழிசை பற்றிய பழந்தமிழ் விளக்கக்குறிப்புகள் | 24 - 26 |
| 08. | உன்னை அறியாமல் உன்னுடன் கலந்த இசை | 27 - 28 |
| 09. | விளைத்திறன் மிக்க பாடசாலையைக் கட்டியெழுப்புவதில் தலைமைத்துவத்தின் (அதிபர்) பங்களிப்புகள் | 29 - 33 |
| 10. | ஒப்பிட்டுக் கல்வியின் அடிப்படையில் இலங்கையில் கல்விப் பிரச்சினைகள் பற்றிய ஒரு கண்ணோட்டம் | 34 - 38 |
| 11. | ஆசிரியர் வாண்மைத்துவத்தின் தேவைப்பாடு | 39 - 44 |
| 12. | ஆசிரியப்பணியில் ஈடுபடும் பெண்களின் வளமான வாழ்விற்கான சில உபாயங்கள் | 45 - 49 |
| 13. | நங்கையரே! கேளீர்!! | 50 - 51 |
| 14. | செய்முறைப் பரீட்சையில் அநாவசியத் தோல்விகளைத் தவிர்க்கும் சில நுட்பங்கள் | 52 - 53 |
| 15. | திரு விளக்குகள் | 54 - 56 |
| 16. | கல் ஆலமரத்ததைக் கண்டு கற்போம் வாழ! | 57 - 60 |
| 17. | தொலைநோக்கு உலகில் தொழில் வழிகாட்டல் அலகு | 61 - 67 |
| 18. | சிறுவர் உரிமையும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், இளைஞர்களின் பங்களிப்பும் | 68 - 72 |
| 19. | மாணவர் நடத்தையை ஆசிரியர் விளக்குவதற்கான உளவியற் பின்னணியை அறிதல் | 73 - 76 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 20. | அரங்கினூடே மகிழ்வான கற்றல் கற்பித்தல் | 77 - 79 |
| 21. | அறிவுக் கொள்கைகளும் நினைவூட்டல் உபாயங்களும் | 80 - 86 |
| 22. | இங்கே திரும்புங்கள்....... | 87 - 89 |
| 23. | ஆரம்பக்கல்வியில் எழுத்துப் பொறிமுறைகளின் சிக்கல்களும் தீர்வுகளும் | 90 - 98 |
| 24. | யாழ்ப்பாணப் பொது நூலகமும் அதன் சேவையும் | 99 - 104 |
| 25. | ஆசிரியப் பணி | 105 |
| 26. | இலங்கையின் நாட்டுப்புற இசை மரபு | 106 - 110 |
| 27. | மாணவர் கல்வியும் பெற்றோர் ஆசிரியரின் பங்களிப்பும் | 111 - 114 |
| 28. | அழகியல் அணுகுமுறைகளும் வெற்றிகரமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் | 115 - 119 |
| 29. | கிராமியக் கல்வி வளர்ச்சிக்கான உத்திகள் | 120 - 123 |
| 30. | பாடசாலைக் கல்வியின் போக்கும் சீர்மியத்தின் தேவையும் | 124 - 128 |
| 31. | வகுப்பறையில் மாணவர்களின் ஒழுங்கீன நடத்தைகளை வெற்றி கொள்ளல் | 129 - 134 |
| 32. | ஆசிரியப் பணி | 135 - 137 |
| 33. | நடன உருப்படிகளில் கீர்த்தனை | 138 - 141 |
| 34. | விஞ்ஞானத்தின் விந்தை | 142 - 143 |
| 35. | வினைத்திறனான கற்றல் கற்பித்தலில் ஆசிரியரின் பங்களிப்பு | 144 - 146 |
| 36. | மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியில் நடனத்தின் வகிபாகம் | 147 - 150 |
| 37. | கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியரின் பங்கு | 151 - 155 |
| 38. | ஆசிரியர் கல்வி | 156 - 161 |
| 39. | முதியோரைப் பேணுவோம் | 162 - 163 |
| 40. | ஆசிரியர் வாண்மை விருத்தி | 164 - 166 |
| 41. | பாடசாலைகளில் பின் தாங்கிய மாணவர்களின் உருவாக்கத்தின் பங்காளிகள் யார்? | 167 - 173 |
| 42. | Handling People's Property | 174 - 176 |
| 43. | இசைக் கலையினூடாக மாணவரிடையே அருகிப்போகும் விழுமியங்களை வளர்த்தல் | 177 - 179 |
| 44. | எமது சமுதாயம் எங்கே செல்கிறது? | 180 - 184 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 45. | நாட்டியத்தில் பதங்களின் மெய்த்திறன் | 185 - 187 |
| 46. | சுயமுகாமைத்துவமும் திறன்களும் | 188 - 190 |
| 47. | கல்வி மறுசீரமைப்பில் ஆரம்பக் கல்வியில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் | 191 - 195 |
| 48. | மாணவர்களின் பல்வகைமை இன்று ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பெரும் சவாலாகும் | 196 - 201 |
| 49. | பாடசாலை மாணவர் மத்தியில் விழுமியக் கல்வியின் தற்போதைய நிலை | 202 - 203 |
| 50. | கல்வியில் தர விருத்தி | 204 - 206 |
| 51. | ஆரம்பக் கல்வி ஆசிரியர் மாணவர்களின் விடிவெள்ளி | 207 - 209 |
| 52. | இசையால் வசமாவோம் | 210 - 211 |
| 53. | வளர்ந்து வரும் மாணவர்களிடையே அருகி வரும் ஞாபகம் | 212 - 215 |
| 54. | தீவகத்தில் தித்திக்கும் இசைக்கலை | 216 - 217 |
| 55. | பசுவின் பெருமை | 218 - 219 |
| 56. | "சிவகாமி சபதம்" நாவலில் கூறப்படும் கலை வெளிப்பாடுகள் | 220 - 222 |
| 57. | நடன பாட சாதாரண தர செய்முறை பரீட்சையில் மாணவர்கள் ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும் | 223 - 225 |
| 58. | மன நிலையும் செயல் நிலையும் | 226 - 227 |
| 59. | பல் திறமைவாற்றலை வளர்க்கும் நாடகம் | 228 - 231 |
| 60. | நான் பாரதியார் | 232 - 234 |
| 61. | தெரிதலில் தெளிதல் | 235 - 236 |
| 62. | பரத நாட்டியம் பற்றி தீவக வலய பெற்றோர் மாணவர்களின் மனநிலை | 237 - 240 |
| 63. | ஆசிரியன் | 241 - 242 |
| 64. | மாணவர்களின் சமூகத்திறமைகளை விருத்தி செய்வதில் குடும்பம் மற்றும் பாடசாலைகளின் பங்களிப்புக்கள் | 243 - 249 |
| 65. | மற்று உயர் வாழ்வேது உலகில் | 250 - 251 |
| 66. | விசேட கல்வி ஓர் அறிமுகம் | 252 - 257 |
| 67. | இலவசக்கல்வி | 258 - 259 |
| 68. | நன்றியுரை | 260 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரின் கற்றல் செயற்பாட்டுக்கு ஊக்கலின் பங்களிப்பு



செல்வி.உமாதேவி ஞானசம்பந்தன்
(B.Com, M.Com, PGDE, M.Ed)
யா/வேலணை மத்திய கல்லூரி, வேலணை

இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள். ஆகவே மாணவர்களின் எதிர்கால விருத்தியைப் பொருத்தமான வகையில் மேம்பாடு அடையச் செய்ய உதவது பாடசாலையின் கடமையும், பொறுப்பும் ஆகும். மாணவர்களை அவதானித்தல், நல்வழிப்படுத்தி அவர்களின் திறன்களை வளர்த்தெடுப்பதில் அவர்களது அறிவுத் தேவைக்கு மேலதிகமாக அன்பு, அரவணைப்பு, ஆதரவு போன்ற உணர்ச்சித் தேவைகளை வழங்கி ஊக்கப்படுத்துவதிலும் ஆசிரியர்கள் முக்கியம் பெறுகின்றனர். இந்நிலையில் ஒவ்வொரு பிள்ளையினதும் தனித்தனி திறமைகள், ஆற்றல் என்பவற்றை இனங்கண்டு ஊக்குவித்தல் ஆசிரியரின் கடமை ஆகும். அத்துடன் உடல், உள நலத்திற்கும் அவர்களது கற்றல் செயற்பாட்டிற்கும் ,சமூகமயமாக்கலுக்கும் ஊக்கல் அவசியமாகின்றது.

ஊக்கல் என்பது கற்றலுக்கு இன்றியமையாத ஒன்றாகும். ஊக்கல் பற்றிப் பல வரைவிலக்கணங்கள் உள்ளன. கற்றலின் இதயம் போன்றது ஊக்கலாகும். ஊக்கலானது ஆர்வத்தை எழுப்புகிறது. ஆர்வம் கவனயீர்ப்பின் தாயாகும். கவன ஈர்ப்பு என்பது கற்றல் செய்முறையின் தாயாகும். எனவே ஊக்கல், ஆர்வம், கவன ஈர்ப்பு, கற்றல் ஆகியன ஒன்றோடொன்று தொடர்புடைய செயற்பாடுகளாகும். ஒருவனை ஒரு செயலில் ஈடுபடுமாறு உந்தும் சக்தியே ஊக்கல் ஆகும். இவ் ஊக்கலிற்கு பல அறிஞர்கள் பலவாறு வரைவிலக்கணம் கூறியுள்ளனர். அவற்றில் சிலவற்றை நோக்குவோம்.

- CF Skinner (1947) "பாடசாலை கற்றல் செய்முறையில் ஊக்கலானது கற்போன் மீது உறுதியானதும் நிலை நிற்க கூடியதுமான விரும்பத்தகு நடத்தைகளை மேலோங்க செய்வதும் நெறிப்படுத்துவதுமாகும்."
- Bole - " ஊக்கல் நடத்தையை தூண்டும் வழிகாட்டும் உறுதிப்பத்தும் ஓர் செயன்முறை என்கிறார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ T .W Atkinson - ஊக்கல்எனும் பதம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விளைவுகளை உண்டாக்க கூடிய ஒரு நடத்தை யைத் தோற்றுவிக்க ஏதுவான உந்து சக்தியை எழுப்பும் காரணி யை குறிக்கும்.

❖ WA Kelly - வினைத்திறன் முகாமை மிக்க கற்றல் செயன் முறையின் மையக்காரணி ஊக்க லாகும். சில வகையான ஊக்கல் எல்லா விதக் கற்றலிலும் இடம் பெற வேண்டியது அவசியம்.

❖ Bernard (1980) - ஊக்கல் என்பது முன்னர் துளியும் இல்லா திருந்த அல்லது மிகச் சிறியளவு கவர்ச்சியுடன் காணப்பட்ட குறித்த இலக்குகளை நோக்கிய நடத்தைகளின் தூண்டலாகும்.

❖ AT may low - தன்னுணர்வு அடையும் உந்துதல் ஒரு வளர்ச்சி ஊக்கலாகும். ஒரு மனிதனை வளர்ச்சிக் குறைபாடுகளில் இருந்து விடுவிப்பது எனும் ஆளுமை மேம்பாடு ஆகும். ஊக்கம் மாறாதது, முடிவு அற்றது, கூடிக் குறைவதும் சிக்கலானதும் ஆகும்.

❖ Tol man - இலக்குகளை அடைவதற்காக முயற்சி மேற் கொள்ளும் உயிரிகளின் போக்கு.

கற்றலும் ஊக்கலும் மிக நெருக்கமான செயற்பாடுகளாகும். அதனால் தான் கற்றல் குறிப்பிட்ட எல்லா உளவியலாளர்களும் ஊக்கல் பற்றியும் கருத்து வெளியிட்டனர். ஊக்குவித்தல் கற்றலுக்கான ஆயத்த நிலையைத் தோற்றுவிக்கின்றது. இத னையே தோண்டைக்கின் விதிகளில் ஒன்றான “ஆயத்த விதி” தெளிவு படுத்துகிறது.

**ஊக்கலில் செல்வாக்கு செலுத்துபவை**

❖ பாடசாலைக் கவின் நிலை
❖ பிள்ளைகளின் தேவைகளை கவனிக்கும் வகுப்பறை சூழல்.
❖ ஆசிரியர் நடுவுநிலைமையாக ஒவ்வொருவரையும்நடாத்துதல்.
❖ எல்லோரையும் பெறுமதி மிக்க வராக மதிப்பிடல்.
❖ சிறந்த கற்றல், கற்பித்தல் சூழலை ஏற்படுத்தல்.
❖ பல்வேறு பணிகளுக்கு ஊக்கம் வழங்கல்.
❖ மாணவர்களுக்கு வழங்கப்படும் பணிகள் அடையப்படக் கூடிய தாக இருத்தல்.
❖ மீளவலியுறுத்தல் வழங்கல்.

**வகுப்பறையில் ஊக்கப்படுத்தல்**

மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கம் அக ஊக்கம், புற ஊக்கம் என இரு வகைப்படும். அக ஊக்கம் என்றால் ஒரு மாணவனிடம் இருந்து உள்ளார்ந்த ரீதியாக தோன்றும் எண்ணங்கள், ஆசைகள், விருப்பு, வெறுப்புக்கள், தேவைகள், மனப் பாங்கு, கவலைகள் போன்ற உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

ரீதியான காரணிகளாகும். பெற்றோரினால், ஆசிரியரினால் வழங்கப்படும் புகழ்ச்சி, அறிவுறுத்தல்கள், தண்டனைகள், குறை கூறல், மற்றவர்களின் விருப்பங்கள் என்பன ஒரு மாணவனுக்கு வெளியில் இருந்து கிடைக்கும் புற ஊக்கிகள் எனலாம்.

ஒரு மாணவன் சிறப்பான துலங்களை வெளிப்படுத்தும் போது அவனை பாராட்டுதல், மாணவரின் புற ஊக்கத்தை விருத்தி செய்ய உதவுகிறது. பிள்ளைகளிடையே இயல்பாக நல்ல ஊக்கிகளை வளர்ப்பதும் அதே வேளை தீய ஊக்கிகளை தடுப்பதும், நன்நெறிப்படுத்துவதும் ஒவ்வொரு ஆசிரியரினதும் பொறுப்பாகும். ஆசிரியர் தனது கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் இயல்பாக மாணவரிடம் காணப்படும் ஊக்கியை இணைத்தல் வேண்டும். கண்டுபிடிப்பு, ஆராய்தல், புத்தாக்கம், நிகழ்ச்சியைப் பகுத்தாராய்தல், தகவல் திரட்டுதல், விஷேடமாக விளையாட்டு போன்ற இயல்பான விடயங்களைக் கல்வி நடவடிக்கைகளைப் பயன்படுத்தி மாணவரை நல்வழிப்படுத்தல் வேண்டும்.

கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் பிள்ளைகளைக் குழு உணர்வுடன் இயற்கையாகச் செயற்பட வழிவகுக்க வேண்டும். மாணவர்கள் தனியே செய்வதை விட குழுவாகச் செய்வதையே விரும்புவார்கள். இதனை வைத்து பல்வேறு காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும். உதாரணமாக விளையாட்டு, செயற்றிட்டம், சிரமதானம், பரிசோதனை மேற்கொள்வதற்கும், தகவல்களைச் சேகரிப்பதற்கும், குழு உணர்வைப் பயன்படுத்த முடியும். இதனால் பிள்ளைகளை நன்றாக வழிநடாத்துவதுடன் அனுபவம் பெறுவதனால் நல்ல விளைவைப் பெறமுடியும்.

மாணவர்களது பயிற்சிகளுக்கு புள்ளியிடுவதும், தரங்களை வழங்குவது என்பதும் ஒரு வகையான வெகுமதி ஆகும். ஆகவே பயிற்சிகளுக்கு புள்ளியிடுவது அச்செயலில் திரும்ப ஈடுபடுவதற்குச் சிறந்த ஊக்கியாக அமையும்.

பின்னூட்டல் நிகழக் கூடியவாறு கற்பித்தல் வகுப்பறைச் சூழலில் மாணவர்கள் செயற்பாட்டில் பங்கு பற்றுவதற்குச் சிறந்த ஓர் ஊக்கியாக அமையும். வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும் சமமான திறமை உடையவர்கள் என்று கற்பிக்காது எல்லா மாணவர்களும் விளங்க கூடியவாறு ஒரு பின்னணியை அமைத்து கொள்வதன் மூலம் வகுப்பறையில் எல்லா செயல்களின் நிலையை அறிந்து கொள்வது, விளைவை அறிந்து கொள்வது பின்னூட்டல் நடைபெற உதவியாக அமையும்.

தாம் செய்யும் பணியொன்றின் மூலம் மகிழ்ச்சிகரமான ஒரு முடிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண வேண்டும் என்ற ஆசை பிள்ளைகளின் செயற்பாடுகளின் காணப்படும் ஒரு முக்கிய இயல் பாகும். ஒவ்வொரு செயலுக்கும் ஒரு அடைவு மட்டத்தை வகுத்து கொண்டால் எவ்வாறாயினும் அந்த அடைவு மட்டத்தை அடைய அவர் கள் முயற்சிப்பர். முன் தமது பலவீன ங்களை வெளிக்காட்ட விரும்பாமை, சுய மரியாதை என்பன குறிப்பிட்ட மட்டத்தை அடைய அவர்களை ஊக்குவிப்பது ஆசிரியரின் தலை யாய கடமை ஆகும்.

தண்டனை வழங்குவதும் சில வேளைகளில் ஊக்கியாக அமை கிறது. பொருத்தமற்ற நடத்தைகளை இல்லாமல் செய்வதற்கும், ஒழுங்க மைவையும், கட்டுப்பாட்டையும் நிலை நிறுத்துவதற்கும், தவறான நடத்தைகளில் இருந்து காப்பாற்று வதற்கும் தண்டனை சிறந்த நுட்ப மாகப் பயன்படுகிறது. கட்புல செவி ப்புல சாதனங்களைப் பயன்படுத்து தல், போட்டிகள் வைத்து வெகுமதி அளித்தல், புகழ்தல், சொல் சார்ந்த வெகுமதிகளான நன்று, மிகநன்று, கெட்டிக்காரன் என்பவையும் சொல் சாரா வெகுமதிகளான புன்முறுவல், முதுகில் தட்டிக் கொடுத்தல், பரிசு வழங்கல் என்பவையும் மாணவர் களின் கற்றலை ஊக்குவிக்க ஆசிரியர் மேற்கொள்ளும் வழிகளாகும்.

ஆகவே, பாடத்தைப் போதி க்க விளையும் ஆசிரியர் பாடப் பொருளை மட்டுமன்றி தன் மாண வனை அறிந்திருத்தலுடன் அவனது எழுச்சி, உள இயக்கசார் விருத்திகள் பற்றி அக்கறை கொள்வதுடன் கற்ற லுக்கு மட்டுமன்றி உடல் , உள நலம் பேணவும் ஆசிரியர் ஊக்கலை வழங்குவது அவசியமாகிறது.மற்றும் ஊக்கல் தொடர்பான கோட்பாடு களையும் ஆசிரியர் நன்கு அறிந்திருப் பதுடன் சிறந்த போதனா வடிவ மைப்பை மேற்கொள்பவராகத் திகழ வேண்டும். சிறந்த வகுப்பறைக் கவின் நிலையைப் பேணுவதனூடாகவும் மாணவர்களைக் கவர முடியும். எனவே மாணவர்களின் கற்றல் செயற் பாட்டுக்கு ஊக்கலை ஏற்படுத்தும் காரணிகளை ஆசிரியர் உடனுக் குடன் அறிபவாகவும் பிரயோகிப்ப வராகவும் விளங்கினால் மாணவரின் கற்றல் செயற்பாட்டுக்கு ஊக்கல் பல்வேறு வழிகளில் பங்களிப்புச் செய்வதைக் காணலாம்.

**உசாத்துணை நூல்கள்:**


*01.* கற்றல் உளவியல், ஜெயராசா,சபா. (2008) சேமமடு பதிப்பகம்

*02.* ஆசிரியருக்கான கல்வி உளவியல் (2011), கல்விப்பீடம், இலங்கை திறந்தபல்கலைக்கழகம்

*03.* கற்றல் கற்பித்தல் செயன்முறை கல்வி உளவியல், நவரட்ணம் உ. ,குமரன் புத்தக இல்லம்.

*04.* சின்னத்தம்பி.க, சுவர்ணராஜா,க. (2011) அறிகைத் தொழிற்பாடுகளும் ஆசிரியரும், சேமமடு பதிப்பகம், கொழும்பு.

*05.* கல்வி உளவியல் பகுதி I, II பேராசிரியர் ச.முத்துலிங்கம் (2002),

*06.* கல்வியில் மனயியல், பேராசிரியர் எஸ். சந்தானம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# தடம் மாற இனி விடோம்

திருமதி.க.விஜயகுமாரன்
ஆசிரியர்,
B.A,PGDE
யா/ஆயிலி சிவஞானோதய வித்தியாயலம், காரைநகர்.

தளிர்ப்பாதம் தனை வைத்து
தடம் பதிக்கும் தங்கங்களை
தடம் மாறிச் சென்றிடவே
தரணியில் இனி விடோம்.

கல்வி தனைப் பயின்றிடவே
கலைக்கூடம் கால் பதிக்கும்
கண்ணிய நெஞ்சங்களைத்
தடம் மாற இனி விடோம்.

நல்லறிவு தன்னை
நலமுடன் பயிற்று வித்து
நலமுடன் வாழும் சீடர்களை
தடம் மாற இனி விடோம்.

மாணவனின் தேவைதனை
மனதினால் தான் அறிந்து
மாண்புடன் சேவை செய்து - மாணவரைத்
தடம் மாற இனி விடோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் மகிமை தன்னை
கனிவுடன் எடுத்தியம்பி
கல்வி மானாக்குவோம் - இனித்
தடம் மாற விடோம்.

காலச் சக்கரத்தில்
கடுங்கொடுரங்கள் பற்பல
கால்களை அதில் தடம் பதிக்க - சிறார்களைத்
தடம் மாற இனி விடோம்.

நவீனங்களின் வருகையில்
நல்லதை எடுத்தியம்பி
நலமாக வழிகாட்டி - இனித்
தடம் மாற விடோம்.

கற்றோர்கள் மற்றோர்கள் - யாவரும்
கருணை கொண்டே - எம்
எதிர்காலச் சிற்பிகளைத்
தடம் மாற இனி விடோம்.

உறுதி கொண்டு இந் நாளில்
உணர்வுடன் நாம் நின்றால்
உறுதியான சமுதாயம்
எமதாகுமே இங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரிய வாண்மையும் ஆசிரியர்கள் அறிந்து கொள்ள வேண்டியவைகளும்

திருமதி.த.அகிலன்
ஆரம்பக்கல்வி ஆசிரியர்,
யா/யாழ்ற்ரன் கல்லூரி

இன்று உலகளாவிய ரீதியில் கற்பித்தல் கலையான ஆசிரியம் ஒரு புதிய வாண்மைத் தொழிலாகப் பரிணமித்துள்ளது. எமது நாட்டில் வைத்தியம், சட்டம், பொறியியல் வாண்மைத்துவத் தொழில்களாக வுள்ளன. ஆசிரியமும் இவ்வாறு ஆக்கப்பட வேண்டும். கற்பித்தல் கலை ஒரு முழுமையான வாண்மைத் தொழில் என்பதை நிலை நாட்டும் போது கற்பித்தலின் தரம் மேம் பாட்டையும். ஆசிரியர்கள் உற்சாக முறுவர். இதற்கு ஆசிரியர்களின் முயற்சியும் அவசியமாகும்.

பாடசாலைகள் வினைத் திறனுடையனவாக விளங்குவதற்கு அங்குள்ள மனிதவளம் குறிப்பாக ஆசிரியவளம் வினைத் திறனுடை யனவாக மேம்படுத்தப்பட்டு வினைத் திறனுடையதாக இயங்க வேண்டியது இன்றியமையாத தாகும். காலமாற்றத்தோடியைந்த மானிடத் தேவைகளிற்கேற்ப கல்வி யின் எதிர்பார்ப்புக்கள் விரிவடைந்து அதன் இலக்குகள் மாற்றமடைந்து செல்கின்றன. ஆசிரியர்கள் பழைய வர்களாக இருந்தாலென்னபுதியவர் களாக இருந்தாலென்ன கல்வியின் இன்றைய இலக்குகளுக்கேற்றாற் போல தமது அறிவுத் தொகுதி யினையும் தொழிற்றிறமுறைகளை யும் திடப்படுத்தா விட்டால் அவர் களால் வினைத்திறனுடைய ஆசிரியர் களாகப் பணியாற்றுதல் கடினமாகி விடும்.

புதிய கல்வி நோக்குகளுக்கு அமைவான அறிவுப் பெருக்கமும் பாட உள்ளடக்கமும் செறிந்த உபகரணப் பிரயோகத்துடனான கற்றல், கற்பித்தல் முறைகளையும் பயன்படுத்தக் கூடியவர்களாகவும் அர்ப்பணிப்பு, தியாகம், தர்மம், கருணை, ஞானம் முதலான பண்புகளைக் கொண்டோராகவும் ஆசிரியர்கள் தம்முடைய பணிகளைத் தொடர் வார்களெனின் அவர்கள் வினைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனுடையோராகக் கொள்ளப்படு வார்கள்.

ஆசிரிய வாண்மை விருத்தியின் அவசியம் அதன் உண்மையான இலக்கு என்பன சரியாக உணரப் படாத சமயங்கள் பல இன்றும் நம் கண்முன்னே நடந்தேறிய வண்ண முள்ளன. பல ஆய்வாளர்களது அனுபவங்கள், அவதானிப்புக்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களி லிருந்து கண்டு கொண்ட சில பொதுவான அம்சங்களை இங்கு குறிப்பிடலாம்.

❖ பல பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் வாண்மைப் பயிற்சி பெறுவதை விரும்புவதில்லை.
❖ பல ஆசிரியர்கள் தமது தொழில் வாண்மையை விருத்தி செய்வதில் நாட்டங் கொள்வதில்லை.
❖ வாண்மைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பலர் அவற்றைக் கற்பித்தலில் பிரயோகிப்ப தில்லை.
❖ பயிற்சியாளர்களை விடவும் கல்வி மற்றும் தொழிற்றிறன் குறைந்தவர்கள் மூலமாகவும் பயிற்சி வழங்குதல்.
❖ பயிற்சி நெறிகள் தரங்குறைந்த வையாகவே இருத்தல்.
❖ பயிற்சிக்கான ஆசிரிய தெரிவு களில் முறைகேடுகள் நிகழ்தல்.

இவ்வாறான குறைபாடுகளி லிருந்து விடுபட்டு ஆசிரிய வாண் மை உரிய இலக்கை நோக்கிச் செல்வ தற்கு கல்வி, கற்றல் ஆசிரிய வாண் மை முதலியவற்றில் ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள், பெற்றோர் முதலான தரப்பினருக்குப் பூரண மான தெளிவு ஏற்பட வேண்டும். கல்வியின் நவீன இலக்குகள் பற்றிய விளக்கம் பெறப்பட வேண்டும்.

மேலும் நல்ல ஆசிரியர்கள் என்று மாணவர்கள் குறிப்பிடும் ஆசிரியர் கள் பொதுவாக உற்சாகமானவர் களாகவும், மாணவர்களில் அன்பு செலுத்துபவர்களாகவும் ஓரளவு நகைச் சுவை உணர்வுடையவர்களாக வும் காணப்படுகின்றனர்.

மாணவர்களது உணர்வுகள் முரண்பாடாக வெளிவராதவாறு வகுப்பறையை நிர்வகிப்பதற்கு ஆசிரியர்கள் பின்வருவனவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

❖ மாணவர்களுடன் உடன்பாடான உறவு முறையை ஆசிரியர்கள் பேண வேண்டும்.
❖ ஆசிரியர்கள் தமது செயற்பாடு களில் எப்போதும் ஒழுங்கான, ஒழுக்க நடைமுறைகளைக் கையாள வேண்டும்.
❖ மாணவர் நலன்களில் உண்மை யான அக்கறையை இயன்றளவு காட்டுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

பெரும்பாலான ஆசிரியர்களுக்கு அறிவு சார்ந்த பயிற்சியும், வழிகாட்டலும் வழங்கப்படுமளவுக்கு, பயிற்சி வகுப்புகளும் பயிலரங்குகளும் நடாத்தப்படுவ தில்லை.

மனப்பக்குவமும், சிந்தனைத் தெளிவும், கற்பித்தலில் உண்மையான விருப்பமும் , இளைஞர் உளவியலறிவும் கொண்டவர்கள் மாத்திரம் கற்பித்தல் தொழிலுக்கு வருவதில்லை. அது உறுதிப்படுத்தப்படுவதிலும் எவருக்கும் பெரிய அக்கறை ஏதுமில்லை.

கற்பிப்பதற்கான தேசிய சான்றிதழ் வழங்கும் நடைமுறைகள் ஏதுமில்லை. எவரும் யாருக்கும் கற்பிக்க முடியும். மாணவர்கள் ஏற்றுக் கொண்டால் போதும். தேசிய அல்லது சமூக கண்காணிப்பு எதுவுமில்லை. எதுவும் தேவையு மில்லை.

இதனால் மாணவர்கள் சமகாலத்தில் பல்வேறு வகையான ஆசிரியர்களிடம் பல இடங்களில் கற்கின்றனர். மாணவர்களுக்கு எந்த ஆசிரியரை முன்மாதிரியாகப் பின்பற்றுவது என்பதில் நிறைய குழப்பங்கள் உள்ளன. இத்தகைய முரண்பட்ட நிலைமைகளை உருவாக்கும் வகையிலேயே எமது கல்வி முறைமை செயற்பட்டு வருகின்றது.

பாடசாலை ஆசிரியர்கள் தமது முழுக் கவனத்தையும் ஆற்றலையும் பள்ளி மாணவர்கள் மீது செலுத்துவதற்குரிய ஊக்கத்தை அளிப்பதற்கேற்றதான பணச் சம்பளங்கள் மற்றும் மெய்வேதன ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுவதேயில்லை. சிறந்த பள்ளி ஆசிரியர் சிறந்த தனியார் கல்வி நிலைய ஆசிரியரை விட, பத்து மடங்கு குறைந்த சம்பளங்கள் பெறும் நிலைமைகளும் உள்ளன.

இதனால் சிறந்த பள்ளி ஆசிரியர்கள் பாடசாலை மாணவர்களது உணர்வு நிலைகளில் அக்கறை காட்டுவதை விடவும் சிறந்த தனியார் கல்வி நிலைய ஆசிரியராகத் தம்மை மாற்றிக் கொள்வதில் அக்கறை காட்டுகிறார்கள். நிலவுகின்ற கல்வி முறைமையும், ஏற்பாடுகளும் இதனை அதிகம் ஊக்குவித்து வருகின்றன.

ஆசிரியர்களில் அதிக திறமையானவர்கள், விரக்தியுடனும், வறுமை நிலையுடனும் பணிகளில் இருப்பதால் எதிர்பார்க்கப்படும் மாதிரிகளில் மாணவர் மீது அவர்கள் உண்மை நாட்டம் கொள்வதில்லை.

மேலும் எந்தவொரு சமுதாயத்திலும் ஆசிரியன் என்பவன் முன்மாதிரியானவன் மாத்திரமன்றி முதன்மை பெறுபவனாகவும் இருந்தால் மாத்திரமே அந்தச் சமுதாயம் ஆரோக்கியமானதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் தமது அறிவு, ஆற்றல், தலைமைத்துவப் பண்பு, முன்மாதிரி முதலான குணாம்சங்களுடன் முன்னிலைக்கு வருதல் வேண்டும். ஒரு சமுதாயத்தின் கலாசாரம், பாரம்பரியம், பண்பாடுகள் என்பவற்றின் அடித்தளத்திலிருந்தே கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். நவீன உலகப் போக்கிற்கமைவான கல்வி மாற்றங்கள், தானும் சமூகத்தின் அடிக்கட்டுமானங்களைப் பாதிக்காதவாறு முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

மாணவர் உயர்ந்த அடைவுத் திறனைப் பெறச் செய்தல் வெற்றிகரமான கற்பித்தல் எனக் கருதப்பட முடியாது. சில வேளைகளில் மாணவர்களின் கல்விசார் செயலாற்றுகையை விட மாணவர்களை மனிதராக மதிப்பதற்கான நிலைமை வெற்றிகரமான கற்பித்தல் எனக் கருதப்படுகிறது. எனவே வாண்மையுடைய ஆசிரியர் ஒருவர் சாதகமான வெளிப்பாடுகளை ஆசிரியத் தொழிலில் ஏற்படுத்தும் வழிவகைகளை அறிந்திருப்பார்.

ஆசிரியர் தனது தொழிலில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார். அவையாவன நேரமுகாமை, தொழில் தொடர்பான நெருக்கீடு, அடைவுத் தேவை, போதியளவு வெகுமதி, தனியாள் ரீதியான வாண்மை சார்பாகவும் கருத்தைக் கொண்டிருத்தல் என்பவையாகும்.

எனவே பாடசாலையில் ஆரம்பத்தில் வழங்கப்படுகின்ற கல்வியே உறுதியான அத்திபாரக் கல்வியாகக் காணப்படுகின்றது. வீட்டுச் சூழலிலிருந்தும், முன்பள்ளியிலிருந்தும் நேரடியாகப் பாடசாலை வரும் குழந்தை அங்கு தனக்கு அன்பு, காப்பு, அரவணைப்பு போன்ற தேவைகளுடன் தாம் விரும்பிக் கற்பதற்கு நல்லதொரு சூழலையும் எதிர்பார்க்கின்றது. தான் முன்னரே கண்டறிந்த இயற்கையின் வனப்புகளையும், விலங்கினங்களின் இன்னிசை, உருவமைப்பு போன்றவற்றையும் நல்ல காற்றோட்டமுள்ள இடவசதி கொண்ட இருக்கை அமைப்புக்களையும் நல்ல நண்பர்கள் நல் ஆசான் ஆகியோரையும் எதிர்பார்த்தே ஒரு குழந்தை ஆரம்பப் பாடசாலையில் காலடி எடுத்து வைக்கிறது.

மேலும் ஆசிரியர் என்பவர் வெறுமனே தொழில் ரீதியில் செயற்படாமல் மாணவனின் தரத்திற்கு இறங்கி வந்து அவர்களுடன் நட்பு அடிப்படையிலும், பாச அடிப்படையிலும் இசையச் செய்து கல்வி புகட்டுவதில் முனைவாராயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திஜீவிகள் உருவாகுவதில் சந்தேக மில்லை. அன்புடன் கூடிய கட்டுப் பாட்டுடன் ஒரு ஆசிரியர் பாடம் புகட்டுவாராயின் மாணவர்களின் தரமும் உயர்ந்து செல்லும்.

எனவே ஒரு ஆரம்ப ஆசிரியை தாயாக, தாதியாக, நண்பனாக, ஆலோசனை வழங்குபவராக, வழி காட்டியாக, சிந்தனையைத் தூண்டு பவராக, போதியளவு சாதனங்களைக் கையாள்பவராகக் காணப்பட்டால் மாணவ சமூகம் நல்லதொரு அமைப் பில் கட்டியெழுப்பப்பட்டு நாட்டின் நாளைய அமைப்பில் நற்பிரஜைகள் பலர் உருவாகுவர் என்பதை ஆசிரியர் களாகிய நாம் அனைவரும் தன்னம் பிக்கையுடன் திடமாக உணர முடியும்.

## உசாத்துணை நூல்கள்

01) பேராசிரியர் மா. சின்னத்தம்பி, சமுதாயத்திற்கான கல்வி

02) உபபீடாதிபதி பா. தனபாலன், கற்பிக்கும் கலை புதிய பிரவேசங்கள்

03) கலாநிதி. ச. நா. தணிகாசலம்பிள்ளை, ஆரம்பக் கல்வி

04) நா. வரதராசா, ஆசிரியத் தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் செயற்பாட்டில் நேரமுகாமைத்துவத்தின் முக்கியத்துவம்



திருமதி.சாந்திமதி நீதியன்
ஆசிரியர்.
Tr.d(Eng),B.A,PGDE(Merit)
யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்

நேரம் என்பது வாழ்வில் மிக முக்கியமானது. ஒருவர் தனது முக்கியமான செயற்பாடுகள் எவை என அடையாளங்கண்டு அச்செயற் பாடுகளுக்குக் கூடிய நேரத்தையும் ஏனையவற்றிற்கு ஏற்ற நேரத்தையும் ஒதுக்கித்திட்டமிட வேண்டும். "லியான் ஆல்பிரடி" என்ற இத்தாலிய வியாபாரி நான் காலையில் எழுந்த வுடன் எனக்குள் நினைத்துக் கொள் வேன். இன்று நான் என்ன செய்ய வேண்டும்? பல வேலைகள் உள்ளன. எல்லா வேலைகளையும் நினைத்துப் பார்த்து ஒவ்வொன்றாக முடிக்க வேண்டிய நேரத்தைத் தீர்மானிப் பேன். "நான் எனது தூக்கத்தையும் உணவையும் கூட இழக்கத்தயாராக இருப்பேன்." அவைகளை நாளை செய்து கொள்ளலாம். நேர நிர்வாக த்தின் முன்னோடி என பாராட்டத் தோன்றும் அவர், நேரத்தை எவ்வாறு உபயோகிப்பது என அறிந்து கொண்டவன் நினைத்ததை எல்லாம் அடைய முடியும் எனக் கூறுகின்றார்.

"பெஞ்சமின் ஃப்ராங்களின்" நேரம் தான் பணம் என நினைத்துக் கொள். என 1745ல் ஒரு நூலில் எழுதினார். மேலும் நீ வாழ்க்கையை நேசிக்கின்றாயா? அப்படியானால் நேரத்தை வீணாக்காதே. ஏனெனில் வாழ்க்கை நேரத்தினால் உருவாக்கப் பட்டிருக்கின்றது. நேரம் தான் பணம் என்பதை கீழ்க்கண்டவாறு கூறுவார் கள்.

**"நேற்று என்பது ரத்து செய்த காசோலை**
**நாளை என்பது வாக்குறுதிச்சீட்டு**
**இன்று என்பது உடனடி ரொக்கம்**
**அதை உபயோகித்துக்கொள்"**

"அர்னாலட் பென்னட்" ஒரு நாளில் 24 மணி நேரம் வாழ்வது எப்படி என்ற புத்தகத்தை எழுதினார். நேரம் என்பது பணத்தை விட அதிக மதிப்பு உள்ளது. நமது நேரத்தின் உண்மை மதிப்பை அறிந்து கொண் டால் வாழ்வில் அதிக பயன்களை பெற இயலும். " ஒரு நாளைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் அந்த நாளை இழக்காதிருக்கமுடியும்.

**நேரவளத்தினுடைய சிறப்பில்புயல்கள்:**

❖ எப்போதும் பாவிக்க உதவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ கிடைக்கும் போதே பாவிக்க இடமளிக்கிறது.
- ❖ சேமித்து வைத்துப் பிறிதொன் றுக்குப் பாவிக்க உதவுகிறது.
- ❖ கடன் பெற்று நிவர்த்தி செய்ய முடியாது.
- ❖ முழுமையாகக் கரையும் தன்மை யுடையது.பனிக்கட்டிபோன்றது.
- ❖ முழுமையாகப் பிரதியிட முடி யாது.
- ❖ அருமையானது உரிய நேரத்தில் செய்து முடிக்கத் தூண்டுவது.

பீற்றர் டிறக்கர் (PETER DRUKER) இன் கருத்துப்படி திட்ட மிடுதல், ஒழுங்கமைத்தல், கட்டுப் படுத்தல், வழிப்படுத்தல் என்ற நான்கும் நிறைவேற்றப்படுவதையே முகாமைத்துவம் குறிக்கின்றது. நேர முகாமைத்துவத்தின் படிமுறை களாக பின்வருவனவற்றை குறிப்பிட லாம்.

- ❖ உண்மையான நேரப்பயன் பாட்டினை மதிப்பிடல் வேண் டும்.
- ❖ நேரவிரயக் காரணங்களைஅடை யாளங்காணுதலும் அளவிடுத லும் வேண்டும்.
- ❖ செயற்பாட்டு நேரத்தைக் குறைக் கும் நடவடிக்கைகளை மேற் கொள்ளல் வேண்டும்.
- ❖ ஏற்ற நாளாந்த, வாராந்த, மாதா ந்த வருடாந்தத் திட்டங்களை வகுத்தலும் அவசியமாகின்றது.
- ❖ விரைந்து செய்தலும், நேர விரயத்தைத் தவிர்த்தலும் வேண் டும்.
- ❖ குறுகிய கால, இடைக்கால, நீண்ட காலத் திட்டங்களைத் தீட்டி கால அட்டவணைப்படி செய்தல் வேண்டும்.
- ❖ நேரத்தை சேமிக்க வேண்டும்.

**நேரம் பற்றி அறிஞர்களின் கருத்துக்கள்**

- ❖ நேரத்தை தெரிவது, நேரத்தைச் சேமிப்பதற்காக.(பேகன்)
- ❖ எவரும் நேரத்தையும் கடலையையும் இறுக்கிப் பிடிக்க முடியாது .(றொபர்ட் பேர்ன்ஸ்)
- ❖ தோன்றுவதற்கு ஒரு நேரம் இருப்பது போல முடிவதற்கும் ஒரு நேரம் உண்டு. (இங்கிலாந்து சமய குரு லேடி ரிச்மன்ட்)
- ❖ ஓசையற்ற நதியைப் போல காலம் வந்து செல்கிறது. (வால்டர் ஜன்லாமோர்)
- ❖ பறந்து செல்லுங்கள். உலகம் ஆறு நாட்களில் படைக்கப் பட்டது என்பதை மறந்து விடா தீர்கள். நீங்கள் விரும்பும் எதை வேண்டுமானாலும் என்னிடம் கேளுங்கள் நேரத்தை தவிர. (நெப்போலியன்)
- ❖ எந்த விடயத்தையும் நாளை என பிற்போடாதே! இப்போதே

10638



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து முடி. (சோக்கிரட்டிஸ் கிரேக்க தத்துவஞானி)

❖ நாங்கள் நேரத்தைக் கவனிப்ப தில்லை. ஆனால் அதன் இழப் பைக் கவனத்தில் கொள்கின் றோம். (எட்வேர்ட் யஸ்)

இத்தாலி நாட்டைச் சேர்ந்த வில்ஃபரடோ, புரடோ என்ற அறி ஞர் 20 சதவீத நடவடிக்கை மூலம் 80 சதவீத பலனைப் பெறலாம் எனக் கூறுகிறார். இது "பரற்றோ விதி தத்துவம்" அல்லது "80 : 20 விதி" அல்லது "அத்தியாவசியம் சிலது அநாவசியம் பலது" எனவும் அழைக் கப்படுகின்றது. எனவே முன்னுரி மையளித்தல் அடிப்படையில் எமது பணிகளை நான்கு பகுதிகளாக பிரித் துக் கொள்ளலாம்.

1. **பிரச்சினைப்பகுதி :** இது அவசர வேலைகளும் அவசிய வேலை களும் அடங்கியுள்ள பகுதி, அனைவரும் இந்தப் பகுதியில் உள்ள பணிகளுக்கு அதிக நேரத்தை செலவிட நேரிடு கின்றது. எனினும் வேலைகளை முடித்து எளிதில் பயன் அடைய முடிவதில்லை.
2. **திட்டமிடும் பகுதி:** இப் பகுதி யில் அடங்கியுள்ள வேலைகள் அவசர மானவை அல்ல. ஆனாலும் கூட அவை அவசியமான வேலை களாகும். வெற்றி வீரர்கள் இந்தப் பகுதியிலுள்ள வேலைகளைத் திட்டமிட அதிக நேரம் எடுத்துக் கொள்கின்றனர். ஆனால் பலர் திட்டமிடுவதற்கு குறைந்த நேரத் தைத் தான் செலவிடுகின்றனர்.
3. **வீண்பகுதி:** இவை அவசியமும் இல்லாதவை.
4. **உடனடிப்பகுதி:** இப்பகுதியிலுள்ள வேலைகள் அவசியமானதும் அல்ல. நமது குறிக்கோளை அடைய உதவுவதும் இல்லை. மற்றவர்களுக்கு அவசரமானவை. ஆனால் உண்மையில் அவை நமது நேரத்தை விழுங்கு கின்றன.

இதனைப் பின்வருமாறு பிரித்துக் கொள்ளலாம்.

அவசரமானவை

| | |
|---|---|
| **உடனடிப்பகுதி** | **பிரச்சினைப்பகுதி** |
| அவசரமானவை | அவசரமானவை |
| அவசியமில்லாதவை | அவசியமானவை |
| **வீண்பகுதி** | **திட்டமிடும் பகுதி** |
| அவசரமானவை | அவசியமானவை |
| அவசியமற்றவை | அவசரமில்லாதவை |

இதனை விட பணி நேரத்தில் பல தடைகள் ஏற்படுகின்றன. அவை 2 வகைப்படும்.

1. **நாமாக ஏற்படுத்திக் கொள்பவை.**
2. **பிறரால் ஏற்படுத்தப்படுபவை.**

**1. நாமாக ஏற்படுத்திக் கொள்பவை**

❖ பணிகளை ஒத்திப்போடுதல்.

❖ பரிபூரணமாக செயற்பட வேண் டும் என்ற எண்ணம்.

❖ முடியாது என மறுத்துக் கூற முடியாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ செயல்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளாமை.

❖ பொறுப்புக்களை பிரித்தளிக் காதது.

❖ செய்திப் பரிமாற்றக் குறைபாடு.

**2. பிறரால் ஏற்படுத்தப்படுபவை**

❖ மேலதிகாரிகள்ளல்.

❖ குழுவில் பணிபுரிபவர்களால்.

❖ சகபாடிகளால்.

❖ டெலிபோன் அழைப்புக்களால்.

❖ திடீர் விஜயம் செய்பவர்களால்.

இன்றைய கல்விச் சூழலில் நேர முகாமைத்துவத்தை சிறப்பாகப் பேணி மாணவர்கள் பயனடை வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். இத்தகைய பண்பு கொண் டோர் மிகவும் குறைந்த அளவிலே யே காணப்படுகின்றனர் என ஆய் வாளர் சுட்டிக்காட்டுகின்றனர். வாழ் வில் வெற்றி பெற்றவர்கள், குறிக் கோளை அடையத் தேவையான செயல்களுக்கு நேரத்தை ஒதுக்கி செயல்படுகின்றனர். தேவையற்ற, மதிப்பற்ற செயல்களைத் தவிர்த்து விடுகின்றனர். எனவே நேரம் ஒரு அரிதான செல்வம். அது நாம் பெற்றுள்ள மாபெரும் மூலதனம்.

இன்றைய சூழ்நிலையில் மனிதனுக்குப் பிரதானமானது கல்வி. இது குறிப்பிட்ட வயதுட னோ அல்லது ஒரு நிறுவனத்துட னோ முடிந்து விடுவதில்லை. அறிவு வெள்ளம் பல்கிப் பெருகும் இன்றைய நாட்களில் புதிய அறிவுத் தளங் களுடன் எம்மைத் தொடர்படுத்தி கல்வி அறிவைப் பெறும் முயற்சி வாழ்நாள் முழுவதும் நீடிக்க வேண் டும் என்பதாகும். இக் குறிக்கோளு க்கு உறுதுணையாக அமைவது சரி யான நேரமுகாமைத்துவம் பேணு தல் என்பதாகும்.

நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக உலகம் சுருங்க, கிராம, நகர வேறுபாடின்றி மனித வாழ்க்கையில் நேர முகாமைத்துவம் மிக முக்கிய இடத்தைப் பெற்று வருகின்றது. குறிப்பாகக் கல்லூரி வாழ்க்கையில் நேரப் பயன்பாட்டை நன்கு அறிந்து கொள்ளும் மாணவர் கள் அதற்கேற்ப கற்றல், மனனம் செய்தல், பரீட்சைக்குத் தயாராதல், வினாக்களுக்கு விடையளித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற் கொண்டு பரீட்சைகளில் அதிகபுள்ளி களைப் பெற்று, சிறப்பாகத் தேறி முன்னணியில் திகழ்கிறார்கள். இத ற்கு நேர முகாமைத்துவம் பெரிதும் துணையாக இருக்கின்றது.

இன்று பல இலட்சக்கணக் கான நூல்கள், சஞ்சிகைகள், கலைக் களஞ்சியங்கள் என்பவற்றில் மாத்திர மின்றி இணைத்தளத்திலும் விபரித் துக் கூற முடியாதளவிற்கு நவீன அறிவும், ஆய்வு முடிவுகளும் காணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றன. நேர முகாமைத்துவத் தைப் பேணுவதன் மூலமே இப் பேரறிவுத்தளங்களை நாம் தரிசித்துப் பயனடைய முடியும். எனவே நேர முகாமைத்துவம் தொடர்பான விழிப் புணர்வை எல்லாத் தரப்பிடமும் மேம்படுத்துவது காலத்தின் தேவை யாகும்.

**உசாத்துணை நூல்கள்:**


1. www.rcn.uk. /data /assets/pdf file/0008/78515/001484.pdf last accessed on 1st October 2011
2. நேர நிர்வாகம் - கையேடு விமலநாத் ஏம். ஏ.பி.ஏ (கண்ணதாசன் பதிப்பகம், சென்னை)
3. நேரத்தைப் பொன்னாக்குவோம் விமலநாத் M.A.B.A. (கண்ணதாசன் பதிப்பகம், சென்னை)
4. நேர முகாமைத்துவம், சொ. அமிர்தலிங்கம் SLAS class I, B.A (Hons)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக்கல்வி மாணவர்களின் வளர்ச்சிக்கும் கற்றலுக்கும் இடையிலான தொடர்புகள்



திரு.பி.அன்ரன்ஜெயராஜ்
ஆசிரியர்,
Tr.d(Primary), B.A
யா/நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் அ.த.க வித்தியாலயம்

மனிதவள அபிவிருத்திக்கு கல்வி அவசியம். அதனூடாக நாட்டின் பொருளாதார சமூக அபி விருத்தி ஏற்படுகின்றது. ஆரம்பக் கல்வியில் பிள்ளையிடத்தே நல்ல மனப்பாங்குகளை உருவாக்கி விடு கின்ற சிறப்புத் தன்மை காணப்படு கின்றது. எல்லோருக்கும் கல்வி (Education for all) கட்டாயக்கல்வி (Compulsory Education) என்ற கருத்துக் கள் அனைத்தும் இதனை அடி யொற்றி எழுந்தவையே.

கற்றல் பிறப்பிலிருந்தும் அதற்கு முன் கருவிலிருந்தும் மன வெழுச்சி தாக்கமுறுவதாக அவ தானிக்கப்படுகின்றது. வீட்டுச்சூழல் பிள்ளைகளிடம் ஒழுக்கம், பாரம் பரிய வழக்கங்கள், மதம் சார்ந்த விழுமியங்கள் என்பன பேணப் படுவதன் ஊடாக கற்கப்படுகின்றன. இங்கு அவர்களின் கலாசாரம் முன் வைக்கப்படுகின்றன. முன்பள்ளிக் கல்வியில் பிள்ளையின் உடல், உள, மனவெழுச்சி, சமூக வளர்ச்சிகள் பெரிதும் கவனத்தில் கொள்ளப் படுகின்றன. பிள்ளைகளின் தேவை கள் இனங்காணப்படுகின்றன. அவை நிறைவு செய்யப்படும் போது பிள் ளைகளிடம் உளஅமைதி ஏற்படுகின் றது. கற்றலுக்கான ஆயத்த நிலையா கப் பிள்ளைகளின் தேவைகள் கருதப் படுகின்றன. முன்பள்ளி மாணவனின் போசாக்கு நிலை, நோய்க்கான பரி காரம், அவனது இயல்பான நாட்ட ங்கள், விருப்பங்கள், தேவைகள் என்பன நிறைவு செய்யப்படும் போது உள ஆரோக்கியம் ஏற்படு கின்றது. மேற்கு நாடுகளில் குழந்தை மருத்துவவியல் பாடசாலைகளில் பேணப்படுகின்றன. குழந்தைகள் மீதான உள ஆராய்ச்சிகளுக்கு, கற்றல் கற்பித்தல் நுட்பமுறைகள் மீதான ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படு கின்றன.

ஆரம்பத்தில் புலன்வழியா கப் பெறுகின்ற அனுபவங்கள், தன் மயமாக்கும் செயற்பாடுகள் இயல் பாகவே பிள்ளைகளிடம் காணப்படு கின்றது. இந்த புலன் வழிக்கற்ற லுக்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பது பெற்றோரின் கடமை யாகும். ஒவ்வொரு சந்தர்ப்பங்களி லும் பிரச்சினைகளை விடுவிப்பதன் ஊடாகக் கற்றல் நிகழ்கின்றது. வினா க்களைத் தொடர்ச்சியாக எழுப்பு வதற்கூடாக சிந்தனை வளர்ச்சி ஏற்படுகின்றது. இச்சந்தர்ப்பங்களில் ஊக்குவிப்பு (Motivation) ஊடாக மீள வலியுறுத்தல் வேண்டும். முன் பள்ளிக்கல்வி பிள்ளையின் ஆர்வத் தைத் தூண்ட வேண்டும். சுற்றாட லை அவதானிக்கத் தூண்ட வேண் டும். பல்வேறு ஒலி களை எழுப்புதல், இசை தழுவிய விளையாட்டுக்கள் அனுபவங்களோடும் கற்பனைக ளோடும் ஆக்க வெளிப்பாட்டுக்கு சந்தர்ப்பங்களை வழங்கவேண்டும். பாலர் கல்வியில் இசை, ஓவியம் தீட்டுதல் போன்றன உளவியல் சீராக்கத்தை ஏற்படுத்தும். பாலர் கல்வியில் உடல் வளர்ச்சியோடு உள வளர்ச்சியையும் சீராக்க வேண்டும். இதற்கூடாகச் சீரான மனவெழுச்சி தோற்றம் பெறும். ஆரம்பக்கல்வி சுதந்திரமான கற்றலுக்கு சந்தர்ப்பங் களைக் கொடுக்க வேண்டும். இவ் வயதுப் பிள்ளைகளிடம் சுதந்திரம், விளையாட்டு, ஆராய்தல், உற்று நோக்கல், அவதானிப்பு என்பன இயல்பாக காணப்படும். அதற்கு ஏற்ப கற்றல் சந்தர்ப்பங்களைத் திட்ட மிடவேண்டும். பிள்ளையின் இயல் புத் தேவைகளை மையப்படுத்தியே கற்றல் சந்தர்ப்பங்கள் உருவாக்கப் பட வேண்டும். இதனை "பிள்ளை மையக்கல்வி" எனக் குறிப்பிடுகின் றனர். சுதந்திரமான கற்றலுக்கு பின்வரும் விடயங்களைக் குறிப்பிடு கின்றனர்.

- காட்சி, கவர்ச்சிகளுடன் சொற் களையும் அறிமுகப்படுத்தல்.
- சொற்களையும், பொருட்களை யும் தொடர்படுத்தும் பன்முக அனுபவங்களைத் தருதல்.
- சொற்களையும் செயற்பாடுகளை யும் ஒன்றிணைத்தல்.
- இசைக் கவர்ச்சியை ஊட்டுதல்.
- சுயவெளிப்பாடுகளைத் தூண்டு தல்.
- கேட்கும் திறன்களை வளர்த்தல்.
- செயல்களுக்குப் பிரதியீடாக பேச்சை வளர்த்தெடுத்தல்.
- உச்சரிப்பு சோம்பலைத் தவிர்த்தல்.
- சொற்களையும் வசனங்களையும் முழுநிறைவாக பெற்றோரும் ஆசிரியரும் பேசுதல்.

போன்ற குறிப்புக்களை யாழ் ப்பாண பல்கலைக்கழக கல்வியியல் பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டு ள்ளார். இவ்வாறான கற்றல் சந்தர்ப் பங்கள் பிள்ளையின் இயல்பான உடல் , உள வளர்ச்சியிலும் (மூளை விருத்தி, நரம்பியல் விருத்தி) முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆரம்பக் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையின் உள வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, சமூக வளர்ச்சி என்பவற்றோடு இணைந்ததாக இருக்க வேண்டும். பிள்ளையை (learning Environ mental) கற்கும் சூழலுக்குள் கொண்டு வரவேண்டும். கற்பித்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

ஆரம்பக் கல்வி கற்றலில் பிள்ளையிடம் பல்திறன்களும் மனப்பாங்கும் முழுமையாக வளர்ச்சியடையக் கூடிய கலைத்திட்டம் வகுக்கப்படுகின்றது. இன்றைய ஆரம்பக் கல்வியில் மாணவரின் வேண்டுகோள் இவ்வாறு அமைகின்றது.

"எனக்காகத் தீர்மானங்களை நீங்கள் எடுப்பின் என்றுமே தீர்மானங்களை எடுக்க என்னால் முடியாமல் போகும். நான் இன்னாராக வேண்டுமென நீங்கள் தீர்மானிப்பின் நான் என்னையே இழந்துவிடுவேன். நானாகச் சிந்திப்பதற்கு நீங்கள் இடம் அளிப்பின் அதுவே நீங்கள் செய்யும் பேருதவியாகும்."

பிள்ளையை மையப்படுத்திய கல்வியே வேண்டப்படுகின்றது. கல்வி இயற்கையோடு அமைந்ததாக இருக்க வேண்டும். (Education according to nature)

கண்ணாடிக்குவளை ஒன்றினுள் ஒரு கைக்குட்டை வைக்கப்படுகின்றது. அதனைத் தலைகீழாக நீருள்ள சட்டியினுள் அமிழ்த்தப்படுகின்றது. பின்னர் வெளியே எடுத்த போது கைக்குட்டை நனைய வில்லை. இது பிள்ளைக்கு ஒரு விளை யாட்டு. ஒரு பிரச்சினை முன்வைக் கப்படுகின்றது. அவர்களைச் சிந்திக்க தூண்டுகின்றது. ஆர்வத்தை ஏற்படுத்துகின்றது. மாணவர்கள் மீண்டும் மீண்டும் செய்து பார்ப்பார்கள். ஆனால் ஆசிரியர் அவசரப்பட்டு விடை கூறக் கூடாது. சிந்தனைக்கு, ஆராய்வுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும். இவ்வாறு செய்து அதன் உண்மையை அறியும் போது மாணவருக்கு கற்றலில் விருப்பம், ஆர்வம், ஆசிரியரின் நட்பு ஏற்படும். இது ஓர் உதாரணம் மட்டுமே. ஆரம்பக் கல்வி இந்த வகையில் மாணவரின் சிந்தனைக்குச் சந்தர்ப்பம் கொடுத்தல் வேண்டும். இதனால் உள ஆரோக்கியம் சிறப்பாக அமையும். கருத்தியல் ரீதியான கற்பித்தலை விட செயல் ரீதியான கற்பித்தலே வேண்டப்படுகின்றது. "நான் அனுபவம் பெறுகின்றேன்" என்பதே சிறந்த கல்வியாகும். குழவிப்பூங்கா முறைக்கற்பித்தலிலும் இதனை வலியுறுத்தப்படுகின்றது. இம்முறைக் கற்பித்தலில் (Mental Development) உளவிருத்தி ஏற்படுகின்றது. பின்பற்றல் (Imitation), கவர்ச்சி (Interest), முயற்சி (Effort) என்பனவும் கல்வியில் செல்வாக்கு செலுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறைசாராக்கல்விப் பிரிவும் சமூகமும்



திரு.பழனிநாதன் ஆரூரன்
B.Ed,Sp.Tr.d(Maths)
உதவிக்கல்விப்பணிப்பாளர் (முறைசாரக்கல்வி)
A.D.E(Non-Formal)

முறைசார்ந்த கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் வாய்ப்புப் பெறாதவர்களும் பாடசாலையை விட்டு விலகியவர்களும் பாடசாலைக்கல்வியை முடித்துக் கொண்டவர்களுக்குமான பிள்ளைகள் மட்டுமன்றி வளர்ந்தவர்களும் தங்கள் அறிவு ,திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்வதற்கு முறைசாராக் கல்விப்பிரிவு பல சேவைகளை செய்து வருகின்றது. இப் பிரிவு நாட்டிலுள்ள சகல வலயங்களிலும் இயங்கி வருகின்றது. ஒரு சில பாடசாலைக் கட்டிடங்களில் மாலை வேலைகளிலும் சில கோவில்களிலும், சனசமூக நிலையங்கள் மற்றும் வேறு நிறுவனங்களிலும் வெவ்வேறு நேரங்களில் நடைபெறுகின்றது. சிறைச்சாலை, விசேட தேவையுள்ள நிலையங்களில், தெருவோரச்சிறுவர்கள் என்று சமூகத்தில் பாதிப்புக்குள்ளானவர்களும் பொருத்தமான இடம், நேரங்களிலும் இப்பிரிவு தனது சேவையை வழங்குகின்றது. இதன் மூலம் சமூகத்திலுள்ள மக்கள் இலவசமாக பல அரிய வாய்ப்புக்களைப் பெறுகின்றார்கள்.

முறைசார்ந்த கல்வியில் மாணவர்களின் தொழில்சார் திறன்களை வளர்க்கும் செயற்பாடுகள் ஒரு வரையறுக்கப்பட்ட அளவிலேயே வழங்கப்படுகின்றது. பாடசாலையில் சீவனோபாயத்திற்காக வாய்ப்பினை எய்துவதற்கு ஒரு முறையான வழிகாட்டல் கிடைக்காமல் இன்றும் பெருந்தொகையானோர் உள்ளனர். சமூகத்தில் சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், வளர்ந்தோர் உட்பட குடித்தொகையில் ஒரு பெரும் பகுதியினர் இன்னமும் இந்தளவு வாய்ப்புக்களைப் பெறமுடியாத நிலையிலுள்ளனர்.

இத்தகைய மக்கள் உயிர் வாழ்வதற்கும், உயிருள்ளவரை கல்வி வசதி நீடித்து நிற்பதற்கும், தொழிற் பயிற்சிகளைப் பெறுவதற்கும் வழிகாட்டல்கள் அவசியம் தேவையாக உள்ளது. முறைசாராக்கல்விப் பிரிவு இத்தேவைகளை இவர்களுக்கு வழங்கும் கடமைகளை நிறைவேற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. அடிப்படைக்கல்வி அறிவை வழங்குவது தொடக்கம் நடைமுறைசார்ந்த கல்வி அறிவு, வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த தொழில் சார் கல்வி அறிவு, வருமானம் ஈட்டும் தொழிற்பயிற்சி, வளர்ந்தோருக்கான கல்வியை வழங்கல் வரை தனது செயற்பாட்டை வழங்குகின்றது. முற்றும் கல்வி அமைச்சு மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்வி அலுகலகங்கள் போன்றவற்றில் பல வேறு வகையான கல்வி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு போதனாசிரியர்கள், தொழில் மூலத்திற்கான உபகரணங்கள், மூலப் பொருட்கள் போன்றவற்றுக்கு நிதி ஒதுக்கப்பட்டு முறைசாராக்கல்விச் செயற்பாடுகள் சமூகத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. முறைசாராக்கல்வி வாய்ப்புக்களை ஏற்பாடு செய்யும் அலுவலர்கள் தொண்டர்களின் தரத்தையும் தொகையையும் அதிகரிப்பதற்கு முயற்சி செய்வதோடு, பயிலுனர்களுக்கு கூடுதல் வசதிகளையும், குறைந்தளவிலான பணச்செலவுகளையும், குறைந்த விபரங்களையும், அதிகளவிலான நெகிழ்ச்சிகளையும், தேவைகளையும் நிறைவு செய்வதற்கும் எதிர்காலத்தில் திட்டமிடப்படுகின்றது.

இத்துறையானது அரசாங்கத்தின் கல்வித்துறை தொடர்பில் புதிய அணுகுமுறைகளுக்குத் துணை புரிவதோடு சான்றிதழ்களுக்கும், பரீட்சைகளுக்கும் மாத்திரம் மட்டுப் பத்தப்படாத முழுநிறைவான கல்வியைச் சமூகத்திற்கு வழங்குகின்றது. குறைந்தளவு வாய்ப்புக்களைக் கொண்ட மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்த இத்துறை பெரிதும் உதவுகின்றது.

**முறைசார்கல்வி, முறைசாராக் கல்விக்குமிடையிலான அடிப்படை வித்தியாசம்**

பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு அவர்களது கல்வியின் பொருட்டு பாடநேரத்தில் நடைமுறைப்படுத்தப்படும் விடயங்கள், இணைப்பாட விதான செயற்பாடுகள், பரீட்சைகள் என்பன முறைசாராக்கல்வியில் உள்ளடக்கப்பட்டிருக்கும். ஆனால் பாடசாலைவிட்டு விலகிய அல்லது சமூகத்திலுள்ள பிரஜைகளுக்கு அவர்களின் கல்வி, பயிற்சித்தேவைப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு செய்யப்படும் எந்தவொரு நடவடிக்கையும் முறைசாராக்கல்விச் செயற்பாடுகள் என அழைக்கப்படும். முறைசார்ந்த கல்வியில் ஆசிரியர் போதிப்பார், முறைசாராக்கல்வியில் பயிலுநர்களின் திறமை, எண்ணக்கருக்கள், விருப்பு வெறுப்புக்கள் என்பவற்றின் அடிப்படையில் அவற்றை விருத்தி செய்வதற்கு உதவி புரிதலே நடைபெறும். இதனாலே முறைசாராக்கல்வி போத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாசிரியர் பயில்வதற்கு உதவி புரிவோர் என்றே அழைப்பதுண்டு.

**முறைசாராக் கல்வியின் அவசியம்**

1. ஆரம்பக்கல்வியில் கற்காதவர்கள் அல்லது கற்கத் தவறியவர்களுக்கு அடிப்படை எழுத்துக்கள் கற்பிக்க வாய்ப்பு கிட்டுதல்.
2. பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தியோர்களுக்கு தொழில் அறிவையும், தொழிற்பயிற்சிகளையும் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவதல்.
3. சமூகத்திலுள்ள அனைவருக்கும் அவரவர் மதம் சார்ந்த விழுமியக் கல்வியைப் புகுத்தச் சந்தர்ப்பம் கிடைத்தல்.
4. முறைசார்ந்த கல்வியிலிருந்து வெளியேறியோருக்கு எந்தச் சான்றிதழும் பெறாமல் அவர் சார்ந்த, சமூகம் சார்ந்த பொருளாதார, அரசியல், சமூகப்பிரச்சினைகளை எதிர்கொள்ளக்கூடிய கல்வித் திட்டமொன்றின் தேவைக்காகவும் அவர்களைத் தொழிற் பயிற்சிக்கு ஊடாக கற்றறிதலைப் பெற வைத்தல்.
5. நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் பலன்களை சமூகத்தில் பின் தள்ளப்பட்டோருக்கும் வழங்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.
6. சுகாதாரப் பழக்க வழக்கங்களை பிற்பட்ட சமூகத்தினரிடையேயும் பரவச்செய்தல்.

**முறைசாராக்கல்வியின் ஏனைய செயற்பாடுகள்**

1. பெற்றோர் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்துதல். பிள்ளைகளின் பாடசாலை வரவு வீதம் அவர்களின் கல்வியில் ஏற்படுத்தும் தாக்கத்தை விளக்கி பாடசாலைக்குப் பிள்ளைகளை ஒழுங்காக அனுப்புவதற்கு பெற்றோர்களுக்கு ஊக்கமளித்தல், பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் தமது பிள்ளைகள் தொடர்பான நடவடிக்கைகள் பற்றி ஒரு திறந்த கலந்துரையாடலுக்கு வழியேற்படுதலும், இதன் நோக்கமாகும்.
2. பாடசாலைகளில் கட்டாயக் கல்விக்குழு, பாடசாலை வரவுக் குழுக்களை உருவாக்குதலும், இற்றைப்படுத்தல்.
3. ஒழுங்கற்ற வரவுடைய மாணவர்களை இனம் காணுதலும் அவற்றிற்கான காரணிகளை இனம் காணுதலும் அவற்றை இழிவாக்க நடவடிக்கை எடுத்தல்.
4. இடை விலகிய மாணவர்களை இனம் காணுதலும் அவற்றிற்கான காரணிகளை ஆராய்ந்து மீண்டும் பாடசாலைகளில் இணைக்க முயல்தல் அல்லது அவர்களை எழுத்தறிவூட்டல் வகுப்புக்கள் தொழிற்பயிற்சிகளில் இணைத்தல்.
5. மாவட்ட, பிரதேச மட்ட பாதுகாப்புக்குழுக்கள், சிறுவர் உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்புக்குழுக்களுடன் தொடர்பைப் பேணுதலும் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள செயற்திட்டடங்களுக்கு உதவுதல், அவர்களின் கலந்துரையாடல்களில் இணைந்து சிறுவர் தொடர்பான பிரச்சினைகளை இழிவளவாக்க முயற்சி செய்தல்.

| குறிக்கோள் | முறைசார் கல்வி<br>சான்றிதழ் பெறுதல் | முறைசாராக்கல்வி<br>வாழ்க்கைக்குத் தேவையான பயிற்சி பெறுதல் |
|---|---|---|
| காலம் | நீண்ட காலம் | குறுகிய காலம் |
| மாணவர்களின் அனுபவம் | குறைவு<br>முக்கியமற்றது | முக்கியமானது<br>வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியது. |
| உள்ளடக்கம் | வழமையான பாடத்திட்டம் | பயிலுநர்களின் தேவைக்கேற்றது விளைவை அடிப்படையாகக் கொண்டது |
| கல்வி முறை | கற்பித்தல்<br>முறையியல்<br>பரீட்சைகள் | செயற்பாடும். செய்துகாட்டலும் |
| செயற்பாட்டுத் தூண்டிகள் | பரீட்சைப் பெறுபேறுகளும், புள்ளிகளும் | ஆற்றல், தகுதி மேம்பாடு அடைவினூடான திருப்தி |
| எடுத்துரைத்தல் | வழமையான ஆசிரியர்களின் செயற்பாடு | சமூகத்தின் தேவைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டவர்களின் ஆற்றலுக்கு உட்பட்ட முறைகள் |
| கற்கும் வயது | வழமையான பாடசாலை வயதெல்லை | வயதெல்லை இல்லை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழிசை பற்றிய பழந்தமிழ் விளக்கக்குறிப்புகள்



**திருமதி.சுமிதா உதயச்சந்திரன்**
ஆசிரியர்,
B.F.A
யா/நாரந்தனை கணேச வித்தியாலயம்.

ஒலியின் அடிப்படையினின்று அமைந்திருப்பது இசைக்கலை. உலகில் முதல் தோற்றம் ஒலியே எனப்பல சமயங்களும் கூறுகின்றன. இசை இயற்கையினின்றும் தோன்றியதால் இயற்கையின் நியதிகளைப் பின்பற்றி உலகில் உள்ள அனைத்து நாட்டுஇசைகளிலும் ஏழிசை எனும் பகுப்புக் காணப்படுகிறது.

சங்க கால இலக்கியங்களிலிருந்து தமிழர்கள் ஒலியை ஏழாகப் பகுத்து முறைப்படுத்தி, அவற்றை இசைகளாக வகுத்து அவற்றை ஏழிசையென அமைத்து அவற்றினின்று பண்களை உருவாக்கினர் எனத் தெளிவாக அறிகிறோம். சங்க காலத்திலேயே ஏழிசைப் பற்றி அறிந்திருந்தனர் என்பதனை,

**"புரி நரம்பின் கொளைப் புகல்பாலை ஏழும்**
**எழுப்புணர் யாழும் இசையும் கூடக்**
**குழலளந்து நிற்பமுழவெழுந் தார்ப்ப**
**மன்மகளிர் சென்னியர் ஈடல் தொடங்க."**

எனும் வரிகள் உணர்த்துகின்றன. புரி நரம்பின் கொளைப் புகல் பாலை ஏழும் வரியில் செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப் பாலை, விளரிப்பாலை, மேற்செம் பாலை எனும் இவ்வேழ் பாலைகளும் அக்காலத்தில் வழக்கில் இருந்ததாக உரையாசிரியர் கருதுகிறார். பாலை எனும் சொல் ஏழிசையின் ஆரோசையையும் அமரோசையையும் குறிக்கும்.ஏழிசையைக் கொண்ட பண் எனவும் பொருள்படும்.

ஏழிசைகளைப் பறவை, விலங்குகள் ஆகியவைகளின் ஒலிக்கு ஒப்பிட்டுச் சங்க கால நூல்களில் ஒன்றான பஞ்ச மரபும் சூடாமணி, நிகண்டும் குறிப்பிடுகின்றன. சங்க காலத்தில் இயற்கையைக் கண்டு களிப்புற்று, பறவைகள், விலங்குகள் ஆகியவைகளின் ஒலி இசை எழுத்துக்களின் ஒலிகள் போல அமைந்து இருந்தன என உவகையினால் உவமை கூறினர். இவ்வாறு இயற்கை ஒலியையும் இசை ஒலியையும் ஒப்பாகக் கூறியிருப்பது அவர்கள் இசையின் பால் கொண்டிருந்த அன்பினையும் ஈடுபாட்டினையும் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் செவிகளில் கேட்கும் ஒலிகள் எல்லாம் இசையொலிகளாகவே கேட்டனர். தமிழிசையில் குரல் மாறுதலுக்குட்பட்டது. அதாவது (Relative pitch) எனப்படும் வகையாகும். மேனாட்டிசையில் குரல் அல்லது ஸ நிலையானது (Absolute pitch) ஆகும். மேனாட்டிசையைப் போல் குரல் அல்லது ஸ நிலையான இசைநிலையில் (Abso lute pitch) ஆக இருந்தாலன்றி குயிலின் ஒலியைத் துத்தம் எனவோ யானையின் குரலினை உழை எனவோ ஒப்பிட்டுக்கூற முடியாது. எனவே நாம் இவ்வாறு பறவைகள் விலங்குகள் ஆகியவைகளின் ஒலிக்கு ஒப்பிட்டுக் கூறியிருப்பதைத் தமிழறிஞர்களின் அளவு கடந்த இசை பற்று என்றே கருதலாம்.

பஞ்சமரபு நூலில் இசைமரபு எனும் பகுதியில் குரல் முதல் தாரம் வரை கூறப்படும் ஏழிசைப் பெயர்களையும் அவற்றின் பிறப்புக்களையும் காணலாம்.

**"தாரத்துட் டோன்றும் உழையும்**
**உழையுட்டோன்றும் ஒருங்குரல்**
**குரலினுட் டோன்றிச்சேரும் இளி**
**யுட்டொன்றுங் துத்தற**
**துத்தத்துட்டோன்றும் விளரியும்**
**கைக்கிளை தோன்றும் பிறப்பு."**

எனக்கூறுகிறது. கைசிகி நிஷாதத்தினின்று தொடங்கி ஸ்டஜ-பஞ்சம பாவமாக அல்லது இளி முறையில் சென்றால் சுரங்கள் வருமாறு

| | |
|---|---|
| **(கைசிகி) நிஷாதம்** | **(சுத்த) மத்யமம்** |
| **சுத்த மத்யமம்** | **ஷட்ஜம்** |
| **ஷட்ஜம்** | **பஞ்சம்** |
| **பஞ்சமம்** | **(சது) ரிஷபம்** |
| **(ச)ரிஷபம்** | **(சது) தைவதம்** |
| **(ச)தைவதம்** | **(அந்)காந்தாரம்** |

தாரம் எனும் போது கைசிகி நிஷாதம் எனக் கொள்ளல் வேண்டும். பாலை யாழில் தோன்றும் பாலை செம்பாலை அது அரிகாம் போதி எனும் இராகமாகும். இதில் கைசிகி நிஷாதமே வருகின்றது.

தாரத்திலிருந்து தொடங்கி நரம்புகளின் பிறப்பைக் கூறுமிடத்து முதலில் தோன்றிய நரம்பு தாரம் என்பதாகக் கூறப்பட்டுள்ளது. தாரத்தில் தொடங்கினால் தான் இராசி வட்டத்தில் ஒன்றிலிருந்து ஒன்று இளிக்கிரமமாகப் பிறக்கும் நரம்புகள் சூத்திரத்தில் கூறியவாறு அமையும். ஏழிசைகள் பிறக்குமிடங்களைப் பற்றியும் பஞ்சமரபு நூலில் காணப்படுகிறது. உழை தலையிலிருந்தும் இளி நெஞ்சிலிருந்தும் விளரி நெற்றியிலிருந்தும் குரல் மிடற்றிலிருந்தும் துத்தம் நாக்கிலிருந்தும் கைக்கிளை அண்ணத்திலிருந்தும் தாரம் மூக்கிலிருந்து வெளிப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏழிசையில் முதல் சுரத்தை (Tone)என அழைக்கின்றனர்.(Tone) என்பதிலிருந்து (Tonic) எனும் சொல் பிறந்தது. தமிழ் இசையில் குரல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் ஏழிசையைக் குறிக்கும் சொற்கள் அச்சொல்லை விளக்கும் பெயர்களாக அமைந்திருக் கின்றன என்பதனை அறிகிறோம். ஷட்ஜம்,ரிஷபம்,காந்தாரம், மத்ய மம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்பதில் சில சொற்களுக்கே விளக் கம் கூற முடிகிறது. இவைகள் (Mne monics) முறையில் ஏழிசையின் எழுத்துக்களை நினைவில் வைத்துக் கொள்ள உதவுகிறது. தமிழிசையில் ஏழிசையின் எழுத்துக்களான ஸரிகம பதநி என்பவை இன்னொலி எழுத்து க்கள், பிறக்கும் நிலையினின்று கண்டறிந்து, இசை எழுத்துக்களாக அமைத்து இருப்பதைப் பஞ்சமரபில் கூறப்பட்டுள்ளதை அறிகிறோம்.

"ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஒ, ஔ என்றேழும் ஏழிசைக்கெய்து அக்கரங் கள்" எனப்பிங்கல நிகண்டு கூறுவ தும் ஏழ் இசைச் சுரங்களை உயிரெழு த்துக்களாகப் பாடுவதையே கூறு கிறது. உயிரெழுத்துக்களைக் கொண்டு குரல் பயிற்சி செய்வதின் மூலம் குரல் பண்பாடு அடைந்து இனிமையாக ஒலிக்கிறது என்பதனை உயிரியல், பௌதீக விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. அகார சாதகம் பண் ணல் எனும் முறை பல காலந்தொட்டு குரல் பயிற்சி முறையில் நடைமுறை யில் இருந்து வருகிறது. இவற்றி யிருந்து தமிழ்ச்சுரப் பெயர்களின் சிறப்பை நாம் உணரலாம்.

## உசாத்துணை

1. பேராசிரியர் எஸ்.கே.சிவபாலன்,
உலக இசைகளுக்குத் தமிழ் இசையின் பங்களிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை அறியாமல்
# உன்னுடன் கலந்த இசை



**திருமதி.அ.மேரிமக்டலின்**
ஆசிரியை,
யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி.

தாயின் கருவறையில் இசையுடன்
உருக்கொடுத்த மனிதனே
உன்னைப் பெற அன்னையவள்
துடிக்கின்ற பொழுது கூட
மருத்துவிச்சி மனம் மகிழ்ந்து பாடியே
உன்னைப் பூமிக்கு அழைக்கின்றாள்.

தரணியில் நீ பிறக்கும் பொழுது கூட
அழுகை என்னும் இசை மழையை
நானிலத்தில் பொழிந்து கொண்டே
நீ நல்வரவு தருகின்றாய்
உன் அழுகை கேட்டதும்
இசைபயிலா அன்னை கூட
நீலாம்பரி இராகத்தால்
தாலாட்டைப் பாடுகின்றாள்.

நீ சிறுவயதை அடைந்து பாடி ஆடி மகிழ்ந்து
விளையாடும் பொழுது கூட
பாரதியாரின் பாப்பாப் பாடலை
பார்முழுவதும் பாடியே நீ பறக்கின்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரியாக நீ வளர்ந்து
குதூகலிக்கும் வேளையிலும்
குளவை பாடிக் கூடி ஒன்றாய் - உன்
குடும்பமே மகிழ்ந்து பாடுது பார்!

நற்குடும்பம் தனை அமைக்க - நீ
மணமேடை செல்லும் போது கூட
நலுங்கு பாடி சுற்றம் சூழ
வாழ்த்தி இங்கே நிற்குது பார்.

வயது வந்து வாலிபமானது மறைகின்ற போது
முதுமையென்பது முத்தமிடும் போதும் கூட
காலன் அவன் காவுகைக்கு நீ
உள்ளாகும் வேளையிலே........

ஒப்பாரி என்னும் பாடலை
முகாரி என்னும் இராகத்துடன்
உயிரற்ற உன் உடலுக்கு
உவந்து அளிக்கின்றனர்.

உன்வாழ்விலே உன்னை அறியாமல்
உன்னுடன் கலந்து விட்ட இசையை
நீ முயன்றாலும் உன்னால்
பிரிக்கவே முடியாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# விளைதிறன் மிக்க பாடசாலையைக் கட்டியெழுப்புவதில் தலைமைத்துவத்தின் (அதிபர்) பங்களிப்புகள்



திருமதி.சுதாஜினி சஞ்சீவ்
ஆசிரியர்,
B.Com, M.A, PGDE
யா/வேலணை மத்திய கல்லூரி

ஒரு நாட்டின் பயனுறுதி மிக்க முதலீடாக அமைவது கல்வியாகும். இக்கல்வியை செயற்படுத்தும் பொறிமுறையாக அமைவது பாடசாலையாகும். உலகமயமாக்கல் காரணமாகப் பாடசாலைகள் தொழில் நிறுவனங்களாகவும், கல்வியானது வணிகப் பண்டமாகவும் மாறியுள்ளது. அந்த வகையில் ஒவ்வொரு பாடசாலையும் விளைதிறன் மிக்கவையாக கட்டியெழுப்ப வேண்டியது காலத்தின் தேவையாகும். இவ்வாறு பாடசாலைகள் விளைதிறன் மிக்கதாக முன் நகர்த்திச் செல்ல அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் (பெற்றோர் உட்பட) பங்களிப்புகள் மிக அவசியமாகும். இங்கு தலைமைத்துவத்தின் பங்களிப்புகள் மட்டும் எடுத்து நோக்கப்படுகின்றது.

உலகளாவிய போட்டித் தன்மையை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் பாடசாலைகளைக் கற்கும் நிறுவனங்களாக மாற்ற வேண்டிய தார்மீகக் கடமையினை அதிபர்கள் ஏற்று நடாத்த வேண்டிய காலத்தின் தேவையாகவுள்ளது. கற்கும் நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் பின்வரும் ஒழுங்கமைப்புக்கள் காணப்படும் பீற்றர் செங் தனது "ஐந்தாவது ஒழுக்கம்" எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

- முறைமை சார் சிந்தனை
- தனியாள் நிபுணத்துவம்
- உள மாதிரியாளர்
- பகிரப்பட்ட நோக்கு
- அணிநிலைக்கற்றல்

லும் இந்நிறுவனங்களில் உற்பத்தியாற்றுகைக்காகக் கற்றலே அதன் பிரதான பண்பாகக் காணப்படும். அதற்கான முன் நிபந்தனையாக பின்வரும் அற நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் பீற்றர் செங் குறிப்பிடுகின்றார்.

- **கற்கும் சந்தர்ப்பங்களைத் தொடர்ச்சியாக உருவாக்கல்.**

பாடசாலையின் தற்போதைய சூழ்நிலையை மேம்படுத்துவதற்காகவும் புதிய செயற்றிட்டங்களை உருவாக்கவும் மாற்றங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஏற்படுத்தவும் உதவ வேண்டும். இதற்காக ஆசிரியரின் வாண்மை விருத்திக்கான நேரம், சந்தர்ப்பங்கள், கவிவு நிலை போன்றவைகளை வேண்டியளவிற்கு வழங்குவதுடன் தொடர்ச்சிச் தன்மையையும் பேண வேண்டும்.

❖ **திறந்த கலந்துரையாடலுக்கான திறன்களை மேம்படுத்தல்.**

பாடசாலை ஆசிரியர்கள் தமது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் பாடசாலையின் கலைத்திட்ட, இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் தொடர்பாக திறந்த மனத்துடன் எவ்வித தடையும் இன்றி கலந்துரையாடுவதற்கான கவிவு நிலையை ஏற்படுத்த வேண்டும்.

❖ **கூட்டிணைந்த கற்றலுக்கான ஊக்குவிப்புகள்.**

பாடசாலையில் தர வட்டங்கள், படிப்பு வட்டங்கள் உருவாக்கி ஆசிரியர்கள் கூட்டிணைந்த கற்றலில் ஈடுபடுவதற்கு வசதியளிக்க வேண்டும்.

❖ **பகிரப்பட்ட நோக்கிற்கிணங்க ஆசிரியர்களை வலுவூட்டல்.**

பாடசாலையின் நோக்கங்களை ஆசிரியர்களுக்குப் பகிரங்கமாக விளக்கி, அந்த நோக்கங்களிற்கும் இலக்கிற்கும் ஏற்ப ஆசிரியர்கள் பாடசாலையில் கடமையாற்றுவதற்காகப் பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வலுவூட்டல் நிகழ்ச்சிகள் இடம்பெற வேண்டும்.

❖ **பாடசாலையை உள்ளூர்,உலகளாவிய சூழமைவுடன் இணைத்தல்.**

பாடசாலையை உள்ளூர் மற்றும் உலகளாவிய போட்டிச் சூழமைவுடன் பொருந்திச் செயற்பட வைப்பதாகும். அதாவது உலகளாவிய புதிய செயல் நெறிகளை உள்வாங்கி அதனை சர்வதேசத்தில் பொருத்திக் கொள்ளக்கூடியவாறு செயற்படுத்தலாம்.

❖ **பாடசாலைக்கு உருமாற்றுத் தந்திரோபாயத்துடன் இணைத்த தலைமைத்துவத்தை வழங்கல்**

ஒரு பாடசாலையின் அதிபர் தமது பாடசாலை சமகால நிலைமைகளில் எவ்வாறு செயற்படுகின்றது என்பதை ஆராய்ந்து எதிர்கால இலக்கு நோக்கி அவற்றை அடைவதற்கான தந்திரோபாயங்களை உருவாக்குவதற்கு ஏற்றவகையில் உருமாற்று தந்திரோபாயத்தை வழங்க வேண்டும்.

அது மட்டுமல்லாமல் பாடசாலைகளை வினைத்திறன் மிக்க பாடசாலைகளாக உருவாக்கிக் கொள்வதற்காக தமது பாடசாலையின் குறிக்கோள்களை வகுத்துக் கொள்ளும் போது பின்வரும் விடயங்களைத் தவறாது தலைமைத்துவமானது கவனத்திலெடுத்து அதனை உள்ளடக்கிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **மாணவர்களின் தேசிய மட்டப் பெறுபேறுகளை உயர் மட்டத்திற்கு எடுத்துச் செல்லல்.**

பாடசாலையின் இணை பாடவிதான செயற்பாடுகளைத் தரமுள்ளதாகவும் ஏனைய பாட சாலைகளுடன் ஒப்பிடும் போது உயர் நிலையில் பேணல்.

❖ பாடசாலையில் நல்லொழுக்கம், விழுமியம், சமூகப்பற்றுக் கொண்ட மாணவர்களையும் ஆசிரியர்களையும் பராமரித்துக் கொள்ளல்.

❖ தேசிய மட்டத்தில் விதந்துரைக்கப்படும் கலைத் திட்டத்தினைப் பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் தேர்ச்சிகளாக மாற்றும் செயற்பாடுகளில் தரத்தையும் தொடர்ச்சியையும் சிறப்பான பெறுபேறுகளையும் உருவாக்கிக் கொள்ளல்.

❖ மாணவர்களின் கற்றல் விருத்திக்காகப் பாடசாலையின் வளங்களை உச்சமாகப் பயன்படுத்தல்.

❖ பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்திச் செயற்பாடுகளை உச்ச மட்டத்தில் எடுத்துச் செல்லல்.

❖ பாடசாலைக்கான சமூகத்தினதும் பெற்றோரதும் ஆதரவை பெற்றுக் கொள்ளல்.

❖ பாடசாலையின் நன்மதிப்பை காலத்திற்குக் காலம் உயர்த்திக் கொள்ளல்.

இதனடிப்படையில் நவீன உலகில் தலைமைத்துவம் சம்பந்தமான எண்ணக்கரு எல்லா வகையான நிறுவனங்களிலும் முக்கியத்துவம் பெற்றுவரும் இந்நிலையில் ஒவ்வொரு அதிபரும் பெற்றுக்கொள்ளும் பட்டறிவும் பயிற்சியும் மற்றவர்களிடமிருந்து பெறும் அனுபவமும் என்னும் " முகாமைத்துவ நெருப்பில்" படம் போட்டு ஒளிரவைக்கும். அது மட்டுமல்லாமல் இன்று அதிபர்கள் "நிர்வாக அலுவலர்" என்ற நிலையிலிருந்து மாறி "சமனானவர்களிடையே தலைமை தாங்குபவர்" என்ற புதிய பரிமாணத்தைப் பெற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதே வேளை அதிபர்கள் தாம் ஒரு "அதிகாரி" என்ற நிலையிலிருந்து கொண்டு தமக்கே உரத்தான "தலைக் கனம்" கொண்டவர்களாகச் செயற்பட்டால் அவர்களது பெயர் நிலை பேறு அடையாததுடன் தாம் சார்ந்த பாடசாலையின் பெருமையையும் மழுங்கடிக்கப்படும். இவ்வாறான பல அதிபர்கள் பற்றி "றொபேட் ஹிலர்" என்பவர் "நிர்வாணமுகாமையாளர்" என்ற அடை மொழிகளினால் குறிப்பிட்டு அவர்களிடமிருந்து சிறந்த முகாமைத்துவப் பண்புகளைப் பெற முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் ஒரு பாடசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையில் 24 மணி நேரமும் உழைக் கும் ஒரு "ஊழியரான" அதிபர்விளை திறன் மிக்க பாடசாலையொன்றைக் கட்டியெழுப்புவதற்குப் பின்வரும் முகாமைத்துவப் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

❖ பாடசாலை பற்றிய சிந்தனையே முழுநேரமும் கருத்தில் கொள்ளு தல்.

❖ பாடசாலையில் அனைத்துக் கருமங்களைவும் கண்காணித்த லும் மேற்பார்வை செய்தலும்.

❖ பாடசாலையின் பிரதான சட்ட வாக்க உத்தியோகத்தராகச் செயற் படல்.

❖ பிரதான தீர்மானம் எடுப்பவரா கவும் பிரச்சினை தீர்ப்பவராகவும் செயற்படல்.

❖ கல்வித்திட்டமிடல் வேலையை மேற்கொள்ளல்.

❖ பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்த்தலும், அவர்களை வகுப்புக் களாகப் பிரித்தலும், ஆசிரியர் களைத் தெரிவு செய்தலும்.

❖ நேர அட்டவணையைத் தயாரித்த லும் அதனடிப்படையில் கற்றல், கற்பித்தல் விடயங்களை ஒழுங்கு படுத்தலும்.

❖ ஆசிரியர் குழாத்தின் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளும் ஆசிரியர் நலம் பேணுதலும்.

❖ பாட அமுலாக்கமும் அதன் விருத்தியும்.

❖ ஆசிரியர் மற்றும் பணிப்பாளரை மதிப்பீடு செய்தல்.

❖ மாணவர் ஒழுக்கங்களை விருத்தி செய்யும் நடவடிக் கைகளை மேற்கொள்ளுதல்.

❖ பெற்றோர், பழைய மாணவ ருடன் நெருக்கமான உறவைப் பேணுதல்

மேலும் பாடசாலை அதிபர் ஒருவர் பின்வரும் தலைமைத்துவப் பண்புகளையும் கொண்டிருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்படு கின்றது.

❖ நோக்க உணர்வு உள்ளவராக செயற்படுதல். அதாவது "நோக் கத்தினால் முகாமை செய்தல்" என்ற கருதுகோளின்அடிப்படை யில் செயற்படுபவராக இருத்தல் வேண்டும்.

❖ மனிதரை விளங்கி மற்றோர் நிலைக்கு உள்ளாகும் மானிடத் திறன் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

❖ வேலைதொடர்பான பரிபூரண அறிவை அதாவது தொழில் நுட்பத்திறன் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

❖ தொடர்பாடல் திறன் கொண்ட வராக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

❖ “இதனை இதனான் இவண் முடிக்கும் என்றாய்ந்(து) அதனை அவன் கண் விடல்” எனும் கூற்றுக் கிணங்க பொறுப்புக்களைகைய ளிக்கும் திறன் கொண்டவராக இருத் தல் வேண்டும்.

❖ பாடசாலையில் குடும்ப உற வைப்பேணுதல் வேண்டும்.

❖ பாராட்டும், கண்டிப்புத்தன்மை யும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

❖ நேரத்திற்கு மதிப்புக் கொடுப்ப வராக இருத்தல் வேண்டும்.

அதாவது தனது செயற்பாடு களில் நேரமுகாமைத்துவம் கடைப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும்.

❖ அதிபர் சமூகத்தின் முன்மாதிரி யாக செயற்படுதல் வேண்டும்.

இன்றைய பூகோள மயமாக் கல் தேவைகளுக்கேற்ப பாடசாலை கள் விளைத்திறன் மிக்கதாகக் கட்டி யெழுப்புவதன் மூலமே மாணவரி டையே “மிருது திறன்கள்” (Soft skill) வளர்க்கப்படலாம் என்ற அடிப் படையிலும் “நாட்டில் எதனை நாம் அறுவடை செய்ய விரும்புகின் றோமோ அதனைப் பாடசாலையில் விதையுங்கள்” என்ற நெற்போலியன் பெனபாட்டின் கூற்றுக்கிணங்கவும் பாடசாலைகளை விளைதிறன் மிக்க வையாகக் கட்டியெழுப்புவதில் தலைமைத்துவத்தின் பங்கு மிக இன்றியமையாதாகவுள்ளது.

## உசாத்துணை நூல்கள்:

*01.* சின்னத்தம்பி.ம. *(2009)* பாடசாலை முகாமைத்துவம், கொழும்பு சேமமடு பதிப்பகம்.

*02.* Kanneth leith wood (2024). How header ship Influence Student hearning U.k

*03.* அனந்த ராஜ், ந. ,*(1999)* முகாமைத்துவநுட்பங்கள் வல்வெட்டித்துறை. நந்தி பதிப்பகம்.

*04.* ஹர்பஹான் .M *(2013)* விளைதிறன் மிக்க பாடசாலை, அகவிழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பீட்டுக் கல்வியின் அடிப்படையில் இலங்கையில் கல்விப் பிரச்சினைகள் பற்றிய ஒரு கண்ணோட்டம்




செல்வி.தம்பித்துரை சம்சித்தி
ஆசிரியர்,
(B.A,PGDE,Dip in fsc)
யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர்


ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு முதுகெழும்பாக விளங்குவது கல்வியே. அந்த வகையில் தனி மனிதனைத் தற்கால அபிவிருத்திக்கு முகங்கொடுக்கவும் அதனை வரவேற்கவும் ஏற்ற மனப்பாங்கையும் திறமையும் கல்வி மூலம் வழங்க வேண்டும். ஒரு நாட்டுக்குப் பொருத்தமான கல்வி முறையினால் தான் அந்நாடு அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு அம்சங்களை அபிவிருத்தி அடையச் செய்யலாம்.

எனவே இத்தகைய கல்வியின் செயலாற்றுகையை நாம் வரலாற்று ரீதியாகவும் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு ரீதியாகவும் கல்வியை ஒப்பீடு செய்து பகுத்தாராய்வதன் மூலம் ஒரு நாட்டின் கல்விப் பிரச்சினைகளை இனங்கண்டு கொள்ள முடியும். அந்த வகையில் ஒப்பீட்டுக் கல்வியின் அடிப்படையில் இலங்கையின் கல்விப் பிரச்சினைகள் பற்றி ஒரு சிறிய கண்ணோட்டமாக இக்கட்டுரை செல்கிறது.

**கலைத்திட்ட சீர்திருத்தம் முறையான அளவில் நடைபெறாமை:-**

கலைத் திட்டமானது தற்காலத்துக்குப் பொருத்தமான வகையில் நவீன மயப்படுத்தப்பட வேண்டும். பாடசாலைக் கலைத் திட்டம் பாடநூல் சார்ந்ததாகவும் ஆசிரியர்களின் பாரம்பரிய கற்பித்தல் முறைகளாலும் கற்றலின் பால் மாணவர்களை ஈர்க்கின்ற வகையில் அமையவில்லை. இலங்கையில் ஆரம்பக் கல்வி செயற்பாட்டுமையக் கலைத் திட்டம் காணப்பட்டாலும் அவை தொடர்பான வழிகாட்டலும் மேற்பார்வையும் போதாமையினால் செயற்பாட்டு முறைகளைப் பயன்படுத்துவது ஸ்தம்பித நிலையை எட்டியுள்ளது. பாரம்பரிய கற்பித்தல் முறையைக் கொண்ட பாடநூல் - மையக் கலைத் திட்டமானது மெல்லக் கற்கும் மாணவர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப்புற வசதி குறைந்த குடும்பப் பின்னணியிலிருந்து வரும் மாணவர்களையும் பாதிக்கின்றது. இதனால் பாடசாலையிலிருந்து மாணவர்கள் இடை விலகுவதற்குக் காரணமாய் விளங்குகின்றது.

அத்துடன் இடைநிலைக் கல்வி பன்முகப்படுத்தப்படாமை காணப்படுகின்றது. இவற்றுக்கு காரணங்களாக,

1. **விசேட ஆசிரியர்கள் பற்றாக்குறை - தொழில் நுட்ப விஞ்ஞானம் தொழில் சார் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கு திறமையுள்ள ஆசிரியர் பற்றாக்குறை.**
2. **நகரப்புற பாடசாலைகளிலுள்ள வசதி வாய்ப்புகள் கிராமப்புற பாடசாலைகளில் காணப்படாமை.**

எனவே இலங்கைப் பாடசாலைகளில் விஞ்ஞானத்தையும் தொழிநுட்பத்தையும் கற்பிக்கும் ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றனர். அடிப்படை விஞ்ஞானத் திறனும், கணினித் திறனும் போன்ற உயர்ந்த திறன்களும் எழுத்தறிவு என்பதில் சேர்க்கப் பட்டுள்ளன. இதனை ஒப்பீட்டுக் கல்வியின் அடிப்படையில் நோக்கினால் எமது நாட்டில் எழுத்தறிவைப் பெறாதவர்கள் பெருந்தொகையினரே.

**சகலருக்கும் படிப்பறிவு என்ற இலக்கினைத் தற்காலம் வரை இலங்கை அடைய முடியாத நிலை:-**

சகலருக்கும் கல்வியை வழங்க முடியாமைக்கு கட்டாயக் கல்வியும் ஒரு காரணமாகக் காணப் படுகிறது. அதாவது 5 - 16 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகள் கட்டாயமாக பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சுக்கு, *1939*ம் ஆண்டின் *31*ம் இலக்க கல்வி கட்டளைச் சட்டம் வழிகோலிய போதிலும் 1997 இல் தான் கட்டாயக் கல்விக்கான விதிகளை ஏற்றுக் கொண்டது. கல்வியறிவில்லாதவர்கள் இரண்டு பிரதான பிரிவினர் காணப்படுகின்றனர்.

1. **பாடசாலைக்கு ஒரு போதும் செல்லாதவர்கள்.**
2. **பாடசாலையிலிருந்து இடை விலகியோர்.**

கட்டாயக் கல்வியைத்தொடராமல் தற்காலத்திலும் பிள்ளைகள் வேலைகளில் அமர்த்தப்படுகின்றனர். பிள்ளைகளை வேலைக்கு அமர்த்தல் தொடர்பாக பல கட்டளைச் சட்டங்கள் காணப்படுகின்றன. அவற்றுள்

1. **1942ம் ஆண்டு 27ம் இலக்க ஆகக் குறைந்த சம்பளங்கள் கட்டளைச் சட்டமும் அதன் திருத்தங்களும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 1942ம் ஆண்டு 45ம் இலக்கத் தொழிற் சாலைகள் கட்டளைச் சட்டமும் அதன் திருத்தங்களும்.

3. 1954ம் ஆண்டு கடை மற்றும்அலுவலக ஊழியர் கட்டளைச் சட்டமும் அதன் திருத்தங்களும்.

இச்சட்டங்களில் தொழிலுக்கு அமர்த்துவதற்கான குறைந்த பட்ச வயதினைத் தெளிவாகச் சுட்டிக் காட்டப்படவில்லை. கடைகள், அலுவலகங்கள், கைத்தொழில்கள், தெரு வியாபாரம் என்பவற்றில் தொழிலில் அமர்த்துவதற்கு குறைந்த பட்ச வயது 14ம், கப்பலின் தொழிலில் அமர்த்துவதற்கு 15 வயதும் விதிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயத்திலும் வீட்டு வேலைகளிலும் பிள்ளைகளை தொழிலுக்கு அமர்த்துவதற்கான குறைந்த பட்ச வயது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. எனவே இலங்கையில் சகலருக்கும் கல்வியை வழங்குவது பெரும் சவாலாக உள்ளது.

**கல்வியை ஜனநாயக மயப்படுத்துவதிலுள்ள பிரச்சினை:-**

கட்டாயக் கல்விப் பருவத்திலுள்ள மாணவர்களுக்குச் சமமான கல்வியைப் பெறுவதில் சிக்கல் தன்மை காணப்படுகின்றது. மிக முக்கியமாகப் பிரதேசங்களுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. விஞ்ஞான ஆய்வு கூடங்கள், முறையான பாடசாலைக் கட்டடவசதிகள், விளையாட்டு மைதான வசதிகள், நூலக வசதிகள் ஆகியன நகரப் புறப் பாடசாலைகளுக்கு இன்னும் போதியளவில் வழங்கப்படவில்லை. ஆசிரிய வளத்தை நோக்குகின்ற போதும் நகரப் புற பாடசாலைகளில் கணித, விஞ்ஞான, ஆங்கில ,விசேட கல்வி ஆசிரியர்கள் நகரப்புறப் பாடசாலைகளில் காணப்படுகின்ற அளவிற்கு கிராமப்புற பாடசாலைகளில் இல்லை. ஆகவே இப்பாடங்களுக்கான ஆசிரியர்கள் கிராமப்புற பாடசாலைகளில் பற்றாக்குறை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

**சமூகத் தேவைக்கும் கல்விக்கும் இடையிலான பொருத்தப்பாடு:-**

நாட்டின் கல்வி முறையில் சமூகத் தேவைக்கும் கல்விக்கும் இடையே சிறந்த பொருத்தப்பாடு காணப்பட வேண்டும். இலங்கையில் கல்விக்கும் தொழிலுக்கும் பொருத்தப்பாடு காணப்படாமைக்கு பாடப் பரப்பும், கற்பித்தல் முறையுமே யாகும். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான திறனுள்ள தலைவர்கள், தீர்மானம் எடுக்கக் கூடியவர்கள், தொழில் முயற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளராகச் செயற்படக் கூடியவர்கள் ஆகியோர் போதியளவில் உருவாக் கப்படவில்லை. இதற்கு காரணம் கலைத்துறை சார்ந்த திட்டமே காரணம். மேலும் தொழிலைத் தீர்மானிப்பதற்கு மாணவர்கள் தமது தனிப்பட்ட ஆற்றல்களையும் பலத்தையும் மதிப்பீடு செய்யும் திறனற்றவர்களாகக் காணப்படு கின்றனர். மாணவர்களைத் தொழி லில் ஈடுபடுவதற்குத் தயார்ப்படுத்த முடியாத நூற்கல்வி காணப்படு கிறது. எனவே சமூகத் தேவைகளுக்கு ஏற்றவகையில் தொழில்நுட்பக் கல்வி போதியளவில் காணப்பட வில்லை.

**கல்விப் பிரச்சினை ஏற்படுவதில் அரசியலின் பங்கு:-**

அரசியல் உறுதியின்மை, அரசியல் வாதிகள் கல்வித்துறையில் கவனம் செலுத்தாமை, அரசியல் வாதிகளால் அரசியல் இலாபம் கருதி எடுக்கப்படுகின்றன. திடீர் கொள்கை கள் என்பன இக்கல்வி பிரச்சினை யை மேலும் சிக்கடைய வைக் கின்றது.

**கல்வியின் பொருத்தப்பாடு:**

கடந்த காலங்களில் கொள்கை, ஆவணங்களும் பல்வேறு ஆணைக் குழுக்களின் அறிக்கை களும் பொருத்தப்பாடு என்ற விடயத் தினை ஒரு பிரச்சினையாகச் சுட்டிக் காட்டுகின்றன. கல்வி நோக்கங்களை யும் குறிக்கோள்களையும் அடைய எத்தனிக்கின்றது என்பதற்கேற்பவே பொருத்தப்பாடு, பொருத்தப்பாடின் மையைத் தீர்மானித்தல் வேண்டும். பல நாடுகள் விருத்தி செய்யப்பட்ட அறிவினை இளைய தலைமுறை யினரிடம் கையளிக்கவும், நிகழ் காலத்திலும் எதிர்காலத்திலும் இடம் பெறும் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் இளையோரைத் தயார்ப் படுத்த விரும்புகின்றன.

கல்வியின் பொருத்தப்பாட் டினை மேம்படுத்துவதற்குக் கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரதான அம்சம் கல்வியின் பொருளாதார அம்சம் ஆகும். கல்விக்கும் தொழில் பெறுதலுக்கும் இடையிலான பொருத்தப்பாட்டின்மை, கல்வியின் குறைபாடே தவிர, பொருளாதாரக் குறைபாடு இல்லை என ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன. தொழிலை பெற்றுக் கொள்வதே கல்வி கற்பதற் கான பிரதான நோக்கம் என சுட்டிக் காட்டப்படுகிறது. வேலை கொள் வோரின் எதிர்பார்ப்புக்களாக இரண் டாம் நிலையைப் பூர்த்தி செய்தவர் களிடம் தொழில்நுட்பதிறன்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலில் நின்று பிடிக்கும் தன்மை, இயைந்து கொடுக்கும் தன்மை, தொடர்பாடல் திறன், ஆளுமை, தீர்மானம் எடுக்கும் ஆற்றல், ஒழுக் கத் திறன் என்பனவற்றைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளிடம் முக்கிய மான எதிர்பார்க்கின்ற போது அவர் களிடம் இவை காணப்படாமை இலங்கையின் கல்விப் பொருத்தப் பாட்டின்மையைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றன.

கல்வி முறையானது காலத் துக் காலம் கடுமையான கண்டனத் திற்கு உட்பட்டு வருகின்றது. 21ம் நூற்றாண்டில் வாழ்வதற்குத் தேவையான நல்ல சமூக மனப் பாங்குகளையும் விழுமியங்களையும் கற்போரில் விருத்தி செய்யத் தவறியமை குறித்தாகவே விமர்சனம் அமைகின்றது.

தகவல் தொழில் நுட்பத் துறையில் ஏற்பட்டு வருகின்ற விரைவான மாற்றங்கள் இலங்கைச் சமூகத்திலும், உலகச் சமூகத்திலும் பிள்ளை உறுப்புரிமை பெறுவதற்கு வாய்ப்பாக கலாசாரம் சார்ந்த குறிப் பான விழுமியங்களுக்கும் முற்போக் கான உலகளாவிய விழுமியங்களு க்குமிடையே ஒரு சமநிலையை வேண்டி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் வாண்மைத்துவத்தின் தேவைப்பாடு




**திரு.டோ. யூட்ஸ்கிங்**
(B.A, Sp. Trd (Chr), PGDE(Merit), Dip. in HRM, M.Ed)
ISA(CHR)


இன்றைய நவீன உலகின் அனைத்துச் செயற்பாடுகளிற்கும் அறிவே முதலீடாக அமைகின்றது. அத்தகைய அறிவை வழங்கும் பாடசாலைகள் ஏற்றுக்கொள்ளத் தக்க, விரும்பத்தக்க கற்றல் சூழலையும், வசதிகளையும், ஊக்கத்தையும் வழங்குபவையாக அமைய வேண்டியது அவசியமாகும். இங்கே இலக்கிற்கு உரியவர்கள் மாணவர்களே. எனவே ஒழுக்கமான, திறமையான விழுமியப் பண்புள்ள, தேசப்பற்று உள்ளவர்களையும், எதிர்காலத் தலைவர்களையும், புத்திஜீவிகளையும் தோற்றம் பெற வைப்பது பாடசாலையின் பொறுப்பாகின்றது. அத்துடன் அது ஆசிரியர்களின் கையில் தங்கியுள்ளது.

மாற்றமுறும் தொழில் உலகிற்கேற்ப அதன் எதிர்பார்ப்பிற்கிணங்க ஆசிரியர்கள் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது. நல்லாசிரியத்துவப் பண்பு நிறைந்தவர்களின் கைகளிலேயே மாணவர்களினதும், சமூகத்தினதும், நாட்டினதும் முன்னேற்றம் தங்கியுள்ளது. எனவே ஆசிரியர்கள் வாண்மையாளர்களாக மாற வேண்டியவை அவசியமாகின்றது.

வாண்மையாளர்களாக ஆசிரியர்கள் கருதப்பட வேண்டுமாயின் வாண்மைப் பண்பு நலன்களை விளங்கிக் கொள்ள வேண்டும்.

## 1. SERVICE

ஒரு சமூகம் ஒரு குறிப்பிட்ட சேவை தனது இருப்புக்கும் மேன்மைக்கும் அவசியமானது எனக் கருதி ஏற்றுக்கொண்டால், அச்சேவைத் தொழில் வாண்மைப் பண்புடையதாகும்.

## 2. LEARNING

தொடர்ச்சியான அறிவைத் தேடுதல் அவசியமானதாகும். சமூக, பொருளாதார, அரசியல், தொழில் நுட்ப நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படும் போது அதற்கேற்ப எண்ணக்கரு முறைகளை (Methods) தாமத




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்றிக் கற்றுக்கொள்ளலும், புதப் பித்தலும் அவசியமாகும்.

### 3. PRACTICE

தமது அறிவையும் திறன் களையும் தனது வாடிக்கையாளர் கள் / மாணவர்கள் திருப்தியடையும் வகையில் பிரயோகிப்பது அவசிய மானதாகும். அவ்வாறே அத்தொழி லில் சகபாடிகளும் அவரது ஆற்ற லை அங்கீகரிக்க வேண்டும். இவ் வாறு இருக்கும் வரை அத்தொழிலில் வாண்மையினராக ஏற்றுக் கொள்ளப் படுவார்கள்.

### 4. LEGAL

வாண்மைத் தொழில் சட்ட பூர்வமான விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாக வும், சட்ட அங்கீகாரம் பெற்றதாக வும் இருக்கும். தேசிய ரீதியில் பயனாளிகளைப் பாதுகாக்கும் செயற்பாடே சட்டப்பாதுகாப்பு ஆகும். ஆசிரியர்களும் சட்டபூர்வ மான சான்றுபடுத்தும் தன்மை யுடையவர்களாகக் காணப்படுதல் வேண்டும்.

### 5. EXPERT

வாண்மைத்துறையினர் குறித்த துறையில் நிபுணத்துவ அறிவைக் கொண்டிருப்பதன் மூலம் பயனாளிகளிடமிருந்து மிக உயர்ந்த வேதனத்தை அல்லது மதிப்பைப் பெறுவர். ஆசிரியர்களும் நிபுணத் துவ அறிவைப் பெறும் போது வாண்மைத்துறையினர் ஆவார்கள்.

### 6. POWER

வாண்மைத்துறையினர் தமது அறிவுப் பலத்தினால் சமூகத்தின் மீது தேவையான சமயங்களில் அதிகாரங் களைப் பிரயோகிக்கக் கூடியவர்களா வர். (அறிவு சார்ந்த அதிகாரங்கள்)

### 7. SUB CULTURE

வாண்மைத் துறையினர் தமது தொழில் முறை சார்ந்த வாழ்வு, ஒழுங்கு ஒன்றை ஏற்படுத்திக் கொள் வதுடன் அந்த ஒழுங்குகளுக்குக் கட்டுப்படுதல், அதனை வாழ்வு நெறியாக அல்லது வழிமுறையாகப் பின்பற்ற வேண்டியதாகின்றது.

### 8. Mobility

வாண்மைத் துறையினர் யதார்த்தத்தை விளங்கியவர்களாக எதிர்கால சவால்களை முகங்கொடுக் கும் வகையில் கிடையாகவும், நேரா கவும் முன்னேறிச் செல்லும் ஆர்வ மும் தன்மையும் கொண்டவர்களா கக் காணப்படுவர். தமது இருப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேயளவின் தன்மையில் வைத்திருக் காது மேல் நோக்கிய அறிவைக் கொண்டிருப்பர்.

**வாண்மைத் தொழிலுக்கான தேவைப்பாடு**

1. உயர்ந்த அறிவைச் செய்முறை களாக மாற்றுதல்.
2. பயனாளிகள் நேரடியாக நன்மை பெறுதல்.
3. குறித்த துறையில் நிபுணத்துவ அறிவும் நீண்ட கல்வியும் கொண் டிருத்தல்.
4. வருமானத்தை / வெகுமதியை நேரடியாகப் பயனாளிகளிட மிருந்து பெறுதல்.
5. தொழில் சார் ஒழுக்க விதிகள் இருத்தல்.
6. அருமைத் தன்மை காணப்படல்.
7. ஆழ்ந்த ஆராய்ச்சிகளையும் வெளி யீடுகளையும் கருத்துப்பரிமாற் றங்களையும், அபிவிருத்திகளை யும் கொண்டிருத்தல்.
8. கல்வி அறிவும் செய்முறை அறிவும் இருத்தல்.
9. ஆகக் குறைந்த தகுதி இறுக்கமாக இருத்தல்.
10. தமது வாண்மை தவிர்ந்த வேறு தொழில்களில் ஈடுபட முடியாத பிள்ளைகளைக் கொண்டிருத்தல்.
11. சுயமாக சிந்தித்து செயல்படும் உளத் திருப்தியைக் கொண்டி ருத்தல்.
12. வாண்மைத் தொழிலானது மனித குலப் பாதுகாப்பிற்கும் மேம் பாட்டிற்குமான உள்ளார்ந்த வலுவைக் கொண்டிருத்தல்.
13. வாண்மையை மேற்கொள் வோரின் நிரம்பலை விரைந்து நிரப்ப முடியாது.
14. தொழில் வழிகாட்டலுக்கான சீர்மியத் தன்மையைக் கொண்டி ருத்தல்.

**ஆசிரியர் வாண்மை - அடிப்படை அம்சங்கள்**

சிறப்பார்ந்த அறிவு, மனப் பாங்கு, திறன் உடையவராகவும் தனது மாணவர்கள் பற்றி நன்கு அறிந்தவர்களாகவும் அவர்களது தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தமது நுட்ப அறிவை நடைமுறையில் பிரயோகிக்கும் திற னுடையவராகவும், செயல்படுத்துப வராகவும் இருத்தல் வேண்டும்.

- ❖ அதற்கான சிறப்பான கல்வியும் பயிற்சியும் பெற்றிருப்பர்.
- ❖ கோட்பாடும் நடைமுறைப் பிரயோகமும் பற்றிய நுட்ப அறிவைப் பெற்றிருப்பர்.
- ❖ சிறப்பான திறன்கள் அல்லது சேவைப் பண்பு கொண்ட தொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாகும். எனவே அது தொடர் பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பர்.

❖ ஒரு துறையின் அறிவுத் தொகுதி யைக் கட்டுப்படுத்துபவர், அத் துறையில் தனியுரிமை கொண்ட வர்கள் மற்றையோரால் இலகு வில் பதிலிட முடியாத அறிவும் பயிற்சியும் உடையவர்கள்.

❖ சுயமாக முன்னேறும் வல்லமை கொண்டவர்கள்.

❖ தொழில் சார்ந்த துணைக் கலா சாரம் ஒன்றைக் கொண்டவர்கள்.

❖ தொழில் தொடர்பான ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மையைக் கடைப்பிடிப்பதில் தீவிரமாக இருப்பவர். (நெகிழ்ச்சித் தன்மை ஆபத்தானது)

❖ தொடர்ந்து கற்பவர்கள், தொடர்ந்து புத்தாக்கப் பயிற்சி பெறுபவர்கள் அதன் மூலம் அறிவின் பயன்பாடு, தன்மையின் பெறுமதியை எப்போதும் நிலை நிறுத்துபவர்.

❖ புதிய அறிவையும், புதிய அணுகு முறை நுட்பங்கள், முறையியல் பயில்வதில் உண்மை ஈடுபாடு கொண்டவர்கள், தொடர் கல்வி நாட்டம் உடையவர்கள்.

❖ தொழில் ரீதியான மாற்றங்கள், பிரச்சினைகள் பற்றி பொது மதிப்பீடு செய்வதில் நாட்டம் உடையவர்கள். இதற்காகத் தேசிய, சர்வதேச மாநாடுகளை நடாத்துவதில் தீவிர ஈடுபாடுடையவர்கள்.

❖ தமது தவறுகளுக்குத் தாமே பொறுப்பேற்றலும், வகை கூறலும் உடையவர்கள்.

❖ தொழில் செய்தல் தொடர்பான பூரண சுதந்திரம் கொண்டிருத்தல்.

### ஆசிரிய வாண்மை விருத்திக்குரிய உபாயங்கள்

❖ போதிய கல்வி பெறல் - பட்டம்/ உயர் பட்டம்

❖ போதிய தொழில் தகைமை பெறல் - கல்வி டிப்ளோமா / கல்வி முதுமாணி / கல்வி முதுதத்து வமாணி

❖ புதிய அணுகுமுறைகளை, நுட்பங்களை அறிதல் - கருத்தரங்கு, செயலமர்வுகளில் பங்குபற்றல், கல்விசார் பொது விரிவுரைகளைக் கேட்டல், ஊடகங்கள் வாயிலாக அறிவைப் பெறல், தொடருறு கல்வி, சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றல்.

❖ ஆசிரியர்கள் சுய குழுக்களை உருவாக்கி தொழில் முன்னேற்றம், பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து வழிமுறைகளைக் கண்டறிந்து செயற்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ வாண்மைசார் நிறுவனம் ஒன்றை உருவாக்கல் அல்லது அத்தகைய நிறுவனத்தில் அங்கத்தவராக செயற்படுதல்.

❖ ஆசிரிய தொழில்சார் சஞ்சிகைகளை ஒழுங்காக வாசித்தல்.

❖ இயன்றளவிற்குப் பன்மொழிகளைக் கற்றல் - ஆங்கிலம், சிங்கள மொழிப் புலமை பெறல்.

❖ தகவல் தொழில்நுட்பத்தின் கணினித் துறையில் தேர்ச்சி பெறல்.

❖ உடல் உள ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் செலுத்துதல். அவற்றினைப் பாதுகாக்கும் நடைமுறையில் வாழுதல்.

❖ நேர முகாமைத்துவத்தில் அக்கறை செலுத்துதல்.

❖ சுய மதிப்பீடு செய்தல் தமது பலம், பலவீனம் தொடர்பான சுய மதிப்பீட்டைத் தெளிவாகச் செய்து கொள்வது அவசியம். பலவீனங்களைக் குறைப்பதிலும் பலமான அம்சங்களை மேம்படுத்துவதிலும் திட்டமிட்டு செயலாற்றுதல் வேண்டும்.

❖ தொழில் ரீதியில் முன்னேறுவதற்கான வாய்ப்புக்களை எந்நேரமும் தேடிக்கொண்டிருக்க வேண்டும்.

❖ தொழில் ரீதியான சவால்களை எதிர்வு கூறுவதும் அவற்றுக்கான மாற்று வழிகளைக் கண்டறிவதிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

❖ கல்வியறிவு தொடர்பாகவும் ஆய்வு நிறுவனம் தொடர்பாகவும் ஈடுபாடு காட்டி வருதல் வேண்டும். இயன்றளவு நூல்களையும், கட்டுரைகளையும் மிகுந்த கவனத்துடன் எழுதி வருதல் நல்லது.

❖ உங்களைப் பற்றிய கருத்துக்களைக் கவனமாகப் பெற்று உங்களை மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். நண்பர்கள், சிரேஷ்ட ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் போன்றோர் உங்களைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்களை அறிதல் வேண்டும்.

❖ உங்கள் வாழ்நாளில் தொழில் ரீதியில் முன்னேறும் வழிமுறைகள் பற்றி நீண்ட கால, குறுங்கால திட்டமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆசிரியர் தொடர்ந்து கற்றுக் கொண்டு கற்க வழிகாட்டுபவராக இனங்காணப்படுகிறார். அதற்காக தனது வாண்மை விருத்தி மேற்கொள்வதற்கான பிரேரணைகள் முன்வைக்கப்படுகின்றன. பல ஆசிரியர்கள் தமது கடமையாக கலைத்திட்டத்தின் போக்கில் கற்பிக்கப்படுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நிலைப்பாட்டினை எடுத்துள்ளனர். மேலும் நவீனமயமாதலிற்குள் செயற்படாமையையும் காணலாம். இங்கு நவீன ஓட்டங்களுடன் இசைவுபடாமை வெளிப்படையாக உள்ளது. அதாவது ஆசிரியரின் பாடவிதான செயற்பாடுகள் பாடசாலையைவிட்டு வேலை உலகிற்கு அல்லது தனது எதிர்கால சமூக வாழ்வியலுக்குப் பொருத்தமான அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெறக் கூடியவாறு வெளியேறுதலில் மாணவர்கள் முரண்படுகின்றனர். இதனை தவிர்ப்பதற்கு ஆசிரிய வாண்மை அவசியமாகின்றது.

வாண்மை விருத்திக்கான செயற்பாடுகள் காலத்திற்குக் காலம் மாற்றமடைகின்றன. காலத்தின் வேகத்திற்கேற்ப அறிவுப் பெருக்கமும் விரிவடைந்து வருகின்றது. அத்தகைய மாற்றங்களை உள்ளடக்கியவாறு செயற்படல் காலத்தின் தேவையாக அமைவதால் காலத்திற்குக் காலம் ஆசிரியர்களின் செயற்பாடுகளில் மாற்றமும் தவிர்க்க முடியாததாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியப்பணியில் ஈடுபடும் பெண்களின் வளமான வாழ்விற்கான சில உபாயங்கள்



திருமதி.நிருபா அருந்தவம்
B.Sc,PGDE,M.Ed
யா/வேலணை மத்திய கல்லூரி, வேலணை

ஆசிரியப் பணியில் ஈடுபடும் பெண்களின் வாழ்க்கை சுவராசிய மானது, வீட்டில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளையும், மறக்க அரு மருந்தாக ஆசிரிய வாழ்க்கை அமையும் என்பதே பெரும்பாலான வர்களின் கருத்தாகும். ஆனால் உண்மைநிலை எதுவென்பது பணி யில் ஈடுபடும் பெண்களிற்குத் தான் தெரியும்.

ஓயாத வீட்டு வேலை, பிள்ளைகளின் படிப்பு, கணவனைக் கவனிப்பு, வீட்டிலுள்ள முதியவர் களுடனான சுமூகமான உறவு என அத்தனையையும் சமாளித்துவிட்டு, பாடசாலை சென்றால் அங்கே ஒன்றன் பின் ஒன்றாகப் பல பிரச்சி னைகள் காத்துக் கொண்டிருக்கும். எந்தப் பிரச்சினையை எப்படி சமாளி ப்பது, யாரிடம் எப்படிப் பேசுவது, கொடுத்த வேலையை எப்படி குறித்த நேரத்தில் முடிப்பது என அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போ கும். இப்படி வீட்டிலும் பாடசாலை யிலும் அடுக்கடுக்கான பணிகளை யும் பிரச்சினைகளையும் எதிர் கொள் ளும் ஆசிரியைகள் சில பிரத்தி யேக உத்திகளைப் பயன்படுத்தினால் வாழ் க்கையை வெற்றிகொள்ள முடியும்.

## பரபரப்புக்களை முற்றாக அகற்றுவோம்

பாடசாலையில் அதிபர் மற்றும் கல்வி அதிகாரிகளை நினைத்து ஏற்படும் பரபரப்பு நிலை, வீட்டில் சிறு பிள்ளைகளின் குறும்புத் தனம் தொடர்பான பரபரப்பு நிலை என, வீட்டில் இருக்கும் பரபரப்பு நிலையை பாடசாலைக்கும், பாட சாலைப் பரபரப்பு நிலையை வீட்டுக் கும் சுமக்காதீர்கள். முக்கியமாக பாடசாலையில் உள்ள பரபரப்பு நிலையை வீட்டில் குறிப்பாக, குழந்தைகள் முன் காண்பிக்காதீர்கள். என்னதான் இருந்தாலும் நீங்கள் தான் அவர்களிற்கு முன்மாதிரி. வேலை யைப் பற்றிய பயத்தை இப்போதே அவர்கள் மத்தியில் பரப்புவது தவறான செயலல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு சென்று பிள்ளையை அரவணைப்போம்**

வேலை முடிந்து வீடு வந்தவுடன் உடலும் மனமும் எவ்வளவு சோர்வாக இருந்தாலும், அரைமணி நேரமாவது உங்கள் குழந்தைகளைக் கட்டியணைத்து மடியில் அமர வைத்துப் பேசி விளையாடுங்கள். இது அவர்களிற்கு பெரிய பாதுகாப்பு உணர்வைத் தரும்.

ஏதாவது கதை சொல்லி, விடுகதை சொல்லி அவர்களை எழுச்சி நிலைக்கு உட்படுத்துங்கள். இது அவர்களின் சிந்திக்கும் ஆற்றலையும், மொழி வளத்தையும் மேம்படுத்தும்.

உங்கள் பிள்ளை பாடசாலை செல்லும் பிள்ளையாக இருந்தால் வேலைவிட்டு வந்ததும் அவர்களது வீட்டுப்பாடங்களில் உதவலாம். ஏதாவது ஒரு புத்தகத்தைச் சேர்ந்து படிக்கலாம். எப்போதும் படிப்பு, படிப்பு என்று அவர்களைப் பாடாய்ப்படுத்தாமல் அன்று பாடசாலையில் நடந்த சுவாரஸ்யமான நிகழ்வுகள் பற்றியும், அவர்கள் நண்பர்கள் பற்றியும், அவர்கள் செய்த குறும்புகள் பற்றியும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இது அவர்களிற்கு நீங்கள் கொடுக்கும் சிறப்பான கணிப்பாக இருப்பதுடன்,அவர்களின் பாடசாலை வாழ்க்கையின் போக்குகள் பற்றியும் தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமையும்.

**வேலைகளைப் பட்டியலிடுலோம்**

இன்றைய ஆசிரியர்கள் பாடசாலையில் வருடாந்தத் திட்டமிடல்களையும், நாளாந்த பாடக்குறிப்பையும் நன்கு திட்டமிட்டு எழுதி வந்த போதும் அவ்வாறே தமது வாழ்க்கைக்குரிய வருடாந்த திட்டமிடல்களையும், நாளாந்த செயற்பாடுகளையும் நன்கு திட்டமிட்டு அட்டவணைப்படுத்திக் கொள்வது பாடசாலையிலும், வீட்டிலும் ஏற்படும் பதட்டநிலையைக் குறைப்பதாக அமையும்.

பிள்ளைகளிற்கு தடுப்பூசி போட வேண்டிய நாள், உறவினரின் திருமண நாள் போன்ற எல்லாவற்றையும் குறித்து வைத்துக் கொள்வதுடன், தேவையான விடயங்களை தங்கள் கையடக்கத் தொலைபேசியில் "ரிமைண்டர்" செய்து கொள்வதும் கடைசி நேரப் பரபரப்பை குறைப்பதாக அமையும்.

**பெண் பொறுப்புக்களைச் சுமப்பதா?**

இன்று ஆசிரியைகளில் பலர் வீட்டுப் பொறுப்புக்களைத் தாங்களே தூக்கிச் சுமந்து பல்வேறு உபாதைக்கு உள்ளாவதையும், காண முடிகிறது. பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தால் வாழ்க்கை சுவாரசியமாக அமையும்.

ஆசிரியைகளில் "எனது கணவருக்கு குசினி எந்தப்பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குது என்று கூடத் தெரியாது" எனச் சொல்பவர்கள் தான் அதிகம். இவ்வாறானவர்கள் வெளிவேலைகளை முழுமையாகக் கணவனிடமே ஒப்படைத்துவிடுவது சிறந்ததாகும்.

இருவரும் வேலைக்குச் செல்லும் குடும்பத்தில் காலை வேளையில் கணவனும், மனைவியும் இணைந்து சமையல் செய்வது அவர்களிடையே பரஸ்பர கலந்துரையாடலுக்கு ஏற்ற களமாக அமைவதுடன் ஒருவரை ஒருவர் புரிந்து செயற்படவும் அத்திபாரமிடும் செயற்பாடாகவும் அமைகிறது.

பாடசாலை செல்லும் வயதில் பிள்ளைகள் இருப்பின் அவர்களால் முடிந்த சிறு விடயங்களை அவர்களே செய்யக் கற்றுக் கொடுத்தல் சிறப்பானது. தங்கள் சப்பாத்துக்களை தாங்களே பொலிசிடவும், தங்கள் உடைகளை தாங்களே தயார் செய்து அணிந்து கொள்ளவும் கற்றுக் கொண்டால் காலை நேரம் பரபரப்பு ஓரளவேனும் குறைய வாய்ப்புள்ளதல்லவா!

## ஆரோக்கியமே அரண்

தம் குழந்தைகளுக்கு போசாக்கு நிறைந்த உணவு கிடைக்க வகை செய்வது போல, தமக்கும் அவ்வாறு கிடைக்க வேண்டும் என்பதில் ஆசிரியைகளில் பலர் அக்கறை கொள்வதில்லை. பாடசாலை சிற்றுண்டிச்சாலையை நம்பிப் பாடசாலைக்குச் செல்வதை விடுத்து, தமக்கு வேண்டிய சிற்றுண்டியைத் தாமே கொண்டு செல்வது சாலச் சிறந்தது. சுண்டல், முளைகட்டிய தானிய சலாது போன்றவற்றைக் கொண்டு சென்று நேரங்கிடைக்கும் போது உண்பது சிறந்தது.

பேருந்தில் நீண்ட பயணம் மேற்கொண்டு பாடசாலை செல்பவர்கள் தமது கைப்பையில் உலர் திராட்சையோ, நிலக்கடலையோ, உலர் பருப்பு வகையையோ எடுத்துச் சென்று தேவை ஏற்படும்போது அவற்றை உண்ணலாம். தமக்கு வேண்டிய குடிநீரை தாமே கொண்டு செல்வதும் ஆரோக்கியமான செயற்பாடேயாகும்.

## ஒன்றாக உண்போம்

காலைப் பரபரப்பிலும். மாலையில் ஒவ்வொரும் ஒவ்வொரு நேரம் வீடுவருவதாலும், ஆசிரியை ஒருவரை மையப்படுத்திய குடும்பத்தில் ஒன்றாக உணவு உண்பதற்கு வாய்ப்பேற்படுவது சிரமமான காரியமாகும். ஆனால் இரவு உணவையாவது ஒன்றாக உண்ணலாமல்லவா? அப்போது குடும்பத்தினரிடையே பல்வேறு சுவாரஸ்யமான விடயங்களை அலசுவதுடன் பிள்ளைகளுக்கு வேண்டிய வழிகாட்டல்களை மேற்கொள்ளும் களமாகவும் இதனை மாற்றிக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதின்மவயதுப் பிள்ளைகளின் பெற்றோர்

பதின்ம வயதுப் பிள்ளைகள், பெற்றோரைவிட நண்பர்களையே பெரிதும் நம்புவார்கள். பெற்றோர் வேலைக்குச் செல்வதால், இவர்களது நண்பர்களைத் தெரிந்திருத்தல் சிறந்த விடயமாகும். இதற்காகப் பாடசாலையிலிருந்து மணிக்கொரு முறை தொலைபேசியில் அழைத்து உளவு பார்ப்பதை விடுத்து சிந்தித்துச் செயற்படல் சிறப்பானது.

இவ்வயதுப் பிள்ளைகளை கடிந்து கொள்வதோ "நான் அவளை/ அவனைச் சரியாக வளர்க்கவில்லையே எனப் புலம்புவதோ ஒரு போதும் தீர்வாக அமையாது. தாயானவள் பிள்ளையிடம் எல்லா விடயங்களையும் பகிர்ந்து கொள்ளும் நண்பியாக இருப்பது மிகவும் விரும்பத்தக்க தொன்று.

இவ்வயதில் பிள்ளைகளிடம் காதல் குறுக்கிடலாம். இதை பூதாகரம் ஆக்காமல் அறிவு பூர்வமாக சமாளிக்கக் கற்றக் கொடுப்பது நல்லது. இம்மாதிரி விடயங்களைத் தூண்டிவிடக்கூடிய நண்பர்கள் இருந்தால் அவர்களை நயமாக அகற்றிவிடுவது சிறப்பானது.

## ஒவ்வொரு பூவும் ஒவ்வொரு மணம்

தங்கள் பாடசாலை, சக ஆசிரியரின் பிள்ளைகளுடன், உங்கள் பிள்ளையை ஒப்பிடாதீர்கள். ஒவ்வொரு பூவிற்கும் ஒவ்வொரு மணம் உள்ளது போலவே, ஒவ்வொரு பிள்ளையிடமும் ஒவ்வொரு திறமையிருக்கும். சரியானச் திறமையைக் கண்டுபிடித்துச் சரியாக வழிப்படுத்த வேண்டியது கல்வியில் வாண்மைத் தகுதி பெற்ற தாயினது கடமையல்லவா?

## தவணை விடுமுறையைக் கொண்டாடுவோம்

ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் பெரிய வரப்பிரசாதமே மூன்று மாதத்திற் கொருமுறை கிடைக்கும் தவணை விடுமுறைக் காலமாகும். இதனைத் திட்டமிட்டு பயன்படுத்தினால் சிறப்பான பலாபலனைப் பெறலாம்.

விடுமுறைக் காலத்தில் உறவினர் வீடுகளைத் தரிசிப்பது, பெற்றோர் இருவருடன் மட்டும் உறவாடும் பிள்ளைக்கு, உறவினருடனும் உறவாடும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. சகவயதுக் குழந்தைகளுடன் பழகுவது, பெரியவருடன் பேசுவது, சமூகமான உறவு பற்றி தெரிவது என எல்லாம் விருத்தியடைகிறது. இதே போல் நண்பர்கள், உறவினர்கள் கூடிச் சுற்றுலா செல்வதும் பிள்ளைகளிடம் ஆர்வம், சந்தோசம் ஏற்படுவதுடன் புதுப்புது அனுபவம் பெற வாய்ப்பாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டரை மணி நேரம் ஓடும் திரைப்படத்திற்குக் கூட பதினைந்து நிமிடம் இடைவெளி கிடைக்கும் போது வாழ்க்கை முழுவதும் கற்றல் - கற்பித்தலே கதி என இருக்கும் ஆசிரியைக்கு இவ்விடு முறை சிறந்த ஓய்வாக அமையு மல்லவா!

**லீவுகளில் கவனம்**

தொட்டதற்கெல்லாம் லீவும், இடைநேர விடுவிப்போ எடுப்பதைக் குறைப்பது நன்று. ஒரு முறை லீவு கோரமுன், அதை வேறு வழிகளில் சமாளிக்க முடியுமா என்றோ அல்லது இது தேவையான லீவா என யோசித்துக் கொள்ளுதல் தங்கள் மதிப்பை நிர்வாகத்தினர் மத்தியிலும் மாணவர் மத்தியிலும் உயர்த்திக் கொள்ளும்.

பெண் ஆசிரியர்களின் வாழ்வை வளப்படுத்தும் சில உத்திகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. இதைப் படிப்பதோடு மட்டுமல்லாமல் பின்பற்றியும் பாருங்கள். நிச்சயம் பலன் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நங்கையரே! கேளீர்!!



திருமதி.சி.சிவகணபதி
ஆசிரியர்,
B.F.A,PGDE
யா/காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி

வாசலில் பூக்கும் நறுமலராய்
ஆதவனின் ஒளிபட்டு மொட்டவிழ்ந்து
வைகறையில் வசந்தத்தை வரவேற்கும்
மலரைப் போன்ற எங்கள் நங்கையரே!

ஓர் செய்தி சொல்கின்றேன் கேளீர்
உலகமெல்லாம் உன்னைப் போற்றிட
இளமையிலே திட்டமிட்டு வாழ்த்திடுவீர்.

இலட்சியத்தோடு வளமான வாழ்க்கை அமைத்து
வற்றாத ஆர்வமதை வளர்த்திடுவீர்.

தாறுமாறாய் அலைவதைத் தவிர்த்து
தன்னடக்கத்தோடு செயற்படுவீர்.

ஒற்றுமையாய் நாட்டினையே உயர்த்திட
வெற்றியைக் குவித்திடுவீர்.

அக்கால வாழ்க்கையையும், இக்கால
வாழ்க்கையையும் இணைத்தப் பார்த்தால்
தெரியுதந்தோ! இடைவெளிபார்
விரிந்த விண்வெளியாய்.

எங்கள் ஊரின் மகிமையை
எம் இனத்தின் பெருமையை
நம்மவர் கலைபண்பாட்டம்சங்களை
தொலைத்தும் தொலைக்காதது போன்ற நடிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனோ! இன்னமும் புரியாது
இன்ரநெற்றில் தேடியலைகிறோம் புதுமைகளை
கண்முன் தோன்றும் நம் மூதாரையரின்
வாழ்க்கைக் கோலங்களைக் கண்டும் காணாதிருக்கும் அவலம்!

அம்மா அப்பாவை தேடுகையில்
அவர்களோ பாவம் முதியோர் இல்லத்தில்
இந்நிலை அவனியிலே ஏனென்றால்
மகனோடு உடனிருந்த மங்கையும் மற்றும் பிற.

எத்தனையோ அவலந்தான் நிகழ்ந்தென்ன?
எம்மவருள் பலருக்கு அறிவில்லை!
கத்தரித்த காற்சட்டை மேற்சட்டை
அரைவாசிக்கு மேல் காலியுடை.

இத்தனை நாகரிக மோகத்தால்
ஈழத்தின் முகப்பூச்சல்லோ கரைத்துவிட்டது.
ஐயைய்யோ! மாறிவரும் உலகினிலே
அலங்கோலந்தானிங்கே அரங்கேறுது பார்!

கல்வியுடன் ஒழுக்கமும் கலந்து பெற்றிடு!
காப்புடனே கல்விக்கூடம் சென்றிடு.
கற்றவரோடு இயைந்து வாழப் பழகிடு.
அகிலம் போற்ற நீவிரும் வாழ்ந்திடுவீர்!

கரை காணா கலை உலகில்
அமுதத் தமிழில் கன்னிக் கவிதை புனைந்துள்ளேன்.
என் மனக்கிடக்கை கூறியதை
செவிமடுத்தே நங்கையரே உலகை வென்றிடுவீர்!
நன்றே வாழ்க! இன்றும் என்றும் வாழ்க! வாழ்க!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்முறைப் பரீட்சையில் அநாவசியத் தோல்விகளைத் தவிர்க்கும் சில நுட்பங்கள்



திருமதி.ஜெயகௌரி பரமேஸ்வரன்
ஆசிரியர்,
B.F.A,PGDE
யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்.

பாடசாலைக் கல்வி முறையில் பிரதான பாட நெறிகளுடன் தொகுதிப் பாட நெறிகளாக தொகுதி ஒன்று, இரண்டு, மூன்று என கற்பிக்கப்படுகின்றன. இவற்றுள் தொகுதி இரண்டு செய்முறைப் பாடங்களான சித்திரம், சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும் என்பன இடம் பெறுகின்றன. இப்பாடங்களில் அறிமுறை, செய்முறை இரண்டும் சேர்ந்ததே பரீட்சைப் பெறுபேறாகும். இவற்றுள் சித்திரப் பாடத்தில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சை நடந்தவுடனேயே அறிமுறையுடன் செய்முறையும் நடைபெறுகின்றது. ஏனைய பாடங்களான சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களில் பரீட்சை நிறைவடைந்து 2 மாதங்களின் பின்னரே செயன்முறை நடைபெறுகின்றது.

இக்காலப்பகுதியில் ஆசிரியர் மாணவர்களுக்கான தொடர்பு குறைவாக உள்ளமையாலும் மாணவர்கள் கற்ற விடயங்களை மறப்பதாலும் செயன்முறைப் பரீட்சையில் பரீட்சையை அணுகுவது கடினமாக உள்ளது.

தீவக வலயத்தைப் பொறுத்த மட்டில் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பெரும்பான்மையானோர் விவசாயம், கடற்றொழில் போன்ற குடும்பப்பின்னணியில் வாழ்பவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் இவர்கள் இக் காலப் பகுதியில் குடும்ப சூழ்நிலை காரணமாக தமது குடும்பத்திற்கு உதவுமாறு செல்வதால் பாடசாலையில் தொடர் வரவின்மை, அடிக்கடி லீவு போன்ற செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுகின்றனர். இதனால் அவர்கள் செயன்முறைப்பாடத்தில்பங்குபற்ற முடியாது, செயன்முறைப்பாடங்கள் (அழகியல்) கற்க முடியாது உள்ளனர்.

தீவக வலய மாணவர்களைப் பொறுத்தமட்டில் பாடசாலை ஆசிரியர்களின் கல்வியை நம்பியே செயன்முறைக் கல்வியில் ஈடுபடுகிறார்கள். அழகியல் பாட நெறியை பொறுத்தமட்டில் மாணவர்கள் வாசித்தோ, நேரடியாகப் பார்த்தோ, வேறொரு நபரிடம் கற்றோ அல்லது வேறு வகையிலோ செய்முறைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை கற்க முடியாது.

ஒலிப்பதிவு நாடா மூலமோ, இறுவட்டுக்கள் மூலமோ பாடலைப் பதிவு செய்து, பாடலைக் கேட்டாலும், பயிற்சிகளைப் பெற்றாலும் சுத்தமாக இராக தாளத்துடன் பாட முடியாது. ஆனால் வேறு பிரதேச மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லா விட்டாலும் தனியார் வகுப்புக்கள், இசை சம்பந்தமான பரீட்சைகள் என்பனவற்றில் சிறு வயது முதலே தம்மைத் தயார்படுத்துவதால் செயன்முறைப் பாடத்தின் பரீட்சையை இலகுவான முறையில் அணுக முடிகின்றது.

இவ்வாறு செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் கடினப்படும் மாணவர்களின் குடும்பநிலை, குடும்ப வருமானம், அவர்களது பெற்றோர்களின் தொழில் போன்றவற்றை ஏனைய மாணவர்களிடமிருந்து கேட்டறிந்து அதற்குரிய பரிகார நடவடிக்கைகளை மேற் கொள்ளல், மேலும் அவற்றைக் கொண்டு வகுப்பாசிரியரும் அதிபரும் மாணவரது பெற்றோர்களுடன் வராமைக்கான காரணம், பரீட்சைக்கு தோற்றுவதிலுள்ள இடர்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடி, மாணவரின் நிலையை அறிந்து, மாணவரைப் பாடசாலைக்கு வரவழைத்து, அவ்வாறு மாணவர்கள் பாடசாலைக்கு வரக் கடினப்படுத்துமிடத்து கிராம சேவகர் ஊடாக அறிவித்து, அயல் வீட்டு மாணவர்களிடம் அம்மாணவரைப் பற்றிய தரவுகளைக் கேட்டறிந்தும், பாடசாலைக்கு மாணவர் வரவை உறுதிப்படுத்தி, மாணவரை முதல் பாடசாலைக்கு வரவைத்தல் வேண்டும்.

அவர்களுக்கான அப்பாடத்தின் மேலதிக வகுப்புக்களை நடாத்தியும் செய்முறை தொடர்பான அடிப்படை விளக்கங்களை வழங்குவதன் மூலமும் அவர்களுக்கு அந்தப் பாடத்துறை தொடர்பான கூடிய விருப்பை வரவழைத்து அவர்களுக்குத் தேவையான பாட சம்பந்தமான விளையாட்டுக்கள் மூலம் இலகுவான நுணுக்கமான விளக்கங்களை வழங்கி, அவர்களுக்குப் பரீட்சைக்குத் தேவைப்படுகின்ற செயன்முறை பாடல்களையும், இராக தாள விளக்கங்களையும் வழங்கி, செயன்முறைப் பரீட்சையில் சாதாரண சித்தியை யாவது பெறக் கூடியவாறு அவர்களைத் தயார்படுத்தி, பாடசாலையின் அழகியல் பாடங்களுக்கான சித்தி வீதத்தை 100% வீதமாக அதிகரிக்கலாம்.

அவர்கள் இவ்வாறு அதி விருப்பத்துடன் செயன்முறைப் பரீட்சையில் அதிகூடிய சித்தியை பெறும் போது தமது உயர்கல்வியைப் பெற்று கிராமத்து மாணவர்களுக்கு இசையை கற்பித்து தமது வருமானத்தை அதிகரிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு விளக்குகள்



**திருமதி.வ.யாழினி**
ஆசிரியர்,
யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்

ஒக்ரோபர் ஒன்றில் மட்டும்
ஊது குழல் தூக்கிப் பேசுகிறார்
உரிமை, சட்டம், பற்றி.......
பின்னர்........
வாரந்த நாளிதழ்
நாளாந்த நாளிதழ்
நாம் - கேட்கும் வானொலியும்
இயம்புகின்ற செய்திகளில்
உண்மை கூறப்படுகிறது
உரிமைகள் மறுக்கப்பட்டதாக
உலகமே வேகமாக ஓடிப்போக
உரிமையில் ஓட்டையும் கீறலும்
பானை உடைக்கப்பட்டபின்
பரிந்துரையும், பாவ மன்னிப்பும்
வழங்குகின்றார்கள்........

சட்டக் கதவுகள் - இலஞ்சக் கரங்களால்
நெருடப்படுகிறது.
நஞ்சை உமிழ்ந்து
நாதியற்ற பிஞ்சுகள் முகத்தில்
துப்பாதீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை வயல் வாடி சருகாகிப் போகிறது
பாலியல் துஷ்பிரயோகம்.

சாக்கடைகளிலும்.........சந்தனம்
மணக்கவென்று
ஆண்டவன் ஏற்றி வைத்த
திருவிளக்குகள்
அணைக்கப்படுகின்றது.

வளர்ந்தோரே!
வாலிபங்களே!
வாழ்வு நன்று எனில்
வழக்காடு மன்றங்கள் எதற்கு?

குடும்ப பிணக்குகளால்
குழந்தைகள் கூலிக்கு போகணுமா?
அப்பன் குடிக்க மைந்தன்
தோள் கோடரி சுமக்கணுமா?

பிஞ்சுகளை கொஞ்சாமல்
அம்மி மிதித்து அடுத்தொரு
திருமணமா?

பூனையும் நாயும்........புரிந்துணர்வுடன்
அன்பு செய்ய
பிஞ்சு என்றும் - ஐந்து என்றும்
இல்லாமல்
அப்பன் ....மகன்
பேதமில்லா அரக்கத்தனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனக் கன்றுகளே சாய்கிறது
அடியோடு.

கொஞ்சம் நாகரிகமாய்
சொல்கிறேன்.

குழந்தைகளைப் பலியெடுக்க
பசுந்தோலை போர்க்காதீர்!
வேலியே பயிரை மேய்வதனால்
விளை நிலங்கள் தரிசாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல் ஆலமரத்தைக் கண்டு
# கற்போம் வாழ!



**திரு.செகராசபிள்ளை செந்தில்வேல்**
ஆசிரியர்,
Sp.Tr.d(Art)
யா/தம்பாட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, நாரந்தனை.

கல்லுக்குள் ஈரம் உண்டெண்டு!
அறிஞ்சுதானோ? அறியத்தானோ?
மரங்கள் மண்ணின் உள்ளே!
வேர்விட்டோங்கி வளர்ந்து நிற்குதே!
எங்கிலும் நின்று தலை அசைத்தாடி!
கிளைகள் விட்டெறிந்து செழித்தாடுதே!
மூல வேரை மிடுக்குடன் நிறுத்தியே!
தனதாணி வேராய் துணிந்து ஆக்கியதே!

பக்க வேர்கள் பலவும் பலமாய்ச் சேர்ந்து!
உறுதுணை உறுப்பாய் உயர்த்தியதே!
ஏன்? பச்சினைத்தாவரங்கள் அனைத்தும் அறிய!
மண்ணை அலசி அரசாளுதோ!
தன்வேர்க்கொடிப் பயணத்தின் ஊடே!
தனதினம் காத்து நிலைபெற நிற்குதோ!
தக்கதோர் சேவையாய் பசுமை காத்து!
நித்தம் நிலைக்க சேவையாய் ஆற்றுதே!

ஆலமரமோ கல் உள் நீர் அறிந்து குடிக்க!
ஆலோ ஆவலாசையால் மண்ணின் அடிமையானதோ?
முயன்று முயன்று மண்ணின் உள்ளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரை ஆழவிட்டுத் தேடித் துலாவி நிற்குதோ!
தான் முயன்று முடிவதால் தானோ!
மேலும் தன் விழுதுகளால் ஆழ்ந்து அகலத்தேடுது!
தன்விழுதுகள் மேல் ஆல் நம்பிக்கை வைத்துத்தானே
தன்னை அவை தாங்கவிட்டுத் தூங்குதோ!

மண்ணிலிருந்து விளைஞ்சு மேலே மேலே!
வளர்ந்து வரும் கற்பாறை கண்டு!
ஆல் தன்னைத்தானே எண்ணியே எண்ணியே!
விழிச்சுத்தானே தவண்டு தவண்டு வளருது!
முடியாதென்பார் முடியாது. அது முடியும் வரைக்கும் முடியாது!
முயன்று வாழ் எண்ணித்தானோ வாழுதுஆலோ என்று
முயற்சி திருவினை ஆக்குமென்ற நம்பிக்கையால் வாழுதோ?
யார் தான் இதை அறிவாரோ? வழி தவறிக் கற்றும் அறிவாரோ?

ஆல் விழுது போல் மனத்தின் உள்ளே கேள்விகளோ?
விழுது விழுதாய் தோன்றுதே!
என் மனதில் கேள்விகள் எல்லாம் ஒன்று சேர்ந்து
ஆல் விழுதாய் அசைந்தாடுதே!
ஆல் விழுதாய் ஆள் மனசும் தாங்கியே!
நாம் தொட்டு நின்றே தொடர்ந்திடுவோம்.
நம்மை நாம் அறியக் கற்றிடுவோம்.
அரிய அறிவைத் தேடிக் கற்றிடுவோம்.

பறவையினங்கள் அனைத்தும் வந்து ஒன்று சேர்ந்து
பாடிப்பாடித் துள்ளி ஆடவே!
அவரவர் மனங்கள் போல உண்டு சுவைத்து
மகிந்து கூடி வாழவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிச்சிறு சிவந்த மணிப் பழங்கள் காட்டி!
உண்டு மகிழ ஆலோ அழைக்குதே!
தன்மேல் பறவை கூடி கூடு கட்டி வாழ்வதற்கு
வாய்ப்புக்கள் அளித்து ஆனந்தம் கொள்ளுதே!

ஆலோ நீரைத் தேடி அலைவதை யார் இங்கு அறிவாரோ!
இன்று இப்போ நாமும் கூட அது தானே!
அன்றோஆல் பிறப்பெடுக்க வழி செய்து கொடுத்ததனை
கல் என்று தன்னைத்தானே அறியுமோ? அறியாது!
கல் மேல் ஆல் அன்று வளர்ந்து நின்றதனால்
கல் என்றோ ஞானம் பெற்ற தன்றோ!
பிறர் துன்பம் போக்க நம்மை நாம் உணராது
செய்த உதவியைத் தாம் மறந்து உதைப்பது முறையோ!

அப்போ ஆல் அதைக் கற்றதாலோ - பின்
கல் தன் மனதைக் கல்லாக்கியதோ!
கல்லே கல்லாய்ப் போனா சிறப்பை நாம் புரிந்து
கல்லைப் பாரத்துக் கனவிலும் கற்போம்.
முன்னே கல் இடுக்கில் இருந்து முளைத்து எழுந்ததினாலோ!
கல்லுள்ளே ஈரம் கண்டறியத் துடிக்குதோ?
கல் ஆல நிழலின் கீழிருந்து தானே தெட்சணாமூர்த்தி அன்று
ஞானப் பொருள் விளக்கம் கொடுத்தாரே.

இவ் ஆல் கல்லுள் நீரைத் தேட முற்பட்டதால் தானோ
கல்லுக்கு ஆலினால் கல்ஞானம் வந்ததோ?
இன்று கல்லாய் இருக்கும் மனிதர்கள் எல்லாம் அன்று
ஆலை ஒத்த மனிதர்கள் தோன்ற வழி விட்டோரே!
ஆல் அன்று தொட்டு கல்லுடன் வைத்த தன் பிறப்பின் உறவை
என்றும் ஆல் எண்ணியதால் ஆல் மனமும் கல்லாச்சோ!
நாள் முழுதும் இதை எண்ணி எனக்கு புரியவே புரியலை!
என்னுள் புரியாப் புதிராய் ஆலின் விழுதாய் ஆடுதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படைத் தேவையாய் நீரே வேண்டும் நீராய் வேண்டும் என்பதால்

கல்லினுள் ஈரம் நின்றே ஆக வேண்டும்.

மனம் கல்லாய் இருந்தே பொறுமை பெறச் செய்தே என்றும்

வாழக் கற்க வகை செய்திடலாம் நீரே!

அடிப்படைத் தேவை நீர் தான் என்றுமே தேடிப் பெறுவது வாழ!

நீரைத் தேட கல் ஈரம் தேட ஆலால் கல் பிளந்ததோ!

நீரால் ஆலுல் ஆலால் கல்லும் தேடத்தேட ஞானப் பொருள் -ஒன்றே

கல்லால மரத்தைக் கண்டு நாம் கற்றிடுவோம் வாழவே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படைத் தேவையாய் நீரே வேண்டும் நீராய் வேண்டும் என்பதால்
கல்லினுள் ஈரம் நின்றே ஆக வேண்டும்.
மனம் கல்லாய் இருந்தே பொறுமை பெறச் செய்தே என்றும்
வாழக் கற்க வகை செய்திடலாம் நீரே!
அடிப்படைத் தேவை நீர் தான் என்றுமே தேடிப் பெறுவது வாழ!
நீரைத் தேட கல் ஈரம் தேட ஆலால் கல் பிளந்ததோ!
நீரால் ஆலுல் ஆலால் கல்லும் தேடத்தேட ஞானப் பொருள் -ஒன்றே
கல்லால மரத்தைக் கண்டு நாம் கற்றிடுவோம் வாழவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைநோக்கு உலகில் தொழில் வழிகாட்டல் அலகு



திரு.வே.தனேஷ்குமார்
B.A[Hons],PGDE,
Dip. In.Couns. psycho.[Ireland]
தொழில் வழிகாட்டல் ஆலோசனை அலுவலர்.

எதிர்காலக் கனவுகளைத் தம்முள் வரைந்து, எத்தனையோ வருடங்களைப் பாடசாலையில் வரவு வைத்து, ஆசிரியர்களின் கருத்தையே அமுதவாக்காகக் கொண்டவர்கள் மாணவர்கள். எம்மை நம்பியே அவர்கள் எதிர்காலத்தை ஒப்படைத்திருக்கிறார்கள். வேறொரு விதமாக கூறினால் அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு நாமும் ஒருவகையில் பொறுப்பாளிகளாவோம்.

எனவே ஒவ்வொரு படிகளிலும் அவர்களைக் கவனமாக வழிநடத்தி அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி வருகின்ற ஆசிரியர்கள் ஆகிய நாம் இறுதியில் சில சந்தர்ப்பங்களில் அவர்களைக் கருத்திற் கொள்ள மறந்து விடுகிறோம். அதாவது, முக்கியமான சில பரீட்சைகளில் குறைந்த பெறுபேறுகளைப் பெறும்போது சித்திபெற்றவர்களை வாழ்த்தி விழா எடுக்கின்ற நாம் ஏனையவர்களைக் கவனத்தில் கொள்ளத் தவறி விடுகிறோம் . இது நாம் அவர்களுக்கு செய்யும் துரோகமாகும். எனவே இன்னும் 9A, 3A எடுக்கும் மாணவர்களுக்குப் பாலும் தேனும் வார்ப்பதை விடுத்து ஏனைய மாணவர்களும் ஏதோ ஒரு வகையில் பயன்பெறத்தக்க வகையில் திட்டமிடப்பட்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட வழிகாட்டல்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பாடசாலையின் தொழில் வழிகாட்டல் அலகு இன்னும் வினைத்திறனுடையதாக இருக்கவேண்டும்.

பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற வழிகாட்டலும் ஆலோசனையும் சேவையின் ஒரு பகுதியாக தொழில் வழிகாட்டல் முக்கியம் பெறுகிறது. பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனைக்கும் பொறுப்பான ஆசிரியரே தொழில் வழிகாட்டலுக்கும் பொறுப்பானவராவார். இச் சேவைக்கென வலயக் கல்வி அலுவலகத்திற்கு இருவர் என்ற அடிப்படையில் ஆசிரிய மத்திய நிலையத்திற்கு நியமிக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ள்ளனர். இவர்கள் பாடசாலைத் தரிசிப்புக்களை மேற்கொண்டு ஆலோசனைகள் வழங்கி வருகிறார்கள். இங்கு பாடசாலையில் தொழில் வழிகாட்டல் அலகு உருவாக்கப்பட வேண்டியதன் நோக்கங்களை ஆராய்வது பொருத்தமுடையது.

பாடசாலைகளில் மாணவர்களுக்கு பாடத்தெரிவு வழிகாட்டல், தொழில் வழிகாட்டல் ஆகிய இருவகைகளில் வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படுதல் அவசியம். பாடத்தெரிவு வழிகாட்டல் என்ற வகையில் தொகுதிப்பாடத் தெரிவுகளின் முக்கியத்துவம் மற்றும் க.பொ.த (உ/த) பாடத்தெரிவுகளும் அவற்றின் முக்கியத்துவம் ஆகியன விளக்கப்படுகின்றன. தொழில் வழிகாட்டல் என்ற விடயத்தினுள் பல்கலைக்கழக வாய்ப்பைத் தவற விடுகின்ற மாணவர்கள் பின்பற்றக் கூடிய பாடநெறிகள், பயிற்சிநெறிகள் ஆகியன பற்றிய விளக்கங்கள் வழங்கப்படுகின்றன.

இவற்றில் பாட வழிகாட்டல் (தொகுதிப்பாடம்) பற்றி நோக்குகையில், தரம் 10 இல் மாணவர்கள் தாம் விரும்பிய தொகுதிப் பாடங்களைத் தெரிவு செய்கின்றனர். பலர் அவற்றின் நோக்கங்களை அறிந்திருப்பதில்லை. தமது ஆற்றல்கள், விருப்புகளுக்கு மாறாக பாடசாலையில் கிடைக்கக்கூடிய மற்றும் தமது ஆசிரியர்கள் நிர்ப்பந்திக்கும் பாடங்களைத் தெரிவு செய்யவேண்டிய நிலையிலுள்ளனர். ஏதிர்கால வசதி, வாய்ப்புக்களை அவர்கள் அறிந்திருப்பதில்லை.

கல்வியியல் கல்லூரிகளில் சில பாடத்துறைகளைத் தொடர்வதற்கு க.பொ.த (சா/த) பரீட்சையில் குறித்த பாடங்களின் சித்தி மிக முக்கியமானதாகும். உதாரணமாக கல்வியியல் கல்லூரிகளில் அழகியல், தொழினுட்பக்கற்கைகள், உடற்கல்வி, தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்...போன்றவற்றைத் தொடர்வதற்கு (சா/த) பரீட்சையில் அப்பாடங்களின் சித்தி மிக முக்கியமானதாகும். எனவே மாணவர்கள் தமது இயலுமை, ஆற்றல்கள், எதிர்கால நோக்கங்கள், வாய்ப்புக்கள் ஆகியவற்றுக்கேற்ப தொகுதிப் பாடங்களைத் தெரிவு செய்திருக்க வேண்டியது அவசியமானதாகும். இதற்கு வழிகாட்டுவது பாடசாலைத் தொழில் வழிகாட்டல் அலகின் முக்கிய கடமையாகிறது.

மேலும் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய விடயம் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி தொடர்பானதாகும். சாதாரணமாக 3C, 3S பெற்றுவிட்டால் போதும் என சில மாணவர்கள் எண்ணுகிறார்கள். இது உண்மை. ஆனால் பல்கலைக்கழகத்தில் சில கற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிகளைத் தொடர்வதற்கு க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம் அல்லது ஆங்கிலம் அல்லது விஞ்ஞானம் போன்ற பாடங்களில் சித்தி அல்லது திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும். உதாரண மாக,

இவை போன்ற தகவல்களை மாணவர்கள் அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

இதைவிட அவ்வப்போது அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் போது எதிர்பார்க்க ப்படும் அடிப்படைத் தகைமைகளில்

| இல | கற்கைநெறி | க.பொ.த(சா/தரம்) | | |
|---|---|---|---|---|
| | | ஆங்கிலம் | கணிதம் | விஞ்ஞானம் |
| 01 | சட்டம் | C | | |
| 02 | நிலத்தோற்றக் கட்டடக்கலை | S | C | |
| 03 | பட்டினமும் நாடும் திட்டமிடல் | C | C | |
| 04 | வசதிகள் முகாமைத்துவம் | C | C | S |
| 05 | தகவல் தொடர்பாடல் | C | C | |
| 06 | தகவல் முறைமைகள் | C | C | |
| 07 | கட்டடக்கலை | S | C | |
| 08 | வடிவமைப்பு | S | C | |
| 09 | தொடர்பாடல் கற்கைகள் | C | | |
| 10 | பசுமைத்தொழினுட்பம் | C | | |

மேலும் 2017/2018 ஆம் கல்வியாண்டில் பட்டினமும் நாடும் திட்டமிடல் கற்கை நெறிக்கு தகுதி பெறுவதற்கு க.பொ.த(சா/தரம்) பரீட்சையில் ஆங்கிலத்தில் “B” சித்தியும் கணிதத்தில் “C” சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

அவ்வாறே 2017/2018 ஆம் கல்வி யாண்டில் வடிவமைப்பு கற்கை நெறிக்கு தகுதி பெறுவதற்கு க.பொ.த (சா/தரம்) பரீட்சையில் ஆங்கிலத்தில் “S” சித்தியும் கணிதத் தில்“C” சித்தியும் மேலதிகமாக விஞ்ஞான பாடத்தில் “C” சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

க.பொ.த (சா/த) பரீட்சையில் தாய் மொழி, கணிதம் போன்ற பாடங்கள் அடங்கலாக நான்கு திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அரசசேவைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் போது வேண்டப் படும் தகைமைகள், வேலை உலகு, தொழிற்சந்தை பற்றிய தகவல்கள் பாடசாலை தொழில் வழிகாட்டல் அலகில் காட்சிப்படுத்தப்பட்டி ருப்பின் மாணவர் தமது பெறுபேறு களை உயர்த்திக் கொள்ள ஊக்கம் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து (உ/த) வகுப்புக்கான பாடத்தெரிவுகளை (குறிப்பாக கலைத்துறையில்) பொருத்தமான வகையில் மேற்கொள்ள வேண்டும். தற்போது அநேகமாக மாணவர்கள் தெரிவு செய்யவேண்டிய பாடத் தெரிவுகளைப் பாடசாலைகளே செய்து முடித்து விடுகின்றன. இதற்கு பல காரணங்களை முன்வைக்க முடியும்.

1. சில உயர்தரப் பாடசாலைகள் தமது மாணவர்கள் வேறு தெரிவுகளை மேற்கொண்டு பாடசாலையை விட்டு வெளியேறுவதன் மூலம் மாணவர் எண்ணிக்கையை குறைவடைவதை விரும்புவதில்லை.
2. பாடசாலையில் சில ஆசிரியர்களின் இருப்பைத் தக்க வைக்க மாணவர்கள் அப்பாடங்களையே எடுக்க வேண்டிய நிலை.
3. மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்பவே ஆசிரியர்களின் ஆளணி தீர்மானிக்கப்படுவதால் சில உயர்தர வகுப்புகளில் மாணவர்கள் தாம் விரும்பும் பாடங்களைப் பெற முடியாமை.
4. அண்மையிலுள்ள குறித்த பாடசாலையிலேயே தமது பிள்ளை கற்கையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என நினைக்கும் பெற்றோர். (போதிய விளக்கமின்மை)
5. கடல் கடந்த தீவுகளில் உள்ள மாணவர்களுக்கு அங்கு கிடைக்கக் கூடிய வளங்களைப் பயன்படுத்தியே பாடத்தெரிவுகளை மேற்கொள்ள முடிகின்றமை.

பாடசாலையிலுள்ள தொழில் வழிகாட்டல் அலகில் பாடத்தெரிவுகள் பற்றிய தெளிவான காட்சிப்படுத்தல்கள் காணப்பட வேண்டும். குறித்த பாடங்களைத் தெரிவு செய்வதால் தனக்கு எவ்வாறான நன்மைகள் ஏற்படும் என மாணவர்கள் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும். உதாரணமாக,

1. குறித்த பாடங்கள் பல்கலைக் கழகத்திற்குரிய “z புள்ளியை” பெற்றுத்தருமா?
2. குறித்த பாடங்களைக் கற்பதன் மூலம் பல்கலைக்கழகத்தில் எவ்வாறான கற்கைநெறிகளை மேற்கொள்ள முடியும்?
3. தெரிவு செய்த பாடங்கள் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காவிட்டால் கல்வியியல் கல்லூரிகள் போன்றவற்றுக்கு விண்ணப்பிக்க ஏற்புடையனவா?
4. ஏனைய வாய்ப்புக்கள் எவை?

பாடத்தெரிவின்போது மாணவர்கள் கவனிக்க வேண்டிய இன்னொரு முக்கிய விடயம் தாம் எத்தகைய கற்கை நெறியைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ள விரும்புகிறோம் என்பதாகும். ஏனெனில் சில கற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிகளைத் தொடர்வதற்கு க.பொ.த (உ/த) பரீட்சையில் உயர் "Z புள்ளியை" பெற்றுக் கொண்டாலும் தெரிவு செய்து கொண்ட பாடச்சேர்மானங்களின் தவறால் மாணவர்கள் சந்தர்ப்பங்களை இழந்து விடுகின்றனர். உதாரணமாக சட்டக் கற்கை நெறிக்கு ஒருவர் அனுமதி பெற வேண்டின் அவர் ஏற்கனவே சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ள பாடச் சேர்மானங்களுக்கேற்பப் பாடங்களைத் தெரிவு செய்திருக்க வேண்டும்.

மேலும் புவியியலை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த கலைத்துறை மாணவர்கள் பட்டினமும் நாடும் திட்டமிடல், கட்டடக் கலை, நிலத்தோற்றக் கட்டடக்கலை, சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும், தகவல் தொழிநுட்பமும் முகாமைத்துவமும்..... போன்ற பல கற்கைநெறிகளை தொடர முடியும். அவ்வாறே சித்திரத்தை ஒரு பாடமாக தெரிவு செய்தவர்களுக்கும் தெரிவுகள் பல உள்ளன. எனவே தொழில் வழிகாட்டடல் அலகில் பாடச்சேர்மானங்கள் பற்றிய சுற்றுநிருபங்கள் மட்டுமன்றி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பட்டப்பயில் நெறிகளுக்கான கைந்நூல்கள், கல்வியியல் கல்லூரிகள் தொடர்பான தகவல்கள் போன்றன காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வருடமும் க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றுபவர்களிடையே பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையை நோக்கின் பாடசாலையின் தொழில் வழிகாட்டல் அலகு செய்ய வேண்டிய பணிகளின் முக்கியத்துவத்தை நாம் உணரலாம்.

பாடசாலைகள் அதிகமான மாணவர்களைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டும் என்பதிலும் வலயமட்டத்தில் உயர் சித்தி வீதத்தை பெற்றுக் கொள்வதையுமே நோக்காகக் கொண்டிருக்கின்றன. இது ஆரோக்கியமானதே. இதே வேளை ஒவ்வொரு வருடமும் சராசரியாக 10 % மான மாணவர்களே பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுகிறார்கள். இவர்களைப் பாராட்டி, மாலைகள் அணிவித்து, பத்திரிகைகளில் பிரசுரித்து, விழாக்கள் எடுக்கின்ற பாடசாலைகள் ஏனைய 90% மான மாணவர்களுக்கு என்ன வழிகாட்டல்களை செய்தன? என்பதே பிரதானமான கேள்வியாகும். பல்கலைக்கழக அனுமதி கிடைக்காவிட்டால் வேறு எதுவும் செய்ய முடியாதா?

இங்கேதான் பாடசாலையின் தொழில் வழிகாட்டல் அலகின் தேவை முக்கியம் பெறுகிறது. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி தெரிவாகிய மாணவர்களுக்கு மட்டுன்றி தெரிவாகாத மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பிலும் இவ் அலகு ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம்.

1. மூன்று பாடங்களிலும் சித்தி பெற்ற மாணவர்களைப் பல் கலைக்கழக அனுமதிப் படிவத் தைப் பூர்த்தி செய்ய வழிப்படுத் தல்.
2. ஒவ்வொரு பல்கலைக்கழகத்தி லும் உள்ள கற்கை நெறிகளை விளக்குதல்.
3. மாணவர்களது ஆற்றல்கள், விருப்பங்களுக்கேற்பத் தெரி வை மேற்கொள்ள வழிப்படுத்தல்.
4. கிடைக்கக்கூடிய கற்கை நெறிக் கான வாய்ப்புக்களை விளக் குதல்.
5. தற்போதய வேலையுலகு எதிர் பார்க்கும் பாடநெறிகளை அறிமுகப்படுத்தல்.
6. பொதுச் சாதாரண பரீட்சையில் சித்தி பெறாவிடின் செய்ய வேண்டியவை.

போன்றன அவற்றுட் சில. எனினும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகாத மாணவர்கள் விடயத் தில் இவ் அலகின் பணிகளே அதிகம்.

1. தெரிவாகாத மாணவர்கள் அதற் கான காரணங்களைத் தாமே உணர்ந்து கொண்டு மீண்டும் பரீட்சை எழுத வழிப்படுத்தல். (வழிகாட்டலும் ஆலோசனை யும்)
2. கல்வியியல் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்தல்.
3. ஏனைய அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களின் பாடநெறிகள், பயிற்சி நெறிகள் பற்றி விளக்க மளித்தல்.

இவ்வகையில் பின்வரும் சில நிறுவனங்களின் பாட, பயிற்சி நெறிகள் பற்றிய தகவல்களை மாணவர்கள் அறிந்து கொள்ளும் படியாக காட்சிப் படுத்தி வைத்திருத் தலும், அவை பற்றி விளக்கமளித் தலும் பயனுடையதாக அமையும்.

1. பல்கலைக்கழகங்கள்
2. கல்வியியற் கல்லூரிகள்
3. பல்கலைக்கழகக் கல்லூரிகள்.
4. சமுத்திரவியல் பல்கலைக்கழகம்
5. இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம்
6. உயர் தொழினுட்பக் கல்லூரி
7. தொழினுட்பவியல் கல்லூரி
8. தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
9. இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை
10. கடலோட்டு எந்திரவியல்கல்லூரி
11. பற்றீசியன் தொழிற்பயிற்சி நிலையம்.
12. மருதனார்மடம் விவசாயக் கல்லூரி.
13. யாழ்ப்பாணக் கல்லூரி - தொழிற் பயிற்சி நிலையம்.
14. CINEC.
15. வடகடல் நிறுவனம்
16. கணினி வள நிலையங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17.BCAS

18.ICBT

இவ்வாறாக இன்னும் பல.....

பாடசாலைத் தொழில் வழி காட்டல் அலகில் பாடத்துறைகள் தொடர்பான விளக்கங்கள் காட்சிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். உதாரணமாக மாணவர்கள் சிலர் தொழினுட்பத்துறை தொடர்பாக தெளிவான கருத்துக்களைக் கொண் டிருக்கவில்லை. எனவே பாடத்துறை கள் தொடர்பான விளக்கங்கள், அவற்றின் தன்மைகள், வேலை வாய்ப்புகள் போன்ற தகவல்கள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் மிகவும் பொருத்தமுடையது.

மேலும் அரசாங்க, தனியார் துறையினரால் அவ்வப்போது கோரப்படும் வேலை வாய்ப்புக்கள் பற்றிய தகவல்கள், வர்த்தமானி அறிவித்தல்கள், நிறுவனங்களின் பயிற்சி நெறிகள் போன்றனவும் மாணவர்கள் தாமாக எடுத்து பார்க் கக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்தப் பட்டிருத்தல் நன்று.

இதைவிட மாணவர்களின் எதிர்காலம் தொடர்பான உள்ளா ர்ந்த விருப்புக்களை வெளிப்படுத்து கின்ற தொழில் ஆர்வப் பரீட்சை களை நடத்தி அதன் மூலம் அவரவர் விரும்பும் துறைகளை இனங்காண வைப்பதும் இவ் அலகின் முக்கிய பணியாகும்.

இவ்வாறாகப் பாடசாலையின் தொழில் வழிகாட்டல் அலகு மேலும் பாரிய பொறுப்புக்களை, கடமைகளை நிறைவேற்றும் நோக் கோடு ஆரம்பிக்கப்பட்டது. மேலை நாடுகளில் இத்துறை சிறப்பாக வளர்ச்சிபெற்றிருப்பினும் இன்னமும் பாடசாலைகளால் அவற்றின் தேவை கள் உணரப்படாத காரணத்தால் அவை முழுமை பெறவில்லை என்றே கூறலாம். எனினும் மாணவர்களுக்கு சிறந்த முறையில் வழிகாட்டி அவர் களை வழிப்படுத்தும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட இவ் அலகுகள் மேலும் முனைப்புடனும் அர்ப் பணிப்புடனும் பணியாற்ற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப் பாகும்.

| (உ/த) பரீட்சை வருடம் | கல்விசார் வருடம் | (உ/த) பரீட்சைக்கு தோற்றியோர் | பல்கலைக் கழகத்திற்கு தெரிவானோர் | தெரிவானோர் வீதம் | தெரிவாகாதோர் வீதம் |
|---|---|---|---|---|---|
| 2008 | 2008/2009 | 207,436 | 20,270 | 9.7 % | 90.3 % ? |
| 2009 | 2009/2010 | 205,249 | 21,547 | 10.5 % | 89.5 % ? |
| 2010 | 2010/2011 | 233,609 | 22,016 | 9.4 % | 90.6 % ? |
| 2011 | 2011/2012 | 239,744 | 28,908 | 12.0 % | 88.0 % ? |
| 2012 | 2012/2013 | 229,737 | 24,198 | 10.5 % | 89.5 % ? |
| 2013 | 2013/2014 | 246,665 | 25,200 | 10.2 % | 89.8 % ? |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமையும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், இளைஞர்களின் பங்களிப்பும்



திரு.அ.அருள்நேசன்
ஆசிரியர்,
BA,Dip.in fis, Dip.in,Psy
யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்,

எந்த ஒரு மனிதனும் தனக்குரிய உள்ளார்ந்த சமய கௌரவத்துடனும், மதிப்புடனும் வாழ அவன் அனுபவிக்க வேண்டியுள்ள தூய சிந்தனையுடனான தார்மீகமே உரிமையாகும். இந்த உரிமை ஆண், பெண் சிறுவர்கள் என்று எல்லோருக்கும் உரித்துடைய வெகுமதியான சொத்தாகும் என்பது அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது.

எனவே இந்தப் பிரகடனத்தில் கூறப்பட்ட கருத்துக்களைக் கொண்டு நோக்கும் போது மனித உரிமை மக்களுக்கு உரித்தானவை. அவை ஒவ்வொரு மனிதனுடனும் பிறக்கின்ற பிறப்புரிமை ஆகும். இதனை எந்தவொரு சட்டமோ அல்லது அதிகாரத்தினூடாகக் கொடுக்கப்பட்ட ஒரு சொத்தல்ல. அது மனிதனுக்குரிய அரும்பெரும் சொத்தாகும். இதனைச் சட்டங்கள் இனங்கண்டு ஆவணப்படுத்தி அமுல் செய்துள்ளது என்பது தான் உண்மையானது.

இவை பற்றி தத்துவஞானிகளான ரூசோ, பிளேட்டோ, ஜோண் லொக் போன்றவர்கள் தெளிவாகக் கூறியுள்ளனர். அதாவது “பிளேட்டோ”ஒரு மனிதன் கௌரவமாகவும், சுதந்திரமாகவும் வாழ்வதற்கு உரித்துடையவன்” என்று கூறியுள்ளார். இதே வேளை “ஜோண் லொக்” மனிதன் பிறக்கும் போதே சுதந்தரத்துடனும், சமத்துவத்துடனும் பிறக்கின்றான். எனவே சட்டங்கள் அவனது உயிருக்கும், உடலுக்கும், சுதந்திரத்துக்கும் பாதுகாப்பு அதிகரிப்பதாக அமைய வேண்டும் என்று கூறியுள்ளார். அடுத்து மிகவும் பிரசித்தி பெற்ற தத்துவஞானியாகிய “ரூசோ” , “மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான். ஆனால் அவன் எங்கும் அடிமை நிலையில் வாழ்கின்றான்” என்று கூறியுள்ளார். இவ்வாறு பல்வேறுபட்ட தத்துவஞானிகளும் மனிதனது உரிமை பற்றிச் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார்கள். இதில் ரூசோவின் கருத்தை நோக்கினால் இன்று அவை அனைத்தையும் எமது கண்ணால் காணக்கூடியதாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

அதாவது ஒரு குழந்தை பிறக்கும் போது சுதந்திரமாகப் பிறக்கின்றது. பின்னர் அப்பிள்ளை பல்வேறு இன்னல்கள் பிரச்சினைகள், துன்பங்கள் அடிமைத்தனங்களுக்கு உட்பட்ட வாழ்வினையே வாழ்ந்து வருவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதன் மூலம் அப்பிள்ளைகளது உரிமைகள் முழுமையாக மறுக்கப்படுவதையும் நிராகரிக்கப்படுவதையும் காணக்கிடக்கின்றது.

இன்று உலகளாவிய ரீதியில் அனைத்து மனிதர்களது உதட்டிலும் உச்சரிக்கப்படுவது "சிறுவர் துஷ்பிரயோகம்" இவை பல வகையான வடிவங்களில் பல்வேறு இடங்களில் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் மீறப்படுவதைக் காணமுடிகின்றது. இத்தகைய சிறுவர் துஷ்பிரயோகங்கள் காலத்திற்குக் காலம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. தவிர தடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. இத்தகைய துஷ்பிரயோகம் எமது நாடான இலங்கையில் இன்று அனைத்து நாடுகளும் வியக்கும் வகையில் அதிகரித்துக் காணப்படுவதை அண்மைக் காலங்களில் சிறுவர் பாதுகாப்பு அமைப்பினால் வெளியிடப்பட்ட தகவல்களில் இருந்து அறிய முடிகின்றது.

இத்தகைய சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் பல்வேறு வடிவங்களில் மேற்கொள்ளப்படுவதை குறிப்பிடலாம்.

- பாலியல் ரீதியான துஷ்பிரயோகம்.
- உடல் ரீதியான துஷ்பிரயோகம்.
- உளவியல் ரீதியான துஷ்பிரயோகம்.
- பொருளாதார ரீதியான துஷ்பிரயோகம்.
- பயமுறுத்தி வைத்தல்.
- குடும்ப வன்முறைகள், கட்டுப்பாடுகள்.
- பிள்ளைகள் தனிமைப்படுத்தப்படடல்.

போன்ற பல்வேறு வழிகளில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இவை மேலைத்தேய நாடுகளில் மெதுவாகக் குறைவடைந்துள்ளன. சிறுவர் உரிமைக்கு அங்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன.

இன்று எமது நாட்டில் இவ்வாறான வன்முறைகள் நடை பெறுவதனை நாளாந்தம் பத்திரிகைகளிலும் நவீன ஊடக சாதனங்களிலும் அறிந்த வண்ணம் இருக்கின்றோம். தென் மாகாணத்தில் சேயா, புங்குடுதீவில் வித்தியா, நெடுந்தீவில் லக்சினி போன்றவர்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஆசிரியை ஒருவரின் மகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட வரலாறு இடம் பெற்றுள்ளன. துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் ஒரு நபர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களாகக் கருதி இவர்களுக்கு மேல் அதிகாரிகள் குற்றங்களை மறைத்தும், குறைத்தும் பணத்துக்காகவும் செல்வாக்குக்காகவும், தண்டனைகள் கொடுக்கப்படாது வெளியே விடப்படுகின்றார்கள் அல்லது நீண்ட நாள் இழுத் தடிப்பினை மேற்கொள்கின்றனர்.

"ஆறின கஞ்சி பழங்கஞ்சி" என்பது போல பிடிக்கப்பட்டவர்கள் சந்தேகத்தின் பேரிலே வழக்கு தாக்குதல் செய்யப்படுகின்றது.

எனவே இக்கொடிய நிலையை எமது நாட்டில் இருந்து களைந்து அகற்ற வேண்டியது. எம் அனைவரினதும் தலையாய கடமையாகும். மாறாக நாம் அப்பொறுப்பில் இருந்து விலகி நாமும் சிறுவர் மீதான துஷ்பிரேயாகத்தில் ஈடுபடாது, அவர்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டும். தற்போது சிறுவர்கள் பாலியல் ரீதியில் மிகவும் அதிகளவில் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர். இது யாரால் மேற்கொள்ளப்படுகின்றது என்று பார்க்கும் போது பிள்ளைகளின் நெருங்கிய உறவுகளும்,பிறருமே சிறுவர்களது வாழ்வில் பெரும் தீய சக்திகளாக இருப்பது மிகவும் மனவேதனை தருவதாக அமைகின்றது. இந்நிலை மாறி எமது பிள்ளைகள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் சுய கௌரவத்துடனும் வாழுவதற்கு விரைந்து கரம் நீட்ட வேண்டியவர் களாக இருக்கின்றோம்.

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்." ஆகவே இவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள், இளைஞர்கள்,பெற்றோர்கள், அதிகளவில் நெருங்கிப் பழகக் கூடியவர்களாக இருப்பதனால் இவர்கள் அனை வரும் பிள்ளைகளது உரிமையில் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

ஆசிரியர்கள் அனைத்து மாணவர்களுடனும் அந்நியோன்னியமாகப் பழகுவதன் மூலம் அறிந்து அதனை நிறைவேற்றவும் அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளினை உரிய முறையில், உரிய காலப் பகுதியில் தவறாது வழங்கி, வழிகாட்டுவதன் மூலமே அம்மாணவர்களை நாட்டிற்கு நல்ல பிரஜைகளாகவும் எதிர்காலத் தலைவர்களாகவும், அவர்களது உரிமைகள் மீறப்படாது பாதுகாக்கவும் முடியும். எனவே ஆசிரியர்களாக உள்ள ஒவ்வொருவரும் தங்களது பிள்ளைகளாகக் கருதிச் செயற்பட்டால் சிறந்த சமுதாயமொன்றைக் கட்டியெழுப்ப முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்று இளைஞர்களும் தம்மைத் திருத்திக் கொண்டு வாழ்வதுடன் நின்றுவிடாது. தன் பின்னால் வரும் சிறுவர்களுக்கும் நல் வழிகாட்டி அவர்களையும் தமக்குரிய உரிமைகளைப் பெற்று எதிர் கால நாட்டிற்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கக் கூடியவர்களாக மாற்றுவதும் இன்றைய இளைஞர்களது தலையாய கடமையாகும். எனவே இளைஞர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்களாக இருக்கும் ஒவ்வொருவரும் எமது நாட்டில் உள்ள ஒவ்வொரு பிள்ளையும் சுதந்திரமாகவும் கௌரவத்துடனும் வாழ வழிவகுக்க வேண்டும். அதில் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவைகளாக,

- ❖ இன்றைய தற்காலத்தில் சிறுவர்கள் பாதுகாப்புக்கென பல்வேறு அமைப்புக்கள், நிறுவனங்கள் அமைக்கப்பட்டு தங்கள் சேவைகளினை வழங்கி வருவதனை அறிய முடிகின்றது. இவர்கள் ஊடாக அனைத்துப் பிள்ளைகளிற்கும் அவர்களது உரிமையைத் தெரிந்து கொள்ளக் கூடியவாறு அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் ஆலோசனை, அறிவுரை, வழிகாட்டல்கள் கலந்துரையாடல் போன்ற நிகழ்வுகளினை ஒழுங்கு செய்தல்.
- ❖ சிறுவர் உரிமை மீறப்படும் போது அவற்றை அறிந்து உடன் சட்டத்தின் முன் கொண்டு சென்று அவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுத்தல்.
- ❖ கிராமங்கள் தோறும் பிள்ளைகளை ஒன்றிணைக்கும் செயற்றிட்டங்களை மேற்கொள்ளல்.
- ❖ சிறுவர்களைப் பாதுகாக்ககூடிய செயற்றிட்டங்களை மேற்கொள்வதும், அனைத்துப் பிள்ளைகளையும் கற்றல் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்குபற்ற பங்களிப்புச் செய்தல்.
- ❖ பாடசாலைகளில் பாலியல் கல்வி முறையினை நடைமுறைப்படுத்தி அது பற்றி விழிப்புணர்வுகளினை வழங்குதல்.

சிறுவர் உரிமை மீறப்படும் போது அதனை உடனடியாக பொலிஸ், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (NCPA) அந்தப் பிரதேசத்தில் உள்ள சிறுவர் நன்னடத்தை, பாதுகாப்பு, சிறுவர் உரிமை உத்தியோகத்தர்கள் போன்றோருக்கு அறிவித்தல் போன்ற செயற்பாடுகளைப் பெரியோர்களாகிய நீங்கள் மேற்கொள்ளும் போது சிறுவர்கள் பாதுகாக்கப்படுவதுடன் அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகத்தை தடுத்து நிறுத்த முடியும். எனவே. "வேலியே பயிரை மேய்வது போல" அல்லாது அவர்கள் அதிகமாக உங்கள் மேல் நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள். அவர்களது உரிமைக்காக பாடுபட்டு பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை சுய கௌரவத்துடனும் சுதந் திரமாகவும் வாழ்வதற்கு உறுதுணை யாக இருக்க வேண்டியது உங்களது பொறுப்பாகும். எனவே இன்றைய சிறுவர்களைச் சிதறிக்கிடக்கும் சிறு வர்களாக மாற்ற நினைக்கும் சமுதாய மாக மாறாமல் சிறுவர்களைச் சிற கடித்துப் பறந்து திரியும் பறவை களாக மாற்ற நினைக்கும் சமுதாய மாக, அவர்களோடு கைகோர்த்து அவர் களோடு கூடவே இருந்து அவர் களுக்கு பங்களிப்பு செய்ய வேண் டும். இதுவே எமது தலையாய கட மையும் பொறுப்புமாகும்.

"சிறுவர் உரிமையைப் பாதுகாப்போம்
அவர்களை வாழ விடுவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் நடத்தையை ஆசிரியர் விளக்குவதற்கான உளவியற் பின்னணியை அறிதல்

திருமதி. வாசுகி சுதாகரன்
Dip.in Teaching (Primary)
யா/அல்லைப்பிட்டி றோ.க.த.க.பாடசாலை

மானிடர் நடத்தையைப் பல்வேறு உளவியல் கொள்கைகள் வித்தியாசமான முறைகளிலும் எடுகோள்களிலும் அணுகுகின்றன. பிரச்சினையான நடத்தைகளை வெளிக்காட்டும் மாணவர்களைச் சில கொள்கைகள் சமூகக் குறைபாடுகளின் பிரதிபலிப்பாக நோக்குகின்றன. இதை ஏற்றுக் கொள்ளும் ஆசிரியர்கள் பிரச்சினையான நடத்தைகளின் காரணங்கள் வீடு, பாடசாலை, சமூகம் என்பனவற்றில் தேடுகின்றனர்.

மக்குகல் மற்றும் பிராய்டின் கொள்கைகளுக்கு ஆதரவான உளவியாலாளர்கள் மனிதர்கள் சமூகக் காரணிகளினால் ஊக்கப்படுகின்றனர் என்பதை மறுத்து தனியாட்கள் பிறப்பின் போதே பால், வன்முறைக்கான இயல்பூக்கங்களினால் தான் ஊக்கல் ஏற்படுவதாக வாதிடுகின்றனர். இன்னும் சிலர் சூழலின் தாக்கங்கள் பற்றிப் பேச,வேறு சிலரோ தனியாளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட அவனால் உணர முடியாத காரணிகளின் தாக்கங்களைப் பற்றிக் கூறுகின்றனர். "கிளாஸரும்" மற்றும் மாஸ்லோ போன்ற சிலரும் தேவைகள் நிறைவு செய்யப் படாமையினால் ஏற்படும் ஒழுங்கீனங்களைப் பற்றிக் கூறுகின்றனர்.

இந்நிலைமையால் எக் கொள்கை வலுவானது அல்லது பலவீனமானது என ஆராய்வதில் பலனில்லை. ஆனால் எந்தவொரு தனியான கொள்கையும் மானிட நடத்தையைப் பூரணமாக விளக்கவில்லை என்பதுதான் உண்மை. ஆசிரியர்கள் கல்வியுடன் ஈடுபாடுள்ளவர்கள் என்பதனால் ஊக்கல், நடத்தை மாற்றம், கற்றல் நடத்தைக்குத் தனியாளின் பொறுப்பு, புலக்காட்சி, குழுவின் வகிபங்கு போன்றவைகளைப் பற்றிய பயன்மிகு அணுகுமுறைகளைக் காட்டும் மானிட நடத்தைக் கொள்கைகள் அவர்களுக்குப் பிரயோசனமாக அமையும்.

இவ்வகையில் தனியாள் உளவியல் அணுகுமுறைகள் புனரமைப்பை விட தடுப்பு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் கூடிய கவனம் செலுத்துவதி னாலும் சமூக சனநாயகம் மக்களின் சமதன்மை என்பனவற்றை மைய மாகக் கொண்டுள்ளதனாலும் நாம் தற்போது ஆராயும் விடயத்துக்கு நெருங்கிய தொடர்புடையதாகக் காண்கின்றோம்.

வகுப்பறையில் மாணவர் ஒழுங்கை எப்படி நிலை நாட்டலாம் என்பதை ஆசிரியர் அறிந்திருந்தால் போதுமானது என வாதிடும் சிலர் மானிட நடத்தையை விளக்கும் ஏதாவது கொள்கையுடன் அவர் கள் முன்வைக்கும் நடைமுறையைத் தொடர்புபடுத்த வேண்டியுள்ளதை ஏற்க மறுக்கின்றனர். இதனால் ஆசிரியர்கள் தமது நுட்பங்களினுள் ளேயே பொருத்தப்பாடின்மை கார ணமாகப் பாதிப்படைய வேண்டி யுள்ளது.

வகுப்பறை ஒழுங்கு தொடர்பான அண்மைக்கால ஆய்வுகள், சுயஒழுக் கம், சுய கௌரவம் என்பவைகளை ஆதரித்தாலும் அத்துடன் சேர்த்து மீள வலியுறுத்தல் கொள்கையையும், ஒப்பந்தங்களையும் ஆதரிக்கின்றன. கென்ரஸ் போன்ற உளவியலாளர்கள் எவ்வாறு தாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவு செய் யும் மாணவரின் உரிமையை வலியு றுத்திக் கூறினாலும், விசேட சலுகை, இழத்தல், தடுத்து வைத்தல், வெகுமதி களைப் பயன்படுத்தல் என்பவை களையும் ஏற்றுக் கொள்கின்றனர். முன் சந்தித்திராத பிரச்சினைகளை முரண்பாடுகள் இன்றித் தீர்த்துக் கொள்ள வேண்டுமானால், மாணவர் களின் பிழையான நடத்தைகள் தொடர்பாக ஆசிரியர்கள் சிறந்த அறிவு பெற்றிருத்தல் மிக அவசிய மாகும். மாணவர் ஆசிரியர் தொடர்பு, ஒழுங்குமுறையை நிலைநாட்டும் நுட்பங்கள் என்பனவற்றை ஆசிரியர் கள் அறிந்து கொள்ள உளவியலின் ஆதரவு அவர்களுக்குத் தேவை. தேவையான உளவியல் ஆதரவு அவர் களுக்குத் தேவை. தேவையான உளவியல் அறிவைப் பெற்றுக்கொள் வது மிக அவசிய மாகும்.

வகுப்பறையில் ஆசிரியர் நல் லெண்ணம், அன்பு என்பவைகளைக் காட்டுபவராக இருக்கலாம். எனி னும் மாணவர்கள் பற்றிய விளக்கம் அவருக்கு அவசியம் தேவை. இல்லா விட்டால் அவரின் முயற்சி சரியான முறையில் பயனளிக்காமல் மன உழைச்சலுக்கு உள்ளாக வேண்டி வரும். மாணவர்களுக்குக் கற்றலை எளிமைப்படுத்துவற்காகவே பாட சாலைகள் உள்ளன. அறிவுசார், எழுச்சிசார், உள இயக்கம் சார் துறை களில் தீர்மானிக்கப்பட்ட கற்றல் இலக்குகளை அடைவதில் ஆசிரியர் கள் உயர் வகிபங்கை வெளிப்படுத்த வேண்டும். இவற்றை அடைந்து கொள்வதற்காகப் பாட உள்ளடக்கம், வளங்கள், கற்பித்தல் நுட்பங்கள் குழுவாக்கல், மதிப்பீடு செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

என்பவைகள் பற்றிச் சில குறிப்பான தீர்மானங்களை ஆசிரியர்கள் எடுக்க வேண்டியிருக்கும். இவைகள் எல்லாம் சேர்ந்தே கற்பித்தற்திட்டத்தினை ஆக்குகின்றன. இதன் மூலம் மாணவரில் விரும்பிய கற்றலை ஏற்படுத்த ஆசிரியர் விளைகின்றார்.

கற்பித்தலுக்காகக் கவனமாகத் தயாரிக்கப்பட்ட வேலைத் திட்டம், பாடத்திட்டம் என்பன மிகவும் அவசியமானதும் அவை மட்டும் போதியனவன்று. பல்வேறு காரணிகளினால் மிகவும் நன்றாகத் தயாரிக்கப்பட்ட கற்பித்தற் திட்டமும் கூட செயலிழந்து போகலாம். மாணவர்கள் கருத்துக்களை வாங்கிக் கொள்ள இயலாதவர்களாக ஊக்கம் பெற இயலாதவர்களாக இருக்கலாம். வேறு சிலர் வகுப்பை ஒழுங்கீனமான தொன்றாக்கலாம். இதனால் தீர்க்கப்படாத வகுப்பறை முகாமைத்துவப் பிரச்சினைகள் கற்றலுக்குச் சாதகமற்ற சூழல் ஒன்றை வகுப்பறையில் ஏற்படுத்தும் மாணவர்களின் ஒழுங்கீனத்துக்கு அவர்களின் மோசமான மனப்பான்மைகள், ஊக்கமின்மை அல்லது கற்பதற்கு இயலாமை என்பவைகளை ஆசிரியர்கள் காரணங்களாகக் காட்டலாம். ஆயினும் இவைகளை விட வகுப்பறை முகாமைத்துவத்திற்குத் தேவையான உளவியல் அறிவுக் குறைபாடு ஆசிரியர்களுக்கு இருப்பதனாலேயே இத்தகைய ஒழுங்கீனம் உண்டாகின்றது. ஆசிரியர்கள் பொதுவாகப் பல பயிற்சிகளைப் பெற்றிருந்த போதும் அவை வகுப்பறையில் கற்றலில் ஆர்வமில்லாத வகுப்பில் முகாமைத்துவப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் மாணவர்களை வெற்றிகரமாகக் கையாள்வதற்குப் போதியதன்று.

ஆகவே, அதிகமான ஆசிரியர்களினால் பிரச்சினைக்குரிய கடினமான போக்குடைய மாணவர்களை வெற்றிகரமாகக் கையாள முடியவில்லை. ஆரம்ப வகுப்புகளில் செயற்பட்ட அண்மைக்கால ஆய்வுகள், ஆசிரியர்கள் தமது நேரத்தின் 80% இனை மாணவரை கட்டுப்படுத்தவும் 20% இனை மட்டுமே கற்பிக்கவும் செலவிடுகின்றார்கள் எனக் காட்டுகின்றனர்.

ஒரு தசாப்த காலத்திற்கு முன்பாக இப்பெறுமானங்கள் வேறு விதமாக இருந்திருக்கலாம். பாடசாலைகளில் தற்போது அறிமுகப் படுத்தப்பட்டுவரும் உளவியல், ஆலோசனை, பரிகாரம், நலன் என்பன தொடர்பான உதவிச் சேவைகள் காரணமாக அதிகமான ஆசிரியர்கள் மாணவர்களின் பிரச்சினைகளைப் போதியளவு கவனிக்காது இச்சேவைகளையே அதிக அளவில் நம்பத் தொடங்கி இருப்பதைக் காண முடிகின்றது. வகுப்பறையிலுள்ள ஆசிரியரே அங்குள்ள எல்லா வகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான மாணவர்களையும் கையாளத்தக்க சிறந்த நபராகக் கருதப்படுவதனால் இது ஒரு துரதிஷ்டவசமான நிலைமை என்றுதான் கூற வேண்டியுள்ளது.

மாணவர்களின் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு பல்வேறு விதமான வெளியாட்களை அழைத்து அவர்களிடம் கையளிப்பதை விடவும் இம்மாணவர்களை வெற்றிகரமாகச் சமாளிப்பதற்கான ஆற்றலையும், திறமையையும் வளர் த்துக் கொள்வது ஆசிரியர்களின் கடமையாகும். வெளியாட்களிடம் பிரச்சினைகளைக் கையளிப்பதன் அர்த்தம் தமது இயலாமையை தானே ஏற்றுக் கொள்வதாகும். கணிசமான எண்ணிக்கையான பிள்ளைகளின் சமூக, உடலியல், மனவெழுச்சி, அறிவாற்றல் விருத்திக்கான ஒழுங்குகள் மேற்கொள்வது ஆசிரியர்களின் கடமையாகும். வகுப்பறை நிலைமைகளுக்குப் பொருத்தமான மானிட நடத்தையை விளக்கும் கொள்கைகள் பற்றிய விரிவான அறிவு ஆசிரியர்களுக்கு இருந்தால் மட்டுமே மேற்படி கடமைகளை அவரால் செவ்வனே செய்யலாம். இங்கு தரப்பட்டுள்ள கொள்கைகள் இதற்காக ஆசிரியருக்குப் பெருமளவில் உதவக் கூடியனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கினூடே மகிழ்வான கற்றல் கற்பித்தல்



**திருமதி.சியாமளா றீனோஜன்**
ஆசிரியர்,
Dip.in Teaching(Drama)
யா/காரை. ஊரி அ.மி.த.க. வித்தியாலயம்

ஒரு பிள்ளையினுடைய வளர்ச்சியிலே கற்றல் செயற்பாடுகள் மிகவும் முக்கியமானவை. கற்றல் செயற்பாடுகள் பாடசாலையில் இருந்து ஆரம்பிக்கின்றன என்றே பொதுவாக நாம் கருதுகின்றோம். ஆனால் ஒரு பிள்ளை கருவில் இருக்கின்றபோதே கற்றல் செயற்பாடுகள் ஆரம்பித்து விடுகின்றன. தொடர்ந்து குடும்பம், சமூகம், பாடசாலை போன்ற சூழல்களில் நடைபெறும் கற்றல் செயற்பாடுகள் பிள்ளையின் வளர்ச்சியில் பங்கு கொள்கின்றன.

இவ்வாறு கற்றல் கற்பித்தலில் அரங்கு என்பது நுண்கலைகளில் ஒன்று. கல்வி சார்ந்து அழகியல் சார்ந்து அரங்கின் செயற்பாடுகள் என்ன? ஏன்? எவ்வாறு? என நோக்குவது இவ்விடத்தில் பொருத்தமானதாகின்றது. அழகியற் கல்வியாக உள்ள அரங்கு மாணவர்களிடையே அழகியல் பற்றிய உணர்வையும், ரசனை உணர்வையும் வளர்ப்பதற்கு வழிவகுப்பதாகும்.

மனிதர்களிடம் மனிதத் தன்மையை வளர்ப்பதற்கு அரங்கு பயன்படுகிறது. மானிட நோக்கு என்பது மாணவர்களிடையே வளர்த்தெடுக்கப்பட வேண்டியதொன்றாகும். கலைகள் பற்றிய அறிவும் கலைப்பயில்வும் மாணவர்களிடையே ரசனை உணர்வையும், மானுட சிரத்தையும் ஏற்படுத்தும் அவர்கள் எதிர் காலத்தில் சமநிலைப்பட்ட ஆளுமையை வளர்த்துக் கொள்வர். விளைத்திறனுடைய மாணவர்களாகத் திகழ்வர். இத்தகைய அரங்க செயற்பாடுகளில் சிறுவர்களிற்கான அரங்கு முதன்மைப்படுத்தப்படுகின்றன. இத்தகைய சிறுவர்களின் நாடகங்களில் பின்வரும் விடயங்களையும் நாம் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

- ❖ பிள்கைளின் உள முதிர்ச்சிக்கு ஏற்ப கரு அமைதல் வேண்டும்.
- ❖ அவர்கள் வாழும் சூழலுக்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.
- ❖ அவர்கள் தம் பண்பாட்டிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியங்களை (Values) எடுத்துக் காட்டுகின்றனவாக அமைதல் வேண்டும்.

- நாடகத்தில் கதை மிகவும் எளிமையானதாக, சிக்கல் மிகக்குறைவானதாக அமைய வேண்டும்.
- நிறையவே வினோதச் செயல்கள் (Fantasy) தீரச் செயல்கள் மிக்கனவாக அமைதல் வேண்டும்.
- கற்பனை உடையதாக ஆர்வத்தை மேலும், மேலும் தூண்டுவதாக அமைதல் வேண்டும்.
- ஆடல், பாடல் இடம் பெறல் வேண்டும். சிறுவர் விளையாட்டுக்கள் உள்ளடக்கப்படலாம். விளையாட்டே நாடகம் தான் (Play-Drama)

உண்மையில் சிறுவர் நாடகத்தின் ஊடாக சிறுவர் களிப்பூட்டப்படல் வேண்டும். மானுடத்தின் இயல்புகளான புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, தலைமைத்துவப் பண்பு என்பன வளர்க்கப்படல் வேண்டும். சிறார்கள் தமது கடமைகளைத் தாமே செவ்வனே செய்தல் வேண்டும். அதற்கு இவ்வரங்கு துணை புரியும். இதனூடாக சிறுவர்கள் தம்மை விருத்தி செய்து கொள்ளும் சுதந்திரமும் வழங்கப்படலாம். கட்டுப்பாடுகள் படைப்பாக்க உந்து சக்தியைக் கட்டுப்படுத்தி விடும். கட்டுப்பாடில்லாத படைப்பாக்க சிருஷ்டியின் மூலம் சிறுவர் கற்பனை, தன்னம்பிக்கை, சுறுசுறுப்பு, பேசும் திறன், உணரும் திறன், உடல் உளத்தளர்வு, அழகியலை உணரும் திறன் என்பவற்றைப் பெற்றுக் கொள்வர்.

ஆகவே சிறுவர் நாடகங்களைப் பாடசாலைகளில் நிகழ்த்துவது கற்றலில் ஆர்வத்தைத் தூண்டும். சிறுவரின் உடல், உளப்பாங்கை விருத்தி செய்ய உதவும், ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் இவ்விடயத்தை மனதிற் கொண்டு செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டாவது நிலையில் உள்ள பாடசாலை நாடகங்களைப் பொறுத்தளவில் அந்நாடகங்கள் கூட மேற்படி சிறுவர் அரங்க அடிப்படை விடயங்களுடன் மாணவர் சுதந்திரமாகச் சிந்திக்கும் ஆற்றலையும் வழங்க முடியும் . இம்மாணவர்களின் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு பல நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன. வருங்காலத்தில் எழுதப்படல் வேண்டும்.

மனித இயக்கம் என்பது மற்றைய மனிதர்களுடன் கொண்டுள்ள ஊடாட்டம் மூலமே நிகழ்கின்றது என்கின்றோம். ஆகவே மனித மோதுகை நிலையை நாடகத்தில் காட்டுகின்றோம். இந்த மாணவர்களின் அல்லல்கள், துன்ப துயரங்கள், சந்தோஷங்கள், சிரிப்புக்கள் எல்லாவற்றையும் சுவையாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திரமாகவும் பாடசாலை நாடகங்களில் எடுத்துக் காட்ட முடியும்.

இந்நாடகங்கள் மூலமாக இவ் வயது மாணவர்கள் தமது பிரச்சினைகளைத் தாமே விளங்கிக் கொள்ளவும், எதிர்காலத்தில் தமது இலக்கைச் சுயமாகத் தெரிவு செய்து கொள்ளவும், மாணவர்கள் தமக்கிடையே முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளவும், உறவை விருத்தி செய்வதற்கும், மேலும் கல்வியின் சரியான இலக்கை அடைந்து கொள்ளவும் முடிகின்றது. மேலாகப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் (மாணவர்களின்) உணர்வுகள், பிரச்சினைகள், ஆர்வங்களை விளங்கிக் கொள்ளவும், அவர்களை வழிப்படுத்தவும் இந்நாடகங்கள் துணை புரிகின்றன.

மனிதர் முன் மனிதரால் நிகழ்த்திக் காட்டப்படுவதே நாடகம். நாடகத்தினூடாக மனிதனைக் காணலாம். நாடக பாடத்தினூடாக மனித இயல்புகளை விளங்கிக் கொள்ளலாம். ஏனெனில் அது மானுடத்தைக் கற்பது, கற்பிப்பது. எனவே தான் நாடகம் கற்றல் கற்பித்தலுக்கான ஒரு உயிர்ப்பான சாதனமாகிறது.

இத்தகைய அரங்க செயற்பாடுகள் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் உணர்வு ரீதியான, அறிவு ரீதியான செயற்பாடுகளையும், வெளிப்படுத்தும் ஆற்றல்களையும் வளர்ப்பதுடன், அவர்களின் முழுமையான ஆளுமை விருத்திக்கும் வழி சமைக்கும் என்பதில் ஐயமில்லை.

"கல்வி தனிமனிதனை வளர்க்கின்றது.
அரங்கு மனிதனின் தனித்துவத்தை
வளர்க்கின்றது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அறிவுக்கொள்கைகளும் நினைவூட்டல் உபாயங்களும்



திரு.த.சிறிசெல்வம்
B.A(Hons),M.A, PGDE
யா/சுருவில் றோ.க.த.க.பாடசாலை, ஊர்காவற்றுறை.

ஒருவன் சூழலின் ஊடாக பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள் புலக்காட்சிபெறுதல், விளங்கிக் கொள்ளல், ஞாபகத்தில் இருத்திக் கொள்ளல், மீண்டும் பயன்படுத்திக் கொள்ளல் ஆகியசெயல்களை அறிவு சார் செயல்கள் என வரையறை செய்து கொள்ளலாம். வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயல்முறை களை ஒழுங்கமைக்கும் போது மாண வர்களின் உள்ளத்தில் செயற்படும் அறிவுசார் செயல் முறையினைப் பற்றிய விளக்கம் அவசியமாகும். ஒரு தனியாளின் அறிவுசார் செயல்முறை களை விளக்குவதற்கு தகவல் ஒழுங் கமைப்பு மாதிரிக் கோட்பாடு அடிப் படையாகக் கொள்ளப்படுகிறது. எனவே இதன் அடிப்படையில் அறிவுக் கொள்கைகளையும் நினை வூட்டல் உபாயங்களையும் நோக்கு வது இன்றியமையாததாகிறது.

தகவல் ஒழுங்கமைப்பு மாதி ரிக் கொள்கையை முன்வைப்பதில் கானே (1985) அட்கின்ஸன், சிப்ரின் போன்றோர் முன்னணிச் செயற் பாட் டாளர்களாக உள்ளனர். இக்கொள் கைகளுக்கு ஏற்ப தனியாள் உள்ளம் அல்லது அறிவு ஒரு கணினிக்குச் சமப்படுத்தப்படுகின்றது. இதன் படி உள்ளமானது சூழலில் இருந்து பெற்றுக்கொள்ளும் தகவல்களின் இயல்பையும் அளவையும் மாற்று தல், சேமித்தல் மீண்டும் தேடியறி தல்,தேவையான சந்தர்ப்பங்களில் அறிவைவெளிப்படுத்தல் ஆகிய செயல்களைசெய்கின்றதுஎன ஏ.ஈ. வுல்போர்க் (1987) குறிப்பிட்டு அதற்கான ஒரு மாதிரியையும் முன் வைத்தார்.




Wool folk A.K (1987) Edu cation psycholo மாதிரியானது சூழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லில் தூண்டல்கள் நிறைந்து காணப் படுகின்றன. அவைகளிலிருந்து பார்த்தல், கேட்டல், சுவைத்தல், காணல், பரிசம் போன்றவற்றின் ஊடாக புலனுறுப்புக்கள் புலக்காட்சி பெற்று, தகவல்களாக்கிக் கொள்ளல் புலக்காட்சிக்கூட்டில் இடம்பெறு கின்றது. அதன் போது மிகக் குறுகிய காலத்திற்கு ஆரம்ப இயல்புகளுட னேயே தகவல்களைக் களஞ்சியப் படுத்திக் கொள்வதுடன் ஒழுங்க மைப்பதற்காக மேலும் தெரிவுக்கும், பொருள் கொள்வதற்கும் உட்படு த்திக்கொள்கிறது. இத் தெரிவு "அவ தானம்" எனவும், பொருள் பெற்றுக் கொள்ளல் "புலக்காட்சி" எனவும் அழைக்கப்படுகிறது.

## அவதானம்

அவதானம் என்பது தூண் டல்களினால் நிரம்பிப் பெற்றுள்ள சூழலில் இருந்து ஒரு தூண்டிக்குப் புலன் உறுப்புக்களைச் செலுத்துதல் அல்லது புலக்காட்சிபெறுதல் அவ தானம் எனப்படும். உதாரணமாக ஒருவன் வானொலி கேட்டுக் கொண்டு பத்திரிகை வாசித்தால் இரண்டும் ஒரேநேரத்தில் நடக்காது. அவதானம் மாறி மாறி நிகழ்வதை உற்றுநோக்கலாம். எனவே கற்றலில் அவதானம் முக்கியமாகும். இவற்றை விட தூண்டியின் ஒழுங்கமைப்பு நிறங்கள், காட்சி வேறுபாடுகள், நவீனம் போன்ற காரணிகள் அவதா னத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும். எனவே வகுப்பறைக் கற்றல் துணைச் சாதனங்களைத் தெரிவு செய்வதில் பொருத்தப்பாடு அவசியம்.

## புலக்காட்சி பெறுதல்

அறிவுசார் செயல்முறையில் இரண்டாவதாக புலக்காட்சி முக்கியம் பெறுகிறது. புலக்காட்சி என்பது சூழலில் இருந்துபெற்றுக் கொள்ளும் அனுபவங்களுக்கு ஒரு கருத்தைப் பெற்றுக் கொடுப்ப தாகும். இது பற்றி "கெஸ்டோல்ட் வாதிகள்" பல கருத்துக்களைச் சமர்ப் பித்துள்ளனர். "எங்களின் புலன் உறுப்புக்கள் பெற்றுக்கொள்ளும் அனுபவங்களுக்கு ஒரு விளக்கத்தை அல்லது கருத்தைப் பெற்றுக் கொடுப் பதற்காகக் குறிப்பிட்டஅமைப்பில் ஒழுங்குபடுத்திக் கொள்ளல் புலக் காட்சியின் ஊடாக நிகழ்கிறது". என்பது இவர்களதுஅடிப்படைக் கருத்தாகும். உதாரணமாக,

❖ ஒரு ஒருங்கமைப்பைக் காட்டும் போது அது பின்வருமாறு அமையும்.

- +-+-+-

- +-+-+-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ ஒரு வட்டத்தை விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் அங்குள்ள கோட்டின் தொடர்ச்சித் தன்மை அதனைக் காட்டும்



❖ முழுமையான புலக்காட்சி என்பது பின்வரும் மாதிரி காட்டும். இதன்படி ஒரு செவ்வகமும்



இரண்டு முக்கோணமும் இணைந்து முழுமையான ஒரு புலக்காட்சியாக வீடு என்பது கொள்ளப்படுகிறது.

இங்குஉறுப்புக்களின் பகுப்பு என்பது புலக்காட்சியில் முக்கியமானதாகும். குறிப்பிட்ட ஒரு பொருளை அல்லது அனுபவத்தை இனங்காண்பதற்கு நாம் அடிப் படை உறுப்புக்கள் மீது அவதானம் செலுத்துகிறோம். உதாரணமாக முக்கோணத்தின் அடிப்படை உறுப்புக்களாக மூன்றுதளமும் மூன்று கோணங்களும் ஆகும். எனவே இதனை ஒரு முக்கோணம் என புலக்காட்சி பெறுவது உறுப்புக்களின் பகுப்பு ஆகும். இதில் உள்ளடக்கப் பகுப்பு என்ற விடயமும் முக்கியமாகும். இதன் போது உறுப்புக்கள் மட்டுமன்றி அது நிகழும் சந்தர்ப்பமும் முக்கியமாகும். உதாரணமாக ஒரு நாட்டின் சுவாத்தியம் பற்றி விளக்கும் போது அந்நாட்டின் பயிர் செய்கை பற்றிய புலக்காட்சியையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

**ஞாபகம்**

அறிவுக்கொள்கையில் ஞாபகம் என்பது முக்கிய அம்சமாகும். இதனை இரண்டு அடிப் படையில் நோக்கலாம்.

1. **குறுகிய கால ஞாபகம்**

   **(Short term memory)**

2. **நீண்ட கால ஞாபகம்**

   **(Long term memory)**

குறுகிய கால ஞாபகத்தில் எங்களில் அவதானத்திற்கும் புலக் காட்சிக்கும் உட்பட்ட அனுபவங்களை அல்லது தகவல்கள் குறுகிய கால ஞாபகத்தில் இடம்பெறுகிறது. இது சுமார் 20 வினாடிகள் மட்டுமே ஞாபகத்தில் நிலைக்கின்றன. அது மட்டுமல்ல குறுகிய கால ஞாபகத்தில் வைத்திருக்ககூடியஅளவும் வரையறைக்கு உட்படுத்தப்படும். "ஷல் பேர்க்" (1987) கூறும் போது பிள்ளைகள் கற்றுக் கொண்டவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் மீண்டும் பயிற்சியளிப்பதன் மூலம் குறுகிய கால ஞாபகத்தில் இருந்து நீண்ட கால ஞாபகத்தில் இருத்திக் கொண்ட தகவல்களை அல்லது மீண்டும் மீண்டும் பயன் படுத்துவதற்காக அவற்றை குறுகிய கால ஞாபகத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும்.

நீண்ட கால ஞாபகத்தை எடுத்துக் கொண்டால் குறுகிய கால ஞாபகத்தில் இடம்பெற்ற சகல தகவல்களும் நீண்டகால ஞாபகத் திற்குச் செல்வதில்லை. உதாரணமாக நாம் கற்பவைகளில் பெருமளவான வை குறுகிய கால ஞாபகத்திலே எங் களது ஞாபகத்தில் இருந்து நீங்கி விடுகிறது. அத்துடன் நீண்ட கால ஞாபகத்தில் இருத்திக் கொள்ள பெருமளவு முயற்சி எடுத்தல் வேண் டும். ஒருமுறை நீண்டகால ஞாபகத் திற்கு கொண்டு சென்றது நீண்ட கால ஞாபகத்தில் இருக்கும். ஆனால் அவற்றை மீண்டும் ஞாபகத்திற்கு கொண்டு வருதல் பெரும் சிரம மாகும்.

குறுகிய கால ஞாபகத்தில் இருந்து நீண்ட கால ஞாபகத்திற்குக் கொண்டு செல்வது பற்றி கல்வி உளவியலாளர்கள் விமர்சித்துள்ள னர். Allan Paino (1971) என்பவர் தகவல்கள் பார்வையின் ஊடாக வோ அல்லது வாய்மொழியின் ஊடாகவோஅல்லது இரண்டு வழி களின் ஊடாகவோ நீண்ட கால ஞாபகத்தில் களஞ்சியப்படுத்தப்படு கிறது என்றார். இது பற்றி "பியாஜே" கருத்துக் கூறும் போது அவை "ஸ்கீமா" வாக களஞ்சியப்படுத்தப் படுகிறது எனக் குறிப்பிட்டார். எனவே மாதிரிகள்,படங்கள், ஸ்கீமா போன்ற அமைப்பாக உருவாக்கிக் கொள்ளும் போது அதனால் நன்மை, தீமைகள் ஏற்படுகின்றன. ஸ்கீமாவை தவறாகப் பயன்படுத்தவும் முடியும். ஆகவே பிழையற்ற மாதிரிகள், ஸ்கீமா அல்லது உளப்படங்கள் உருவாக்குவதற்குப் பொருத்தமான கற்றல் சூழல் ஏற்படுத்திக் கொள்ளப் பட வேண்டும்.

ஞாபகத்துடன் தொடர்பு டையதாக "மறதி" என்பது உள்ளது. "தகவல் ஒழுங்கமைப்புக் கொள்கை க்கு" குறுகிய கால ஞாபகத்தில் இருந்து நீண்ட கால ஞாபகத்திற்குத் தகவல்களை அனுப்பும் போது ஏற் படும் சிக்கல் நிறைந்த நிலைமைகள் மறதி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாகும். குறுகிய கால ஞாபகங்களில் மறதி ஏற்படுவது போல நீண்ட கால ஞாபகங்களிலும் மறதி தொடர்பு பட்டுள்ளது. அது குறுகிய கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகத்திற்கு கொண்டு வருவதில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்கள் ஆக இருக்கும்.

**ஞாபகத்தில் இருத்திக்கொள்ளல்**

நினைவூட்டல் உபாயம் என்பது கல்வி உளவியலில் அதிகம் பரிசோதனைக்கு உட்பட்ட ஒரு துறையாகும். நினைவூட்டல் தொடர்பான பலவிடயங்கள் பரிசோதனைகள் ஊடாக கண்டறியப்பட்டுள்ளன. Bartlett (1932) என்பவர். தனது பரிசோதனையில் ஒருவரது கலாசார எதிர்பார்ப்புக்களும் அவர் இதுவரை காலமும் உருவாக்கிக் கொண்ட திரள் அமைப்புக்களும் செல்வாக்கு செலுத்துகிறது என்பதை விளக்கினார். இதனை உறுதிப் படுத்துவதாக இங்கிலாந்தின் கேம் பிறிஜ் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் லத்தீன் அமெரிக்க கோத்திர மொழி பற்றி அறிந்த போது சீல்மீன் பிடிப்பதைத் தமது மீன்பிடித்தலுடன் தொடர்புபடுத்தி ஞாபகத்தில் வைத்திருந்தமை. அதேபோல் தொலைந்து போன நூல் ஒன்றை தேடும் போது அது நீல நிறப்பின்னணி, வெள்ளை நிறப்பூக்கள் நிறைந்த ஒரு உறை போடப்பட்ட புத்தகம் என ஞாபகம் கூறியது. எனினும் புத்தகம் கிடைத்த பின் அது மஞ்சள் நிறப் பூவாக இருப்பின் அது தவறவிடப் பட்ட ஞாபகம் ஆகும். அதுமீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஞாபகத்தில் இருத்திக் கொள்ளும் போது பின்வரும் அம்சங்கள் முக்கியம் பெறுகிறது.

1. **விளக்கமும் உறுதிப்பாடும் பெற்றுக் கொள்ளல்.**
2. **ஒழுங்கமைப்பு**
3. **சந்தர்ப்பம்**

விளக்கமும் உறுதிப்பாடும் பெற்றுக் கொள்ளல் எனும் போது தன்னிடம் உள்ள அறிவு, அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் உரிய தகவல்களுக்கு விளக்கம் பெற்றுக் கொள்வதும் முடியுமான அளவு உறுதியாகவும் தெளிவாகவும் ஒழுங்கமைத்துக் கொள்வதும் அவசியமாகும்.

ஒழுங்கமைப்பு என்னும் போது தகவலை வெவ்வேறாகவும் பகுதிகளாகவும் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களிலும் பார்க்க ஓர் ஒழுங்கமைப்பு உருவாகும் முறையில் சமர்ப்பிப்பதானால் ஞாபகத்தில் இருத்திக் கொள்வதற்கும் மீண்டும் ஞாபகத்திற்கு கொண்டு வருவதற்கும் இலகுவாக இருக்கும்.

சந்தர்ப்பம் என்பது நாங்கள் கற்பிக்கும் இடம், அங்குள்ள வசதிகள், சந்தர்ப்பம் அல்லது அன்றைய தினம் எங்களின் எண்ணங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் கற்பிப்பவைகளுடன் ஞாபகத்தில் இருக்கின்றன. மீண்டும் அத்தகவல்கள் ஞாபகத்திற்கு வருவதற்குச் சந்தர்ப்பம் தொடர்பான ஞாபகமும் உதவியாகச் செயற்படு கின்றது.

**ஞாபகத்தை விருத்தி செய்வதில் பயன்படும் நுட்பங்கள்**

ஞாபகத்தை விருத்தி செய்வதில் பல்வேறு நுட்பங்கள் பயன் படுத்தப்படுகின்றன. அவையாவன,

❖ **மனப்பாடம் செய்தல்.**

இது ஒரு பொருளுள்ள கற்றல் செயன்முறை அன்று. நாங்கள் கற்பவைகளில் சிலவற்றை மனப்பாடம் செய்து ஞாபகத்தில் இருத்திக் கொள்ளவேண்டும். உதாரணமாக கால ஆண்டுகள், சூத்திரங்கள், கவிகள், தொடர்பற்ற சொற் கள், பட்டியல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதன் போது பல்வேறு உத்திகள் கையாளப்படலாம். இருப்பினும் மனப்பாடத்தின் ஊடாக மட்டும் ஞாபகத்தில் உள்ளவைகள் மீண்டும் ஞாபகப்படுத்தும் போது ஆரம்பத்தில் இருந்தே ஞாபகப் படுத்த வேண்டும்.

❖ **விடயங்களைப் பொருள் ஒழுங்கமைப் புடன் கூடியஅறிவாகமாற்றுதல்.**

பகுதிகளாகக் கற்பிக்கப் படும் விடயங்களை ஒரு ஒழுங் மைப்புக்குள் உருவாக்கிக் கொள்ளல், புதிய அறிவைப் பழைய அறிவுடன் தொடர்புபடுத்தல், அடிப்படைக் கோட்பாடும் பொருளும் தோன்றக் கூடியதாகச் சமர்ப்பித்தல் போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிட லாம்.

❖ **புதிய அறிவை உள்ள அறிவோடு கற்பனையூடாகத் தொடர்புபடுத்துதல்.**

Looi முறை ஒரு உதாரண மாக அமையும். நாம் முதலில் பழக்கப்பட்ட ஓர் இடத்தைப் பற்றிக் கற்பனை செய்தல் வேண்டும். இதன் பின்னர் நாம் ஞாபகத்தில் இருத்திக் கொள்ள வேண்டியதைத் தொடர்பு படுத்த வேண்டும். அப்போது கற் பனை மூலம் இது சாத்தியமாகும்.

கற்றல் இடமாற்றம் மிக முக்கியமாகும். முன்னர் கற்றுள்ள தகவல்களையும் அனுபவங்களையும் பிறிதொருகற்றலுடன் அல்லது சந்தர்ப்பத்துடன் தொடர்புபடுத்திக் கொள்ளல் கற்றல் இடமாற்றம் என அழைக்கப்படும். கற்றல் இட மாற்றம், விசேடகற்றல் இடமாற்றம், பொதுவான கற்றல் இடமாற்றம் என இரண்டு அடிப்படையில் நோக்க லாம். இவையும் ஞாபகத்தை விருத்தி செய்வதில் முக்கிய பங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகிக்கின்றது.

எனவே தகவல் ஒழுங்கமைப்புக் கொள்கை ஊடாகத் தனியாட்களின் அறிவுசார் இயல்புகள் அறிமுகம் செய்யப்பட்டு அதனூடாக அவ தானம், புலக்காட்சி, ஞாபகம், கற்றல் இடமாற்றம் ஆகிய அறிவுசார் செயல்கள் இலகுபடுத்தப்பட்டுள்ளன. இது கல்வி உளவியலில் அறிவுசார் செயல் முறையாக அமைகின்றது.

## உசாத்துணை நூல்கள்.


*01.* சின்னத்தம்பி.க., *(2011)*, அறிகைத் தொழிற்பாடுகளும் ஆசிரியரும், சேமமடு பதிப்பகம்,
பக்.*10 - 68*

*02.* சந்திரசேகரன்.சோ., ஒக்டோபர் 2010, அறிவுமைய சமூகத்தின் அறிவின் பண்பலகுகள்,
பக். *6 - 8*

*03.* ஆறுமுகம்.வ., *(1989)*, வகுப்பறைக் கற்பித்தல், செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்.

*04.* முத்துலிங்கம்.ச., *(1980)*, கல்வி உளவியல், ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.

*05.* AGGARWAL.J.V., (2000), Essentials of Educational Psychology, Vikas Publishing House Pvt, New Delhi.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் தர விருத்தி



திரு.த.தயாபரன்
ஆசிரியர்,
Sp.Tr.d(Tamil)
யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்.

நிழல் அல்ல இது நிஜம்
மன்னிக்கவும் இது
தீவகத்தின் வலி ...!

வாலியையும் வைரமுத்துவையும்
வைத்தெழுதவில்லை - சத்தியமாய்
கண்ணதாசனையும் பட்டுக்கோட்டையையும்
துணைக்கு அழைக்கவில்லை- இது
என் இதயத்தின் ஒலி
தீவகத்தின் வலி!

இந்து மா சமுத்திரம்
இன்னும் தாலாட்டுகின்ற
இயற்கைத் தேசம் இது.
வங்கக் கடலலை - இன்றும்
வந்து முத்தமிடும்
தங்க முத்தமிடும்
தங்கப் பூமி இது....!

நொந்து போனவரையும் - வலி
தந்து போனவரையும் - தேடி
வந்து போனவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ வைத்த
தாய் மண் இது .....!

பண்போடு பணிவும்
கலையோடு கல்வியும்
மலையாக எழுந்த
நிலையான தேசம் இது ....!
இன்றோ...!
ஆக்கம் கொண்ட பூமி
தாக்கத்தோடு தவிக்கிறது.
ஏக்கம் கொண்டு நிற்கின்றது....!
சான்றோர் வெளியேற்றம்
சத்தியமாய் நடக்கிறது.
கற்றவர் பரம்பரை பக்குவமாய்
பண்ணை கடக்கிறது - இங்கே
தலையெடுத்தவர்- நகரத்தில் நல்ல
நாமத்தோடு வாழ்கிறார்.

ஊற்று நீரின்றி
ஊர்ந்துவரும் குழாய் நீருக்காய்
மாதக் கணக்கில்
மதவடியில் காத்து நிற்கின்றோம்.
இயற்கையும் எங்களை
இயன்றவரை சீண்டுகின்றது.
மின்சாரம் எங்களுக்கு
மின்மினிப் பூச்சிகள் தான்
போக்குவரத்தும் எங்களுக்குப்
போராட்டம் தான்!
கல்வியும் இங்கே
கனதியாய் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

நிலம் விட்டுப் புலம்பெயர்ந்தவர்கள்
நல்லூரான் கொடிக்கும்
நாகம்பாள் தேருக்கும்
இடையிடையேவந்து
தடம் வைத்துப் போகிறார்கள் .....!
நினைக்க நினைக்க
இரு விழிக்குள்ளே
கரு விழியும் கசிகிறது....!
தேற்றுவாரும் இல்லை  எமக்கு கைகொடுத்து
ஆற்றுவாரும் இல்லை.

உழைக்கும் கரங்கள் - ஒன்றாய்
இருக்கின்ற பூமி இது!
பூவரசம் வேலிகளும்
புழுதி திரண்டெழும்
குச்சொழுங்கைகளும் - இதோ
மாறத் தொடங்கின.
அடிவானில் சூரியன் - ஒளி
கொடுக்கத் தொடங்குகின்றான்
தென்றலும் எங்களைத்
தேடி வரத் தயாராகிறது .....!
தீவகத்தின் தீராத துயரம்
தீர்க்கமாய் இன்றோ நாளையோ
முடியத்தான் போகிறது - இங்கும்
விடியத்தான் போகிறது
விடியலை நோக்கி
நானும் ஒருவனாய்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வியில் எழுத்துப் பொறிமுறைகளின் சிக்கல்களும் தீர்வுகளும்



திருமதி.வத்ஸலா நிதாகரன்
SP.Tr.d(Primary),B.Ed,
யா/தம்பாட்டி அ.த.க வித்தியாலயம்

**அறிமுகம்:**

மனிதனின் இரு கண்கள் போன்றவை எண்ணும் எழுத்தும் ஆகும். இதை ஔவையார் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்கிறார். அவ்வாறே "எண் ணென்ப ஏனை யெழுத் தென்ப விவ் விரண்டும் கண்ணென்ப வாழும் முயிர்க்கு" என எண்ணையும் எழுத் தையும் பற்றி கூறப்படுகிறது. அதனைப் போல் மொழிக்கு எண் ணும், எழுத்தும் முக்கிய மாகிறது.

ஆரம்பக் கல்வியில் மொழி யில் மொழித்திறன்கள் நான்கு உள்ளன. கேட்டல், பேசுதல், வாசித் தல், எழுதுதல் என்பன அவையாகும். அவ்வாறே அடிப்படைத் தேர்ச்சிகள் 7 உள்ளன.

01. **தொடர்பாடல் தேர்ச்சி**

*1.1 எழுத்தறிவு:*

கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிந்து வாசித்தல், சரியாகவும் செம்மை யாகவும் எழுதுதல், பயன் தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

*1.2 எண்ணறிவு:*

பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன் படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

*1.3 சித்திர அறிவு:*

கோடுகள், உருவம் என்பன வற்றில் கருத்தை அறிதல், கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

*1.4 தகவல் தொழில் நுட்பத் தகைமை.*

கணினி அறிவு, தொடர் பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

02. **ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்.**
03. **சூழல் தொடர்பான தேர்ச்சிகள்.**
04. **வேலை உலகிற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்.**
05. **சமயமும் ஒழுக்கலாறும் தொடர்பான தேர்ச்சிகள்.**
06. **ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல். விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. **"கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்.**

என்பன ஆரம்பக் கல்வி மாண வர்களால் அடையப் பட வேண்டிய தேர்ச்சிகள் ஆகும்.

(ஆசிரியர் அறிவுரைப்பு வழி காட்டி தரம் 1 - 5 வரை பதிப்பு 2015)

இத் தேர்ச்சிகள் யாவும் ஆரம்பக் கல்வி மாணவர்களால் அடையப்பட வேண்டியது என்றா லும் ஏனைய தேர்ச்சிகளைஅடைய உதவுவது தொடர்பாடல் தேர்ச்சி யில் உள்ள எழுத்தறிவு ஆகும். எழுத் தறிவிலும் சரியாகவும், செம்மை யாகவும் எழுதுதல், எழுத்துப் பொறி முறையாக எழுதுதல், மிக மிக முக்கியமான ஒன்றாகும்.

ஆரம்பக் கல்வியைப் பொறு த்த மட்டில் எழுத்துப் பொறி முறை மிக மிக அவசியமான ஒன்றாகும். ஆரம்பக் கல்வியுடன் தொடர்பு டைய ஆசிரியர் என்ற வகையில் தினந்தோறும் மாணவர்களுடன் இடைவினை கொள்கின்றோம். இவ்வாறு இடைவினை கொள்ளும் போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அந்த வகையில் இன்றைய ஆரம்பக் கல்வி ஆசிரியர் மட்டும் அன்றி இடைநிலைக் கல்வி யிலும் பெரும் சவாலாக உள்ளமை "எழுத்துப் பொ றி முறைக்கு அமைவாக எழுதாமை" ஆகும்.

இப்பிரச்சினையானது மாண வர்களின் கற்றலை மாத்திரம் அன்றி, ஆசிரியரின் கற்பித்தலையும் பாதிப்ப டையச் செய்கின்றது. அது மட்டும் அல்லாது இடைநிலைக் கல்வி, உயர் கல்வியிலும் பெறுபேற்றில் தாக்கத் தை ஏற்படுத்துகின்றது. பாடசாலை யின் கல்வி அளவிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆரம்பக் கல்வி யில் எழுத்துப் பொறி முறையில் கவனம் செலுத்தினால் இடைநிலைக் கல்வியில் நல்ல பெறு பேற்றை அடைய முடியும்.

"முனைவர் இரத்தின் சபாவதி" எழுதுதல் திறன் எழுத்துத் திறனி லிருந்து மாறுபட்டதாகும் எனக் குறிப்பிடுகின்றார். மொழியைக் கற் கும் போது அதில் உள்ள எழுத்துக் களையும், சொற்களையும், வாக்கியங் களையும் முறையாக எழுதும் போது அளவிலேனும் எழுதுதல் திறன் நிறைவடைகிறது இது "பொறிமுறை திறன்" என்று குறிப்பிட்டுள்ளன.

மொழித் திறனில் எழுத்து முக்கியம். மொழிக்கு உள்ள சிறப்புக் கெல்லாம் காரணம் அதற்கு அமைந் துள்ள எழுத்தும், எழுத்து வடிவமும் ஆகும். பேசுவதை விட எழுதும் போது விழிப்புடன் இருக்க வேண் டும். " கற்றதைக் கசடற" எழுத வேண் டும். அது தான் "தேவ கலை" என எழுதுவதை "பிளேட்டோ" கூறியு ள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி மனிதனின் சிந்தனை, உணர்ச்சிகளின் வெளிப்பாட்டு ஊடகம். ஒவ்வொரு மனிதனின் அறிவை வளர்ப்பது கல்வி. மொழிப் பயன்பாடு இல்லாத நாட்களே இல்லை எனக் கூறலாம். மொழித் திறன் நன்கு இருந்த போதிலும் பரீட்சையில் தனது அடைவைக் காட்டப் பயன்படுவது எழுத்துத் திறன் ஆகும். எழுதும் போது பொறி முறைக்கு அமைவாக உறுப்பமை வாக எழுதுதல் வேண்டும்.

மனிதனின் எழுத்துப் பயிற்சி ஏடு தொடக்கத்துடன் ஆரம்ப மாகிறது. முன்பள்ளி முறையான பாடசாலைக் கல்வி மூலம் எழுதும் ஆற்றலைப் பெறுகின்றான். ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தங்களிடம் வரும் மாணவர்களின் எழுத்துத்திறன் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். இதன் மூலம் எழுத்துத் திறன் சார்ந்த பிரச்சினை களை நிவர்த்தி செய்வதோடு இடை நிலையிலும் எழுத்துத் திறனை வளர்த்து பரீட்சையில் உயர் புள்ளி கள் பெற உறுதுணையாக அமையும்.

ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சி னையாக அமைவது " எழுத்துக் களைப் பொறிமுறையாக எழுதுதா மை" ஆகும். இப்பிரச்சினைகளா வன:

1. பொறிமுறையாக எழுதாமை.

க ப ம ர ழ - சரியான வடிவம்

க ப ம ர ழ - பிழையான வடிவம்

2. ஒற்றைக் கொம்பு , இரட்டைக்கொம்பு சரியான முறையில் எழுதாமை.

கொக்கு - சரியான வடிவம்

கொக்கு - பிழையான வடிவம்

3. கோட்டில் எழுதாமை.

படம் - சரியான வடிவம்

படம் - பிழையான வடிவம்

4. சொற்களுக்கு வாக்கியங்களுக்கு இடைவெளி விட்டு எழுதாமை.

பசு பால் தரும் என்பதனை

பசுபால்தரும் என எழுதுதல்

5. உயிர்க்குறிகளை அனுசரித்து எழுதாமை.

பு, து, நூ, கை, பெ, மோ எனும் எழுத்துக்களை

பு ,து நூ, கை, பெ, மோ என ஒரே மாதிரி எழுதுதல.

6. நிறுத்தற் குறிகளை அனுசரித்து எழுதாமை.

1) கிளி பழம் தின்னும்
2) உமது பெயர் என்ன
3) மாமா புத்தகம் பென்சில் வாங்கித் தந்தார்
4) ஆகா எவ்வளவு பெரிய பூங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. எழுத்துக்கள் தொடங்கும்.முடியும் இடம் தெரியாமல் ஒரே மாதிரி எழுதுகின்றமை.**

1) இடது பக்கம் தொடங்கி வலமாக செல்லும் எழுத்துக்கள்




2) இடது பக்கம் தொடங்கி இடமாகச் செல்பவை

1. இடது பக்கம் கீழ்ப்பகுதியில் தொடங்கும் எழுத்துக்கள்



2. இடது பக்கம் நடுப் பகுதியில் தொடங்கும் எழுத்துக்கள்

**க ,ச, த**

3. சுழியுடன் தொடங்கும் எழுத்துக்கள்

**ள , ண, ன, வ, ல, எ,**

**ஏ, ஞ**

இவ் எழுத்துக்கள் எல்லா வற்றையும் ஒரே வடிவில் ஒரே அள வில் எழுதுகின்றமை பிரச்சினை களாக உள்ளன. இப்பிரச்சினை களுக்கு, சிக்கலுக்கு காரணமாக பல காரணங்கள் உண்டு.

1) போதியளவு தசைநார் பயிற்சி இன்மை.

- ◆ வெட்டுதல்
- ◆ கீறுதல்
- ◆ கோட்டிற்குள் நிறம் தீட்டுதல்
- ◆ வரைதல்
- ◆ புள்ளிகளை இணைத்துக் கீறுதல்.
- ◆ களிமண் கிளே பிசைதல்.
- ◆ மணலில் எழுதுதல் போன்ற பயிற்சி இன்மை.

2) எழுது கோல் பிடிக்கும் முறை சரியானத் தெரியாமை.

- ◆ எழுது கூரிலிருந்து சில சென்ரி மீற்றர் தூரத்தில் பென்சிலின் மேற்பக்கத்தில் சுட்டு விரல் தரித்திருத்தல்.
- ◆ பென்சிலின் கீழ்ப்பக்கத்தில் தொடும் விரல்களிடமிருந்து நடுவிரல் மறைந்திருத்தல்.
- ◆ பென்சிலின் முன்பக்கத்தில் பெருவிரலில் சுட்டு விரலைத் தொடுதல் போன்ற பயிற்சி இன்மை.

3) முன்னாயத்தப் பயிற்சி இன்மை. வட்டம் , வளைவு, கோடு கீறுதல், புள்ளிகளை இணை த்தல், நிறம் தீட்டல் போன்ற பயிற்சி இன்மை.

4) எழுத்துப் பொறிமுறையை அனுசரித்து எழுதாமை. எழுதும் போது அளவு, அமைப்பு, திசைமுகம்,உறுப்பு ஆகியவற்றை அனுசரித்து எழுதாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) உயிர்க்குறிகளை அனுசரித்து எழுதாமையும் விளக்கம் இன்மையும்.

அரவு, விசிறி, விசிறியும் சுழியும் ஒற்றைக்கொம்பு, இரட்டைக் கொம்பு, சங்கிலிக் கொம்பு, ஒற்றைக் கொம்பும் அரவும், இரட்டைக் கொம்பும் அரவும்,கீழ்க் கால், கீழ் காலும் சுழியும், மடக்கேறு, மடக் கேறும் அரவும் போன்ற எழுத்துக் களை தனித்து பிரித்து எழுதுதல்.

உ+ம்: ட ா - தவறானது

மோ - சரியாது

ே ம ா - பிழையாக எழுதுதல்.

6) தொடர்ச்சியாக ஓர் ஆசிரியரின் வழிகாட்டல் இன்மை.

ஆசிரியர் இடமாற்றம், சுற்றல் விடுமுறை, பயிற்சி கலாசாலை போன்றவற்றால் ஆசிரியர்கள் செல் கின்றமை.

7) பயிற்றப்படாத ஆசிரியர்களி னால் கற்பிக்கப்படல்.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்த மட்டில் முதன்மைநிலை 1ல் பயிற்றப் பட்ட ஆசிரியர்களினால் கற்பிக்கப் பட வேண்டும். ஆனால் ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியர் இன்மை காரணங்களினால் பொருத்தமான துறைசார்ந்த ஆசிரியர்களின் வழி காட்டல் இன்மையும் இதற்கான காரணங்களாக அமைகின்றன.

இப் பிரச்சினைகள், காரணங் களை நோக்கும் போது இவற்றைத் தீர்ப்பதற்குச் சரியான தீர்வு காண்பது ஆசிரியர்களாகிய எமது கடமை யாகும். அந்த வகையில் எனக்கு மட்டும் அன்றி ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கும் மிகவும் பயனு ள்ளதாக அமைவது கல்வியாளர் களினதும் அறிஞர்களினதும் கருத் துக்களும், அனுபவமும், அவர்கள் கூறிய விடயங்களும் ஆகும்.

## தீர்வுகள்

**I) பொறி முறையாக எழுத வழிப் படுத்தல்.**

அமைப்பு, அளவு, திசைமுகம், உறுப்பு ஆகியவற்றை அனுசரித்து எழுத வழிப்படுத்தல், தொடர்பயிற்சி வழங்குதல். இதற்குத் தசைநார் பயிற்சி மிக மிக முக்கியமாகும். எழுதுவதற்கான முன்னாயத்தப் பயிற்சிகள் வழங்குவதன் மூலம் எழுத்துக்களைப் பொறிமுறையாக எழுத வழிப்படுத் தலாம்.

1. களிமண், கிளே பிசைதல்.
2. புள்ளிக்கோட்டில் எழுதுதல்.
3. வெட்டுதல்.
4. எல்லைக்குள் நிறம் தீட்டல்.
5. புள்ளிகளை இணைத்து எழுது தல், ஆகியவற்றுடன் மணலின் மேல் திரும்பத் திரும்ப எழுது வதன் மூலம் பொறிமுறையாக எழுத வழிப்படுத்தலாம்.

(ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி கள், முதன்மை நிலை 1,2:2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2) எழுத்துக்களை எழுதும் முறையை அறிந்து அதன்படி பயிற்சி வழங்குதல்.**

இதற்கு எனக்கு உறுதுணையாக இருந்தது கலாநிதி S. இராமமூர்த்தி எழுதிய "தமிழ் எழுத்துக்களின் ஒரு மதிப்பீடு" எனும் கட்டுரையில் எழுத்துக்களை எழுதும் முறை பற்றி கூறுவதுடன்,எழுதுதல் திறனை வளர்ப்பதற்கு எழுத்துக்களை அறிமுகப்படுத்தும் முறையும் மிகவும் முக்கியமானதாகும். எழுத்துக்களில் அமைப்புமுறை மற்றும் கொள்கைப் படி எவ்வாறு அமைய வேண்டும் என்றும் தனது கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

("அகவிழி" நவம்பர் 2006 பக்கம் 19 -20)

எழுத்தை அறிமுகம் செய்யும் போது முதலில் எளிய வடிவில் இருந்து கடினம் வரை அறிமுகப் படுத்த வேண்டும். மெய் எழுத்துகளில் பின் உயிர் எழுத்துக்களை அறிமுகப்படுத்தும் போது பிள்ளைகள் இலகுவில் எழுதும் திறனை பெறுவார் என்கிறார். தமிழ் எழுத்துக்களை எழுதும் முறை பற்றி பின்வருமாறு விபரித்துள்ளர்ர.

**1) இடப்பக்கம் தொடங்கி வலமாகச் செல்லும் எழுத்துக்கள்**

உ+ம்: ட ப ம ய ழ

**2) இடது பக்கம் தொடங்கி இடமாகச் செல்பவை.**

1. இடது பக்கம் கீழ்ப்பக்கம் தொடங்கும் எழுத்துக்கள்
   உ+ம்: ா, ர, ஈ, ந, ங, ற
2. இடது பக்கம் நடுவில் தொடங்கும் எழுத்துக்கள்
   உ+ம்: க, ச, த
3. சுழியுடன் தொடங்கும் எழுத்துக்கள்
   உ+ம்: ள, ன, ண, வ,ல,எ,ஏ,ஞ
4. இடது பக்கம் மேல் பகுதியில் தொடங்குபவை
   உ+ம்: உ, ஊ, ஐ, ஒ, ஓ, ஔ
5. மேற்பகுதியின் நடுவில் தொடங்குபவை
   உ+ம்: அ, ஆ, இ

என எழுதும் முறையைக் குறிப்பிட்டுள்ளதோடு புதிய அணுகு முறையின் கீழ்க்காணும் வரிசை முறையில் 19 பாடங்களாகப் பிரித்து கற்பிப்பதன் மூலம் எழுத்துப் பொறிமுறையாக எழுதுவதில் உள்ள இடர்பாட்டை நீக்கலாம் எனவும் கூறியுள்ளார்.

1. ட, ப, ம
2. ா, ர
3. ழ
4. ய
5. ச, க, த
6. ந, ங
7. ல, வ
8. ள, ன, ண
9. ஞ
10. ந
11. அ, ஆ
12. இ, ஈ
13. எ,ஏ
14. ஐ
15. ஒ, ஓ
16. ஔ
17. உ
18. ஊ
19. கிரந்த எழுத்துகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைப் பின்பற்றி மாணவர்களுக்கு பயிற்சி கொடுப்பதன் மூலம் எழுத்துத்திறன், எழுத்தாற்றல் திறன், எழுத்துக்களைப் பொறிமுறையாக எழுதும் திறன்களை மாணவர்களிடம் வளர்க்கலாம்.

3) **எழுதும் போது அளவு, அமைப்பு, திசைமுகம், உறுப்பு, நேர்த்தி, முழுமை, என்பவற்றை அனுசரித்து எழுத வழிப்படுத்தல்.**


- தனி எழுத்துக்கள்
  ப, ம, ட, வ, ய, க, ந.................
- உயிர்குறியுடன் கூடிய எழுத்துக்கள்
  கா, பி, ம, கெ, வே, தை, பொ, மோ
  சு, சூ, நு, தூ
- தமிழ் நெடுங்கணக்கின் தொடர் ஒழுங்கில் உள்ள எழுத்துக்கள்
  க, கா, கி, கீ.................

போன்றவற்றை அறிமுகப்படுத்தி எழுத்துக்களை எழுத வழிப்படுத்தல் பயிற்சி வழங்குதல்.

(2008 ஆய்வுக்கட்டுரை எழுத்துத் திறனை மேம்படுத்தல் S.ராஜினி)

4) **சொற்கள்,தொடர்கள், வாக்கியங்கள் எழுத வழிப்படுத்தல்.**

- படம் பார்த்து பெயரை எழுதுதல்.
  உ - ம் -  கண்
- இடைவெளி நிரப்பி எழுதுதல்.
  உ -ம்: மரம் ம........ம்
- சொல்வதெழுதுதல்.
- பார்த்து எழுதுதல்.
- சொற்கள் ஆக்கி எழுதுதல்.




1. ஆடு

- சிறு வாக்கியம் எழுதுதல்.
  உ+ம்: பூனை எலி பிடிக்கும்.
  பசு புல் மேயும்.
- நிறுத்தற் குறிகளை அனுசரித்து எழுதுதல்.
  உ+ம்:
  1. கோழி முட்டை இடும்.
  2. உமது பெயர் என்ன?
  3. சந்தையில் மாம்பழம், வாழைப் பழம், பலாப்பழம், வாங்கினேன்.
  4. ஆகா! எவ்வளவு பெரிய மரம்
- எழுவாய், பயனிலை, செயற்படு பொருள் அமைய எழுதுதல்.
  உ+ம்:
  1. கண்ணன் படம் பார்த்தான்.
  2. ராதா பாட்டுப் பாடினாள்.

போன்ற பயிற்சிகளை வழங்குவதன் மூலம் மாணவர்களை வழிப்படுத்தலாம்.

5) **சொற்கள், வாக்கியங்களுக்கு இடைவெளி விட்டு எழுதுதல்.**

சொற்கள், வாக்கியங்கள் எழுதும் போது பின்வரும் விடயங்களை கவனத்தில் கொண்டு வழிப்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உறுப்பமைவாக எழுதுதல்.
- சமச்சீராக எழுதுதல்.
- தூய்மையாக எழுதுதல்.
- எழுத்துக்களிடையே சொற் களிடையே சமஅளவான இடைவெளி விட்டு எழுதுதல்.
- கோட்டில் எழுதுதல்.
- கோட்டின் கீழ், மேல் எழுதல்.
- எழுத்துப் பிழை இன்றி எழுதுதல்.

போன்றவற்றைக் கவனிப்ப துடன் இடைவெளிவிட்டு எழுது வதற்குப் பயிற்சி அவசியம்.

(எழுத்துப் பிழைகள், சொல், இடைவெளி நுட்பங்களும் தேசிய கல்வி நிறுவனம்)

ஒவ்வொரு சொல்லையும் எழுதியவுடன் உன் கைவிரலினா லோ அல்லது எழுத கோலினாலோ இடைவெளியை கணக்கிட்டு எழுத வழிப்படுத்தினால் நாளடைவில் தாமாகவே கண்ணளவில் வாக்கிய ங்கள் எழுதும் போது சரியான இடை வெளிவிட்டு எழுதுவார். இதற்கு ஆசிரியர்களின் உதவி மிக மிக அவசியம்.

இத்தகைய முறைகளை ஆரம் பக்கல்வி ஆசிரியர்கள் கைக் கொண் டால் ஆரம்பக் கல்வியில் எழுத்துப் பொறிமுறையில் எழுதுவதில் உள்ள சிக்கல்களை நாளடைவில் குறைத் துக் கொள்வதுடன் மாணவர்களின் கற்றலிலும் ஆர்வத்தை ஏற்படுத்தும் புலமைப் பரீட்சையிலும் எல்லா மாணவர்களும் சித்தியை அடைய முடியும். அதுமட்டுல்லாது ஆரம்பக் கல்வியில் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்களின் வீதமும் படிப்படி யாக குறையும்.

கல்வியாளர்கள், மொழியிய லாளர்கள், ஆய்வாளர்கள், சஞ்சிகை கள் மூலம் எழுத்துப் பொறிமுறை யாக எழுதுதல் தொடர்பாக பல பரிமாணக் கருத்துக்களை முன் வைத்து இருக்கின்றார்கள். எழுத்து, அதன் அமைப்பு, நேர்த்தி, அளவு, உறுப்பு, முழுமை என்பவற்றோடு எழுத்தினை எழுதும் முறை இலகு வில் இருந்து கடினம் வரை எழுத்துக் களை எழுதும் முறை அவை தொடங் கும் முடியும் இடம் பற்றி எடுத்துக் கூறிய முறை, எழுத்தமைப்பு, எழுத்தை எழுதும் முறை, அறிமுகப் படுத்தும் வகை எழுத்தாக்கம் என் பன பாடங்கள் ஊடாக ஊட்டிச் செல்வதன் மூலம் இவற்றைச் சரி யான முறையில் கைக்கொண்டு எழுத்தாற்றலையும், எழுதும் திறமை யும் உயர்த்தலாம். வழிகாட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்:

1. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 01 - 05 வரை தேசிய கல்வி நிறுவகம், மகரகம.
2. எழுத்துக் பிழைகள் சொல் இடைவெளி, நுட்பங்களும் தேசிய கல்வி நிறுவகம், மகரகம, தொலைக்கல்வி.
3. பூ வண்ணன், தீ .,(1992) மொழித்திறன் சென்னை, வர்த்தமாலை பதிப்பகம்.
4. தணிகாசம்பிள்ளை, நா. ஆரம்பக்கல்வி
5. S. இராமமூர்த்தி,(நவம்பர் 2006) தமிழ் எழுத்துக்கள் ஒரு மதிப்பீடு பற்றிய கட்டுரை, அகவிழி, பக். 18 -22
6) ந.பார்த்தீபன் (ஏப்ரல் 2008), எழுத்துத் திறனும் எழுதுதல் செயலொழுங்கும் பற்றிய கட்டுரை, அகவிழி, பக். 13 - 16
7) வாசிப்போம் எழுதுவோம் இலங்கை ஆரம்பக்கல்வி அபிவிருத்திப் பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பொது நூலகமும் அதன் சேவையும்

திருமதி.யா.வசந்தகுமாரன்
ஆசிரியர்,
யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்.

'நூல் நிலையமே அக் காலத்தில் உண்மையான பல்கலைக்கழகம்" என்ற தாமஸ் கார்லைலின் கூற்றுக்கிணங்க யாழ்ப்பாணப் பொது நூலகம் வரலாற்று மணம் வீசிக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் மட்டுமன்றி ஆங்காங்கே ஆசியா முழுவதும் பல நூலகங்கள் தோன்றக் காரணமாக அமைந்த யாழ். நூலகத்தின் கிளைகள் சோலையாக நாட்டைச் செழிப்படையச் செய்துள்ளது.

அந்த ரீதியில் யாழ்ப்பாணத்தின் நூலகத்தின் வரலாற்று உண்மைகளும், சிறப்பும், அமைப்பும் கல்விக்கு நூலகம் ஆற்றும் சேவையும் இலங்கையின் அதிசயிக்கத் தக்க சான்றுகளுக்கு எடுத்துக் காட்டுக் களாகும்.

அந்த வகையிலே,

**"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்**
**மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்**
**மன்னற்குத் தன் தேசமெல்லால்சிறப்பில்லை**
**கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம்**
சிறப்பு.

எனும் ஔவையாரின் மூதுரைக்கு இணங்க கற்றவனின் பெருமையும், கல்வியின் மகிமையும் உலகில் யாவரும் அறிவர். வெள்ளத் தால் அழிக்கவோ வெந்தணலினால் வேக வைக்கவோ திருடர்களால் களவாடவோ முடியாதது. ஒருவர் பெற்ற கல்வி அத்தகைய சிறப்பும், மகிமையும், பயனும், உறுதியும் தருவது கல்வி. இத்தகைய இயல்புடைய கல்வியை வழங்குவது நூலகங்களே!

பூமிப் பந்திலே இந்து சமுத்திரத்தின் மத்தியிலே முத்தென விளங்கும் இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண மண்ணிலே மண்ணின் பெருமையும், நாட்டின் பண்பாட்டையும் வெளிப்படுத்தி வருவதாகவும் ஆசியாவின் ஆச்சரியமாகவும் அருமையான பல்லாயிரம் நூல்களைத் தன்னகத்தே கொண்டதாகவும் யாழ்ப்பாணப் பொது நூலகம் திகழ்ந்தமை மிகையில்லை.

அந்த வகையிலே யாழ்ப்பாணத்தின் தற்போதைய அமைவிடமானது பலரது கவனத்தையும் வடபகுதியின்பால் திசை திரும்பி உள்ளது. கத்தும் கடலலை ஓசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன் மரக்கிளைகளின் அசைவின் கீதமும் ஒருங்கு சேர வனப்பு மிக்க பிரமாண்டமான தோற்றத்தோடு காட்சி தருவது இன்றைய யாழ்ப் பாணப் பொது நூலகம்.

இதன் வரலாற்றையும் தோற் றுவாயையும் நோக்கின், நூலகத்தின் உருவாக்கமானது அதாவது இதன் கரு கே. எம். செல்லப்பா எனும் ஆர்வலரொருவரால் உருவாக்கப் பட்டது. 11.11.1933ஆம் ஆண்டில் தனது வீட்டில் சில நூல்களுடன் இவர் நடத்தி வந்த நூல் நிலையமே இது.

தொடர்ந்து உள்ளூர் தமிழ் மக்களின் முழு ஆதரவுடன் பலரும் பயன்படுத்தும் நோக்கில் செல்லப் பா அவர்களும் வேறு சில பிரமுகர் களும் இணைந்து சிறு பறவை தன் கூட்டினைக் கட்டுவதற்காகக் காடு கள், மேடுகள் எல்லாம் சென்று சேகரித்த சிறிய சிறிய குச்சிகளையும், தும்புக ளையும் கொண்டு அழகிய கூட்டி னை உருவாக்குவது போல உருவாக் கினர்.

இவ்வாறே வடபகுதியின் பல இடங்களிலும் தனிப்பட்டவர் களிடம் இருந்து வந்த பல நூல்கள் குறிப்பாக நூற்றாண்டுகள் பழமை யான ஓலைச் சுவடிகள், 1800 களில் யாழ்ப்பாணத்திலே வெளியிடப் பட்ட பல பத்திரிகைககளின் மூலப் பிரதிகள் போன்றவை யாழ்ப்பாண நூலகத்தில் வைக்கப்பட்டு இருந்தது. சிறு துளி பெரு வெள்ளமாக சேகரிக் கப்பட்டது.

இந்த நூல் நிலையத்தை யாழ் நகரின் மத்தியில் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இதற்கென வாடகைக்குப் பெறப்பட்ட ஒரு சிறிய அறை யொன் றுக்கு மாற்றினர். இதன் வளர்ச்சிக் கட்டத்தில் 1936ஆம் ஆண்டுக்குப் பின்னர் நூலகத்தின் பராமரிப்பு விட யங்கள் யாவும் யாழ்.நகர சபையி டம் கையளிக்கப்பட்டு, யாழ். கோட் டைக்கு அருகே புதிதாக கட்டப் பட்ட நகர மண்டபத்திற்கு அண்மை யில் உள்ள இடமொன்றிற்கு மாற்றப் பட்டது.

தொடர்ந்து யாழ்ப்பாணம் மாநகரசபை அந்தஸ்துக்கு தரமுயர் த்தப்பட்டு புதிய சபை பதவி யேற்ற பின் இந்த நூலகத்திற்கான புதிய கட்டடமொன்றைக் கட்டும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. பல் வேறு வழிகள் மூலம் வடபகுதியில் நிதியைத் திரட்ட எடுத்த முயற்சிகள் யாவும் பெரு வெற்றிகள் பெற்றதாக வே சொல்லப்படுகின்றது. நிறுவனத் திற்கான அடிப்படைகளை தீர்மானி த்து வழிநடாத்தும் நோக்கில் அக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த பல கல்வியாளர்களையும், பிரமுகர்க ளையும் உள்ளடங்கிய குழு வொன்று 1953ஆம் ஆண்டில் அமைக்கப்பட் டது. இக்குழு இது தொடர்பில் இந்திய நிபுணர்களினதும் உதவி களைப் பெற்றுக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கான கட்டிடத்தை வடிவமைக்கும் பணியும் இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த கட்டிடக் கலைஞர் நரசிம்மனிடம் ஒப்படைக்கப்பட்டது. திராவிடக் கட்டிடக் கலைப் பாணியைத் தழுவி இரண்டு தளங்கள் கொண்ட அழகிய கட்டிடமொன்றையே இவர் வடிவமைத்தார்.

மேலும் இக்கட்டிடத்தை இரண்டு கட்டங்களில் கட்டிமுடிக்க தீர்மானித்து முதற் கட்டமாக கட்டிடத்தின் முன் பகுதிக்கான அடிக்கல் 1953 மார்ச் மாதத்தில் நாட்டப்பட்டது. கட்டிட வேலைகள் தாமதமாகவே நடைபெற்றதாகக் கூறப்பட்டது.

இந்த வகையிலே 1959ஆம் ஆண்டு தென்கிழக்கு ஆசியாவின் ஆச்சரியத்தின் வெளிப்பாடாகவும் இலங்கைக் கல்விச் சமூகத்தின் கண்ணாகவும் முதலாவது நூலகம் சூரியப் பிரகாசம் கொண்ட உலகமாகத் திறந்து வைக்கப்பட்டமை வரலாற்றுச் சிறப் பம்சமாகும்.

இந் நூலகமானது கல்விச் சமூகத்தின் கோயிலாகவும் அங்கிருக்கும் புத்தகங்கள் கடவுள்களாகவும் காட்சி அளித்ததோடு, ஆசியாவின் கல்வி வாசல்களின் திறவுகோலாகவும் தமிழ்ப் பண்பாட்டின் சிகரமாகவும் திகழ்ந்தது.

தென் கிழக்கு ஆசியாவிலே அதி முக்கியமான முதலிடத்தைப் பெறும் நூலகமாகத் திகழ்ந்த போதும் ஆசியாவிலே ஆச்சரியமாகவும், இலங்கையினை ஆசியாவின் ஆச்சரியம் மிக்க நாடாக மாற்றுவதற்கு யாழ்ப்பாணப் பொது நூலகமும் அதன் வழி தொடர் நூலகங்களும் உறுதுணை புரிந்தமை குறிப்பிடத் தக்கது.

1981ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆசியாவில் மட்டுமன்றி உலகம் முழுவதும் அதிகமாகப் பேசப் பட்டது. 20ஆம் நூற்றாண்டுகளின் முப்பதுகளில் ஆரம்பத்தில் தொடங்கி பல ஆர்வலர்களினுடைய அயராத உழைப்பினாலும் பொது மக்களினதும் பல உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களினதும் தாராளமான ஆதரவினாலும் வளர்ச்சி பெற்றிருந்த இந்த நிறுவனம் அதன் அரை நூற்றாண்டு நிறைவை அண்மித்துக் கொண்டிருந்த போது 1981ஆம் மே மாதம் 31ஆம் திகதி எரிக்கப் பட்டது.

இன்று இதன் கட்டிடம் மீளமைக்கப்பட்டு புதிய நூல்கள் சேர்க்கப்பட்டுள்ளது. எரிந்து போன பல நூல்கள் கையெழுத்துப் பிரதிகள், வேறு பல ஆவணங்கள் பலவும் திரும்பப் பெற முடியாத நிலையை நினைக்கும் போதெல்லாம் மீண்டும் மீண்டும் வருத்தத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறது.

இந்நிலையில் கூட மீண்டும் உயிர் பெற்றமையானது உலக வரலாற்றையே இலங்கை நோக்கி நகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்திச் செல்வதில் யாழ்.பொது நூலக மும் இடம் பிடித்தது. வானுயர ஓங்கி நிமிர்ந்து நிற்கின்றது. "உள்ளது இல்லது ஆகாது" என்ற தத்துவத் தைச் சுட்டி நிற்கின்றது.

இந்த வகையிலே நூலகப் பயன்பாடும் அதன் பணியும் ஒரு நாட்டின் வளர்ச்சியைத் தீர்மானிப் பதில் கவனம் செலுத்தும் மூல கார ணியாகும். கல்வித்துறை சிறந்து விளங்கும் நிலை ஏற்படுவதாயின் "ஒவ்வோர் ஊரிலும் நூல் நிலையம் மிகச் சிறந்த கட்டிடமாக விளங்குதல் வேண்டும். நூல் நிலையக் காப்பாளர் பேரறிஞர்களாக மக்களிடையே பெருமதிப்பு உள்ளவர்களாக விளங் குதல் வேண்டும்." என்ற டாக்டர் மு.வரதராசனாரின் கூற்றிலிருந்து நாம் உணர்வது என்னவென்றால், யாழ்.பொது நூலகம் பரப்பிய கிளை ஆசியா எங்கும் பூக்களை மலரச் செய்து மணம் வீசியபடி விளங்கு கின்றது. இதனால் தான் ஆசியாவின் கல்வி நிலையும் வளர்ச்சி கண்டு வரு கிறது என்பதற்கு அப்பால், இந் நூலகம் அமைந்துள்ள இலங்கை யும், வட பகுதி வாழ் மக்களும், நூலகப் பயன்பாட்டின் அவசியத் தை உணர்ந்து செயற்பட்டமையும், இலங்கையின் இலவச பாட நூல் அறிமுகமும் யாழ்.நூலகத்தின் கிளை கள் என்றால் மிகையில்லை.

இன்னும் ஆசியாவில் அல்லாமலும் ஏனைய கண்டங்களிலும் கூடக் காண முடியாத பல வரலாற்று உண்மை கூறும் புத்தகங்களை யாழ். பொது நூலகம் 1981ஆம் ஆண்டி ற்கு முன்னர் பெற்றிருந்தது. எரித்த சாம்பலில் இருந்து உயிர் பெறும் பீனிக்ஸ் பறவை போல் வானளாவ உயர்ந்து, அழகு மிளிரும் கல்விக் கிரீடமாக அஞ்ஞானம் ஆசானாக ஆசியாவிலே அதிசயமிக்கதான தனது இருப்பைப் பறை சாற்றிக் கொண்டது.

யாழ்.பொது நூலகத்தின் நூல்கள் பல மனிதர்களின் காதுகளில் பின்வருமாறு கூறிக் கொள்கின்றன. "ஜனனங்களும் மரணங்களும் ஒரு சேரப் பதிவு செய்யப்படும். வரலாறு களின் பதிவுச் சுரங்கம் நான், எழுத் துத் தான் எனது மொழி, இருப்பி னும், எழுதுபவனுக்கே சுதந்திரம், சில வேளை நான் அலுமாரிகளில் உறங்கினாலும், பல வேளைகளில் பாதை ஓரங்களில் புழுதிக் காற்றில் புரண்டு, புரண்டு உருண்டாலும் மனித விதியை மாற்றியமைக்கும் மந்திர சக்தியை ஒரு போதும் இழந்த தில்லை. எத்தனையோ மகான்கள் என்னிலிருந்து பிறந்திருக்கின்றனர். கம்பனும் வள்ளுவனும் கவிக்காளி தாசனும் இங்கே உருவாக்கம்பெற என்னை வாசி. வாசித்துக் கொண்டே இரு" என்று தான் இயம்புகின்றன.

நூல்கள் ஒவ்வொன்றும் தனி த்தன்மை இழக்காதவை. "புத்தக மூலம் நீங்கள் பிறரை அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களையும் அறியலாம்." என்ற எட்வேட் பிரேக்கரின் கூற்றை ஒவ் வொருவரும் மனதிலிருத்தி வாயுற வாழ்த்த வேண் டியவையே.

மேலும் புத்தகங்களுக்கும் நூலகத்திற்கும் "ஏன் இந்த பெருமை" சாகாவரம் பெற்ற நல்ல நூல்களைக் கொண்ட நம்முடைய பலம் மற்றும் பலவீனங்களை அறிய முடியும். நல்ல புத்தகங்களைப் படிப்பது நூற்றா ண்டுகளில் வாழ்ந்த மிகச் சிறந்த அறிவாளிகளுடன் பேசுவதற்கு ஒப்பாகும்.

புத்தகங்கள் எப்போதும் மனி தனை நல்வழிப் படுத்திக் கொண்டே இருக்கும். ஓய்வில்லாமல் எந்நேர மும் அறிவுச் சுரங்கத்தை மனிதனுக் குக் கொடுத்துக் கொண்டே இருக் கும். மனிதனை சட்டங் களாலும் நீதி மன்றங்களாலும் திருத்த முடியாது. ஆனால் நல்ல நூல்களாலும் நூல கங்களாலும் திருத்த முடியும் என்ப து உளவியல் உண்மை.

அந்த வகையில் புத்தகங் களின் மகிமையை அறிந்த பண் பட்டாளர்கள், கல்வி மான்கள் ஏன்? சாதாரண மக்களும் கூட புனிதமாக மதித்த சமூகமாகவே வாழ்ந்து வருகி ன்றனர். அன்றும், இன்றும் இதற்கு உதாரணமாக 1981ஆம் ஆண்டு பிரசித்தி பெற்ற பல நூல்கள் எரிந்து சாம்பலானதைக் கேள்வியுற்ற அந்த நிமிடமே தாவீது அடிகளார் இதய அமுக்கத்தால் இறந்த செய்தி உலக மெங்கும் வாழும் கல்விச் சமுதாயத் தையே உலுப்பி விட்டது என்றால் மிகை யில்லை.

இவருடைய மறைவானது எமக்கு எதைச் சொல்கிறது. "நூல் நிலையம் இல்லாத நாடு உயிரில்லாத உடலுக்குச் சமனானது" என்ற வரிகள் என்றும் நினைவு கூறத் தக்கவை.

இன்று சினிமா நிகழ்வுகளில் மாணவ சமுதாயக் காலத்தை போக் கிக் கொண்டு இருக்கிறது.

கனி இருக்க காய்கவர் வா னேன்? பகுதி பகுதியாகப் பல்லாயி ரம் நூல்கள் இங்கே காத்துக் கிடக் கின்றன.

ஒரு நூலகம் எரிக்கப்பட் டாலோ, அழிக்கப்பட்டாலோ பல சிறைச்சாலைகளுக்கு திறப்பு விழா எடுக்க வேண்டி ஏற்படும் என்பதை மறந்து விடக் கூடாது . நூல்களைப் படிக்கும் பழக்கத்தை வளர்த்து வரு வோமானால் ஒவ்வோர் வீட்டி லும் நூலகம் திகழும். இவை காலப் போக்கில் உலகத்தின் ஆச்சரியமாக ஆசியாக் கண்டமே திகழ்வதற்கு வழி சமைக்கும்.

வரலாற்று நூல்கள் பலவ ற்றை கற்பதால் ஒரு மனிதன் சரித் திரத்தில் தேர்ச்சி பெறுகின்றான். என்பது யதார்த்தம். ஆனால் இவற் றையெல்லாம் உணராதவர்கள் எம் மிடையே இருக்கத்தான் செய்கின் றனர். எல்லா மனிதரும் அன்பு நெறி யில் நின்று எல்லோரும் ஒரு தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் என்ற உணர்வில் நிற்பதற்கு வாழ்ந்த புலவர்களால் எழுதப்பட்ட நூல்கள் நூலகங்களில் வைக்கப்பட வேண்டும் என்று பாவேந்தர் பாரதி தாஸன் கூறு கின் றார். அதாவது,

**"மனித ரெலாம் அன்புநெறி காண்பதற்கும்**
**மனோபாவம் வானைப் போல விரிவடைந்து**
**தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்**
**சகமக்கள் ஒன்றெண்ப துணர்வதற்கும்**
**இனிதினிதாய் எழுந்த உயர்**
**-எண்ணமெல்லாம்**
**இலங்குவது புலவர்தரு சுவடிச்சாலை**
**புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்**
**புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்"**

என்ற பாடல் வரிகளுக் கேற்ப, ஒவ்வொருவரும் நினைத்து திடங்கொண்டு செயற்பட்டால் நூல் நிலையங்களால் எமது எதிர்கால இலங்கையே சுபீட்சத்தின் பாதை யில் வளர்ந்து செல்லும். கல்லாதவர் என்ற சொல்லையும், பாடசாலையில் இருந்து இடைவிலகிச் செல்வோரை யும் தடுத்து நம் நாட்டையே ஆசியா வின் ஆச்சரியம் மிக்க நாடாக மாற்றி அமைக்கலாம்.

இந்த வகையில் 1981ம் ஆண் டுமே மாதம் 31ம் திகதியிலிருந்து பலரது முயற்சியும் வீண் போகாத வாறு, ஆச்சரியமாகவும் திகழ் கின்ற மை குறிப்பிடத் தக்கது.

எமது இன்றைய சமுதாயத் திற்கு ஒரு நற்செய்தியை வழங்கலாம் என நினைக்கின்றேன். அதாவது நூல் நிலையத்திற்குள் பாம்பை நுழைய விட்டால் கூடப் பரவாயில்லை. நமது பண்பாட்டை, ஒழுக்கத்தை உணர் வைக் கெடுக்கின்ற நூல்களை நுழைய விடக் கூடாது என்பதே அந்த செய்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியப் பணி



**திருமதி.கமலவேணி நிரஞ்சித்**
ஆசிரியர்,
யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி.

ஆசு இரியர் மாசு துடைக்கும் மாண்பிலர் என்றார் முன் அறிஞர்
இன்று சொல்லெறிகள் கல்லெறிகள் சுமக்கும் சோர்வில்லா மானிடர்
கல்வி அமைச்சின் கடைசி அங்கத்துவன்
கலைத் திட்ட தத்துவத்தை கையேற்கும் பணியாளன்
பொறுப்புக்கள் பல சுமந்து பொறுமையுடன் நகரும் இவர் வாழ்வு.

கணிப்பீட்டுக் கலாசாரம் கதியே என வந்து நிற்கும்
மாதம் மும்மாரியாய் செயலமர்வு NIE வரை இழுத்துச் செல்லும்
பண்புத்தரச் சுட்டியுடன் படும் பாடு யார் அறிவார்?
இவற்றைக் குறிவைத்து மேற்பார்வைக் குழுவுடன் சட்டென வந்து நிற்கும் ZMP
அலகுப்பரீட்சையும், புள்ளிப்பகுப்பாய்வும் அமர்க்களப்படுத்தும்.

மீட்டல் வகுப்பும், மேலதிக கற்றலும் மூச்சு முட்டும்
இவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து நின்றாலும் முடிந்ததா?
போட்டிகள் யாவும் போட்டி போட்டு வந்து நிற்கும்
காலக் கெடுவைக் காரணம் காட்டி காரியம் சாதிக்கும்
இத்தனைக்கும் நடுவில் பாடத்திட்டத்தை பக்குவமாய் முடித்து

பகுப்பாய்வுப் படிவம் அனுப்பி வைத்து தலை நிமிரும் போது
வருடம் ஒன்று தானாய்க் கழிந்து விடும்.
சுதந்திரக் காற்று இங்கு துளியும் வர இடமில்லை.
ஆனாலும்..........ஆனாலும்
ஏற்ற பணியை இயன்றவை இனிதே முடித்திடும் ஆசிரியர்
ஏணியாய் தாம் இருந்து ஏற்றி வைக்கும் தீபம் அவர்
தாய்த் தொழிலாம் இத்தொழிலின் தனித்துவத்தைப் போற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நாட்டுப்புற இசை மரபு



திருமதி.ஜீவந்தனி லம்போதரன்
ஆசிரியர்,
B.F.A
யா/வேலணை மத்திய கல்லூரி

தமிழரது இசை மரபு என்று கூறும் போது அந்த மரபு எங்கிருந்து தொடங்குகின்றது எனில் நாட்டுப் புற இசையில் தான். நாட்டுப்புற இசையின் சிறப்பு என்னவெனில் உயிர்த்தன்மை கொண்டது. சாமா னிய கவிஞனால் கவிதை அமைத்து இசைப்படுத்தியது. மேலும் இவ் விசை மரபு ரீதியாகப் பேணிக் காக்கப்பட்டு வருகிறது. அத்தோடு கிராமிய சமூகத்தால் கையேற்கப் பட்டு வந்துள்ளது. நாட்டார் இசை யை Folk Music என்று ஆங்கிலத்தில் குறிப்பர்.

நாட்டார் இசை பற்றிப் பொது வாக நோக்குவோமாயின் நாட்டிற் குப் புறத்தே வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கையின் சமூகப் போராட்டங்களில் இருந்தும், சுற் றுப் புறசூழல் நிகழ்வுகளிலிருந்தும் மலருகின்ற முழுமையான உணர் வின் கண்கள் தான் நாட்டுப்புற பாடல்களின் பிறப்பிடமாகும்.

**"கவிஞனுக்கு மரங்கள் ஒலிக்கும்**
**ஓடைகளில் நூல்கள் மிதக்கும்**
**கற்பனைகளில் காவியம் தெறிக்கும்**
**யாவற்றிலும் நலன்கள் பிறக்கும்"**

என்பது ஆங்கில கவிஞர் ஷேக்ஸ்பியரின் வாக்கு. சாதாரண மக்களது ஆசாபாசங்கள், இன்பதுன் பங்கள், எழுச்சி, வீழ்ச்சி, ஆரவார ங்கள், மகிழ்ச்சி, வெறுப்பு, வேட்கை ஆகிய பலப்பல உணர்ச்சிகளைச் சிந்த னைக்குச் சுவைக்க சுவைக்க மகிழ்ச்சி யூட்டும் பாடல்கள் தான் நாட்டுப் புறப்பாடல்கள்.மேலும் மனித சமுதா யத்திற்கு விடுதலையும் விடிவும் ஏற்பட வேண்டும் என்று துடித்த கிராமப் புலவர் இலக்கண வரம்பை யும் மீறி வரையறைக்கும் அப்பாற் பட்டு அமைத்த வடிவமாகவும் எளிமையும், இனிமையும் நிறைந்து, உயிரோட்டமும் கற்பனை வளமும் கவர்ச்சியும் பொருந்திய உணர்ச்சிக் கொப்பளங்களாகவும் வெடித்த இசை கலந்த பாடல்களே நாட்டுப் புறப் பாடல்களாகும். இவ்வாறு எழுத்தறிவற்ற சமுதாயத்தவராற் பாடப்பட்டதெனினும் இவை இசை யோடு உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பாடல்களின் இசை வடிவங்கள் எல்லோருக்கும் விளங்கக் கூடியவகையில் எல்லோராலும் பாடக்கூடிய எளிய மெட்டமைப்பைக் கொண்டது. கர்நாடக இசையில் இசை நயம் இருந்தும் பெரும்பாலான பாடல்கள் தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் அமைந்துள்ளமையினால் அவற்றின் அர்த்தம் பாடுவோருக்கும் புரிவதில்லை. ரசிகர்களிற்கும் புரிவதில்லை. நாட்டார் இசையில் இத்தகைய நிலைமை இல்லை.

மேலும் நாட்டுப்புற இசைப் பாடல்கள் குறிப்பிட்ட சமூகத்தை, அதன் பண்பை இதுதான் என்று படம் பிடித்துக் காட்டும் தன்மை வாய்ந்தன. ஆதலால் இலங்கைத் தமிழரது இசை மரபில் பேணப்பட்டு வந்த கர்நாடக இசை, பண்ணிசை என்பவற்றிற்குள்ள இடம் நாட்டார் இசைக்கும் உண்டு. அல்லது அவற்றை விட அதிக இடம் உள்ளது என்று கூடக் கூறலாம். தமிழன் யார்? அவனது உண்ணும் மரபு எத்தகையது? வழி பாட்டு முறை எத்தகையது? அவனது பழக்கவழக்கங்கள் எத்தகையது? மரணத்துயர் எத்தகையது? என்பதற் கெல்லாம் விடை பகிர்கின்றது நாட்டார் பாடல்கள். இந்தப் பாடல்கள் எல்லோருக்கும் விளங்கக் கூடிய வகையில் எளிய மொழிநடை அமைப்பை உடையது.

ஒருவரது பிறப்பிலிருந்து தாலாட்டுப்பாடல், விளையாட்டுப் பாடல், வேடிக்கைப்பாடல், காதல் பாடல், ஒப்பாரி என மரணம் வரை நாட்டுப்புறச் சமூகத்தால் பாடப் படுகின்றது. இது தவிர தொழிற்பாடல்களாக அருவி வெட்டுப்பாடல், கப்பல் பாடல், ஏற்றப்பாடல் என்றெல்லாம் உண்டு. இது தவிர பெண்களுக்குரிய பாடல்களாக கும்மி, கோலாட்டம், ஊஞ்சல் போன்ற துள்ளிசைப் பாடல்களும் உள. மேற்குறிப்பிட்ட வகைப் பாடல்கள் ஒவ்வொன் றிற்கும் ஒவ்வொரு இராகங்கள் பொருந்தக் கூடியவாறு உள்ளன என கலாநிதி. இ. பாலசுந்தரம் அவர்கள் ஆய்வுகள் மூலமாக நிறுவியுள்ளார்.

அவை பின்பவருமாறு:

| நாட்டார் பாடல் | பண் . இராகம் |
|---|---|
| 1. ஊஞ்சற்பாடல் | ஆனந்தபைரவி. நீலாம்பரி |
| 2. கரகப் பாடல் | கல்யாணி. காம்போதி. நாதநாமக்கிரியா |
| 3. காவடிப்பாட்டு | ஆனந்த பைரவி |
| 4. சிந்துப் பாடல் | நீலாம்பரி |

மேற்குறிப்பிட்ட இராகங்களைத் தவிர கன்னட கௌளை, செஞ் சுருட்டி, சைந்தவி, பிலஹரி, மாஞ்சி, பந்துவாரளி, ஸ்ரீராகம் போன்ற பல இராகங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. பண்ணும் இராகங்களும் பாடலின் உயிர் நாடியாக அமைவது போல நாட்டார் இசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் தருவும், தாளமும் அமை கின்றன. இந்தப்பாடல்களில் இடம் பெறும் இராகங்கள் கிராமியத் தன்மை புலப்படுவனவாக அமைந் துள்ளது.

எந்த நாட்டுக் கவிதை வடி வத்திலும் அதன் மூலம் நாட்டார் பாடலாகவே உள்ளது. இவ் உண் மையை ஏனைய மொழியியலா ளரும் நிறுவி உள்ளனர். மேலும் தமிழரது அடிவேரைப் பிடித்துக் காட்டும் நாட்டார் இசைப்பாடல் களின் வலிமை காரணமாக "நாட் டார் பாடல் இயக்கம்" ஒன்றே நிறுவப்பட் டுள்ளது. இது நாட்டார் இசைப்பாடல்களின் பெருமையை, புதுமையை விரும்பிய நாகரிகம் அடைந்து வரும் உலகிற்கு எடுத்துக் காட்டியது. மேலும் அவற்றைப் பதிவுகளாக்கிக் கொண்டன. வேக மாக நாகரிகம் அடைந்து வரும் உலகில் நாட்டுப்புறப் பாடல்கள் அருகி வரும் வேளையில் அவற்றை நூல் வடிவங்களாக எழுத்துருக்களி லும், இசை வடிவமாக ஒலிப்பதிவு நாடாக்களிலும் பதிவு செய்து வைத்துள்ளன.

இலங்கையில் நாட்டார் பாடலை சேகரித்துப் பேணும் இயக்க வரலாற்றில் 1960 ஆம் ஆண்டு ஒரு திருப்பு மையமாக அமை கின்றது. இவ்வாண்டிற்குப் பின் நாட்டார் இலக்கியங்களை சேகரிக் கும் முயற்சிகள், நாட்டார் கலைஞர் களைப் பாராட்டும் நிகழ்ச்சிகள், கிராமியக் கலைவிழாக்கள், மாவட்ட அடிப்படையிலான நாட்டுக் கூத்துப் போட்டி, நாட்டார் பாடற் போட்டி ஆகியன மட்டக்களப்பு, யாழ்ப் பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் சிறப்பாக நடை பெற்று வந்துள்ளன. 1960 ஆம் ஆண்டுக்குப் பின் மேற்கொள்ளப் பட்ட இத்தகைய நிகழ்ச்சிகள் யாவும் ஈழத்து நாட்டாரிலக்கியத்துறையில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி நிலையை அல்லது மறுமலர்ச்சியைக் குறிப்பி கின்றது.

இலங்கையின் நாட்டார் இலக்கியத்தைச் சேகரித்து புதிப்பிப் பதிலே தனியார் முயற்சி குறிப்பிடத் தக்க வகையில் ஆக்கபூர்வமான பலனையளித்துள்ளது. இந்த வகை யில் மு. இராமலிங்கத்தினது பணி கள் முதன்மை பெறுகின்றன. அவர் கிராமிய மக்களுடன் நேர்த் தொடர்பு கொண்டும் பல கிராமங் களுக்குத் தானே சென்றும் பாடல் களைச் சேகரித்து தொகுத்துப் பாட பேதக்குறிப்புகளுடன் வெளியிட் டிருக்கும் முறைகளில் காணப்படும் ஒழுங்கு விதிகள் குறிப்பிடத்தக்கன வாகின்றன. ஈழத்து நாட்டார் இலக் கிய வரலாற்றில் இடம் பெறுபவர் களில் பெரும்பாலானோர் அரசாங்க உத்தியோகத்தர்கள். ஆதலால் அவர் கள் தமக்கு கிடைத்த ஓய்வு நேரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் தாமாகவும், தமது கீழ் உத்தி யோகத்தர்கள் மூலமாகவும் பாடல் களைச் சேகரித்துள்ளனர். ஈழத்தில் நாட்டார் பாடல்களைச் சேகரிக்கும் முயற்சிகள் ஐம்பது ஆண்டுகால வர லாற்றை உடையனவாகவே அமை கின்றன.

இந்த நாட்டாரிசை இயக்கம் ஈழத் தில் வட்டாரக் கல்விப் பரிசோத கராக இருந்த தி. சதாசிவ ஐயர் இற்றைக்கு முப்பத்தைந்து ஆண்டு களுக்கு முன்னே மட்டக்களப்புப் பிரதேசத்தில் வழங்கிய "வசந்தன் கவிகள்" என்னும் நாட்டுப் பாடல் களைத் திரட்டி வெளியிட்டார். அவருக்குப் பின் வட்டுக்கோட்டை மு.இராமலிங்கம், மட்டு நகர் F.X. C.நடராஜா, பேராசிரியர் சு.வித்தியா னந்தன் போன்ற அறிஞர்கள் மட்டக் களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் முதலிய பிரதேசங்களில் வழங்கிய நாட்டுப் பாடல்கள் பலவற்றைத் தேடித் தொகுத்து வெளியிட்டனர் என கல்வி வெளியீட்டுத் திணைக்கள நூலாகிய நாட்டார் பாடல்கள் எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள் ளது. சமீப காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறையினர் நாட்டாரியல் பற்றிய கருத்தரங்கு ஒன்றினையும் நடாத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலாநிதி.இ. பாலசுந்தரம் அவர்கள் "நாட்டாரி சை" பற்றி ஒரு நூலினையும் 1991 ஆம் ஆண்டு வெளியிட் டுள்ளார்.

பரம்பரை பரம்பரையாக வாய் மொழி மரபில் வழங்கி வருவது நாட் டார் பாடல்களின் முக்கிய இயல் பாகும். வாய்மொழி மரபு மூலமே அவை அவற்றின் விளங்காத் தன்மை யாலும், மாறுபாடுகளாலும் அதிக மான பாடல்கள் அழிந்த போதிலும் பல பாடல்கள் வாய்மொழி மரபின் மூலம் மாற்று வடிவங்களைப் பெற்று புதுப்புது வடிவங்களாகத் தோற்ற முற்று வழங்கி வருகின்றன. ஈழத்தில் எத்தனையோ வகையான கர்ணபரம் பரைக் கதைகள் வழக்கில் உள்ளன. பாரதம், இராமாயணம் புராணம் என்பவற்றைத் தழுவியனவாகவும் பல்வேறு கதைகள் வழங்குகின்றன. இக்கதைகள் இடத்திற்கிடம், கிரா மத்திற்குக் கிராமம் வேறுபட்ட நிலையிலேயே காணப்படுகின்றன. ஏடோ அல்லது புத்தகமோ இல் லாது செவிப்புலன் அறிவாற் பெற்ற கதைப் பாடலை ஒருவர் ஒருமுறை பாடியதற்கும் அவரே அதனை மறு முறை பாடியதற்கும் இடையே நிச்சம் வேறுபாடு இருக்கும் என்ப தில் ஐயமில்லை.

இந்தவாறு நாட்டார் இசைப் பாடலின் உயர்வை, பெருமையை உணர்ந்தமையால் தான் வானொலி யில் கூட அவற்றை ஒலி பரப்பி வருகி ன்றார்கள். இந்த நாட்டுப் பாடல் களைப் படிப்பதற்கு ஒரு சங்கீத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரும் தேவை இல்லை வெறு மனே கேள்வி அறிவு ஒன்றே போதும்.

யாழ்ப்பாணத்து நாட்டார் இசை பற்றி ஆராயும் போது ஆய்வுக்குக் கிடைக்கும் பாடல்கள் எந்தளவிற்கு கவிதைப் பண்பின்றி உண்மையான நாட்டுப்புறப் பாடல் களாக எமக்குக் கிடைக்கின்றன என்பது முக்கியமான சந்தேகம். நூல்களில் பதிக்கப்பட்டவை கூட பல ஒழுங்கமைக்கப்பட்ட பாடல் கள் போல் உள்ளது. யாழ்ப்பாணத் தில் இன்றும் சில கிராமங்களில் ஆங்காங்கே நாட்டுப் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. இன்று பாடசாலைக் கல்வித் திட்டத்தில் நாட்டார் பாடல்கள் கட்டாய மய மாக்கப்பட்டுள்ளமை போற்றுத் குரிய விடயமாகும். இந்தச் செயற் பாட்டின் மூலம் நாட்டார் இசை யானது வளரும் சந்ததியினரூடாக அழிந்தொழியாது பாதுகாக்கப்பட்டு வரும் என்பது மறுக்க முடியாத தொன்றாகும்.

மேற்கண்ட சிறப்புக்களின் மூலமாக நாட்டாரிசையின் தனித்து வத்தையும், மகத்துவத்தையும், அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் கல்வியும் பெற்றோர் ஆசிரியரின் பங்களிப்பும்



**திரு.ப.உமேஸ்குமார்**
ஆசிரியர்,
யா/காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது." என்ற ஔவைப் பிராட்டியின் பொன்மொழிக்கு இணங்க அரிய பிறப்பெடுத்த ஜீவ ராசியே மானிடராகும். இவ்வாறான அரிய பிறப்பெடுத்த மனிதனுக்கு கல்வி இன்றியமையாதது. ஏனெனில் இவ் வையகத்துள் வாழ்வாங்கு வாழ வழி வகுப்பது கல்வியே ஆகும்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்ற முதுமொழி எடுத்தியம்புகின்றது.

கல்வியின் சிறப்பை பல நூல்கள் அழகாகவும், தெளிவாகவும் எடுத்துரைக்கின்றன. கல்வியைப் பற்றிக் கூறிய ஆய்வாளர்கள் மாணவர்களுக்கு மட்டுமல்ல ஆசிரியர்களுக்கும் கல்விச் சிந்தனைகளையும் கற்பித்தற் திறன்களையும் எடுத்துக் கூறியுள்ளனர்.

ரூசோ,பிளேட்டோ, ஹோபர் போன்ற கல்விச் சிந்தனையாளர்களின் கருத்துக்கள் இவற்றை உறுதி செய்கின்றன.

தாயின் கருவறையில் இருக்கும் பொழுதே குழந்தை கேட்டல் விருத்தியைப் பெறுகின்றது என்பது ஆய்வாளர்களின் கருத்து. தாய் அக்காலத்தில் நல்ல சிந்தனையாளரின் கருத்தடங்கிய நூல்களை வாசிப்பது மட்டுமல்ல நல்ல சிந்தனைக் கருத்துக்களைக் கேட்டுகிரகிப்பவளாக இருப்பது மட்டுமன்றி, தனக்குப் பிறக்கும் குழந்தை நல்ல சிந்தனையுள்ள குழந்தையாகப் பிறக்கவேண்டும் என்ற நினைவுடனும் இருக்க வேண்டும். எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தைகளே அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பிலே தங்கியுள்ளது என்பது ஆன்றோரின் கருத்து. இது எம் கண் கூடாகும்.

மனிதனிடம் மறைந்து கிடக்கும் பரிபூரணத்துவத்தை வெளிப்படுத்துவது தான் கல்வி. இக்கல்வியை பெறுவதற்கு சகலருக்கும் உரிமை உண்டு. தத்துவஞானியான சோக்கிரட்டீஸ் சாதாரண வறிய குடும்பத்தில் பிறந்தவராக இருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலும் அவரது அறிவுத்திறனால் பார் போற்றும் பெரும் தத்துவ விஞ் ஞானியாக விளங்குகின்றார். இந்த வகையில் வறுமை கல்வி கற்பதற்கு இடையூறாகாது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

"கற்கை நன்றே கற்கை நன்றே" பிச்சை புகினும் சீரிய கல்வி யைச் சிறப்புறக் கற்று குன்றிலிட்ட தீபம் போல் மாணவ மணிகள் திகழ வேண்டும்.

மாணவன் கல்வியில் பெற் றோரின் பங்களிப்பு மிகவும் இன்றிய மையாதது. தாய்மாரே குழந்தை களின் முதல் ஆசிரியராக விளங்கு கின்றார் என்பதை பெஸ்ர லோஜி (1799 - 1927) குழந்தைகளுக்கான முன்னெடுப்புக்களில் மிகவும் தெளி வாக விளக்கியுள்ளார். குழந்தைகளின் புலன் உணர்வுகள், உற்று நோக்கும் திறன் முதலியவற்றை வளர்ப்பதில் தாய்மாரே பெரும் பங்கு வகிக்கின்ற னர். தாய் மார்களின் இந்த கற்பித்தற் பணி மிகவும் பொறுப்பு வாய்ந்தது ஆகும்.

மேலும் மாணவரின் கல்வி யில் விழிப்பாக இருக்க வேண்டியது பெற்றோரின் கடமைகளில் ஒன்றா கும். (மாணவர்) பிள்ளை விருப்ப மாகச் சென்று கல்வியைப் பெறக் கூடிய மனநிலையைப் பெற்றோர் கொடுக்க வேண்டும். அது மாத்திர மன்றி பிள்ளை அன்றன்று படிக்கும் பாடங்களைப் பற்றி வினாவுவதுடன் மட்டுமல்லாது பிள்ளைகளின் பயிற் சிகளையும் பார்வையிடுதல் மிகவும் சிறப்பாக அமையும். பாடசாலைக் குப் பிள்ளையை அனுப்பினால் மட் டும் போதாது. அவருடைய செயற் பாடு, கல்வித் தகைமைகளை ஆசிரி யரிடம் சென்று அறிதலும் முக்கிய மான ஒன்றாகும்.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்பு டைத்து" என்ற வள்ளுவப் பெருந் தகையின் கூற்றானது ஒருவன் ஒரு பிறப்பில் கற்றால் அக்கல்வியானது அவன் எடுக்கின்ற ஒவ்வொரு பிறப் பிலும் தொடரும் என்பதேயாகும்.

"குஞ்சி அழகும் கொடுத் தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து நல்ல ம்யா மென்னும் நடுவு நிலைமையிற் கல்வியழகேயழகு."

என்ற நாலடியார் நூலில் கல்வி அழகு உடையது என்று கூறியிருப்பதைக் கொண்டும் வற்றாத, அழிவில்லாத சீரிய கல்விச் செல் வத்தை கட்டியெழுப்ப பெற்றோரே முக்கிய பங்கு கொள்ள வேண்டும். சில காலங்களில் கற்றலில் சில இடர் பாடுகள் தோன்றலாம். அவ்வேளை யில் பிள்ளையை அன்பான முறை யில் அணுகி அதற்கான வழிகளைக் கையாள வேண்டியதிலும் பெற் றோர் அதிக கவனஞ் செலுத்த வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். பெற்றோர் கல்வியில் விழிப்பாக இருத்தல் மூலம் சிறப்பான ஒரு சமுதாயம் விரும்பும் நற்குடிமகனை உருவாக்கலாம் என்பதில் ஐய மில்லை.

தொடர்ந்து பெற்றோரும் முன்மாதிரியாகப் வாழப்பழகிக் கொள்ள வேண்டும். ஏனெனில் பெற்றோர் தொலைக்காட்சியில் சினிமாப் படங்களைப் பார்த்த வண்ணம் பிள்ளையைப் “படி” என வற்புறுத்த முடியாது. இப்படிப் பல குறைபாடுகள் காரணமாக பெற்றோரினால் பிள்ளையின் கல்வி பாதிப்படைகின்றது. ஆகவே பெற்றோரும் கல்வியின் சிறப்பினை உணர்ந்து கற்க வழி சமைக்க வேண் டும்.

பிள்ளைக்கு ஆற்றலுள்ள துறையைத் தெரிந்து பிள்ளையைக் கற்க வழிப்படுத்துவது சிறந்தாகும். சில பெற்றோர் இதனை உணர்வ தில்லை. தமது பதவி பட்டங்களை வைத்து, அதைவிட உயர்வான பிள்ளைக்குச் சகப்பான துறைகளைத் தெரிவு செய்கிறார்கள்.

பெற்றோர் தம் கருத்துக் களை ஆசிரியருடன் ஆலோசித்து பிள்ளைக்குப் பொருத்தமான ஆற்ற லான துறையில் படிப்பைத் தொடர விடுவதே சிறந்தது. ஆகவே மாணவர் கல்வியில் பெற்றோரின் பங்களிப் பானது மிகவும் அவசியம் என்பதை தெளிவாக்குகின்றது.

மேலும் பெற்றோரின் பங் களிப்புடன் ஆசிரியரின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது. ஆசிரி யர் மாணவர் உறவை நோக்குமிட த்து பிள்ளைகளின் வீட்டுச்சூழல், அவர்களின் அறிவுத் திறன், செயற் பாடு என்பவற்றைப் புரிந்து கொள் வது முக்கியமான தொன்றாகும். பல தரப்பட்ட மாணவர்கள் பாடசாலை க்கு வருவார்கள். அன்போடு அவர் களை அணுகி அவரவர் தன்மை களை அறிய முற்பட வேண்டும். அவர்களில் கண்டிப்பானவர்களும் இருப்பார்கள். கனிவானவர்களும் இருப்பார்கள். ஆசிரியர் மாணவர் உறவுமுறை சுமூகமானதாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் கற்றல் கற்பித்தல் நிகழக் கூடியதாக இருக்கும். அன்பு, அரவணைப்பு போன்ற முறைகளினூடாக மாணவர் கள் பாடசாலை வரத்தூண்டும் வகை யில் நடந்து கொள்ள வேண்டும். அவர்களை நல்வழிப்படுத்திச் சான் றோராக ஆக்குவதில் ஆசிரியரின் பங்கு பெரிதாகும். ஆசிரியர் மாண வருக்குக் கல்வியைக் கனியாகக் கொடு க்கும் நிழல் விருட்சமாக விளங்க வேண்டியது ஆசிரியரின் தனித்துவ மான பங்களிப்பாக விளங்க முடி கிறது.

சில மாணவர்களினால் வீட் டுச்சூழல் சோகமானதாகக் காணப்படு கின்றது. அவ்வாறான மாணவர்கள்

85606



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை வரும் பொழுது பாட சாலை அவனுக்கு மகிழ்ச்சியான ஒரு பூங்காவாக அமையும் பொழுது அவன் தன் சூழலை மறந்து கற்றலில் ஈடுபட வாய்ப்பு ஏற்படுகின்றது. இதற்குப் பெரிதும் துணையாக அமைபவர்கள் ஆசிரியர் தான் என் றால் மிகை யாகாது.

இவ்வாறாக ஆசிரியர்கள் மாணவர்களின் கல்விக்குப் பெருந் தூண்களாகவும் ஏணியாகவும், தோணி யாகவும் நின்று செயலாற்றுகின்ற னர். அந்த வகையில் மாணவரின் கல்வியில் ஆசிரியரும் விழிப்புடன் செயல்பட வேண்டிய கடப்பாடு உண்டு.

எனவே மாணவர்களின் எதிர் காலம் சிறக்கப் பெற்றோர்களின் பங் கும் ஆசிரியரின் பங்கும், ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவையே. தனித்துப் பெற்றோராலும் முடி யாது. தனித்து ஆசிரியராலும் முடி யாது என்பது தெளிவு. ஆகவே நல்ல தொரு எதிர்கால சமுதாயச் சிற்பி களை உருவாக்கப் பெற்றோரின் பங் களிப்பும், ஆசிரியரின் பங்களிப்பும் அவசியமானது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகியல் அணுகுமுறைகளும் வெற்றிகரமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும்



திரு. T.K.பிரபாகரன்
B.Ed,SP.Tr.d(Art)
சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்(சித்திரம்)

**அறிமுகம்:**

"ஒவ்வொரு குழந்தையினுள்ளும் வெளித்தோன்றாத ஒரு மனிதன் வெளியே புலப்படாது புதைக்கப் பட்டுள்ளான். ஆவனை வெளிக் கொணர்வது தான் கல்வியின் முதல் பணி" மொண்டிசோரி அம்மையார்.

கல்வியினால் குழந்தையின் உடல், உள்ளம், மெய்யுணர்வு ஆகியவை முழு ஆற்றல் பெற்று வளர்கின்றது. எனவே, கல்வி கற்பிப்பவர் தான் வாழும்காலத்திற்கும் தலைமுறைக்கும் தொடர்பில்லாத வகையில் தனிப்பட்ட கருத்துக்கேற்றவாறு கற்பித்தலை மேற்கொள்வது தவறாகும்.

மாறாக தன்கொள்கைகளை சான்றோர்கள், அறிஞர்கள், கல்வியியலாளர்களின் சிந்தனைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து தான் கற்பிக்கும் முறையினை மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

"ஆலோசனைகளைப் பின்பற்றா தவர்கள் ஒருபொழுதும் வெற்றி பெறும் நிலையை அடைய மாட்டார்கள்" அரிஸ்ரோட்டில்.

**ஆசிரியர்**

ஒரு சாதாரண மனிதனின் வாழ்விலே இரண்டு அறைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒன்று கருவறை, மற்றையது வகுப்பறை. பல்வேறு சுகாதார அணுகுமுறைகளும், கண்காணிப்புக்களுக்கும் மத்தியிலும் கருவறையில் உருவாகும் குழந்தை தன்னை சிருஸ்டிக்கப்பட்ட இந்த உலகில் ஈட இணையற்றவனாக மாற்றுவதற்காக வகுப்பறைக்கு வருகின்றது. ஆகவே, வகுப்பறை அனுபவங்கள் மாணவர் மனங்களை வாழ்நாள் முழுவதும் வழிப்படுத்தி சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும். அந்த ஓர் சுவர்க்கவாயிலின் அதிபதியே ஆசிரியர் எனலாம்.

மாணவர்களிடமுள்ள தனியாள் வேறுபாடுகளையும் அழகுணர்ச்சி, மனவெழுச்சி, முதிர்ச்சி ஆகியவற்றை முதற்கண் மனதிருத்தி சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டது போல "ஒவ்வொரு மனிதனுள்ளும் ஒரு முழுமையும், பூரணத்துவமும் உள்ளது" அதனை வெளிக்கொணர்வதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளை மேற்கொள்வதே ஆசிரியரின் பிரயத்தனமாக இருக்க வேண்டும்.

இப்பாரிய பணியில் ஆசிரியர் தன்னை ஈடுபடுத்துவதற்கு கல்வித் தொழில்நுட்பத்தினை (Education Technology) அதாவது பயிற்றுவித்தலில் பயன்படுத்தும் உபகரணங்களில் மட்டுமல்லாது பயிற்றலுக்கான ஒரு தொழில் நுட்பத்தினை வளர்த்தெடுக்க வேண்டியது அவசியமாகும்.

**அழகியலும் ஆசிரியரும்**

ஆறறிவு படைத்த மனித குலம் அனைத்தும் அனுபவிக்கும் ஓர் அங்கமே அழகியல் உணர்வு எனக் குறிப்பிடலாம். நாம் இந்த உலகமும் நாமும் மிகவும் அழகாகவும் இரசிக்கக்கூடிய வகையிலும் இருக்க வேண்டும் என்பதில ˙சிரத்தையடன் உள்ளோம். "அழும் பொழுது கூட அழகாக அழவேண்டும்" பிரஞ்சுப் பழமொழி கற்பித்தல் ஒரு கலை. அது இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது.

1. அறிவியல் (Scince)
2. கலை (Art)

அறியிவலின் கூறுகளாக கணக்கு (mathe matrics), இயற்பியல் (Physics), வேதியல் (chemistry) அடங்குகின்றது. கலை ஒவ்வொன்றும் பல திறன்களை உள்ளடக்கியது. அதாவது கற்பித்தல் பல திறன்களின் தொகுதி. ஆசிரியரின் வெற்றி பல தினற்களை உள்ளடக்கிய கற்பித்தல் அணுகுமுறைகளை கையாள்வதில் தங்கியுள்ளது.

"வாழ்க்கையின் வெற்றியின் இரகசியம் என்பது ஒருவருக்கு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஆயத்தமாக இருத்தலாகும்" பிரிட்டன் முன்னாள் பிரதமர் பெஞ்ஜமின் டிஸ்ராயலி. அந்த வகையில் தாம் எமக்குக் கிடைத்த கற்பித்தல் சந்தர்ப்பத்திற்கு எவ்வளவு ஆயத்தமாக இருக்கின்றோம் என்பது தொட்ாபாக சுயமதிப்பீடு செய்தல் வாழ்க்கையின் வெற்றிக்கு உறுதுணையாகவிருக்கும்.

ஒரு சாதாரண ஆசிரியர் சொல்கிறார்,
ஒரு நல்ல ஆசிரியர் விளக்குகின்றார்.
ஒரு உயர்ந்த ஆசிரியர் செய்து காட்டுகின்றார்.
திறமையுடைய ஆசிரியர் ஆக்கமுறச் செய்கிறார்.

பாடசாலை ஓர் அழகிய பூஞ்சோலை. ஒருவருடைய வாழ்வில் மறக்க முடியாத அனுபவங்களை ஏற்படுத்தும் பீடம். குழந்தைகள் தம் அறிவுப்பசிக்கு தேவையானவற்றை முகர்ந்து உட்செலுத்துவதற்கு மெய், வாய், கண், மூக்கு, செவிகளுடாக நல்லுணர்வு பெறுவதன் மூலம் வகுப்பறை கற்றல் நடைபெறவேண்டும்.

அறிந்தவன் ஞானி என்கிற நிலையில் ஆசிரியர் தன் அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல்களை திறந்து பார்த்து அதி லே இல்லாதவற்றை சேர்த்துக் கொள்வதற்கு முயற்சிசெய்ய வேண் டும். "அறிவை திறந்து பாரு அதில் இல்லாததை சேரு" சினிமா.

தற்போதைய கற்றல் கற்பித் தல் செயற்பாடுகளிலே மிகவும் சவா லாக இருக்கும் விடயமாக மாணவர் களின் பிரதிபலிப்பு போதாமை உணரப்பட்டு வருகின்றது. மாணவர் மையக்கல்வி அணுகுமுறையிலே மிகவும் முக்கியமான விடயமாக அது விளங்குகின்றது. இந்த விடயம் தொடர்பான வெற்றியான கற்றல் கற்பித்தல் அனுபவத்திற்கு அழகியல் அணுகுமுறைகள் எவ்வாறு துணை போகின்றன என நோக்குவோம்.

கற்றலில் மிகப்பெரிய விருத்திசார் வேறுபாடுகள் ( Developmental) உண்டென்று ஆராய்ச்சி யாளர்கள் குறிப்பிடுகின்றனர். பிள்ளைகள் விருத்தியடைய உலகை பிரதி நிதித்துவப்படுத்துவதற்கு புதுப்புது வழிகளை உருவாக்கிக் கொள்வர். அத்தகைய பிரதிநிதித் துவப்படுத்துகைகளை திறமையாக கையாள்வதற்கு நாம் பயன்படுத்தும் செயன்முறைகளையும் உபாயங் களையும் மாற்றுவர்.

கற்றலில் முக்கியமான தனி யாள் வேறுபாடுகள் உள்ளன. பிள்ளைகளின் தனியாள் வேறுபாடு களை கவனத்தில் கொள்ளும்போது தான் அவர்கள் மிகச்சிறப்பாக கற்பார்கள்.

மனிதனின் விவேகத்தில் பல பரிமாணங்கள் உண்டென அபிவிரு த்திப் ற்றிய உளவியலாளர் ஹோ வார்ட் கார்ணர் விவாதிக்கின்றார். சில பிள்ளைகள் இசையைக் கொடை யாகக் கொண்டுள்ளமையயம் சில பிள்ளைகள் வரைதல் திறன் கொண் டவர்களாகவும் , சில பிள்ளைகள் மெய்வன்மைத் திறன் படைத்தவர் களாகவும் விளங்குகின்றார்கள். இவ் வாறான எந்தவோர் திறன்களையும் கொண்டுள்ள மாணவர்கள் மத்தியி லும் வெற்றிகரமாக உள்வாங்கப் படக்கூடிய அணுகுமுறையாக இருப் பது அழகியல் சார் அணுகு முறை யாகும்.

"இசையால் வசமாகா இதயம் எது? ஒரு மனிதனின் பிறப்பிலிருந்து இறப்பு வரை வியா பித்திருக்கின்ற அழகியல்சார் அசைவுகள், இரசனை கள் அனுபவங்கள் யாவுமே இன்ப மயமானவை. இதயத்தினால் இனி மையாக யாசிக்கப்படுபவை.

வகுப்பறையில் உள்ள சிறார் கள் எதிர்பார்த்து ஏங்கித்தவித்து ஒவ்வோர் ஆசிரியரிடமும் வேண்டி நிற்கும் ஓர் உன்னத வெளிப்பாடே அழகியல்சார் அணுகுமுறையாகும். ஆழகியல்சார் அணுகுமுறை எனக் கருதப்படுவது, மாணவனின் உள்ளத் தினை வெண்றெடுத்து கற்றலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுபடுத்தும் ஓர் முறையியல் எனக் கருதலாம். இதனால் தான் கற்பித்தல் ஒரு கலையாக மதிக்கப் படுகிறது.

சிறந்தவொரு ஆசிரியர் சிறந்த ஒரு கலைஞராவர். பாடுதல், ஆடுதல், வரைதல், கதை கூறுதல், நடித்தல், விவாதித்தல், கவிதையரங் கம் போன்ற இரசனை முறையான பாணிகளில் கற்றல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனூடாக எல்லா மாணவர்களும் மகிழ்ச்சி கரமான கற்றில் ஈடுபட வாய்ப்ப ளிக்கும்.

ஆர்வமாக பங்குபற்றி கற்ப தற்கும் சிறந்த வெற்றிமிகு அடை வினைப் பெறுவதற்கும் மாணவர் களை ஊக்குவிப்பதாக அழகியல் அணுகுமுறைகள் துணை செய்கின் றன.

கல்வி உளவிளலாயர்கள் இரண்டு முறையான ஊக்கல்களை (Motivation) குறிப்பிடுகின்றார்கள்.

1. புற இயல்பு ஊக்கம் (Extrinsic)
2. துன்னியல்பு ஊக்கம் (Intrinsic) என்பனவாகும்.

புகழ்ச்சி, உயர்புள்ளி, விருதுகள், பணம், பாராட்டுக்கள் புற இயல்பு ஊக்கலில் அடங்கும். எந்தவித சன்மானமும் வழங்காமல் கற்போர் செயலார்வத்துடன் செயற்பாடு களில் பங்குபற்றுதலுக்கு தனி இயல்பு ஊக்கல் துணை புரிகின்றது. இவ் தனி இயல்பு ஊக்கலிற்கு அடிப் படையாக அமைவது முயற்சியும் தன்னம்பிக்கையுமே ஆகும்.

முயற்சியினையும் தன்னம்பிக்கை யினையும் ஏற்படுத்துவதில் அடிப் படையாக விருப்பது அழகியல் ஆக்கச் செயற்பாடுகளாகும். ஆகவே தான் சிறுவயதிலிருந்தே இவ்வாறான அழகியல் செயற்பாடுகள் முன் வைக்கப்படுகின்றன. இதனூடாகவே மாணவர்களுக்கு எமது சிறந்த வெற்றியாக அமைவது எப்பொழு தும் விழாமல் இருப்பதல்ல. விழும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மீண் டும் எழுவதற்கான நம்பிக்கையினை இலகுவாக புகுத்தி விட முடியும்" என்ற கொம்பிஸஸின் தத்துவத்தினை ஐதார்த்தப்படுத்திக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு மனிதனது வாழ்க் கையிலுமே மறக்கமுடியாத ஓர் ஆசிரியர் அமைந்துவிடுவதற்கு கரண மாக அமைவது அவ் ஆசிரியரின் அழகியல் சார் அணுகுமுறைகளே என்பதனை அனைவரும் அறிவோம்.

எமக்கே ஆங்கிலமும், கணி தமும், விஞ்ஞானமும் இன்றுங்கூட இனிக்கிறது என்றால் நாம் சந்தித்த ஆசிரியரின் அழகியல் அணுகுமுறை யின் வெற்றியே காரணமாகும்.

எந்தவொரு விடயத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் இலகுவாக்கும் திறனும் உளவியல், அழகியல் அணுகுமுறைகளும் தெரிந்துகொண்ட நாமும் ஓர் மனிதனின் மறக்கமுடியாத ஆசிரியராக அமைந்து விடுவதற்கு எம்மைத் தயார்படுத்திக் கொள்வோமாக.

## உசாத்துணை நூல்கள்:


1. கலாநிதி.ஸ்டெலாவொஸ்னியா, பிள்ளைகள் எவ்வாறு கற்கின்றார்கள்?, குமாரன் புத்தக இல்லம்.
2. ச.முத்துலிங்கம், கல்வியும் உளவியலும், சேமமடு பதிப்பகம்.
3. கலாநிதி.சோ.கிருஸ்ணாராஜா,அழகியல், சவுத் ஏசியன் புக்ஸ்
4. அகவிழி, யூலை 2014.
5. கலாநிதி. சபா.ஜெயராசா, புதிய கல்விச் சிந்தனைகள், தேசியகலை இலக்கியப் பேரவை
6. முனைவர்.இராசு.பவுன்துரை, பண்டைத் தமிழர்களின் வரைபுகளும் குறியீடுகளும், உலகத் தமிழாராட்சி நிறுவன வெளியீடு


PUBLIC LIBRARY
JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியக் கல்வி வளர்ச்சிக்கான உத்திகள்




**திருமதி.சோமசேரகம் கோயிகா**
ஆசிரியர்,
B.A
யா/மண்கும்பான் அ.த.க. பாடசாலை


மனிதனின் தனது வாழ்க்கை முழுவதும் செய்ய வேண்டியது எதுவென்றால் கல்வியைக் கற்பது தான். ஒருவர் இவ்வுலகில் பெறுகின்ற அறிவு, அனுபவம் , ஆற்றல் ஆகியவற்றின் தொகுப்பே கல்வி எனப்படும். பெறுகின்ற கல்வி அவரது ஆளுமைக்கும் ஆற்றலுக்கும் அடித் தளமான இருந்து அவரது ஒவ்வொரு செயலையும் சிறப்பாகச் செய்ய வழி வகுக்கும். "தொடங்குங் கால் துன்பமாய் இன்பம் பயக்கும்.

மடம் கொன்று அறிவு அகற்றும் கல்வி" எனும் குமர குருபரர் பாடலானது கல்வியை ஒருவன் கற்கும் போது சிறிது துன்பமாகத் தான் இருக்கும். பின்னர் அதுவே இன்பத்ததைத் தரும் என்ற இனிமையான கருத்தை எடுத்தியபும்கின்றன.

இக் கட்டுரையானது கிராமியக்கல்வி வளர்ச்சிக்கு பெற்றோர் எவ்வாறு செயற்பட வேண்டும்? பிள்ளைகள் எவ்வாறு செயற்பட வேண்டும்? கல்வித்துறை சார்ந்தவர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும்? எனும் பாங்கில் சில தந்திரோபாயங்களை முன்வைப்பதாக அமைகின்றது.

ஒவ்வொரு மனிதனுக்கும் தனது வாழ்வை மேம்படுத்த வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் அதைக் கிராமப்புறக் குழந்தைகள் துரதிஷ்டவசமாக இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தத் தவறுகின்றனர். இன்றைய இந்தத் தலைமுறை காப் பாற்றப்பட வேண்டுமானால் கிராமப் பாடசாலைகள் குருகுலங்களாக மாற்றப்பட்ட வேண்டும்.

அறிவியல் கண்டுபிடிப்புக்கள் தொழில்நுட்பச் செறிவு சுருங்கிப் போன உலகம், பொருளாதார வளர்ச்சி போன்ற காரணிகளால் கல்வியானது வெகுவாக மாறி வருகின்றது. இந்த மாற்றம் கிராமப் பாடசாலைகளிலும் துலங்க வேண் டும்.

ஒரு சமுதாயம் எவ்வாறு உருவாகின்றது? ஒரு கிராமம் எவ்வாறு உருவாக்கப்படுகின்றது? மக்களுடைய மனநிலை எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றது? ஒருபுதிய தலைமுறை எப்படி வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதை ஆராய்ந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை முதன்மைப்படுத்தல் என்ப தில் ஐயமில்லை. ஆதலால் கிராமப் புதிய தலைமுறைகளும் உலகத் தோடு ஒத்து வாழும் பண்புக்கு கல்வியால் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

பாடசாலையின் மூலம் சமுதாயத்திற்கும், சமுதாயத்தின் மூலம் பாடசாலைக்கும் உச்ச அள வில் சேவை ஆற்றப்படும் விதத்தை சகல செயற்பாடுகளையும் திட்ட மிடும் திறமையையும் அது தொடர் பான மனப்பாங்கையும் வளர்க்க வேண்டும். மனித பௌதீக வளங்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட வேண்டும்.

தனியார் கல்விக் கூடங்கள், பணம் சம்பாதிக்கும் இடமாக இருக்கும் நிலையில் சுயசிந்தனை, ஆளுமைத்திறன், பன்முகத்தன்மை, அறிவு வளர்ச்சி இவைகள் அனைத் தும் கிராம மாணவர்களுக்குச் சாத்தியமற்ற ஒன்றாகவே உள்ளது. இந் நிலைமை கிராமிய மாணவர் களின் கல்வியைப் பாதிக்காத வகை யில் மாற்றம் பெற வேண்டும்.

கிராமத்தவர் கல்வி என்றால் என்ன என்பதைப் புரிய வேண்டும். கல்வியின் முழுப்பலனையும் கிரா மியக் குழந்தையும் பெற வேண்டும். கல்வி சமச்சீர் முறையில் பரவலாக்க ப்பட வேண்டும். உற்பத்திப் பொருள் விற்பதிலும் வாங்குவதிலும் கல்வியை வழங்குவதிலும் பெறு வதிலும் உள்ள வித்தியாசத்தை ஒவ்வொருவரும் உணர வேண்டும். அப்போது தான் தரமான கல்வியைக் கிராமியப் பிள்ளைகளும் பெறுவர்.

தமது இருப்பிடத்திற்கு அருகில் உள்ள எந்தப் பாடசாலையி லும் தம் குழந்தைகளைப் பெற்றோர் தயக்கம் இல்லாமல் சேர்க்கும் அளவுக்கு அனைத்துக் கிராமப் பாட சாலைகளும் தரமான சேவையை வழங்க அரசு முன்வரவேண்டும். பாடசாலையில்மாணவர்கள் எண் ணிக்கை குறையாமல் பாதுகாக்கும் நிர்ப்பந்தம் தலைமையாசிரியருக் கும், வகுப்பாசிரியருக்கும் இருக் கின்றது. என்பதை உணர்ந்து கல்வி கற்றவர்கள் செயற்பட வேண்டும்.

கிராமத்திலும் தரமான கல்வி யைக் கொடுக்க ஒரு வகுப்பின், ஒரு பாடசாலையின் அடிப்படைத் தேவை என்ன? அதனை ஈடுசெய் வதற்கான வழிகள் என்ன? எனக் கண்டறிந்து வளர்க்கப்பட வேண் டிய கிராமியப் பாடசாலைகளுக்குப் வாய்ப்புக்களும் உதவிகளும் கிடைக் கப் பெற வேண்டும்.

கல்வித்திட்டமிடலின் பிரகாரம் மூன்று தவணைகள், பாட சாலை தொடங்கும் நாள், நேரம், முடிவடை யும் நாள், நேரம் என்பன எல்லாப் பாடசாலைகளுக்கும் ஒன்று தான். ஆனால் பாடசாலைகளின் அடைவுகள் வேறுபடுகின்றன. இதற்குக் காரணம் பாடசாலை மட்டத் திட்டமிடற் செயற்பாடு ஆகும். ஆதலால் கிராமியப் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைகளும் சிறந்த அடைவுகளைப் பெற்று வெற்றிக்கு வழிவகுக்க சிறந்த திட்ட மிடலை மேற்கொண்டு அதனை அமுலாக்கம் செய்ய வேண்டும்.

மதிப்பெண் பெற்றுக் கொடுப்பது மட்டுமே கடன் என்று பணியாற்றாமல் ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள மன வள ஆலோசகர் சிறப்பாக இயங்க வேண்டும். அனைத்துப் பாடசாலைகளிலும் ஆசிரியர் தரம் கண்காணிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கும் மாணவரின் தேர்வையும் மதிப்பீட்டையும் கண்காணிக்கும் உள்ளமைப்பு வெளியமைப்பு இருந்தால் மட்டும் போதாது. அவை சரியான முறையில் இயங்கக் கல்வித்துறை சார்ந்தவர்கள் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.

ஒவ்வொரு கிராமப் பாடசாலைகளும் ஒரு அரச நிறுவனம் என்ற வகையில் மிகவும் உச்சமான வினைத்திறனையும், விளைதிறனையும் எதிர்பார்த்துத் தன்னுடைய சகலவிதமான நடவடிக்கைகளையும் சிறப்பான முறையில் மாணவர்கள் கல்வியை இடைநிற்றலின்றித் தொடர வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமது பிள்ளைகளைக் கிராமப் பாடசாலைகளில் சேர்க்காத அரச உத்தியோகத்தர்களும் கிராமப் பாடசாலைகளுக்குப்போதிய வசதிகளை ஏற்படுத்தாத அரசும் சீரிய முறையில் கல்விக்கூடங்களை மேற்பார்வையிடாத அதிகாரிகளும் அதிக பணங்களைத் தனியார் கல்விக் கூடங்களில் வசூலிக்கும் பணக்காரர்களும் தமது மனோ பாவங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி, கிராமப் பாடசாலைகளிலும் கல்வி வளர்ச்சிக்குப் பங்களிக்க வேண்டும்.

ஒவ்வொரு மாணவனும் கற்கும் போது கூர்ந்து கவனித்தல், தொடர்புபடுத்தல், செயற்படுத்தல் எனும் மூன்று செயற்பாடுகளையும் உள்ளடக்கி கற்க வேண்டும். கூர்ந்து கவனித்தல் என்பது எதைப் பற்றிக் கூறப்படுகிறது என்பதைக் கவனத்துடன் கற்றல். தொடர்பு படுத்தல் என்பது கவனித்ததை ஏற்கனவே எமக்குத் தெரிந்த ஒரு சிலவற்றோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். செயற்படுத்தல் என்பது தாம் கற்றவற்றை தகுந்த சூழ்நிலை வரும் போது பயன்படுத்துதல் ஆகும். ஆதலால் மாணவனும் உணர்ந்து கற்றல் வேண்டும்.

"தன் குழந்தை இப்படி இருக்கின்றதே" என்று புலம்புவதையே பல பெற்றோர் வாடிக்கையாகக் கொண்டுள்ளனரே தவிர என்ன செய்ய வேண்டும்? என்பதைப் பற்றி யோசிப்பதில்லை. காரணம் பலவாக இருக்கலாம். காரணத்தைக் கண்டு பிடித்துத் தீர்வு காண முயற்சிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பிள்ளையின் அன்றாட செயற்பாட்டினைக் கவனிப்பதில் சோம்பேறித்தனம் மற்றும் நேரமின்மை போன்ற காரணத்தை ஒதுக்கித்தள்ளிவிட்டு அக்கறையைச் செலுத்த வேண்டும்.

பெற்றோர்கள் குழந்தையைப் பற்றியத் தமது எதிர்பார்ப்பைக் குறைத்து தமது இயல்பான திறன்களுக்கு மதிப்புக் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். எந்த நேரத்தில் குழந்தையிடம் என்ன விடயத்தைப் பேச வேண்டும் என்பதை முடிவு செய்து அந்த நேரத்தில் அந்த குறிப்பிட்ட விடயத்தைப் பேச வேண்டும். சில குழந்தைகள் சில விடயங்களைப் பேசுவதற்குத் தயங்கினாலும் எமது சகஜமான பேச்சு இவர்களின் தயக்கத்தைப் போக்கி விடும்.

இளம்வயது மாணவரின் தற்கொலை மற்றும் பெருங்குற்றம் போன்ற சம்பவங்கள் பெருகிவரும் இக்காலத்தில் தமது பிள்ளைக்கு பெற்றோர் எந்த வகையில் ஆக்க பூர்வமாக உதவ வேண்டும் என்பதைத் தெளிவாகப் புரிய வேண்டும்.

கிராமியப் பாடசாலைகளை அதாவது கட்டடங்களைப் பராமரித்தல், பழுது பார்த்தல், புதிதாக அமைத்தல் போன்ற விடயங்களில் சமூக மக்களும் அரசும் இணைந்து செயற்பட வேண்டும். மாணவ மாணவியர் விடுதிகள் சிறப்பாக அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு, கிராமியக் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

எமது சக்திக்கு மீறிய பிரச்சினையைத் தீர்க்க வெளியில் இருந்து உதவி பெறுவதில் தவறில்லை. பிள்ளையிடம் ஏதேனும் கற்றல் குறைபாட்டை இனங் கண்டால் தயங்காமல் அதைக்களைவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். ஆனால் பிரச்சினையைத் தள்ளிப் போட அது பெரிதான சிக்கல்களுக்கு வழிவகுக்கும். ஆதலால் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை உடனடியாக எடுக்க வேண்டும்.

அனைத்துக் கிராமியப் பாடசாலை மாணவ மாணவியருக்கான இலவச பேருந்து சலுகைத்திட்டம் தாய்,தந்தையை இழந்த கிராம மாணவர்களை இனங்கண்டு, பொதுத் துறை நிறுவனத்தில் குறிப்பிட்ட தொகையை அவர்களின் நல்வாழ்வுக்காக வைப்பிலிட தாராள மனம் படைத்தோர் முன்வர வேண்டும்.

எனவே தொகுத்து நோக்கும் போது கல்வி என்பது மாணவர்களுக்கு அறிவைத் தந்து அவர்களை ஆற்றலோடு வளர்த்தெடுக்கின்றது. ஆதலால் இதனை மாணவர்களும் பெற்றோர்களும் கல்வித்துறை சார்ந்தவர்களும் கூட்டாக இணைந்து சகல மனித, பௌதீக வளங்களையும் பயன்படுத்திச் சிறப்பான திட்டங்களைத்தீட்டி, அத்திட்டங்களை அமுல்படுத்தி, கிராமிய மாணவர்களும் சிறப்புடன் வாழ்வதற்கு உதவுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கல்வியின் போக்கும் சீர்மியத்தின் தேவையும்

திருமதி. சு.பாலகுமார்
ஆசிரியர்,
B.F.A,MA,
யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்

இலங்கை கல்வியின் புதிய போக்கில் பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் சீர்மியத்தின் தேவை நன்குணரப் பட்டுள்ளமை. கண்கூடாகத தெரிகிறது. குறிப்பாக வடமாகாணத்தில் மாணவர்களது நெறிபிறழ்வான நடத்தை கோலங்களை இதற்கு முன்னுதாரணமாக கொள்ளலாம். பாடசாலை மாணவர்களது கல்வியில் புதிய கலைத்திட்டங்களுக்கு ஏற்ப பாடங்கள் இலகுபடுத்தப் பட்டுள்ளன. ஆனால் கல்வியில் பெறுபேறுகள் வீழ்ச்சித் தன்மையை கோடிட்டு காட்டுகிறது. உதாரணமாக கல்வி பொது தராதர சாதாரண தரப் பெறுபேறு இதற்கு சான்று பகர்கிறது. இதற்கு காரணம் மாணவர்கள் கல்வியில் ஈடுபாடு காட்டாமைக்கு காரணம் அவர்களது மன உளைச்சல் விரக்தி போன்றன காரணமாக அமைகின்றன. மாணவர் மையக் கல்விச் செயற்பாடுகளில் கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் மாணவர்களை மையமாகக் கொண்டு இடம் பெறுதல் வேண்டும். மாணவர்களின் தேவைகள், ஆற்றல்கள், இயலுமைகள், விருப்பு வெறுப்புகள் , பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். கற்பித்தலை விட கற்றல் முக்கியத்துவம் பெறவேண்டும். மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். மாணவர்களின் சுதந்திரத்திற்கும் இடமளிக்கவேண்டும். செயன்முறைக் கற்பித்தலுக்கு முக்கியமான இடம் கொடுக்கப் படல் வேண்டும். ஆசிரியர் வளவாளராகச் செயற்படும் வேளையில் ஆசிரியர் மாணவர் இருவழித் தொடர்பு உயர்ந்த மட்டத்தில் இருக்க வேண்டும். குறிப்பாக ஆசிரியர்கள் மாணவர்களது கல்விச் செயற்பாடுகளில் கவனம் செலுத்தும் அதே அளவு வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்குவதிலும் தங்களாலான செயற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

'பிள்ளை ஒரு சிறிய மனிதன் அல்ல. அவன் காண்பது சிந்திப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வது செயற்படுவது வயது வந்தோரை விட வேறுபட்டதாகும்." என உளவியலாளரான ரூசோ குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது. "பிள்ளைகள் விளையாட்டின் மீது காட்டும் பிடிப்பை கற்பித்தலுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்." என புரோபல் என்ற உளவியலாளர் குறிப்பிடுவதைக் காணலாம். மொண்டிசோரி அம்மையால் கல்வி பற்றி குறிப்பிடுகையில் "மாணவருக்கும் சுயமாகக் கற்பதற்குத் தேவையான சுதந்திரமும் சூழலும் உருவாக்கப்பட வேண்டும் என கூறுகிறார். மாணவர்களுக்கு நெருக்கீடு இல்லாத கல்வியை வழங்க வேண்டும் என உளவியலாளர் கூறுவது மிகவும் பொருத்தமானது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் சிறுவர் உரிமைகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு பிரதான உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றது. இவ்உரிமைகள் வருமாறு:

1) கல்வியில் சம வாய்ப்புப் பெறும் உரிமை.
2) பாடசாலையின் நற்பெயருக்கு பாதிப்பேற்படா வண்ணம் பத்திரிகை சுதந்திரம்.
3) தாம் விரும்பும் கழகம் மன்றங்கள் போன்றவற்றில்அங்கத்தவராயிருக்கும் உரிமை.
4) தன்னை வெளிப்படுத்தும் உரிமை.
5) தண்டனை வழங்கும் முன் அதற்கான காரணங்களை அறியும் உரிமை.
6) தமக்கான இரகசியங்களை கொண்டிருக்கும் உரிமை.
7) தமது சொந்த மதத்தினைப் பாடசாலையில் பின்பற்றும் உரிமை.
8) சிறுவர் துஸ்பிரயோகத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை.
9) ஆசிரியரால் துன்புறுத்தப்படவோ, உடல் பாதிப்புகளை ஏற்படுத்தவோ முடியாத உரிமை போன்றவை மாணவர்களுக்கு கிடைத்துள்ளன. ஆனால் இவ் உரிமைகள் இலங்கையில் கல்வியில் மாணவர்களுக்கு பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதில் நூறுவீத வெற்றி காணவில்லை என்றே கூற வேண்டும். இவ்வாறு சட்டங்கள் இருந்தாலும் இவை செயல்வடிவம் பெறவில்லை என்றே கூற வேண்டும்.

இந்த வகையில் சீர்மியத்தின் தேவையும் முக்கியமும் இன்று உணரப்பட்டுள்ளது. இதனால் அகல் விரி சீர்மியம் மற்றும் தொடர் ஆற்றுப்படுத்தல் சேவை (Comprehensive counselling and career Guidance service) பள்ளிக் கூட முறைமையில் கொண்டு வரப்படும் அனைத்து மாணவர்களுக்கும் பயன்படக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் இது ஒழுங்கமைக்கப் படும். மாணவர்கள் பல்வேறு விருத்தி சார்ந்த நெருக்கீடுகளை எதிர் கொள்கின்றார்கள். பல்வேறு மன வெழுச்சிக் குழப்பங்களுக்கு அவர்கள் முகம் கொடுக்க நேரிடுகின்றது. கற்ற லும் கிரகித்தலும் நினைவில் நிறுத்த அவர்கள் பல்வேறு இடர்பாடு களை எதிர்கொள்கின்றனர். பல் வேறு பொருத்தப்பாட்டு பிரச்சினை கள் (Adjust -ment problem) மாண வர்களால் எதிர் கொள்ளப்படு கின்றன.

இவ்வாறான பல்வேறு தாக் கங்களுக்கும், நெருக்கீடுகளுக்கும், குறுக்கீடுகளுக்கும், அவலங்களுக் கும் உள்ளாகும் மாணவர்களுக்கு பள்ளிக்கூடமட்டத்தில் உதவு வதற்குப் பொருத்தமானதும் நெகிழ் ச்சி கொண்டதுமான அமைப்புக்கள் இன்றைய பாடசாலை ஒழுங்கமை ப்பில் இல்லை. இந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு அகல்விரி பண்புடைய சீர்மியம் மற்றும் தொடர் தொழில் வழிகாட்டல் சேவை துணை செய் யும் இத்துறையில் ஆசிரியர்களுக் குப் பயிற்சி தருவதற்கான திட்ட ங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. முதலில் இத்துறையில் உளச்சார்பு கொண்ட ஆசிரியர்களைத் தெரிந்து எடுத்து பயிற்சி வழங்கப்பட்டு, பாட சாலை யில் அவர்கள் மாணவர்களின் தேவையை உணர்ந்து உள ஆற்றுப் படுத்தல் செய்ய வேண்டும் தொடர் தொழில் ஆற்றுப்படுத்தல் சீர்மியம் முதலியவை அனைத்தும் பாட சாலைகளுக்கும் அனைத்து மாண வர்களுக்கும் கிடைக்கச் செய்தல், புதிய கல்விச் சீர்திருத்தத்தின் நோக்கமாக உள்ளது. குழந்தை வளர் ந்து நிறைவு பெறும் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களது தேவை களுக்குரிய பொருத்தமான கல்வி ஆற்றுப்படுத்தல், தொடர் தொழில் ஆற்றுப்படுத்தல் சீர்மியம் முதலி யன வழங்கப்பட வேண்டும். இவ் ஆற்றல் மாணவர்கள் நல்ல சீராக்கங் களை முன்னெடுக்கவும் நெருக்கு வாரங்களைத் தவிர்க்கவும் கூடியதாக இருக்கும். இந்த செயற்பாடுகள் பெற்றோரது நெருக்குவாரங் களையும் பதகளிப்பையும் தணிப்ப தற்குத் துணை செய்யும். மாணவர் களோடு இணங்கிச் செல்லக் கூடிய கல்வியை வழங்கும் பொழுது மாணவரும் பெற்றோரும் உள நிறைவு அடைவர். அத்துடன் ஆற்றுப்படுத்தல் சேவையை வழங்கு வதற்கு பாடசாலை மட்டத்தில் அனு பவமும், புலமையும், அர்ப்பணிப் பும் கொண்ட ஆசிரியர் குழாம் அமைக்கப்பட வேண்டும். இது ஆசிரியர்களுக்கு புதிய பரிமாணங் கள் வளர்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

மேலும் சீர்மியத்திற்கு வலுச் சேர்ப்பதற்கான செயற்பாடுகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்தொழில் ஆற்றுதல், சீர்மியத்திற்கு வளப்படுத்தும் பொருட்டு இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் பாடசாலை மட்டத்தில் விரிவுபடுத்தி, குழுச்செயற்திட்டங்கள் கூட்டுறவு வேலைத்திட்டங்கள், தலைமைத்துவ மேம்பாட்டு நடவடிக்கைகள், மனம் சுகம் தரும் வேலைத் திட்டங்கள், விழுமிய மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் இக்கலைத் திட்டத்தில் உள்ளடங்கப்பட்டுள்ளன. புதிய கலைத்திட்டத்தின்படி மாணவர்களுக்கு காலைக் கூட்டுக் பிரார்த்தனைச் செயற்பாடுகளில் வழங்கப்படும் நற்சிந்தனைகள் மற்றும் உடல் இயக்கச் செயற்பாடுகள் என்பவற்றின் ஊடாக உடற்சம நிலையைப் பேணும் செயற்பாடு மேற்கொள்ளப்படுவது இதற்குச் சான்றாகும். மேலும் மாணவர்களுக்கு யோகாசனம், தியானம் மனதை ஒரு முகப்படுத்தும் செயற்பாடு போன்றவையும் முக்கியம் பெறுகிறது. இக்கலைத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாணவனுக்கும் நுண்கலைச் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். அதாவது நடனம், நாடகம், சங்கீதம், சித்திரம் போன்ற கலைகளை பயில்வதால் மாணவர்களது உளம் ஆற்றுகைக்குட்படுத்தப் படுகிறது எனக் கூறப்படுகிறது. உளப்பாதிப்பு ஏற்பட்ட மாணவனை சீர்படுத்த உதவுவது சித்திரம் எனின் மிகையாகாது. உளம் பாதிப்பு ஏற்பட்ட மாணவனிடம் சித்திரம் வரையக் கொடுக்கும் பொழுது மாணவன் பாவிக்கும் வர்ணங்களை வைத்துக் கொண்டே அவன் எவ்வாறான உளப் பாதிப்பை எதிர்கொண்டான் எனக் கூற முடியும். சித்திரம் வரைய வரைய அவனது உளம் ஆற்றுகைப்படுத்தப் படும் எனக் கலைத்திட்டம் குறிப்பிடப்படுகிறது. ஆரம்பக்கல்வி நிலை முதல் பொதுக் கல்விக் காலம் முழுவதும் சரியான விழுமியங் களையும் நல்லொழுக்கங்களையும் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தியுள்ளது. சீர்மியத்தை ஒரு பாடத்தினூடாகவோ அல்லது ஒரு செயற் பாடுகளின் ஊடாகவே கற்பிக்காமல் பாடசாலை காலம் முழுவதும் அனைத்துப் பாடங்களின் ஊடாகவும் கற்பிக்கச் சிபார்சு செய்யப்பட்டது. இதன் மூலம் சமூக ஒருமைப்பாடு, சமூக நீதியும், சமூகப் புரிந்துணர்வும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. எனவே பாடசாலைக் கல்வியும் சீர் மியத்தின் தேவை நன்குணரப் பட்டு இணைக்கலைத்திட்டம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இச்சீர்மியம் பாடசாலைக் கல்வியுடன் மட்டுமன்றி, மாணவர் களின் விழுமியப் பண்புகளிலும் நல்ல முன்னேற்றகரமான செயற் பாடுகளையும் மேற்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்:**

1) கலாநிதி. சபா. ஜெயராசா, கல்வியில் புதிய சீர்திருத்தங்கள், அகவிழி வெளியீடு, 2006.

2) கலாநிதி.சபா. ஜெயராசா, இலங்கையின் கல்வி வரலாறு, சேமடு பதிப்பகம், 2008

3) திருமதி. ஜெயமலர் தியாகலிங்கம், இலங்கைக் கல்வி முறை வளர்ச்சி, மலர் பதிப்பகம், 2009.

4) திரு.வி. கருணலிங்கம் -
கலாநிதி. செ. திருநாவுக்கரசு - கல்வியின் அடிப்படைகள் - 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறையில் மாணவர்களின் ஒழுங்கீன நடத்தைகளை வெற்றி கொள்ளல்



திரு.சின்னையா சிவேந்திரன்
ஆசிரியர்,
B.A,(Hons),M.A (Sp.in.Geog),PGDE(Merite)
யா/வேலணை மத்திய கல்லூரி

ஒரு பாடசாலையின் நம்பிக்கையையும் நற்பெயரையும் கட்டியெழுப்புவதில் பெரும்பங்கினை வகிப்பவை சிறந்த வினைத்திறனும் விளைத்திறனும் கொண்ட வகுப்பறை முகாமைத்துவ செயற்பாட்டில் தான் அதன் வெற்றி தங்கியுள்ளது. கற்றல்- கற்பித்தல் இடம் பெறும் களமாக, ஆசிரியர் - மாணவர் இடைவினை கொள்ளும் இடமாக மாணவரிடையேயான சகபாடித் தொடர்புகள், கூட்டுப் பொறுப்பு, புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு வேலைப்பகிர்வு முதலானவை நிகழும் இடமாகப் பார்க்கப்படுகின்றது.

ஆனால் அண்மைக் காலங்களில் வகுப்பறை முகாமைத்துவதில் ஏற்பட்டுவரும் இடர்பாடுகள் ஆசிரியர் - மாணவர் இடைவினையுறவினைப் பெரிதும் பாதித்து வருகின்றன. அடிப்படைப் பிரச்சினைகள் வகுப்பறையில் இருந்தே எழுவதால் அதனை உரிய வழிவகையில் ஆசிரியர்கள் கட்டுப்படுத்தவோ முகாமை செய்யவோ, சுமுகமான தீர்வு காணவோ முடியாதவிடத்து சிறுமுரண்பாடுகளாய் வகுப்பறையில் தோன்றி, ஈற்றில் அவை பூதாகரமாகிப் பாடசாலை சமூகத்தையே பாதிக்கும் நிலைக்கு இட்டுச் செல்வதனை இன்று காணமுடிகின்றது.

வகுப்பறை மட்டத்திலான ஒழுங்கை மாணவர் மத்தியில் நிலைநாட்டுவதில் கடந்த காலங்களில் ஆசிரியர்கள் எதிர்நோக்கிய சவால்களை விட இன்றைய ஆசிரியர்கள் கூடியளவான அழுத்தங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மாணவர்கள் ஒழுங்கீனமான நடத்தைகள் என்றால் என்ன என நோக்கும் போது வகுப்பறையில் ஆசிரியர் கற்பித்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மாணவர்கள் பாடத்தில் கவனம் செலுத்துவதனை விடுத்து, கற்றலுக்குப் புறம்பான செயற்பாடுகளில் ஈடுபடு வதாகும். உதாரணமாக மாணவர்கள் கதைத்தல், சத்தம் போடுதல், விசிலடித்தல், ஓடித் திரிதல், சிரித்தல், கதிரை,

மேசைகளில் தட்டுதல், சகமாண வரை அடித்தல், கேலி செய்தல், பொருட்களைச் சேதப்படுத்தல், நித்திரை கொள்ளல் என கற்ற லுக்கு புறம்பான செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. மாணவ னின் இத்தகைய ஒழுங்கீனமான நடத்தைகள் வகுப்பறைகளில் ஏற்படு வது சகல பாடசாலைகளிலும் நடை பெறுவது ஒரு பொதுவான இயல் பாகும். இவற்றினை முழுமையாகக் குறைத்துவிட முடியாது. இருப்பி னும் விதிமுறைகள், சரியான திட்ட மிடல், சூழலை சாதகமாக்கி ஒழுங்க மைத்தல், கற்றல் - கற்பித்தல் நிலை யில் மாற்றத்தைக் கொண்டு வருதல் மூலம் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நலிவு நிலைக்குக் கொண்டு வருவதன் மூலம் கற்றல் கற்பித்த லிலும் ஆசிரியர் மாணவர் இடை வினையுறவிலும் முன்னேற்றம் காண முடியும்.

ஆனால் இவ்வாறான அணுகுமுறைகளைக் கையாண்டு மாணவர்களது ஒழுங்கீன நடத்தை களை வெற்றி கொண்டு கற்பிக்கும் திறனை, வல்லமையை இன்றைய ஆசிரியர்கள் கொண்டிருக்கின்றார் களா? என்பது கேள்விக்குரியதாக வுள்ளது. ஒழுங்கீனமான நடத்தை களை மாணவர்கள் வெளிக்காட்டும் சந்தர்ப்பத்தில் சில ஆசிரியர்களால் எடுத்த எடுப்பிலேயே உடல் ரீதி யான சரீரத் தண்டனைகள் வழங்கப் படுகின்றபோது, மாணவனுக்கும் ஆசிரியருக்கும் இடையில் உறவில் விரிசலை ஏற்படுத்துவதுடன் ஏனைய மாணவர் மத்தியில் ஒருவித பய உணர்வையும், வெறுப்பினையும் விருப்பத்தகாத விளைவுகளையும் ஏற்படுத்தி விடுகின்றன. அதேபோல ஆசிரியரால் மாணவனின் முன் னேற்றம் கருதி எடுக்கப்படுகின்ற ஒழுக்காற்று வரையறைக்குட்பட்ட செயற்பாடுகளைக் கூட பெரும் பிரச்சினையாக்கிக் கொள்ளும் மாணவர்களும், பெற்றோர்களும், வெளிச் சமூகமும் இன்று இருக்கின் றன என்பதை மறந்து விட முடியாது.

உளவியல் ஆய்வாளரின் கருத்துப்படி 25 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கும் இடைப்பட்ட ஆசிரியர்கள் அவர்களின் வாழ்க்கைத் தொழிலில் திருப்தியற்றவர்களாகவே இருக்கின்றனர். இதற்கு முக்கிய காரணங்களுள் ஒன்றாக மாணவர்கள் வகுப்பறையில் நடந்து கொள்ளும் ஒழுங்கீனமான நடத்தைகளும் அதன் போது ஏற்படும் கசப்பான அனுப வங்களின் விளைவே எனக் குறிப்பிடு கின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் மாணவர்களிடத்தில் வகுப்பறையில் அதிகரித்துக் காணப்படும் ஒழுங்கீன மான நடத்தைகளைக் கையாண்டு அவற்றுக்கான தீர்வினைக் காணும் ஆற்றல் ஆசிரியர்களிடத்தில் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

சவாலாகவே உள்ளது. இதற்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

❖ ஆசிரியர் ஒரே நேரத்தில் பல்வேறுபட்ட பணிகளைப் பாடசாலைகளில் நிறைவேற்ற வேண்டி இருத்தல்.

❖ ஆசிரியர்களுக்கான கடமைகளும் பொறுப்புக்களும் அதிகரித்துக் காணப்படல்.

❖ மாணவர்களின் பல்வகைத் தன்மையை சரியான முறையில் இனங்காணமுடியாமல் இருத்தல்.

❖ பௌதீகச்சூழல், கற்றல் வளங்கள், ஏனைய வளங்களைப் பெற்றுக் கொள்வதில் காணப்படும் நெருக்கடிகள்.

❖ மாணவர்களின் எண்ணிக்கை அளவுக்கதிகமாக இருத்தல்.

❖ மாணவர்களின் ஒழுங்கீன நடத்தைகளை இனங்கண்டு வெற்றி கொள்ளக்கூடிய உளவியல் கோட்பாடுகள், கற்றல் கொள்கைகள், கல்வித் தத்துவங்கள் முதலானவற்றை ஆசிரியர்கள் அறிந்திருக்காமை.

❖ சில ஆசிரியர்கள் சர்வாதிகாரத் தலைமைத்துவப் பாங்கிலிருந்து சனநாயகத் தலைமைத்துவப் பாங்கிற்கு மாற்றிக் கொள்வதில் காணப்படும் இடர்பாடுகள்.

❖ புதிய சுற்றுநிருபங்கள், கோட்பாடுகள், கல்விமாற்றங்கள், கல்வி தொடர்பான உலகளாவிய செந்நெறிகளை அறிந்திருக்காமை, சந்தர்ப்பமில்லாமை.

❖ ஒழுங்கீன நடத்தை கொண்ட மாணவர்களால் ஏற்படும் தேவையற்ற தலையீடுகள், நிர்வாகப் பிரச்சினைகள் முதலானவற்றைத் தவிர்ப்பதற்காக ஒதுங்கிக் கொள்ளல்.

❖ ஆசிரியரின் குடும்பச்சுமை, சமூக நெருக்கடிகள், பொருளாதார நெருக்கடிகள், உடல், உளவியல் சார் காரணிகளின் தாக்கம்.

வகுப்பறையில் மாணவர்கள் ஒழுங்கீன நடத்தைகளை வெளிக்காட்டுவதற்கான சந்தர்ப்பங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

❖ மாணவரைக் கவரத்தக்க வகையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் அமையப் பெறாமை.

❖ உரிய முறையில் பாடத்தினைத் திட்டமிடாது ஆயத்தமற்று வகுப்பறைக்குச் சென்று கற்பித்தல்.

❖ மாணவர்களின் கவனவீச்சைக் கருத்திற் கொள்ளாது கற்பிக்க முற்படுதல்.

❖ ஆசிரியர்கள் மாணவர்களை உரிய முறையில் கண்காணிக்க தவறுதல்.

❖ கடினத்தன்மை கொண்ட சலிப்பை ஏற்படுத்தக்கூடிய கற்பித்தல் முறைகளைக் கையாளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ வகுப்பறைக்கு ஆசிரியர் நேரம் பிந்திச் செல்லுதலும் பாடவேளை முடிவடைவதற்கு முன்னேரே வெளியேறுதலும்.

❖ அளவுக்கதிகமான முறையில் மாணவரிகளிடம் காட்டும் நட்பு அல்லது வெறுப்புணர்வு.

❖ மாணவர்களின் ஒழுங்கீனமான நடத்தைகளின் போது ஆசிரியர் சாரீத்தண்டனையை வழங்க முற்படுதல்.

❖ மாணவர்களின் ஒழுங்கீனமான நடத்தைகளைத் தடுத்துச் சமாளிக்கும் ஆற்றலைக் கொண்டிருக்காமை.

❖ கற்பித்தலில் மட்டுமே கண்ணாயிருத்தல், தன்கருத்துக்களை மாணவர் மத்தியில் திணிக்க முற்படுதல்.

❖ வகுப்பறையில் மாணவனுக்குப் பொருத்தமான வேலைப் பகிர்வினை வழங்கத் தவறுதல்.

❖ தன்னால் இந்த வகுப்பறையில் கற்பிக்கமுடியாது என்ற மனநிலை ஏற்படும் போது.......

❖ வகுப்பறை அளவுக்கதிகமான மாணவர்களைக் கொண்டிருத்தல்.

❖ கவர்ச்சிகரமான முறையில் - கற்றல் - கற்பித்தல் இடம் பெறாமை. உதாரணமாக ஆசிரியரின் நடை, உடை, கற்பிக்கும் தொனி, நடிபாங்கு, கம்பீரமாகப் பேசுதல் முதலானவற்றை விடுத்து கதிரையில் இருந்தவாறு வாசித்தல். தனக்குத்தானே முணு முணுத்தல், மெல்லிய குரலில் கதைத்தல்....

❖ வகுப்பறைச்சூழலை கருத்திற் கொள்ளாது கற்பிக்க முற்படுதல். உதாரணமாக அதிக சத்தம், அதிக வெளிச்சம், காற்றோட்டமற்ற வகுப்பறை, இருட்டான இடம், இடப்பற்றாக்குறை.

❖ சகல மாணவருக்கும் உரிய பின்னூட்டல், கண்காணிப்பை வழங்கத் தவறுதல்.

❖ ஒவ்வொரு மாணவனுடைய குடும்பம், பொருளாதார நிலை, உடல், உளநிலை ஆகியவற்றை கருத்தில் கொள்ளாது ஆசிரியர் இருத்தல்.

மேற்கூறப்பட்ட இவ்வாறான காரணங்களுக்கு யார் காரணமாக உள்ளார் என அறிய முற்படும் போது அது சுட்டிக்காட்டப்படுகின்றது. பெற்றோர், சமூகச்சூழல், இயற்கைச் சூழல், அரசியல் சூழல் என பல காரணிகள் இருந்தாலும் 95% இற்கும் மேற்பட்ட பொறுப்பைக் கூறவேண்டியவர்களாக ஆசிரியர்களே உள்ளனர். ஆசிரியர்களுக்கே இச்சவாலான உலகத்தினை வெற்றி கொள்வதற்கான அறிவு, திறன், மனப்பாங்கு கொண்ட மாணவரை உருவாக்க வேண்டிய அவசியப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஆசிரியர்களின் கைகளி லேயே பெரிதும் தங்கியுள்ளது.

மாணவர்களின் வகுப்பறையில் ஒழுங்கீனமான நடத்தைகளை குறைத்து வெற்றிகரமான வகுப்பறை முகாமையாளராக மிளிர வேண்டிய தேவை ஆசிரியருக்கு உள்ளது. அதற்காக பின்வரும் செயற்பாடுகளை கைக்கொள்வது அவசியமாகின்றது.

❖ சிறந்தமுறையில் பாடத்தை திட்டமிடல் - எதை மாணவருக்கு கற்பிப்பது என்பதனை வரையறை செய்தலும்.

❖ மாணவரது உளவியல் சார் மனநிலையைக் கருத்திற்கொண்டு அவர்களது இரசனைக்கு ஏற்ப புதிய கற்றல் - கற்பித்தல் நுட்ப முறைகளைக் கையாளுதல்.

❖ நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தி சகல மாணவருக்கும் விளங்கக் கூடியவகையில் கற்பித்தல். அதாவது நவீன பல் ஊடகப் பாவனையை - விடயத்தினைப் பாடமாகவும் ஒலியாகவும் (Sound), எழுத்துருவிலும் ஒரே நேரத்தில் பயன்படுத்திக் கற்பிக்கும் திறனைக் கொண்டிருத்தல்.

❖ கற்றல் செயற்பாட்டை இலகு நிலையில் இருந்து படிப்படியாகக் கடினநிலைக்கு கொண்டு செல்லல்.

❖ மாணவர்களுக்கான வேலைப் பொறுப்பினை உரியமுறையில் பகிர்ந்தளித்தல்.

❖ நேரமுகாமைத்துவத்தைச் சரியாகக் கடைப்பிடித்தல்.

❖ மாணவர்களின் நடத்தைகளை ஒரே நேரத்தில் நன்கு அவதானிக்கும் திறனை ஆசிரியர் கொண்டிருத்தல்.

❖ ஆசிரியர்களுடைய இலக்குகள் தீர்மானிக்கப்படாமல் இலக்குகளை அமைத்துக் கொள்வதில் மாணவர்களின் பங்கினை அதிகரித்தல்.

❖ ஒழுங்கீன நடத்தைகளையுடைய மாணவர்கள் மீது விசேட கவனத்தைச் செலுத்துதல். அவர்கள் மீது திட்டமிடப்பட்ட உதாசீனம், சமிக்ஞைத் தலையீடு, அண்மித்த தலையீடு, தொடு நிலைக் கட்டுப்பாடு, அண்மித்த கட்டுப்பாடு முதலான படிமுறை நுட்பங்களைப் பயன்படுத்தல்.

❖ பாடவேளையின் போது தவறான ஒழுங்கீன செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவரை பெயர் கூறி அழைத்தல், கேள்விகேட்டல்.

❖ கற்றலுக்கு இடையூறு செய்யும் நடத்தையுடைய மாணவர்கள் தனது நடத்தையால் ஏனைய மாணவர்களின் கற்றல் நிலை எவ்வாறு பாதிக்கப்படுகின்றது. என்பதனை எடுத்துக்கூறுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ வகுப்பறையில் மாணவர்களுக் கான தெரிவுச்சுதந்திரத்தை வழங் குதல்.

❖ மாணவனுடைய அடிப்படைத் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்தல்.

❖ சரீரத் தண்டனைகள், உளநெருக் கீடுகளை ஏற்படுத்தல் முதலான முறையை விடுத்துத் தவறுகளைச் சுட்டிக்காட்டி, கற்பித்தல் செயற் பாட்டை மகிழ்ச்சிகரமானதாக சுதந்திரமாக, நெகிழ்வுப் போக்கை கடைப்பிடித்தல்.

❖ ஆசிரியர் தனது தலைமைத்துவ வடிவங்களில் மாற்றங்களைக் கொண்டுவருதல், சர்வாதிகார தலைமைத்துவ பாங்கில் இருந்து சனநாயகத் தன்மை கொண்ட தலைமைத்துவத்திற்கு மாற்றிக் கொள்ளல்.

❖ வகுப்பறைச்சூழலை மாற்றிக் கொள்ளல், பௌதீகச்சூழலை சிறப்பாக வடிவமைத்தல்.

ஆகவே மாணவர்கள் மன அழுத்தங்களுக்கு உட்படாத ஒரு கற்றல் சூழலை ஏற்படுத்த வேண்டும். கற்கும் வகுப்பறைச்சூழல் மாணவர் விரும்பும் இடமாகவும் அமைய வேண்டும். வகுப்பறை மகிழ்ச்சி நிறைந்ததாகவும் பரஸ்பர இடை வினையுறவு கொண்டதாகவும் சிறுசிறு பிரச்சினைகளைக் கூட தாமே தீர்க்கும் ஆற்றலை மாணவர் களிடத்தில் ஆசிரியர் வளர்க்க வேண்டும். மாணவர் நலன் காப்ப தாகவும், நடுநிலைமையுள்ளதாகவும், திறன்களை விருத்தி செய்யக் கூடிய தாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறான தூரநோக்குக் கொண்ட திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை கொண்டு செல்லும் பெரும் பொறுப் பும் கடமையும் ஆசிரியர்களிடமே யுள்ளது. வகுப்பறையில் ஒழுங்கீன மான நடத்தைகளை வெளிக்காட் டும் மாணவர்களை இனங்கண்டு திறம்படச் செயற்படுத்துவதே ஒரு வாண்மைத்துவமுள்ள ஆசிரியருக்கு பெருமை சேர்ப்பதாக அமையும்.

**உசாத்துணை நூல்கள்:**

1. கலாநிதி பக்கீர் ஜஃபார். கா.ப,(2004), வகுப்பறை முகாமைத்துவம், என்.ரீ.அக்ரம் ஸ்பீட். கிரபிக் போண்ட், அக்கரைப்பற்று.
2. பேராசிரியர் சின்னத்தம்பி.மா.(2012), ஆசிரியர் வழிகாட்டி,குமரன் புத்தக இல்லம்,கொழும்பு -08
3. முதிர்முகை கல்வியியல் ஆய்விதழ் -02, (2015), உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கரிகணன்பிறைவேட் லிமிட்டட், கே.கே.எஸ்,வீதி, யாழ்ப்பாணம்.
4. அகவிழி, பார்வை - 03 பக்கம் (07 - 16) மே -2007
5. அகவிழி - 05, பார்வை - 54 பக்கம் (03 -06) பெப்ரவரி - 2009
6. அகவிழி -06 , பார்வை - 63 பக்கம் (03 -04) நவம்பர் - 2009
7. ஆசிரியம் - இதழ் 37 - 38 (ஜனவரி - பெப்ரவரி) பக்க (19 - 24)
8. கடல் - கல்வியல் உளவியல் - சமூகவியல் ஏடு - இதழ் 12 சித்திரை - ஆனி -2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியப்பணி

திரு.கு.குணசீலன்
ஆசிரியர்,
யா/காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை

மனிதனைச் சிந்திக்கும் பிராணி என தத்துவஞானி ஒருவர் குறிப்பிட்டார். மனிதனிற்குப் பாரம் பரியமாகத் தரப்படுகின்ற வரை விலக்கணம் இது. காலத்திற்குக் காலம் முக்கியத்துவம் நோக்கி அறிஞர் சமுதாயம் போற்ற வேண் டிய நிலையில் உள்ளவர்களை போற்றிக் கொண்டே வருகின்றது. போற்றப் பட வேண்டியவர்கள் வரி சையில் ஆசிரியர்கள் காணப்படு கின்றார்கள். அத்தகைய ஆசிரியர் களின் பங்கு பணிகள் பற்றிச் சற்றுச் சிந்திப்போம்.

ஆசிரியப்பணியின் சிறப்பை அறிய வேண்டுமேயானால் சமுதாய த்தில் ஆசிரியர்கள் என்போர் எத்த கையவர்கள்? ஆசிரியர்களின் சமுதா யப் பங்களிப்பு எத்தகையது? மாண வர்களுக்கும் ஆசிரியர்களுக்கு மிடை யிலான உறவு எத்தகையது? நாம் ஏன் ஆசிரியர்களைப் போற்ற வேண்டும்? இன்று ஆசிரியர்களுக்கு சமுதாயத் தில் எத்தகைய பங்களிப்பு உள்ளது? போன்ற இன்னோரன்ன வினாக் களுக்கு விடை காண வேண்டும்.

சமுதாயத்தில் அஞ்ஞான இருள் அகற்றி ஞான ஒளி பரப்பும் உதயசூரியன்களாக நாம் ஆசிரியர் களை இனங் காணலாம். சமய உலகிலும் சரி விஞ்ஞான உலகிலும் சரி மனம் கொள்ள வேண்டிய ஆசிரியர்கள் பரம்பரை ஒன்று வளர்ந்து கொண்டே வருகின்றது. கல்லால மரத்தின் கீழ் இந்து சமய குரு பாரம்பரியம் ஆரம்பமாகின்றது. அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் துளிர்த்த பௌத்த பாரம்பரியம் இன்று பெருவிருட்மாகின்றது. ரோம புரியில் ஆரம்பித்த கிறிஸ்தவம் இன்று சர்வதேச அரங்கிலே பெரும் பான்மையினைக் கொண்ட மதமாக மிளிர்கின்றது. மக்காவிலே நபிகள் நாயகம் அவர்களால் அடியெடுத்து வைக்கப்பட்ட சிந்தனைகள் இஸ்லாம் என்ற பெரு நதியாக வற்றாது ஓடிக்கொண்டிருக்கிறது. இவ்வாறு சமய உலகம் ஒரு புறம் இருக்க தத்துவ உலகத்திலே சோக் கிரட்டீஸ், பிளேட்டோ முதலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோரைக் கொண்ட குரு பரம்பரை தொடர்கின்றது. இதே போல விஞ்ஞான உலகத்திலே தொலமி, கொப்பணிகஸ், முதலியோர் ஆரம்பித்த குரு பரம்பரை அயன்ஸ்ரீன் வரை வளர்ந்தமை எமக்குப் புரிகின்றது.

மேற்கிலும் சரி கிழக்கிலும் சரி ஆரம்பத்தில் கல்வி சமயத்தோடு தொடர்புடையதாகவே அமைந்துள்ளது. மேற்குலகில் கிரேக்க, இலத்தீன் இலக்கியங்கள் கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகள், சோக்கிரட்டீஸ், பிளேட்டோ முதலிய உலகத்தின் விசேட துறைகளாக அமைந்துள்ளது. கிழக்குலகில் சமஸ்கிருதம், சமயம் என்பன போதிக்கப்பட்டன. குறிப்பாக பாரதக் கண்டத்தில் திண்ணைக் கல்வியே முக்கியத்துவம் பெற்றது. இக்கல்வி முறையும் வர்ணப் பாகுபாட்டின் கட்டுப்பாடும் கல்வியை தனியுரிமையாக்கியது. ஆனால் கி.பி 6ம் நூற்றாண்டில் ஏற்பட்ட வைதீக, அவைதீக சமயப் போட்டிகள் கல்வியைப் பெருமளவிற்கு பரவலாக்கியது. மனிதனை மனிதனாக இனங்கண்டு இயற்கைச் சூழலிலே சமரசக் குரல் ஓசையில் அனைவரும் கற்கின்ற ஓர் இலட்சியத்தை தாகூருடைய "சாந்தி நிகேதனம்" முன் வைத்தது. கிறிஸ்தவ சமயத்தின் வருகையோடு மிசனறி பாடசாலைகள் தோற்றம் பெற்றன. மேலும் பரவலாக்கப்படுகின்றது. குறிப்பாக இலங்கையைப் பொறுத்த வரை W.W.கன்னங்கரா அவர்களால் இலவசக் கல்வி புகுத்தப்பட்டமையும், கட்டாயக்கல்வி முறை ஏற்படுத்தப்பட்டமையும் இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அறிவு நிலையில் மேலோங்கக் காரணமாகின்றது.

சமுதாயத்தில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான உறவு சிந்திக்க கூடியது. குளிர்காய் பவன் அணுகாதும் அகலாதும் தீக்காய்வதைப் போல மாணவர் ஆசிரியரோடு பழகுதல் வேண்டும். நிழல் எம்மைத் தொடர்வது போல ஆசிரிய மாணவ உறவு இருத்தல் வேண்டும். கற்பதில் ஆர்வம், மன அடக்கம், பணிவு, நல்லனவற்றைத் தெரியும் மனப்பாங்கு, மாணவர்கட்கு அவசியம், அன்னம் பாலும் நீரும் கலந்துள்ள நிலையில் பாலைப்பருகி நீரை விடுவது போல மாணவன் குணத்தை நாடி குற்றத்தை கைவிட வேண்டும். அன்னமாக இருக்க முடியாவிட்டாலும் சரி, அல்லிக் குடங்களாகவோ, ஆடுகளாகவோ, எருமைகளாகவோ, பன்னாடை களாகவோ மாணவர்கள் இருக்கக் கூடாது. மறுபுறம் ஆசிரியர்கள் கனிவு, கடமை உணர்வு, தெளிவு, தகுதி, பொறுமை முதலிய குணமுடையவராக இருத்தல் வேண்டும். சுருங்கக் கூறின் ஆசிரிய உலகம் தொழில் மகத்துவத்தை உணர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். மாணவர்கள் எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவான்" என்ற மனப்பாங்கோடு குருவை மதிக்கவும் நேசிக்கவும் செய்ந்நன்றி அறியவும் பழக வேண்டும்.

ஒரு சமுதாயத்தின் உயர் நிலை மாணவருடைய உயர்நிலை யைப் பொறுத்தே அமையும். ஒரு சமுதாயம் தன்னிறைவும், அமைதி, சமாதானம், சகோதரத்துவம் முதலிய பண்புகளில் மேனிலையும் அடைய வேண்டுமாயின் அறிவு நிலையில் உயரவேண்டும். ஆசிரியரும், கல்விக் கூடங்களும் சிறக்க வேண்டும். ஆசிரியர் உயர வேண்டுமாயின் அவர் சமுதாயத்தால் கௌரவிக்கப் பட வேண்டும். எனவே ஔவையார் "வரப்புயர" எனக் கூறியது போல சமுதாயத்தில் ஆசிரியர் உயர் அறிவு சிறக்க புத்திஜீவிகள் உள்ள சமுதாயம் மலரும். மதிப்போம் ஆசிரிய உலகத் துடன் இணைவோம். அறிவு மனம் பெற்று மண் உலகில் மகிழ்ச்சியை காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடன உருப்படிகளில் கீர்த்தனை



செல்வி.தமிழினி அமிர்தலிங்கம்
ஆசிரியர்,
B.F.A
யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்

நடன இசைக் கச்சேரிகளை களை கட்டுவதற்கென்றே உருவாக் கப்பட்டவை உருப்படிகள் ஆகும். அந்த வகையில் நடன இசைக் கச்சேரிகளில் கீர்த்தனை இடம் பெறுகின்றது. கீர்த்தனை என்பது இறை இசைப்பகுதியைச்(வைதீக கானத்தைச்) சார்ந்தது. இது நிருத்திய வகைகளுள் அடங்கும். கீர்த்தனை எனும் இசைப்பாடல் அல்லது புகழ்ச்சி எனப்பொருள் படும்.

கீர்த்தனைகள் சுருதிகளுக்கு முன்னோடியாகும். 15ம் நூற்றா ண்டில் தாளப்பாக்கம் அன்னமாச் சாரியார் அவர்கள் இதனை உருவாக் கினார். இவை பல்லவி, சரணம் என்ற அங்கங்களை உடையனவாகவே இருந்தன. பின் 16ம் நூற்றாண்டில் புரந்தரதாசர் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பிரிவுகளை அறிமுகப் படுத்தினார்.

இக்கீர்த்தனைகள் பக்திச் சுவை மிகுந்த பாடல்களாகும். இதன் சாகித்யம் இறைவன், இறைவியை புகழ்வதாகவோ, அவர்களிடம் மன்னிப்பு வேண்டுவதாகவோ, பக்தி நிரம்பியதாகவோ இருக்கும். புராண நிகழ்ச்சிகளைப் பற்றியும் பக்தர்களின் உணர்ச்சிகளைத் தெரிவிப்பதாகவும் கூட இருக்கலாம்.

இசையில் கீர்த்தனைகளை நோக்கும் போது, கீர்த்தனைகளில் ஸ்வரப் குதியை (தாதுவை) விட சொற்பகுதியே (மாதுவே) முக்கிய மானது என்று கருதப்படுகின்றது. இக் கீர்த்தனைகளில் பல்லவி, அனு பல்லவி, சரணம் என்ற மூன்று பகுதி கள் உண்டு. சில சமயங்களில் அனு பல்லவி இல்லாத கீர்த்தனைகளும் இயற்றப்படுகின்றன. பல சரணங் களைக் கொண்ட கீர்த்தனைகளும் உண்டு.

இந்தச் சரணங்கள் எல்லாம் ஒரே வகையான ஸ்வரப்பகுதியைக் கொண்டிருக்கும். சில சமயங்களில் பல்லவிக்குரிய ஸ்வரப்பகுதியைக் கொண்டிருக்கும் சாதாரண இசை யறிவு உள்ளவர்களும் கீர்த்தனை பாட இயலும். ஏனெனில் அவை எளிமையாகவும், பழக்கமான இராக ங்களில் அமைக்கப்பட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் சேர்ந்து பாடுவதற்கு ஏற்றதாக வும் இருக்கும்.

மேற்கூறியது போன்றுகீர்த்த னையை நடனத்தில் நோக்கும் போது கீர்த்தனைகள் பக்திச் சுவை மிகுந்த பாடல்களைக் கொண்டு ள்ளது. சில கீர்த்தனைகளின் பிற் பகுதி அனுபல்லவியின் வர்ண மெட்டை ஒத்ததாகவிருக்கும். சில ஒரு சரணத்தையும், இன்னும் சில ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்களை யும் கொண்டதாக இருக்கும். சில நேரங்களில் இவற்றின் சரணங்கள் தனித்தனி வர்ணமெட்டுக்களுடன் கூடியதாக அமைக்கப்பட்டிருப்ப தைக் காணலாம்.

இதன் அமைப்பு முறைகளுள் சில கீர்த்தனைகள் சொற்கட்டு அணிகளுக்கு அடவுகள் ஆடப்படு கின்றன. இவை உருப்படியின் அழகை கூட்டுவனவாக உள்ளன. சில சமயங்களில் கீர்த்தனைகளுக்குக் கற்பனாஸ்வரங்கள் பாடப்படும். அதற்குள் அடவுக் கோர்வைகள் ஆடப்படுகின்றன.

உருப்படிகள் இறைவன் மேல் பாடப்பட்டதாகவே காணப் படுகின்றன. சில கீர்த்தனைகள் வீர உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கவும், இன்னும் சில பெரியோர்களின் குணங்களை எடுத்துக்காட்டவும், நாட்டுவளம், இனத்தின் பெருமை, மொழி, கலை, கலாசாரம், ஆகிய வற்றைக் குறித்தும் பாடப்பட்டி ருக்கும். பொதுவாக ஆதி, ரூபக தாளங்களிலமைந்த கீர்த்தனை களைப் பெரும்பாலும் காணலாம். ஏனைய தாளங்களிலமைந்த கீர்த்த னைகளுமுண்டு.

பெரும்பாலான உருப்படிகள் சம எடுப்பாகவும் அரை இட எடுப் பாகவும் (அனாகத) காணலாம். சில கீர்த்தனைகளின் இறுதியில் இயற்றி யவர் பெயரையோ புனைப் பெயரை யோ முத்திரையாக சேர்த்திருப்ப தைக் காணலாம்.

கீர்த்தனைகளுக்கு முதன் முதலில் நடனமாடியவர் ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல் ஆகும். பிரபல தமிழ் கீர்த்தனை ஆசிரியரான கோபாலகிருஷ்ண பாரதியாரின் வசந்தா இராகத்தில் "அட தாளத்தி லமைந்த நடனமாடினார் வெகு நாகரிகமாகவே" எனும் கீர்த்தனை களுக்கு முதன் முதலில் அம்மையார் அவர்கள் நடனமாடினார்.

இதனைத் தொடர்ந்து தியாகராஜ சுவாமிகளின் "நார சீதா" எனும் கீர்த்தனைக்கும், ஷியாமா சாஸ்திரிகளின் "ஓ ஜகதம்பா" என்னும் கீர்த்தனைக்கும் நடன ஆக்கம் செய்தார். இவரை பின்பற்றி யே ஏனைய பரதநாட்டிய கலைஞ ரும் கீர்த்தனைகளுக்கு நடனமாடத் தொடங்கினார். இவரைத் தவிர கனபஞ்ச இராகங்களிலமைந்த தியா கராஜ சுவாமிகளின் "பஞ்சரத்ன" கீர்த்தனைகளுக்கு முதன் முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனமமைத்தவர் நாட்டிய கலா கேசரி வளவூர் இராமையாப் பிள்ளையே ஆகும். இவரே முத்துத் தாண்டவர் கோபாலகிருஷ்ண பாரதியார், பாபநாச சிவன், அருணாச்சல கவிராயர் ஆகியோரது கீர்த்தனைப் பாடல்களை அதிகமாகப் பரத நாட்டியத்தில் கையாண்டார்.

அது மட்டுமன்றி பழனி முருகன், திருப்பதி வெங்கடேஸ்வரர், தஞ்சை பிருகதீஸ்வரர் ஆகிய தெய்வங்களின் பெயரில் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் கீர்த்தனைகளைப் பாடி அவற்றுக்குத் தாமே நடன அமைப்புக்களையும் செய்து மேடையேற்றியும் உள்ளார்.

பரதநாட்டிய மரபிலே முதன் முதலாக கீர்த்தனைகளுக்கு நடனம் அமைத்தவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களே எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு கீர்த்தனைகளுக்கு பலரும் நடனம் செய்யத் தொடங்கவும், நடனத்திற்கு ஏற்றவாறு ஜதிகளும், ஸ்வரங்களும் சரணப் பகுதிகளில் வருமாறு அமைத்து மேலும் கீர்த்தனைகளைப் பலரும் நடனம் செய்யும் வண்ணம் இயற்றியுள்ளனர்.

கீர்த்தனைகளுக்கு நடன அமைப்பு செய்வதும் இலகுவானதாகவுள்ளது. ஏனெனில் இதில் பெரும்பாலும் பக்தி ரசமே வெளிப் படுவதனால் இதனை எல்லோராலும் செய்யக் கூடியதாகவுள்ளது. இறைவனது அருமை பெருமைகளைப் பற்றிப் பேசுவதோடு, அவரிடம் நாம் எவ்வாறு பக்தி கொள்ள வேண்டுமெனவும் மிகவும் எளிமையான சொற்களில் யாவருக்கும் விளங்கும் வண்ணம் இக்கீர்த்தனைகளுக்கு நடன அமைப்பு செய்யப்படுகிறது.

பெரும்பாலும் கீர்த்தனைகள் மத்திம காலத்திலேயே இயற்றப் படுகின்றன. சில கீர்த்தனைகளில் அதனை மெருகூட்டும் முகமாக அதன் நடைகளிலும் மாற்றம் காணப் படுகின்றது. உதாரணமாக பல்லவி, அனுபல்லவி இவையிரண்டும் சதுஸ்ரகதியிலமைந்து சரணம் திஸ்ர ஜதியில் அமைந்தும் வருகின்றது. உதாரணம் கமாஸ் இராகத்தில் ஆதி தாளத்திலமைந்த பாபநாசம் சிவன் இயற்றிய "இடது பதம் தூக்கி ஆடும்........" எனும் கீர்த்தனையை எடுத்துக் கொள்ளலாம்.

கீர்த்தனைகளை தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் பலரும் இயற்றியுள்ளனர். அருணாச்சலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார், தியாகராஜ சுவாமிகள், பாபநாசம், சிவன் போன்றவர்களின் கீர்த்தனைக்கு நடனம் ஆடப்படுகின்றது. வழுவூர் இராமையாப்பிள்ளை, பொன்னையாப்பிள்ளை போன்றோரைக் குறிப்பிடலாம்.

கீர்த்தனைகளைத் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளிலும் இயற்றியுள்ளனர். தமிழ்க் கீர்த்தனைகளை இயற்று வதில் முத்துத் தாண்டவர், மாரி முத்தப்பிள்ளை , அருணாச்சலக் கவி ராஜர் ஆகிய மூவரும் வல்லுநராகத் திகழ்ந்தனர். அருணாச்சல கவிராயர் இயற்றிய கீர்த்தனைகள் - இராம நாடக கீர்த்தனைகள், மாரி முத்தாப் பிள்ளை பஞ்ச ரத்தின கீர்த்தனை களை அருளிய இவர் பெரும்பாலும் இறைவனை பழிப்பது போல வசை பாடுவதாக அமைந்துள்ளது.

உதாரணம் என்ன பிழைப் பையா உந்தன் பிழைப்பு? இதை எண்ணிப்பார்த்தால் யாருக்குக் களிப்பையா? முத்துத் தாண்டவர் - இவருடைய கீர்த்தனைகள் பெரும் பாலும் தாளச் சொற்கட்டுக்களையும் தாளக்கோர்வைகளையும் காணக் கூடியதாகவுள்ளது.

உதாரணம்:

“ ஆடிய வேடிக்கை பார்....”

“நடிப்பவனே.........”

“ஆருக்குத் தெரியும்.......”

“நிருத்தம் செய்தாரே..........”

போன்ற கீர்த்தனைகளில் தாளச் சொற்கட்டுக்கள் இடம் பெற்றுள்ளன.

தியாகராசர், முத்துசுவாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி ஆகிய மூவரும் தெலுங்கில் கீர்த்தனைகளை இயற்றுவதில் வல்லுநர்களாக் காணப்பட்டனர். தியாகராசர் இவர் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளையே பெரும்பாலும் இயற்றியுள்ளார். இவரைத் தொடர்ந்தே கோபால கிருஷ்ண பாரதியாரும் பஞ்சரத்ன கீர்த்தனை களை எழுத ஆரம்பித்தார்.

உதாரணம்:

தோடி இராகத்திலமைந்த “தாசரதே தீருணமு.......” இராகம்: காபி, தாளம்: ஆதி

“ இந்த ஸௌக் யமநி நே ஜெயப்பஜால எந்தோ யேமா ஜெவரிக தெலுஸ நோ. முத்துத்........ தீட்சிதர் , நவரத்தினக் கீர்த்தனை களை இயற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானத்தின் விந்தை



திருமதி.கஸ்தூரி ஜெயானந்தராஜா
ஆசிரியை,
யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி

ஆற்றை மறித்து அகழிவெட்டி நீர்ப்பாய்ச்சி
சேற்றில் விதைவீசி செய்த தொழில் விவசாயம்
சோற்றை உண்பதற்குச் சுவை வேண்டும் என்பதனால்
சொந்தமாய்ச் செய்த காய்கறி கடுகு, மிளகு
விஞ்ஞானம் கண்டறிந்த விந்தைகள் ஆயிரங்கள்.

உற்பத்திப் பொருளில் ஊற்றெடுத்த விஞ்ஞானம்
உலகறியாப் பயணத்திற்கு ஊடுருவும் நீர்மூழ்கி
உடனடியாய்க் கொண்டு செல்லக் கண்டறிந்த கப்பல்களும்
கேள்வி நிரம்பல்களைக் கேட்டவுடன் அறிவதற்கும்
பேசும் கருவிகளாய்ப் பெற்று விட்ட தொலைபேசி.

வெடிகுண்டு, துப்பாக்கி, விண்கலங்கள், விமானங்கள்
இன்னும் இருக்கிறது எத்தனையோ விஞ்ஞானம்
இதமாக நாம் செல்லப் பதமான மகிழுந்து
இடரின்றி நாம் வாழ இதமான ஊர்தியது
தொடர்வண்டிப் புகையிரதம் தோற்றுவித்த விஞ்ஞானம்.

போன நூற்றாண்டின் புழக்கத்தில் வந்ததுதான்
கணினி என்கின்ற புதிதான மனிதனவன்
கணப் பொழுதில் கண்ணியமாய் காரியம் ஆற்றிடுவான்.
உலகத்தில் ஓதுகின்ற செய்தி எல்லாம்
இணையத்தில் எமக்கு எளிதாய் தந்திடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்நடை என்கின்ற வாழ்வது மாறி
கணத்தில் செல்கின்ற காரிய ஊர்திகளும்
கனமான ரோபோவைக் கடுகதியில் வழிநடத்தி
கருவாக உள்ளவையைக் காத்திட வரவெண்ணி
கணிப்பானில் கணித்து விட்டுச் செல்லும் அந்த விஞ்ஞானம்

உதயனில் போட்டு உருவான செய்தி எல்லாம்
உலகத்தில் இருக்கும் ஊரவர்கள், பார்க்கிறார்கள்
எவறெஸ்ரில் பெண்ணவள் எளிதாய் நடந்தமையும்
லண்டனில் நம்மவர் சண்டை பிடித்ததையும்
விடிய உதயனில் வடிவாய்ப் படங்கிடக்கும்.

தாய்தன் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடிடாமல்
சேயின் செவியருகே செற்றொன்றை வைக்கின்றாள்.
அடியெடுத்து வைக்கவும் கமராவில் பதிகிறது.
அப்படியே அத்தனையும் சட்லைட்டில் தெரிகிறது.
ஆவணங்கள் தரும் அச்சுப்பொறிமுறைகளை அவையும் விஞ்ஞானம்

ஆடைகள் நெய்ய அடுக்கான இயந்திரங்கள்
அதனைக் கழுவ துடுப்பான சலவைப்பொறி
அதுவும் விஞ்ஞானம் அத்தனையும் விஞ்ஞானம்
எதுவும் விஞ்ஞானம் எங்கும் விஞ்ஞானம்
வியத்தகு விஞ்ஞான விந்தைகள் பற்பலவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினைத்திறனான கற்றல் கற்பித்தலில் ஆசிரியரின் பங்களிப்பு

திருமதி. சாம்பவீ ஜெயதாஸ்
ஆசிரியர்,
B.A , PGDE, M.Ed,
யாழ்/கரம்பொன் சிறிய புஸ்ப ம.ம.வி, ஊர்காவற்றுறை.

மாறி வரும் சமூகமாற்றத்திற்கு ஏற்ப இன்றைய வகுப்பறை நிலைமையானது தகவல் தொழில் நுட்ப விருத்தியுடன் இணைந்ததாக மாற்றமடைந்து வரவேண்டிய நிர்ப் பந்தத்தில் உள்ளது. உடனுக்குடன் மாறிவரும் தகவல்கள் அனைத்தையும் உள்வாங்கக் கூடிய ஆவலுடன் இன்றைய மாணவர்கள் வகுப்பில் உள்ளார்கள். இவ்வாறான மாணவர்களுக்குக் கற்றல் கற்பித்தல் என்பது வினைத்திறன் உடையதாக அமைய வேண்டும். அதாவது மாணவர்கள் ஆசிரியருடைய துணையில்லாமல் தாமாகவே தேடி, தமது அறிவை இற்றைப்படுத்தி வைக்க கூடிய நிலையில் உள்ளனர். இவ்வாறான சூழ்நிலை கற்றல் கற்பித்தல் மேற்கொள்ளும் ஆசிரியர் மரபு வழிக் கற்றல் கற்பித்தல் அணுகு முறையில் இருந்து விடுபடுவதற்கு புதிய மாற்றங்களை உள்வாங்கும் முகவராக விளங்க வேண்டும்.

முன்னைய காலத்தில் ஆசிரியர் என்பவர் "கற்பனை நிறைந்த கவிஞன் போலவும் சிந்தனை நிறைந்த ஞானி போலவும் இருக்க வேண்டும்." - கிரேக்க மரபு "ஆசிரியர் போதனையிலும் சாதனையிலும் பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவதுடன் எல்லாத் துறைகளிலும் தலை சிறந்த அறிஞராக விளங்க வேண்டும். இவன் மற்றவர் துன்பத்தைத் துடைத்தெறியும் தூயஉள்ளத்தை மாணவர்களிடம் வளர்க்க வேண்டும்." - தத்துவஞானி ரூசோ "மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் நல்ல உணர்வுகளை வெளிக் கொணர்வது ஆசிரியர்" - சுவாமி விபுலானந்தர் கூறியுள்ளார்.

ஆனால் இன்றைய சூழலில் ஆசிரியர் என்பவர் தனது பகுத்தறிவு, அனுபவம் இவற்றின் அடிப்படையில் தனது மாணவர்களுக்கு வழி காட்ட வேண்டியவராகவும் பயன் படும் அறிவு, திறன் தான் வாழும் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும் மனப்பாங்கு விழுமியங்களை மாணவர்கள் பெற்றுக் கொள்ள உதவுபவராகவும் இருக்க வேண்டும். அத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் ஆசிரியர் என்பவர் கற்றல் கற்பித்தலில் ஆர்வம் உடையவரா கவும், தொடர்பாடல் திறன் மிக்க வராகவும், சுய கட்டுப்பாடு உடைய வராகவும், மாணவர்களிடம் கரிச னை உடையவராகவும், தொழில் வாண்மை மிக்கவராகவும், புத்தாக்கச் சிந்தனை மிக்கவராகவும், மாணவர் கள் உளவியல் அறிவுடையவரா கவும், தொழில் வாண்மை மிக்கவரா கவும், புத்தாக்கச் சிந்தனை மிக்கவராக வும், மாணவர்சார் உளவியல் அறிவு டையராகவும், அன்பு கலந்த கண்டிப் புடையவராகவும், மாணவர்களுக்கு முன்மாதிரியாகவும், மாறிவரும் மாற்றங்களை உடனுக்குடன் உள் வாங்குபவராகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட பண்புகளை உடைய ஆசிரியர் ஒருவரால் வினைத்திறன்மிக்க கற்றல் சூழலை வகுப்பறையில் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அதாவது மாண வர்களுடன் அறிவு பூர்வமாகவும். உணர்வு பூர்வமாகவும் அணுகக் கூடி யவராக மாணவர்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆசிரியராக விள ங்க முடியும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் மாணவர் இடைவினை உறவு வலுப்படுத்தப்படும். இவ்வாறு வலுவடைவதற்கு ஆசிரியர் பின் வரும் அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

1) கற்பிக்கும் பாடத்தில் தெளிவான புலமை.
2) கற்றல் கற்பித்தலை வினைத் திறனாக முன்னெடுக்கும் ஆற்றல்
3) வகுப்பறை முகாமைத்துவம்
4) தகவல் தொழில் நுட்ப அறிவு

அதாவது இன்றைய சூழலில் அறி வானது காலாவதியாகும் நிலைக்கு தள்ளப்பட்டு விடும். இதனால் ஆசி ரியர் குறுகிய காலத்தில் அறிவைப் பன்மடங்கு பெருப்பிக்கும் ஆற்றல் உடையவராக மாற வேண்டும். தமது பாடத்துறை சார்ந்த அறிவை தொட ர்ச்சியாகப் புதுப்பிக்கக் கூடிய வராக ஆசிரியர் முயற்சிக்க வேண்டும் மாணவன் வகுப்பிற்குப் பிரவேசி க்கும் போது இறுவெட்டு, இணை யம், தனியார் கல்வி நிலையம் எனப் பல விடயங்களினூடாக அறிவைப் பெற்றவராக வகுப்பறையில் இருப் பார். இதனைக் கருத்தில் கொண்டு மாணவரால் எழுப்பப்படும் வினா க்கள், சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ளவும் அறிவுசார் வேளாண்மையை உறுதிப்படுத்தவும் தொடர்ச்சியான தேடல், சுயகற்றல் உள்ளவராக இன்றைய ஆசிரியர் விளங்க வேண்டும்.

மாணவர்களின் கற்றலில் அக் கறையுடைய ஆசிரியர் பெற்றோர் சந்திப்புக்களை மாதாந்தம் கூடி மாணவர் தொடர்பான பிரச்சினை கள், மற்றும் கற்றலில் ஈடுபடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாயங்கள் மாணவர்களை ஊக்கு விக்கும் உத்திகள் போன்றவற்றை எடுத்துக் கூறி, வீட் டில் மாணவர்கள் கற்பதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஆசிரியர் வழிப் படுத்துவார். அத்துடன் மாணவர் களின் வாழ்நாள் கற்றலுக்கு தூண்டு தல் அளிப்பார்.

அத்துடன் மாணவர்கள் சரியாகத் துலங்கும் சந்தர்ப்பங்களில் அவர்களை ஊக்குவிப்பு வழங்குவ தில் மாணவர்கள் கற்றல், மற்றும் கற் றல் அல்லாத இடர்பாடுகளை எதிர் நோக்கும் மாணவர்களை நல்வழிப் படுத்தி அவர்களை உரிய முன்னேற் றப்பாதைக்கு இட்டுச் செல்பவராக விளங்குவார். அத்துடன் மாணவர் கள்கற்ற விடயங்களைக் தேவைக்கே ற்ப இடமாற்றம் செய்யக் கூடிய நுட்பங்கள் உத்திகளையும் எடுத்துக் கூறுவார்.

வினைத்திறனான கற்றல் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியரால் மாணவர்கள் மத்தியில் சுயகற்றல் திறனை விருத்தி செய்து கொள்ள முடியும். இவ்வாறு சுயகற்றல் திறனை விருத்தி செய்து விட்டால் மாணவர்கள் வாழ்வில் தொடர் கல்வியில் உயர்நிலையை அடைய முடியும். அதாவது நுண்ணறிவான கற்றல், புதிய படைப்பு, ஆளுமை விருத்தி, பொது அறிவு, பொது உளச் சார்பு, நுண்மதி விருத்தி என்பன வாழ்க்கை நீடித்த கற்றலுக்கு இட்டுச் செல்ல முடியும்.

இன்றைய சூழலில் ஆசிரியர் கற்பதற்கான ஊக்கத்தையும், கல்வித் தாகத்தையும் மாணவரிடம் ஏற் படுத்தி விட வேண்டும். அத்துடன் வாழ்க்கை நீடித்த கல்வியைப் பெறும் வகையில் ஊக்கம் வழங்க வேண்டும். நவீன தொடர்பாடல் தொழில்நுட்பம் மாணவர்கள் தகவல் பெறும் முறைகளை இலகு படுத்தி, பல தகவல்களை உடனுக் குடன் வழங்கினாலும் மாணவர்க ளின் மனவெழுச்சித் தேவைகளை இனங்கண்டு அவர்களை ஊக்கு வித்து மாணவரை வழிப்படுத்தும் பொறுப்பு ஆசிரியரின் கைகளிலே யே உள்ளது. எனவே ஆசிரியர்கள் மாறிவரும் சூழலுக்கு ஏற்ப மாணவர் களைத் தயார்படுத்துவதற்கு ஏற்ற முறையில் வினைத் திறனான கற்றல் கற்பித்தலை மேற்கொண்டு நாட் டின் தேவைக்கேற்ப நற்பிரஜைகளை உருவாக்கும் ஆசிரியராக செயற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியில் நடனத்தின் வகிபாகம்



திருமதி.சுதர்சினி கரன்சன்
ஆசிரியர்,
யா/கரம்பொன் சிறிய புஷ்பம் மகளிர் மகா வித்தியாலயம்

நடனம் என்பது பொதுவாகத் தாளத்துக்கும் இசைக்கும் அமைவாக உடலை அசைத்து நிகழ்த்தப்படும் ஒரு கலை வடிவம் ஆகும். இது ஒரு விடயத்தின் வெளிப்பாட்டு வடிவமாகவோ, சமூகத் தொடர் பாடலாகவோ இருக்கலாம். மனிதர் தமது எண்ணங்களை மற்றவர்களுடன் பரிமாறிக் கொள்வதற்கான ஒரு தொடர்புமுறை என்றும் நடனங்களைக் கருதுவது உண்டு. நடனம் என்பது எவ்வெவற்றை உள்ளடக்கியது என்பது குறித்துச் சமூக, பண்பாட்டு, அழகியல், கலை, நெறிமுறைகள் போன்றவற்றின் எல்லைகளுக்குள்ளேயே விளக்க முடியும்.

உலகெங்கும் நடனங்கள் பல்வேறு பாணிகளில் உருவாகியுள்ளன. எனினும் எல்லா நடனங்களுமே தம்முள் சில பொது இயல்புகளைக் கொண்டுள்ளன. நடன அசைவுகளுக்கு ஏற்ப உடல் வளைந்து நெளிந்து கொடுக்கும் தன்மை கொண்டதாக இருப்பது மட்டுமன்றி, உடல் உறுதியும் முக்கியமானது. இதனாலேயே முறைப்படியாக நடனம் ஆடுபவர்கள் நல்ல நீண்டகாலப் பயிற்சி எடுத்துக்கொள்கிறார்கள். அரசாங்கமும், கல்வியியலாளர்களும் இக் கலை வடிவத்தைப் பாடத்திட்டத்தில் புகுத்தியதற்கான காரணமே எதிர்காலச் சமூகத்தில் பண்பாட்டு, கலாசாரம் சார்ந்து வளர்ச்சியை எட்டவும் நல்ல மனித, மாணவ சமுதாயத்தை ஏற்படுத்துவதாகும்.

அந்த வகையிலே இக் கலையைக் குறிப்பாக நடனக் கலையை நம் மாணவ சமூகத்தில் ஏன் புகுத்த வேண்டும். இதனால் அவர்களிடத்தில் என்ன பயன் என்னும் நோக்குமிடத்தில், இன்றைய மாணவர்களே நாளைய உலகத்தை உருவாக்கப் போகிறவர்கள். ஆகவே நாளைய தலைவர்களான இன்றைய மாணவர்களை அவர்களுக்கேயுரிய தனித்துவமான பண்புகளுடன் அவர்களது ஆளுமை விருத்தியை மேம்பாடடையச் செய்ய வேண்டியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களது மிக முக்கிய பொறுப் பாகும். எந்தவொரு நாட்டினதும் உண்மையான அபிவிருத்தியென் பது அது அறிவு, பண்பாட்டியல் துறைகளில் பெறும் வளர்ச்சியையே குறித்துநிற்கிறது. அதாவது ஒரு சமூகம் தன்னைக் கல்வித் துறையில் வளப்படுத்திக் கொள்ளும் போதே அச்சமூகத்தின் உண்மையான அபிவிருத்தியென்பது சாத்திய மாகிறது. பரத நாட்டியம் கற்பத னால் ஒருவனுடைய திறன்கள் விருத்தியடைகின்றன. உடல் விருத்தி, உள விருத்தி என்பன வளர்ச் சியடைகின்றன. தனிஒவ்வொரு வரையும் மதிக்கும் தன்மையையும், குழு மனப்பான்மை, பகுத்தறிவோடு நடந்து கொள்ளுதல், ஒற்றுமைத் திறன், அறிவாற்றல், கருத்துக்களை விருப்பு வெறுப்பற்று ஆராயும் திறன் ஆகிய திறன்கள் விருத்தி செய்யப்படு கின்றன. தவிர சமூகப் பழக்கம், நற்குடிமகனாகுதல், மதிப்பிடும் திறன் போன்ற ஆளுமைப் பண்புகள் வளர்த்தெடுக்கப் படுகின்றது.

மேலும் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வதற் கும் இக்கலை அனுசரணையாக உள்ளது. எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டிய விழாவை ஒழுங்கமைப்பது, பரத நாட்டியக் கச்சேரிகளை நடத்து வது, ஒரு கலைக் கண்காட்சியை ஏற்பாடு செய்தல், நாட்டிய நாடகம் ஒன்றை நெறியாள்கை செய்து அரங் கேற்றுவது, பரத நாட்டிய அரங் கேற்ற வைபவங்கள் நடத்துவது, ஒரு நூல் வெளியீட்டு விழாவினை நடத் துவது போன்ற செயற்பாடுகளும் ஒருவனுடைய தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பனவாக உள்ளன. இவை தவிர நடனப் போட் டிகளை நடத்தி, வெற்றியீட்டியவர் களுக்குப் பரிசில்கள் வழங்குவதற் கான ஏற்படுகளைச் செய்தல் போன்ற இன்னோரன்ன செயல்கள் ஒருவனு டைய தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்கு அனுசரணையாக அமைகின்றன. குழு நடனங்களின் மூலம் குழுவில் இணைந்து செயற் படுவதற்கு ஏற்ற மனநிலை மாணவரி டம் உருவாகுவதுடன் சமூகத்தோடு இணைந்து வாழவும் கற்றுக் கொடுக் கிறது. ஆகவே சமுதாயத்துடன் இணைந்து வாழவும் சூழ்நிலைகளுக் கேற்ப இசைவாக்கம் பெறவும் நடனக் கல்வி வழிவகுக்கின்றது. இவை தவிர நடனக் கல்வியானது கேள்வி ஞானத்தை வளர்க்கிறது. எவன் ஒருவன் கல்வி கேட்டல் திறனில் சிறந்து விளங்குகிறானோ அவனே கல்விமான் ஆகின்றான்.

மேலும் நடனக் கலையானது ஒருவனுடைய வாழ்க்கையில் ஏற்படு கின்ற வெற்றியையும் தோல்வியை யும் சமமாக நோக்குகின்ற மனப்பாங் கினைப் பெற்றுக்கொள்ள வழி சமைக்கிறது. ஒருவனின் வெற்றி யானது, இன்னொருவனின் தோல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவும், அந்த இன்னொருவனின் தோல்வியானது மற்றவனின் வெற்றி யாகவும் அமைகிறது. ஆகவே, தோல்வி என்னும் சொல்லுக்கு வாண்மை நிரம்பப் பெற்றவனின் அகராதியில் பொருள் இல்லை. நடனப் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றுகையில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும். ஆகையினால் தோல்வியைக் கண்டு துவண்டு விடாமலும் வெற்றியைக் கண்டு கர்வம் கொள்ளாமலும் இருப்பதற்குப் பரத நாட்டியக் கலை துணை புரிகின்றது.

வாழ்க்கையில் ஒரு தனி மனிதனுக்கு ஏற்படுகின்ற இன்பகர மான, துன்பகரமான நிகழ்ச்சிகளில் மூழ்கி விடாது, ஈடேற்றுகிறது. இன்பமும் துன்பமும் ஒருவனது வாழ்க்கையில் இரவு பகல் போல மாறி மாறி வருவது கண்கூடு. ஒருவன் தான் பெற்ற அநுபவங்களினால் புடமிட்ட தங்கம் போல ஆகிவிடுகி றான். இதுவே அவனை வாழ்க்கை யில் ஏற்படுகின்ற சகல இன்னல்களை யும் இடையூறுகளையும் எதிர்த்து அவற்றினை ஒரு சவாலாகக் கருதிச் செயற்பட வைக்கிறது.

மாணவரை செயற்திறன் உடையவனாக்குவதற்கும் பரத நாட்டியம் அனுசரணையாக அமை கிறது. நடனம் ஓர் ஆற்றுகைக் கலை யாதலால் செயல்முறைக் கல்விக்கு அடிகோலுகிறது. இதுவே மனிதனை வாழ்க்கை நடைமுறைக்கொப்ப வாழ வழிவகுக்கிறது. "ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது" என்று ஒரு பழமொழி உண்டு. கற்பனை உல கில் ஒருவனைச் சஞ்சரிக்க விடாமல் நடைமுறைக்கொப்ப வாழ மனிதனு க்கு நாட்டியம் உதவுகிறது. கவலை யைப் போக்குகின்ற ஔடதமாகவும் பரத நாட்டியம் விளங்குகிறது.

ஒரு நாட்டின் எதிர்காலத் தலைவர்கள், அந்த நாட்டை எதிர் காலத்தில் வழிநடத்தப் போகின்றவர் கள் மாணவர்களே. ஆக இம்மாணவ சமூகத்தை அதன் சிறு பராயத்தி லிருந்தே மிகச்சிறந்த ஆளுமைமிக்க பிரஜைகளாக வளர்த்தெடுக்க வேண் டிய பாரியபொறுப்பு ஆசிரிய சமூகத் தின் தோள்கள் மீது சுமத்தப்பட் டுள்ளது.

ஆகவே இந்நோக்கத்தைச் சிறப்பாகப் பூர்த்தி செய்து கொள் வதற்குப் பாடசாலைகளை அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் அபிவிருத்தி செய்வதுடன் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் பண்புத் தரத்தை மேம்படுத்துவதும் மிக முக்கியமானதாகும். ஒரு மாண வனின் கல்வி வளர்ச்சியை தனியே ஆசிரியர்களால் மட்டும் மேம்பாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையச் செய்வது சாத்தியமற்றது. இது மாணவர், ஆசிரியர், பெற்றோர், சமூகம் என்ற அனைத்துத் தரப்பினரி னதும் கூட்டுச் செயற்பாடாகும்.

அந்த வகையில் உளவியல், சமூகவியல், பண்பாட்டு ரீதியாக நாம் நோக்கும் போது ஒரு மாண வரின் ஆளுமை வளர்ச்சியில் உள, சமூகக்காரணிகள் செல்வாக்குச் செலுத்தும் என்பதை மறுக்க முடி யாது. மாணவர்களின் வகை கூறும் முழுப் பொறுப்பினையும் ஆசிரியர் கள் மீது சுமத்திவிட முடியாது. பல்வேறுபட்ட சமூக அடுக்கமைவு களிலிருந்து பாடசாலைக்கு வரும் மாணவர்கள் நிச்சயம் வேறுபட்ட திறன்களையே பெற்றிருப்பர். வேறு பட்ட நோய்களுக்கு ஒரே மருந்தை வழங்க முடியாது என்பது போல் அவர்களது ஆற்றல் திறமைகளுக் கேற்ப, அவர்களது தனியாள் வேறு பாடுகளைப் புரிந்து கொண்டு அவர் களுக்குப் பொருத்தமான கற்பித்தல் முறைகளை மேற்கொள்வதும் அதன் மூலம் அவர்களது சீரான ஆளுமை வளர்ச்சிபெற உதவுவதும் ஆசிரியரது கடமையாகும்.

மாணவர் தமது அறிவு, திறன், மனப்பாங்கு என்பனவற்றை வளர்த்து நற்குடிமக்களாக வாழ உதவும் பணியே கற்பித்தல் என கல்வி உளவியலாளர்கள் கூறுகின்றனர். குறித்த ஒரு பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் மாணவர்களிடம் இப் பண்புகளை வளர்க்க அப்பாடத் தைக் கருவியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே முதலில் ஆசிரியர் அப்பாடத்தில் தேர்ச்சியு டைய வராக இருத்தல் அவசியம்.

மேலும் மாணவர்களின் சீரான ஆளுமை வளர்ச்சியில் ஆசிரி யரானவர் நிலைமாற்று வகிபாகத் தினூடாக (Transformation) வள வாளராக (Facilitator) செயற்பட்டு மாணவர்களின் ஆளுமை வளர்ச்சி க்குப் பாரிய பங்களிப்புக்களை ஆற்ற வேண்டியவராகிறார்.

எனவே எதிர்காலச் சமூகத் தை வடிவமைக்கும் பாரிய பொறுப் பினைச் சுமந்துள்ள ஆசிரிய சமூகம் புதிய புதிய விடயங்களை, மாணவர் களுக்குக் கையளித்து எதிர் காலத்தில் நல்ல மனிதத்துவம், நிறைந்த ஆளு மைப் பண்புகளுடன் மாணவர்கள் சிறக்க வழிசமைக்க வேண்டும். இதுவே கல்வியின் தேவையும் காலத்தின் தேவையுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியரின் பங்கு



திரு.பா.இரமணாகரன்
ஆசிரியர்,
Dip.in Teaching (Art)
யா/காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்

கொடுக்கக் கொடுக்கக் குறையாச் செல்வமாகத் திகழ்வதும் "சுடச் சுட மிளிரும்" பொன்போல உள்ளதுமான கல்விச் செல்வத்தை அள்ளி அள்ளி வழங்கும் குருவின் செயற்றிறன் மிக்க கல்வி. "காலத்தின் கண்ணாடி". காலத் தேவைக்கேற்ற மாற்றமுறும் கல்வியை வழங்குவதில் பாதை தவறாத தடங்களில் பயணிக்கும் ஆசிரியர்களின் வினைத்திறன் ஊடான செயற்பாடுகள் பாராட்டிப் போற்றுதற்குரியது.இதனைப் பணிந்து கற்பது மாணவரின் கடமையே.

**"தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவின் சிந்தித்தல் தானே."**

தவமாகக் கொண்டு வழி காட்டுபவர்கள் ஆசிரியர்களாகவும் பயணிப்பவர்கள் மாணவர்களாகவும் இருக்கும் நிலையில் கல்விப் புலத்தில் நீண்ட விருப்புடையவர்களான மாணவர்களுக்கு விருப்பத்தை ஏற்படுத்துபவர்களாக ஆசிரியர்களும் காணப்படும் சூழலில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான தொடர்பு, மாணவர் - மாணவர்களுக்கு இடையில் உள்ள தொடர்பு , ஆசிரியர் - ஆசிரியர் தொடர்பு, ஆசிரியர் - அதிபர் தொடர்பு, ஆசிரியர் - பெற்றோர், சமூகத்தொடர்பு எனத் தொடர்ந்து செல்கிறது. இவற்றில் ஏதேனும் பாதிப்பு நிகழுமாயின் அவை கல்வியைப் பாதிக்கும் காரணிகளாக அமையும்.

ஆகவே கல்வியில் விருப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய ஆசிரியர்கள் "நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும்" என்ற பாரதியின் கவி வரிகளுடன் , நடை, உடை, பாவனை, காலம், இடம், குணம், தொழில் என்பவற்றிற்கு ஏற்றாற்போல் பாடறிந்து ஒழுகுதல் அவர்களுக்குத் தொழில் மேன்மையைத் தரும்.

ஆசிரியர் நடிபங்கை மாற்றி அமைத்தல் வேண்டும். இவர் இப்படித்தான் என்று மாணவர்கள் தவறாக எடைபோட முடியாதவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றியமைத்தல். வெளிப்படுத்தல் மூலம் கல்வியில் விருப்பையும் அத னூடாக ஈடுபாட்டையும் ஏற்படுத்த முடியும். மேலும் கலைத்துறை ஆசிரி யர்கள் மாணவர்களைப் பயன்படுத்தி அழகு இரசனை உள்ள கலைக்கூட மாக வகுப்பறையை மாற்றி அமைத் தல் என்பவற்றின் ஊடாக மாணவர் கள் கற்கின்றோம் என்ற சுமை இல்லாத நாளாந்தம் கற்கும் சூழலை உருவாக்குதல் வேண்டும்.

"கல்வி கரையில கற்பவை நாள் சில மெல்ல நினைக்கின் பிணிபல" என நாலடியார் கூறு வதற்கு இணங்க கல்வி என்னும் பெருங் கடலுக்கு கரைகாண முடி யாது. கற்கும் காலம் மனித ஆயட் காலத்தில் மிக மிக அரி தாகவே உள்ளது. இதற்கிடையில் நோய்கள் பிறகாரணிகள் என்பன வினைத் திற னைக் குறைக்கின்றன. இதனைவிட காலத்தை வீணடிக்கும் தொழில் நுட்ப சாதனங்கள் மேலும் கல்விச் செயற்பாட்டை குறைத்துவிட கனி யும் கல்வி கைக்கு வரத் தடையாக அமையும் காரணிகளாக அமை கின்றன.

அகத்தேயும் புறத்தேயும் தூய்மைப்படுத்துபவர்கள் ஆசிரியர் கள். அவர்களுடைய சிந்தனை, சொல், செயல், திறன்கள் ஊடாக கல்வி என்னும் பயிர் நீர் ஊற்றி வளர்க்கப்படுகிறது. அது அரும்பு, மலர், காய், கனி எனக் கனிகின்ற பொழுது சமூகத்திற்கு பயன் கிடைக் கும்.

"கடுகு சிறிது காரம் பெரிது" என்பது போல் ஒரு சிறிய ஆலம் வித்து எவ்வளவு பெரிய விருட்சமாக வளர்ந்து பரந்து நிழல் பரப்புவது போல ஆசிரியர்கள் மாணவர்களை உருவாக்குகின்றனர்.

ஆசிரியர்கள் தங்களுடைய முதுகைக்கொடுத்து ஏணியாக நின்று மாணவர்களை உயர்த்துபவர்கள். ஏறி உயர்ந்து செல்ல வழிகாட்டியாக நிற்பவர்கள். எந்த வகையான பிரதி உபகாரங்களையும் எதிர்பார்க்க மாட்டார்கள்.

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுநிலைமையால் வரும்
கல்வி அழகே அழகு".

என்னும் பாடலடிக்கு இணங்க நடுநிலமையான கல்வியை நடுநாயகமாக நின்று நேர்மையான முறையில் வழங்கும். ஆசிரியர்களின் பங்களிப்பு உண்மையான மகான் களின் பங்களிப்பு இலை, மறை, காயாகவே இருக்கும் அவர்கள் அரசியல் வாதிகளோ, சுயநல வாதி களோ அல்லர். ஒன்றைச் செய்து விட்டு ஆயிரம் தரம் விளம்பரம் செய்பவர்கள் கிடையாது. வலது கை கொடுப்பது இடதுகைக்குத் தெரியாது இருக்கும்.

ஆசிரியர்களின் சிறந்த பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யை நன்றாகக் காய்த்துக் குலுங்கும் மாமரத்திற்கு ஒப்பீடு செய்யமுடியும். காய்க்கின்ற மாமரம் எவ்வளவுக்கு கல்லெறி வேண்டுகின்ற தோ அவ் வளவுக்கு அதன் காய்களின் தன்மை வெளிப்படையான உண்மை யாகும்.

ஓர் உண்மையான ஆசிரியன் பல கோணங்களில் இருந்து போதிப் பதினால் "குருவை மிஞ்சிய சிஷ்யன் போல" குருவிடம் கற்ற மாணவன். ஆசிரியனாக, வைத்தியனாக, விஞ்ஞானியாக, பொறியியலாள ராக, விமான ஓட்டியாக ஏன் உலகில் உள்ள எல்லாத் தொழில் செய்பவர் களும் வாழ்கின்ற அனைத்து மக்களும் "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்பதற்கு இணங்க அந்தக் குருவிடம் கற்றவர்களாகவே இருக்க முடியும். "குரு இல்லா வித்தை பாழ்" என்பார்கள். சிவ பெருமான் பிரணவப் பொருளை அறிய முருகனிடம் மண்டியிட்டுக் கற்றுக் கொண்ட கதைகள் வாயிலாக அனுபவங்களைப் பெறமுடியும்.

எவராக இருந்தாலும் கற்ப தாயின் குருவின் பார்வை மூலமான நயன தீட்சையைப் பெறுதல் வேண் டும். தொடர்ந்து ஸ்பரிச தீட்சை போன்ற தீட்சைகள் மூலம் ஞானத் தைக் கொடுத்து மலத்தைக் கெடுக் கும் நிலையில் மாணவர்கள் உயர் நிலையை அடைய முடியும்.

இன்றைய நவீன உலகில் வீட்டில் இருந்தவாறே கணினியில் கற்றுவிடலாம். உலகைக் கைக்குள் போட்டுவிடலாம் எனப் பகற்கனவு காணும் தன்மையினை அறியலாம். அது அறிவியல் சார்ந்த தற்காலிக வெற்றியாகவே இருக்கும். ஆனால் நிரந்தரமான வெற்றி என்பது வாழ் வின் உண்மையைக் கண்டவதில் உள்ள சுவாரஷ்யமான விடயத்தில் தங்கியுள்ளது. நிலையான இன்பத் திற்கு வழி சமைக்க வேண்டுமாயின் ஆன்மீகத்துடன் கூடிய விழுமியக் கல்வியை அன்றாடம் போதித்தல் மூலம் உலகை நிலைபெறச் செய்ய முடியும்.

இறைவனால் படைக்கப் பட்ட இவ்வுலகில் அமைதியாக சந்தோசமாக, நிறைவாக, சீராக, சிறப்பாக வாழ முடியாத மனிதனால் செவ்வாய்க்கிரகத்தில் சென்று வாழ முடியும் என நினைப்பது தன்னைப் பற்றி அறியாது பிறரைப் பற்றி அறிய நினைப்பது. தான் வாழும் புவிக் கோளம் அதன் உட்பிரதேசம் கூட எரிமலை வெடிப்பை வைத்துத் தான் ஓரளவு உள் அமைப்பை ஊகிக்கும் நிலையில் வெளியில் சென்று ஆய்வு செய்வதில் ஆர்வம் கூடுதலாக உள்ளது. இவை அவர்களுடைய அறிவு முதிர்ச்சிக்கு அவர்களே விடும் சவாலாகும். "சிவனுடைய தலையில் இருந்த பாம்பு கேட்டதாம் கருடா சௌக்கியமா? என்ற அதற்குகருடன் இருக்கும் இடத்தில் இருந்து கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டால் எல்லாம் சௌக்கியமே" என்ற தாம். மூளை வளர விஞ்ஞானம் வளர ஓசோன் படலத்தில் ஓட்டை விழ மனிதனோ புவியில் மயங்கி விழுந்து இறக்கின்றான்.

இங்கு கூறப்படும் விடயத் திற்கும் கற்றல் கற்பித்தல் செயற் பாட்டில் ஆசிரியரின் பங்கு என்ன? என நீங்கள் கேள்வி எழுப்பலாம். அது நியாயமானதே! விரும்பியோ விரும்பாமலோ ஆசிரியர் என்கின்ற தொழிலை குடும்ப சம்பாத்தியத்திற் காக ஒருவர் ஏற்கும் நிலையில் அவர் ஞானம் எனப்படும் அறிவைக் கொடுக்க முனைக்கின்றார். ஆசிரியர் பிறப்பது இல்லை. அனுபவத் திரள மைப்பின் ஊடாக உருவாக்கப்படு கின்றார் என்பதே நிஜம். ஒரு நாடகத் தில் ஒருவர் ஏற்ற பாத்திரத்தை சிறந்த முறையில் ஏற்று நடிக்கும்பொழுது அவர் அதுவாக மாறுகின்றார், மாற்றப்படுகின்றார். மாறவே வேண் டும். கல்வியும் அதுதான். மாற்றம் ஏற்படுதல், நடத்தையில் மாற்றம் ஏற்படுதல் அதுவே சிறந்த கல்வி யாகும்.

பாடசாலைக் கல்வியைப் பொறுத்தவரையில் ஓர் ஆசிரியர், ஒரு மாணவனை மிகவும் நெருக்க மாக அணுகி மாணவனை தன்னு டைய பிள்ளையாக மானசீகமாக ஏற்றுக்கொள்ளுதல். அவனை அறி தல், அவன் வாழும் சூழலை, சமூக த்தை அறிதல், எதிர் வினைத்தாக்கங் களை ஏற்படுத்தும் விடயங்களைத் தெரிந்து இவ்வாறான பிரச்சினை களுக்குத் தீர்வு காணுதல் முக்கிய மானதாகும்.

ஆசிரியர் - மாணவர் உறவு மிகவும் நெருக்கமான முறையில் அமைதல் வேண்டும். கேட்கும் வினாவிற்கு மாணவர்கள் பயமின்றி உண்மையான தகவல்களை வழங்கும் நிலையை உருவாக்கக்கூடியதாக ஆசிரியர்கள் இருக்க வேண்டும்.

மாணவர்களிடம் அறிந்து தெரிந்து கொண்ட அந்தரங்கமான விடயங்களை இரகசியம் பேணுதல், புத்திசாலித்தனமாக இருத்தல், நேர்மையாக இருத்தல், மாணவர்கள் கூறும் விடயத்தை விருப்புடன் செவிமடுத்தல், கற்றல், கற்பித்தல் கண்டிப்புக்கு ஏற்ப குரலில் தொனி யை மாற்றுதல். மகிழ்ச்சிகரமான செயற்பாடுகளை மேற் கொள்ளுதல், மாணவர்களின் அன்றாட நலன்களில் அக்கறை காட் டுதல் என்பவை யான நடத்தைகள் மூலம் சிறந்த இலக்கை அடைய முடியும்.

ஒவ்வொரு நாளும் மாணவர் கள் குளித்து விட்டு வருகிறார்களா? என்பதை உறுதிப்படுத்தல் வேண் டும். வரவை உறுதி செய்தல், பெயர் களைத் தெரிந்துவைத்து, விசாரித்தல் போன்ற நடைமுறைகள் கல்வியில் மேலும் அபிவிருத்தியை ஏற்படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும். அன்றாட செயற்பாடுகளை அவதானித்தல், அறிதல், புரிதல், ஆறுதல் கூறுதல் என்பன ஆசிரியரின் நடிபங்கில் அளப்பரியதாகும். சிறந்த ஆலோசனை வழிகாட்டியாக, வைத்தியனாக, ஆய்வாளாக, ஊழியனாக, கிராம சேவகனாக எல்லாம் இருந்து சேவையாற்றுதல் அவன் கடனாகும்.

ஒரு மாணவனின் புத்திகளை வாழைத்தண்டுப் புத்தி, மண்ணாங்கட்டிப்புத்தி, கற்பூரப்புத்தி என்றெல்லாம் பழங்காலத்தில் வகை செய்த நிலையில் அவற்றுக்கு எவ்வாறு பரிகாரம் தேடலாம் என்பது ஆசிரியரின் கைகளிலேயே உள்ளது.

விசேட தேவை உடைய மாணவர்களையும் மீத்திறன் உடைய மாணவர்களையும் ஒரு நிலையில் வைத்து கற்பித்தல் " மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதாக அமையும்." இவ்வாறானவற்றை இனங்காணப்பட்டு அவர்களுக்கு ஏற்ற சூழ்நிலைக்கு அமைய ஆசிரியர்கள் தங்களுடைய நிலையில் இருந்து இறங்கிச் சென்று கற்பிக்க வேண்டும்.

ஆசிரியர்கள் இறங்கி வருகிறார்கள் என்பதற்காக மாணவர்களும் அவர்களின் தோழில் ஏறிநின்று காதைக்கடிக்க முயலக் கூடாது. ஏழேழு பிறப்பிற்கும் தொடர்ந்து வரும் கல்வியை விழுமி யங்களுடன் பாதுகாக்க வேண்டியதும் குருகுல முறையைப் பேணுவதும் மாணவர்களின் கைகளிலும் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் கல்வி



திரு.பி.இரட்ணராஜ்
B.A,Dip.in Edu, Dip.in.HRM, Dip.in.off.Ad
ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக்கல்வி - தீவகம்)

ஆசிரியர் கல்வி என்பது ஒரு பொறிமுறையான செயற்பாடல்ல. ஆசிரியர் கல்வி என்பது கற்போனை மையப்படுத்திய ஒரு செயன்முறை யாகும். ஆசிரியர்களிடமிருந்தான சமூகத்தின் எதிர்பார்ப்புக்கள் பன் முகப்பட்டவையாக இருக்கின்றன. ஆசிரியர்கள் சமூகத்தின் கண்ணா டிகள் என்பர். பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளின் வழிகாட்டிகள். எனவே நாட்டின் கல்வித் தரத்தை உயர்த்துவதிலும் பேணுவதிலும் ஆசிரியர்களின் பணி இன்றியமை யாததாகும். எனவே ஆசிரியர் களுக்கான கல்வி தரமானதாக, உயர் வானதாக, வழங்கப் பட்டாலேயே ஒரு நாட்டினுடைய கல்வி வளர்ச்சி காண முடியும்.

**ஆசிரியர் கல்வி பற்றிய வரை விலக்கணங்கள்**

❖ ஆசிரியர் கல்வி என்பது ஒரு வாழ்க்கை நீடித்த செயன்முறை யாகும். இதில் பங்குபற்றும் நபர்கள் தம்மைத் தாமே கற்பித் துக் கொள்வதற்காக சுய ஊக்க லைக் கொண்டுள்ளனர். என யுனெஸ்கோ கல்வி தொடர்பான அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

❖ கற்பித்தல் என்பது தொழிநுட்பத் திறமைகளின் சேகரிப்போ, செய் முறைகள் சிலவற்றின் பொதியோ, ஒருவர் கற்கக் கூடிய பொருட்கள் சிலவற்றின் சேர்க்கையோ அல்ல கற்பித்தல் என்பது ஒரு தொழி நுட்ப அலுவலுடன் அது ஒரு ஒழுக்க நெறியுமாகும் என Michael Fullen என்பவர் குறிப்பிடு கின்றார்.

❖ C.V.FL (Good) என்பவர் ஒரு ஆசிரியர் கல்வி வாண்மையிலான தனது பொறுப்பினை ஆற்று வதற்குத் தேவையான எல்லா விதமான முறைசார்ந்த, முறை சாராத செயற்பாடுகளையும், அனுபவங்களையும் வழங்க உதவும் கல்வி என்றார்.

மேலே கூறப்பட்ட கருத்துக் களைத் தொகுத்து நோக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் கல்வி என்பது, ஆசிரியத் துவம் என்றும் வாண்மைத் தொழிற் பாட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர் ஒருவர் தனது பொறுப்புக்களையும், கடமைகளையும் ஒழுங்காகச் சுமப்ப தற்கானது முறைசார்ந்த, முறைசாரா பயிற்சிகளையும் செயற்பாடுகளை யும் வழங்குகின்ற கல்வி நடவடிக்கை என விளக்கலாம்.

**ஆசிரியர் தேர்ச்சிகள்**

வெஸ்பர் அகராதி (webster Dictionary) தேர்ச்சி என்பதை "திறன் மிக்க பொருத்தமான தகைமைகள்" என்கிறது. சர்வதேச கல்விக் களஞ்சி யமானது (International Encyclopedia of Education) தேர்ச்சி என்பதனை பின்வருமாறு மூன்று தரத்திலான மனித செயற்பாடுகளைக் காட்டு வதாகக் குறிப்பிட்டது.

1. அறிவு (Knowledge)
2. திறன் (Skill)
3. மனப்பாங்கு (Attitude)

கலகர் (Gllagher - 1971) என்பவர் தேர்ச்சிமிக்க ஆசிரியர் ஒருவர் பற்றிக்கூறும் போது " தேர்ச்சி மிக்க ஆசிரியர் ஒருவர் அறிவுசார், உணர்வுசார் முதிர்ச்சி, தனியாகவும் குழுவாகவும் மாணவர்களைக் கை யாளும் திறன், மாணவர்களை முன் னேற்றும் திறன், பொருத்தமான விழு மியங்கள் பேணும் திறன் கொண்ட வராக இருப்பார் என்றார்.

மேலும் ஆசிரியருக்குத் தேவையான தேர்ச்சிகள் எவை என்பவை பற்றியும் பல கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. ஹிக்ஸ் அண்ட் பிளக்கிங்டன் (Hicks and Blackinton - 1964) ஆசிரியருக்குரிய தேர்ச்சிகளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்தினார்.

- ❖ தனியாளுக்குரிய தகைமைகள்
- ❖ வாண்மைக்குரிய தகைமைகள்
- ❖ பாடம் கற்பித்தற் துணைச் சாதனங்களிலான மேலாண்மை
- ❖ போதனையைத் திட்டமிடல்
- ❖ போதனை முகாமைத்துவம்
- ❖ திருப்திகரமான வகுப்பறைக் கவின் நிலையை விருத்தி செய்தல்.
- ❖ ஏனையோருடன் சேர்ந்து தொழிற்படல்.

**ஆசிரியர் கல்விக்குரிய நோக்கங்கள்**

1. தரமான கல்வியை வழங்கு வதற்கு அடிப்படையான பயனு றுதியுள்ள கற்பித்தலை உருவாக் கல்.
2. மாணவர்கள் பற்றிய புரிந்து ணர்வை ஏற்படுத்தல்.
3. ஆசிரியர்களின் ஆளுமையை வளர்த்தல்.
4. ஆசிரியர்களுக்குத் தேவையான அறிவு, திறன் ஆகியவற்றை உச்சப்படுத்தி சிறந்த மனப்பாங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகள், விழுமியங்களைவளர்த்தல்.

5. தம்மைத்தாமே மதிப்பீடு செய்து தேவைப்பட்ட திறன்களைப் பெற்றுக் கொள்ள உதவுகின்றது.
6. முகாமைத்துவத் தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்தல்.
7. தகவல் தொழில்நுட்பத் திறன்களை விருத்தி செய்தல்.
8. சமூகத்தின் புதிய சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்கள். சவால்களுக்கு முகங்கொடுக்கும் வல்லமையை விருத்தி செய்தல்.

**ஆசிரியர் கல்வியை வழங்கும் நிறுவனங்கள்**

1. தேசியக் கல்வியற் கல்லூரிகள்
2. தேசிய கல்வி நிறுவகம்
3. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்
4. பல்கலைக்கழக கல்வியல் பீடங்கள்
5. திறந்த பல்கலைக்கழகம்
6. தனியார் நிறுவனங்கள்
7. தொண்டு நிறுவனங்கள்

**இலங்கையின் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்**

இன்று இலங்கையில் வழங்கப்படுகின்றது. ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினை 6 வகுதிக்குள் அடக்கி நோக்கலாம்.

1. பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி (PGDE)
2. சேவையிலுள்ள பட்டதாரியல்லாத ஆசிரியர்களுக்கு பயிற்சி பெற்ற ஆசிரியர் தராதரப்பத்திரம் வழங்கும் பயிற்சி நெறி (Teacher's College
3. கல்விச் சேவைக்குள் உள்வாங்கப்படாது பட்டதாரியல்லாதவருக்கு வழங்கப்படும் முன் சேவைப் பயிற்சி (NDT)
4. பட்டதாரியல்லாத ஆசிரியர்களுக்கும், பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் பயிற்சி (B.ED)
5. சேவையிலுள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் புத்தூக்க கல்வி நிகழ்ச்சித்திட்டம் (Refresher courses)
6. சேவையிலுள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் வாண்மை விருத்தி/பாட அறிவு விருத்தி தொடருறு நிகழ்ச்சித் திட்டம்

**உலகளாவிய ஆசிரியர் கல்வியும் யுனெஸ்கோவும்**

*1996* ஆம் ஆண்டு பரிஸ் மகாநாட்டில் வெளியிடப்பட்ட யுனெஸ்கோ அறிக்கையில் பின்வருமாறு கூறப்படுகின்றது.

"கற்றல் உங்களுடைய வளமாகும்" கற்பித்தல் செயற்பாட்டிற்கு புதுத்திருப்பத்தை ஏற்படுத்துவதாக வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு எதிர்கால ஆசிரியர்களிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுதலான மானிட மற்றும் அறிவுப் பாங்குகளை ஏற்படுத்தும் வகையில் ஆசிரியர் கல்விச் செயற்பாடுகளும் மீளாய்வுகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதாகும்.

21ம் நூற்றாண்டின் ஆசிரியர்கள் அடிப்படை ஒழுங்கு நடவடிக்கையில் இணைந்து செயற்படுவதற்கும் ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்ட போதனையைப் பெற்றுக் கொள்வதற்கும் பொதுசனத் தொடர்புச் சாதனங்களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதற்கும் தமது மாணவர்களுடன் கலந்துரையாடல் நடாத்துவதற்கும் தொடர்பு சாதனத்தைத் தீர்க்கமாகத் தெரிவு செய்து அவற்றை உபயோகப்படுத்துவதற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துவதற்கும், முதியோர் கல்விக்கான சில அடிப்படைக் கொள்கைகளைக் பெற்றுக் கொள்வதற்குமான ஆற்றல்களைக் கொண்ட ஒரு குழுவினருமாவார் என ஓர் ஆசிரியர் இவ்வாறு திகழ வேண்டுமென யுனெஸ்கோ அறிக்கை கூறுகிறது.

**இலங்கையில் ஆசிரியர் கல்வி மீதான பிரச்சினைகள்**

1. ஆசிரியர் கல்வி வழங்கும் நிறுவனங்களிடையே ஒன்றிணைப்புக் குறைவு.
2. ஆசிரியர் பயிற்சி இன்றி வகுப்பறைக்குள் செல்லக் கூடாது. சேவை முன் பயிற்சி வழங்க வேண்டும் என்ற கொள்கை இருக்கின்ற போதும் நடைமுறைச் சாத்தியம் காணப்படாமை.
3. பட்டதாரி ஆசிரியர்களும் பயிற்சி ஆசிரியர்களும் தங்கள் பயிற்சியை மேற்கொள்வதற்கான படிப்பு, விடுப்புப் பெறுவதில் உள்ள சிரமமும் பிரதேசங்களுக்கிடையே வேறுவேறு கொள்கைகள் பின்பற்றப்படுவதும்.
4. பகுதிநேரப் பயிற்சி (தொலைக் கல்வி) எதிர்பார்த்த பயன்தராமை.
5. ஆசிரியர் கல்வியில் ஆய்வுக் கலாசாரம் வளர்ச்சி பெறாமை.
6. பாடசாலைக் கல்வியில் ஆசிரியர் தேவையும் ஆசிரியர் நியமனமும் ஆசிரியர் கல்வியும் திட்டமிடப் படாமை.
7. ஆசிரிய மத்திய நிலையங்கள் எல்லாக் கல்வி வலயங்களிலும் நிறுவ முடியாமை.
8. உலகக் கல்விச் செல்நெறியை அறிந்து கொள்ள வெளிநாட்டுக் கல்வி வாய்ப்பு சிலருக்கே கிடைக்க முடிந்தமை.
9. பாட நிபுணத்துவம் அற்றவர்களால் பயிற்சிச் செயற்பாடுகள் நடைபெறல்.
10. ஆசிரியர் நியமனங்கள் அரசியல் தலைவர்களால் நிர்ணயிக்கப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீர்வுகளும் முன்மொழிவுகளும்**

1. ஆசிரியர் கல்வி வழங்கும் நிறுவனங்களுக்கிடையே ஒன்றிணைப்பை வழங்க தகுதி வாய்ந்த அமைப்பொன்றை ஏற்பாடு செய்தல்.
2. ஆசிரியர்களுக்குப் பல்தர அறிவு பெறும் சந்தர்ப்பங்களை அளித்துத் தரமான ஆசிரியர்களை உருவாக்கல்.
3. ஏனைய வளர்முக நாடுகள் போன்று துரித பயிற்சியளிப்புத் திட் டத்தில் கவன ஈர்ப்புக் கொள்ளல்.
4. ஆசிரியர் பயிற்சி முறையில் மீள் கட்டமைப்புச் செய்தல்.
5. அரச உதவி, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளல்.
6. ஆசிரியர்களின் தேவையையும் உள் வாங்க லையும் இணைப்புப் பெறச் செய்தல்.
7. ஆசிரியர் கல்விக் கலைத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு உலக செல் நெறியுடன் இணைந்த கலைத் திட்டம் ஏற்பாடு செய்தல்.
8. புதிய பயிற்சி முறைகளை அறிமுகம் செய்தல்.

போன்றவை தீர்வுகளாகவும் முன் மொழிவுகளாகவும் முன் வைக்கலாம்.

**21ம் நூற்றாண்டில் ஆசிரியர் பொறுப்புக்களும் எதிர்பார்ப்புக்களும் (UNESCO)**

- ❖ உயர் தொழிற் தகைமை
- ❖ பல புதிய வகை கற்பித்தல் தத்துவங்களை உள்வாங்கல்.
- ❖ அடிப்படைப் பாடநெறிகளில் வல்லுநராக இருத்தல்.
- ❖ மாணவர்களுடன் சிறந்த தொடர்பாடல் திறன் மூலம் அவர்களின் பல்வகைத் தகவல்களைத் தெரிவு செய்து பயன்படுத்த உதவுதல்.
- ❖ படைப்பாற்றல், மாற்றங்களையும் புத்தாக்கங்களையும் வரவேற்கும் மனப்பாங்கு போன்ற தகைமைகளையும், மாறும் உலக மாற்றங்களுக்கு ஏற்ப இசைவாக்கம் பெறுதல்.
- ❖ சமூக நிதி, சமாதானம், சகிப்புத் தன்மை, இனப் புரிந்துணர்வு என்பவற்றை மேம்படுத்தும் மாற்றங்களுக்கான இணைப்பாளராகச் செயற்படல் போன்ற தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும், விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல் கலாம் 21ம் நூற்றாண்டின் ஆசிரியர்கள் மாணவர்களின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான கருவிகளாக எதிர்பார்க்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றனர் எனச் சுட்டிக்காட்டியுள்ளார். இங்கு ஆற்றல் கட்டியெழுப் பப்படுவதற்கான புலன்களாகப் பின்வருவனவற்றை அடையாளப் படுத்தியுள்ளார்.

- ஆராய்ச்சித் தேடல்.
- புத்தாக்கம்.
- உயர் தொழில்நுட்பப் பயன்பாடு.
- தலைமைத்துவம்.
- ஒழுக்கம் சார் தலைமைத்துவம்.

என்பனவாகும்.

### முடிவுரை

உலகளாவிய ரீதியல் கல்வி ஒரு பொருளாதாரப் பண்டமாக அங்கீகரிக்கப்பட்டு, பலகோடி ரூபாய்கள் முதலீடு செய்யப்படுகின்றன. ஒரு நாட்டில் ஆசிரியர் எத்தரத்தில் உள்ளனரோ அத்தரத்திலேயே அந்நாட்டின் கல்வியறிவும், சிறப்பும் காணப்படுமென்பது பொதுக் கருத்தாகும்.

இந்த வகையில் உலக மாற்றங்களுக்கு உட்படும் கல்வி வினைத்திறனையும், விளைதிறனையும் தீர்மானிப்பதாக ஆசிரியர் வாண்மைத்தன்மையே அமையும் என்பதை அறிவு ரீதியில் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனடிப்படையில் ஆசிரியத் தொழிலை அரைகுறையான வாண்மைத் தொழில் என்பதிலிருந்து சற்று நகர்த்தி முழுமையான சக்திமிக்க வாண்மைத் தொழிலாக்க வேண்டும். இதற்கு ஆசிரியர் கல்வி வாண்மை தொடர்பான ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதும், வசதி செய்து கொடுப்பதும் காலத்தின் கட்டாயமாகும். மேலும் ஆசிரியர்கள் தங்களை இற்றைப்படுத்துநர்களாக மாற்ற வேண்டும். எனவே இன்று ஆசிரியர் கல்வியானது தேவையானதும், வேண்டப்படுவதுமான காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரைப் பேணுவோம்



திருமதி.விலிநிசாலி ஹொல்யே
ஆசிரியர்,
யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்

முதியோர் எம் பெரும் சொத்து
மூத்தோர் சொல் அமிர்தம்
முன்னேறிடும் மனிதா - நீ
முதியவர்களைப் போற்றிடு.

அப்பா அம்மா ஆனவர்களை
அறுபது வயதை தாண்டிவிட்டால்
அற்ப புழுவாய் எண்ணலாமா?
அவர்களைத் தள்ளி ஒதுக்கலாமா?

பேரக்குழந்தைகளைக் கொஞ்சிடும் வேளையிலே
பேரறியாத முகங்களுடன் - முதியோர் இல்லங்களில்
பெரிய வேதனைகளை சுமந்தபடி
பெட்டிப் பாம்பாய் இருக்கும் உள்ளங்களை
பெருமனது கொண்டு அரவணைத்திடுவோம்.

எல்லோரும் முதியோரை ஒதுக்கினால்
எங்கு தான் தஞ்சம் அடைவது
ஏங்கித் தவிக்கும் அவர்களை
ஏணிப்படிகளாய் நாம் மதிப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரைத்த முடியும் குழி விழும் கண்களும்
நமக்குச் சொல்லும் பாடங்கள் எத்தனை?
எமக்கும் இந்நிலை உருவாகும் என்பதை
எண்ணிடத் தூண்டும் குறிகளே!

எம்முடன் இருந்து வாழ்ந்தவர்களை
எதிரியாய் பார்க்கும் எண்ணத்தை விடுவோம்.
எம் முதியவர் அறிவுரை கேட்போம்.
எம்முடன் வாழ அனுமதியளிப்போம்.

பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும்,
நற்றவை யாவிலும் நனி சிறந்தது போல்
நல்ல மனிதனாய் நேயமுடன் வாழ
நம் முதியோரைப் பாதுகாப்போம்
நாட்டினில் அவர்களுக்கு மதிப்பளிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் வாண்மை விருத்தி

(Teacher Professional Development)



திருமதி. சிவானி கேதீஸ்வரன்
B.A(Hons), M.A, PGDE
யாழ்/ புங்குடுதீவு மகா வித்தியாலயம்

மாறி வரும் தகவல் தொழில் நுட்ப நூற்றாண்டில் அனைத்துத் துறைகளிலும் விஞ்ஞானத் தொழி நுட்ப அறிவும் அதன் அடிப்படை யில் உருவாக்கப்பட்ட நலிவு கருவி உபகரணங்களும் ஏனைய துறை களில் பயன்படுத்தப்படுவது போல கல்வித் துறையிலும் பயன் பாட்டிற்கு வந்துள்ளன. அந்த வகையில் ஆசிரியர்கள் அனைவரும் தமது தொழிலுக்கான அறிவை தற்கால உலகத்திற்கு தகுந்தபடி விருத்தி செய்து கொள்ள வேண்டும். நவீன கருவி உபகரணங்களை பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு தொழில்நுட்ப அறிவு, கருவிகளைக் கையாளும் திறனையும் விருத்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது.

ஆசிரியர்கள் வாண்மை சார்ந்த கற்றல், பயிற்சி என்பவற்றின் மூலம் நல்ல விளை திறன் மிக்க பயன் பாட்டினைப் பெறுவதற்குத் தொழி லில் இருந்தபடியே பெற்றுக் கொள் கின்ற அனுபவங்கள், பிரதிபலிப்பு கள் முக்கியமானவையாகும். சமுதா யத்தின் நடைமுறைகளுக்குப் பங் களிப்புச் செய்கின்ற அங்கத்தவர் களது கருத்துக்களை அறிந்து செய லாற்றுகின்ற வகையில் ஒருவர் தனது ஆளுமைச் செயற்பாடுகளை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

பாடசாலைகளில் கல்வி சார்ந்த முடிவுகள் எடுக்கின்ற சந்தர்ப் பங்களிலே ஆசிரியர்களும் பங்கு பற்றி, கருத்துக்களை முன்வைத்து முடிவுகள் எடுக்கப்படுதல் வேண் டும். பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி செயற் பாடுகள், குழுக் கற்பித்தல் மற்றும் கலைத்திட்டத்தை வேலைத் திட்ட மாக மாற்றுகின்ற சந்தர்ப்பங்களில் ஒன்றிணைந்து திட்டமிடல் போன்ற செயற்பாடுகளோடு இணைந்ததாக இருக்கலாம்.

வாண்மைச் சமூகம் ஒன்றிலே ஒரே வகையான பாடங்களைக் கற்பிப்பவர்கள் ஒன்றிணைந்து செயற்படத்தக்க வகையில் ஆசிரி யர் வலைப்பின்னல் அமைப்பொன் றினை உருவாக்குதல் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டத்தில் வாண்மை விருத்தியை வளர்ப்பதற்கு உதவியாக இருக்கிறது.

மாணவர்களின் அடைவு மட்ட உயர்வு, ஆளுமை விருத்தி என்பவற்றிற்கு வழிகாட்டக் கூடிய பொறுப்பு ஆசிரியர்களையே சார்ந்தது. அந்த வகையில் பின்வரும் விடயங்களில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

1) ஆசிரியர்கள் தமது அனுபவங்களை மீள உயர்ந்தெழச் செய்தல்.
2) புத்தறிவினைத் தேடிப் பெற்றுக் கொள்ளல்.
3) எதிர்பாராத சந்தர்ப்பங்களில், எதிர்பாராத வகையில் தோன்றும் பிரச்சினைகள், அறை கூவல்கள், அனர்த்தங்கள் என்பவற்றை வெற்றிகரமாக முகங் கொள்ளல்.
4) தொடருறு ஆசிரியர் கல்வி வேலைத் திட்டத்தில் ஈடுபட்டு மாணவர்களின் அடைவு மட்ட த்தை மேம்படுத்தல்.
5) ஆசிரியர்களிடையே சிறந்த நடைமுறைகள் தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் பிரதிபலித்துக் கற்கும் தேர்ச்சியை மேம்படுத்தல்.

ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காக நடாத்தப்படுகின்ற ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் பாடசாலை முறையின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. தற்போது நடைமுறையில் ஆசிரியர்கள் மேம்பாட்டிற்கான பயிற்சிகள், கருத்தரங்குகள், பயிற்சி நெறிகள் பாடசாலைக்கு உள்ளும் பாடசாலைக்கு வெளியேயும் பல மட்டங்களில் நடைபெறுகின்றன. இவற்றின் நடைமுறைகளும் பயிற்சிகளும் பெற்றுக் கொண்ட அனுபவங்களும் வகுப்பறைகளுக்கு ஆசிரியர்களால் எடுத்துச் செல்லப்பட வேண்டிய விடயங்கள் ஆகும். அந்த வகையில் பின்வரும் படிமுறைகளை அனுசரிப்பதன் மூலம் இதனை வெற்றியாக்கிக் கொள்ள முடியும்.

1) ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டங்களை அமைத்தல்.
2) இதற்கான குழுவை நியமித்தல்.
3) ஆசிரியர்களிடையே இனங்கண்ட தேவைகளுக்கு ஏற்ப வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.
4) போதுமான நிதியை ஒதுக்கீடு செய்து ஆர்வத்துடன் பங்கு பற்ற ஊக்குவித்தல்.
5) பெறப்பட்ட அனுபவங்களைப் பாடசாலையின் உள்ளும் பாடசாலைக்கு வெளியே ஆசிரியர்களுடனும் பகிர்ந்து (கோட்ட, வலய, மாகாண மட்டத்தில்) பரஸ்பரம் விருத்தி அடைதல்.

இவ்வாறான செயற்பாடுகள் பாடசாலை மட்டத்திலான வாண்மை விருத்திச் செயற்பாடுகள் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையில் கற்றல் சூழ்நிலைகளுக்கு தாங்களே பொறுப்பு என்ற உணர் வினை ஆசிரியர்களிடையே வளர்க் கிறது. இவ் உணர்வு சிறந்த கற்றல் சூழல் ஒன்று உருவாக்குவதற்கு மாணவர்களின் கற்றல்பேறுகள் அதி கரிப்பதற்கும் உதவியாக அமையும்.

அந்த வகையில் ஆசிரியர்கள் தம் பணியில் விசேடத்துவம் மிக்கவர் களாகவும் நுட்பமுறைகளையும் தொழிநுட்பத்தையும் அறிந்தவர் களாகவும் மாணவர்களின் நம்பிக்கை சிதையாதவாறு செயற்படக் கூடியவ ராக திகழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# பாடசாலைகளில் பின் தங்கிய மாணவர்களின் உருவாக்கத்தின் பங்காளிகள் யார்?

திரு.பொ. யோகேஸ்வரன்
ஆசிரியர்,
யா/ சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர்.

எமது பாடசாலைகளில் ஒவ்வொரு தரங்களிலும் காணப்படுகின்ற மாணவர்களைத் தமக்கு வழங்கப்பட்ட பாட அலகுகளுக்கூடாக உரிய தேர்ச்சிகளையும் தேர்ச்சி மட்டங்களையும் மையப்படுத்தி தவணைதோறும் வருடந்தோறும் நடைபெறும் பரீட்சைகளிலும் தேசிய ரீதியிலான பரீட்சைகளான தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை சாதாரண தரப்பரீட்சை, உயர்தரப் பரீட்சை, என்பவற்றில் உயர்ந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ள வைப்பதன் ஊடாகத் தமது வெற்றியை வெளிப்படுத்த முயல்கின்றன. இதில் பெறுகின்ற வெற்றியின் அளவைக் கொண்டு பாடசாலைகளின் தரத்தைப் பெற்றோரும் சமூகமும் ஏன் கல்வித்துறைசார் அதிகாரிகளும் கணக்கிட்டு மகிழ்வது இன்றுள்ள பரிதாப நிலைக்கு சிறந்த சான்றாக உள்ளது.

இந்த அளவீட்டிற்கப்பால் பாடசாலைகள் தோறும் வெளியேறிக் கொண்டிருக்கும் பாடசாலைகளாலும், ஆசிரியப் பெருந்தகைகளாலும், கல்வித்துறையினாலும் "பின் தங்கிய மாணவர்கள்" என அன்பாக அழைக்கப்படும் மாணவர்களது நிலைக்கு யார் காரணம்? இம் மாணவர்களுக்கான வரையறை யாது? இவர்களுக்கான தீர்வு யாது? என்ற வினாக்களுக்கு விடைகாண முயல்வதே இக்கட்டுரையின் எதிர்பார்ப்பாகும். மீத்திறன் மாணவனையும் விசேட தேவையுடைய மாணவனையும் விலக்கி, சராசரி இயலுமைகளைத் தன்னகத்தே கொண்டிருத்தும் உரிய தரங்களுக்கான கற்றல் மற்றும் செயற்பாட் டாற்றல் யாவும் சரிவரப் பெற்றும் பொது அளவீட்டுக் கருவியாக விளங்கும் தவணைப் பரீட்சை, புலமைப் பரிசில் பரீட்சை சாதாரணதர, உயர்தரப்பரீட்சைகளில் உரிய அடைவைப் பெறாமல் போகின்ற மாணவர்களாக விளங்குபவர்களையே பின்னடைவான மாணவர்களாகக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது உருவாக்கத்தின் பங்காளர்களாக,

1) குடும்பமும், குடும்பச்சூழலும்
2) சகபாடிகள்
3) ஊடகங்கள்
4) அதிபர்
5) ஆசிரியர்
6) கல்வி அதிகாரிகள்
7) பாடசாலை சார்ந்த அமைப்புகள்
8) சமயத் தலங்கள் நிறுவனங்கள்
9) உரிய மாணவன்
10) போதைப் பொருள்பாவனை / தொடர்பு

முதலாவதாக மாணவனது பெருமளவு நேரமும் குடும்பச் சூழலிலேயே செலவு செய்யப்படுவதனால் அவரது பின்னடைவை முதலில் குடும்பமே பொறுப்பேற்க வேண்டும். கற்றலுக்கான எல்லா இயலுமைகளையும் கொண்டிருக்கும் தங்கள் பிள்ளையின் கல்வியைக் குழப்பக் கூடிய விடயங்களை தங்கள் குடும்பச் சூழலில் இருந்து நீக்காமை அல்லது குறிப்பிட்ட காலமாயினும் நிறுத்தி வைக்காமை, பிள்ளையின் கற்றல் அடைவைக் காலந்தோறும் மதிப்பிடாமை, சக பெற்றோர், ஆசிரியர்களுடன் பாடசாலைகளுடன், தொடர்புகளைப் பேணாமை, பிள்ளைக்குத் தேவையான உளநிறைவான விடயங்களை வழங்காமை, தொடர்ச்சியான உள நெருக்கீடுகளை ஏற்படுத்தல், குடும்ப முரண்பாடுகள் கருத்து மோதல்களை வளர்த்துக் கொள்ளல், கற்றல் சுயகற்றல் செயற்பாட்டை குழப்பும் செயற்பாடுகள் குடும்பத்தில் காணப்படல். பிள்ளையின் ஆரோக்கியத்தைக் கண்காணிக்காமை, உடனுக்குடன் அவற்றுக்கான தீர்வினைப் பெறாமை, போசாக்கு மட்டத்தை உரிய முறையில் பேணாமை, அல்லது பொருத்தமான உணவுப் பழக்க வழக்கத்தை மேற்கொள்ளாமை, பருவமாற்றநிலைகளை பொருத்தமாகக் கையாண்டு பிள்ளையை வழிப்படுத்தாமை, தனிப்பட்ட கடுமையான கொள்கைகளைப் பிள்ளை மீது திணித்துக் கொள்ளல், தேவையான பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுக்காமை, சமயம், சமூகம், காலசாரம்சார் சடங்குகள் சம்பிரதாயங்களின் தாக்கத்தை அளவுக்கதிகமாகக் கைக்கொள்ளல், கல்வியின் பெறுமதி, அதன் எதிர்காலம், பாதுகாப்பை பெற்றோர் உணராமை, பிள்ளைக்கு உணர்த்தாமை, சகோதரங்களின் கற்றல் ஒழுங்கின்மை, பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே பாகுபாடு காட்டல், ஒட்டு மொத்தமாகத் தமது பிள்ளை மீதான கற்றல் அடைவுக்கான தமக்கான பங்களிப்புகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ வழங்காத குடும்பங்களால் இந்தப் பெறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிமிக்க மாணவர்கள் பின்னடை வான மாணவர்களாக ஆக்கப்படு கின்றார்கள்.

மாணவர்களது செயற்பாடுகளில் குறிப்பாக கற்றல் செயற்பாடுகளில் சகபாடிகள் என்றழைக்கப்படும் நண்பர்களது செல்வாக்கு பெரும்பங்குவகிக்கிறது. அந்த வகையில் கற்றலுக்கான எல்லா இயலுமைகளையும் கொண்ட ஒரு மாணவனின் கற்றல் நிலையை பாதிப்படையச் செய்யும் சகபாடிகள் தமது பொருளாதாரத் தேவை, பொழுதுபோக்குத்தேவை, தாம் இருக்கின்ற பின்னடைவு நிலையை மற்றவர்களும் கொண்டிருக்க வேண்டும் என்ற பிற்போக்கான எண்ணங்கள் முதலியவற்றின் அடிப் படையில் இயல்பான மாணவன் சகபாடிகளால் கற்றலில் பின்னடை வான மாணவனாக ஆக்கப்படும் வேதனைகளை எதிர்நோக்க வேண்டி யுள்ளது.

அடுத்து தற்காலத்தில் எல்லாத்தரப்பினரையும், எல்லா வயதினரையும், வேகமான மாற்றத் திற்குள் உள்வாங்கும் ஆற்றல் படைத்த சக்தியாக ஊடகங்கள் இடம் பிடித்துள்ள நிலையில் இளம் பருவ வயதினராக, விளங்கும் மாண வர்களது கற்றல் செயற்பாட்டைத் தீர்மானிப்பதில் ஊடகங்களான திரைப்படங்கள், வலைத்தளங்கள், பத்திரிகைகள், தொலைக்காட்சி கள், போன்ற இன்னோரன்ன சாதனங்கள் எல்லா இயலுமை களையும் [illegible] ஒரு மாண வனை எவ்வாறு பின்னடைவான மாணவனாக ஆக்குகின்றன? எனப் பார்த்தால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் பிரதான இடம் பிடித்துள்ள தொடர் நாடகங் ளும் அவற்றின்காட்சி அமைப்புக் களும் அவை ஒளி, ஒலி பரப்பிடும் நேரங்களையும், அவை கொண்ட கருப்பொருளாக வெளிப்படும் கதைப்பின்னணிகளும் ஒரு மாணவனது ஆரோக்கியமான கற்றல் ஆற்றலையும் அவனது பெறுமதி வாய்ந்த கற்றல் நேரத் தையும் விழுங்கி விடுவதனால் எல்லா இயலுமைகளையும் கொண்ட ஒரு மாணவனைக் கற்றலில் பின்னடைவான மாணவ ராக மாற்றுவதில் ஊடகங்கள் குறிப்பிட்ட பங்கை எடுத்துக் கொள்கின்றன.

அடுத்து பாடசாலைகளின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் பெரும்பங்கைத் தன்னகத்தே கொண்டிருக்கக் கூடிய மிகப் பிர தான பாத்திரம் தான் ஒரு பாட சாலையின் அதிபர் எனப்படுபவர். இவரது கல்வித்தகைமை தொழிற் றகைமை, தனிப்பட்ட விருப்புகள் நிர்வாகத்திறனின்மை, அனுபவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்மை, தனது வகிபாகத்தின் விளக்கம் போதாமை, தொழில் பொருத்தப்பாடின்மை, சோம்பல், நிதி விடயங்கள் மீதான ஒழுக்க மின்மை, பொறுப்புக்கூறல்,வகை கூறல் பற்றிய அசட்டுத்தனம், பக்கச் சார்பான போக்குகள், பதவியைத் தக்க வைக்கும் குறுகிய சிந்தனை, சமூகத் தொடர்பாடல், குறைபாடு நவீன மாற்றங்கள் மீதான அக்கறை இன்மை, துறைசார் விளக்கமின்மைகள், முடிவெடுக்கும் ஆற்றல்களைக் கொண்டிராமை, ஆசிரியர் மாணவர் மீதான முறையான மதிப்பீடுகளைக் கொண்டிராமை, தேவையான பௌதீக வளங்களைத் திரட்டிக் கொள்ளாமை, முறையான வேலைப் பகிர்வுகளை மேற்கொள்ளாமை, போன்ற பல குறைபாடுகளைக் கொண்ட அதிபரால் அவருக்குக் கீழ் இயங்கும் பாடசாலைக்குச் சொந்த மான எல்லா இயலுமைகளையும் கொண்ட மாணவர்கள் பின்னடை வானவர்களாக ஆக்கிவிடுகிறது. இவ் வாறெனில் தனது வகிபாகத்தை விளங்கிக் கொள்ளாமை, அவரது மனது தனது பணியோடு இயைந்து போகாமை, பாரபட்சம் காட்டல், கோபப்படல், சாதி, மத பாகுபாடு காட்டல், பக்கச்சார்பான செயற் பாடுகளைக் கொண்டிருத்தல், பழி வாங்கும் மனப்பாங்குடைய வராக விளங்கல் கற்றல், கற்பித்தல் நுட் பங்களைத் தெரிந்திராமை, தெரிந் தும் முறையாகப்பிரயோகிக்காமை, முறையான முகாமைத்துவம் கொண்டிராமை, வகுப்பறைத் திட்டமிடல் இல்லாமை, கவர்ச்சி யும் கனிவும் எளிமையும் இனிமை யும், நிறைந்த பேச்சாற்றலைப் பெற் றிராமை, உரிய எல்லைகளைக் கடந்து சென்ற கற்றல் மற்றும் ஏனை யசெயற்பாடுகளைக் கொண்டவராக இருத்தல், மாணவரை இனங் காணாமை, இனங்காணப்பட்ட விடத்தும் உரிய கற்றல் முறையைப் பிரயோகிக்காமை, மாணவர்களை தன்னிடத்தும் பாடப்பரப்பிடத்தும் ஈர்க்காமை, பௌதீக வளங்களை பொருத்தமுறப் பாவிக்காமை, பெற் றோர் தொடர்பாடலைப் பேணாமை, நேரமுகாமைத்தும் அற்றவராக விளங்கல், தன்னை நோக்கி வர மறுக்கும் மாணவனை நோக்கித் தான் செல்ல விரும்பாத ஆசிரியர்கள், கற்றலுக்கான எல்லா இயலுமை களையும் கொண்டிருத்தும் பின்ன டைவான மாணவர்கள் என ஒரு தொகுதியினர் ஆசிரியர்களால் உருவாக்கப்படும் வேதனைக்கு மரு ந்து எங்கு உண்டோ?

அடுத்து குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டியவர்களாக அதிகாரத்தோடும் உரிய பிரச்சினை களைத் தன்னகத்தே கொண்ட கல்வித்துறைசார் அதிகாரிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைபாடுகளால் கற்றலுக்கான எல்லா இயலுமைகளையும் கொண்டிருந்தும், கற்றலில் பின்னடைவான மாணவர்கள் பாடசாலைகள் தோறும் உருவாக்கப்படும் பரிதாப நிலை காணப்படுகிறது. குறைபாடுகளை இனங்காணல், அவற்றிற்கான காரணிகளைக் கண்டறிதல் பொருத்தமான தீர்வுகளை விரைவாகவும் உரிய முறையிலும் மீண்டும் மீண்டும் அக்குறைபாடுகள் தோன்றா வண்ணம் நிலையான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய அதிகாரிகள் பலர் தமது கடமைக் கூறுக்குப்பதிலாக வேறு, அல்லது பொருத்தமில்லாத விடயங்களைப் பாடசாலை நிர்வாகங்களுக்கு வழங்கி, அதுவகுப்பறை வரை ஊடுருவி, தனது நச்சு விளைவினை, ஒரு பாடசாலை மீதான முறையான மதிப்பீடு உரிய அதிகாரிகளினால் காலந்தோறும் மேற்கொள்ளப் பட்டு பலவீனமான விடயங்கள் தீர்வு காணப்படாமல், தமது புகழ், குறுகிய இலாபம் அவ்விடயங்களைக் கையாளும் ஆற்றல் இன்மை, பக்கச் சார்பு, அரசியல்சார்பு, தனிப்பட்ட விருப்புக்களை உட்படுத்தல், நேர்மையற்ற குணத்தைக் கொண்டிருத்தல், பிரதேச, சாதி, பாகுபாடுகளை நிலைநிறுத்தல் என பல்வேறுபட்ட குறைபாட்டுப் பட்டியல்களைச் சுமக்கும் கல்வித்துறை அதிகாரிகளால் கற்றலுக்கான எல்லா இயலுமைகளையும் கொண்டிருக்கும் மாணவர்கள் பின் அடைவான மாணவர்களாக ஆக்கப்படுகிறார்கள். இது பொருத்தம் தானா?

அடுத்த குற்றமிழைப்பவர் களாக பாடசாலை சார்ந்த அமைப்புக்களை நோக்குமிடத்து நன்மை செய்ய வேண்டும், ஆதரவு தரவேண்டும், பாடசாலைச்செயற்பாடுகளுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப் பட்டிருக்கும் பாடசாலை சார் அமைப்புக்களான பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற அமைப்புக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களது மனப்பாங்குகள் குறுகிய சிந்தனைகள் அறியாமைகள், தற்புகழ்ச்சி எண்ணங்கள், பொருத்தப்பாடற்ற முடிவுகள், தேவையான விடயங்களைத் தெரிந்தெடுத்து சீர்செய்யும் ஆற்றல் இல்லாமை, பாடசாலைக்குத் தொடர்பில்லா விடயங்களை திணிக்க முயலுதல், பாடசாலை நிர்வாகத்தில் தலையிடல் அல்லது அதிகாரம் செலுத்த முற்படல், நிதி விடயங்களில் குளறுபடிகளை செய்தல் முதலிய குறைபாடுகளால் பாடசாலையின் போக்கை, கவனத்தை திசை திருப்பும் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலை சார்அமைப்புக்கள் காலந் தோறும் வழிசமைப்பது ஏன்? என்று புரியவில்லை.

தொடர்ந்து கோடி ரூபா கொட்டிக்கட்டியெழுப்பப்படும் கோயில்களும், மதம்சார்நிலையங்களும் தங்கள் பணிகளையும் அப்பணிகளூடாகத் தம்மைச் சார்ந்தவர்களை நல்வழிப்படுத்த முயல்வதாகவே வீரம் பேசுகின்றன. ஆனால் பிள்ளை யார் பிடிக்கப் போய் குரங்காகின்ற கதைகளும் சில சமயங்களில் அரங் கேறியுள்ளன. பாடசாலை மாணவர் தம் ஒழுக்கத்தில் கற்றலை ஊக்கமளிக்கவும், வழிப்படுத்தவும், இம் மதம் சார் அமைப்புக்கள் முயற்சிப்பதற்குப் பதிலாக அதீத மத வழிபாடுகள், கிரியைகள், விரதங்கள், யாத்திரைகள் போன்றவற்றை நடாத்துவதன் மூலம் பாடசாமைல மாணவர்களை தம்மை நோக்கி ஈர்த்து கற்றலை குழப்புவதும், மாணவர் பரீட்சைக் காலங்களில் ஒலிபெருக்கிகளை ஒலிக்கவிட்டு இடையூறுகளை மேற்கொள்வதும் தம்மிடம்தேங்கிக் கிடக்கும் நிதியைக் கொண்டு மாணவர் தம்கற்றல் அல்லது பரீட்சை வெற்றிகளுக்கான செயலமர்வுகள் வழிகாட்டல் கற்றல் இடர்பாட்டை நிவர்த்திக்கும் முன் னெடுப்புக்கள், வழிகாட்டல் விழிப் புணர்வுகளை மேற்கொள்ளாது வெறுமனே ஓங்கி உயர்ந்த கட்டடங்களோடு காட்சி கொடுக்கும் மதம்சார் நிலையங்களாலும் கற் றலுக்கான எல்லா இயலுமை களைக் கொண்டிருந்த போதும் பாடசாலை களில் பின்னடைவான மாணவர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து நன்றும் தீதும் பிறர்தர வருவதில்லை என்பதைப் போல் எங்கள் வாழ்வை ஒளி மயமாக்குவதற்கு நாங்கள் தான் பொறுப்பு என்பது இந்தக் கற்றலுக் கான எல்லா இயலுமைகள் இருந்த போதும் பின்னடைவான மாணவர் கள் பாடசாலைகள் தோறும் உருவா கிற செயற்பாட்டில் அந்த மாணவர் களது சோம்பல், எதிர்காலம் தொடர் பான அச்சமின்மை, முயற்சி இன்மை, நிகழ்கால மகிழ்வினையே நிலை யாகக் கருதும் மனதினை போலிகளை கண்டு ஏமாற்றம் கொள்ளல், கற்றல் தொடர்பான செயற்பாடுகளில் தெளிவின்மை, பிழையான கற்றல் அணுகுமுறைகள் போன்ற சுப மதிப் பீடு சார்ந்த குறைபாடுகளால் கற்றலுக் கான எல்லா இயலுமைகளையும் கொண்டிருத்தும் பாடசாலைகளில் பின்னடைவான மாணவர்களின் உருவாக்கத்தில் உரிய மாணவர்களும் தங்கள் தலையில் மண்வாரிப் போடும் மடைமையை போக்குவது யார்?

அடுத்த காரணியாக இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுமையும் மூச்சுத் திணறும் நிலையில் இருப்பதில் பங்கெடுத்துள்ள பிரதான காரணி போதைப் பொருள் பாவனையானது பாடசாலை மாணவர் வாழ்வையும் அசைத்துப் பார்க்கிறது. அந்தப் போதைப்பொருள் பரம்பலும், பாவனையும் இன்று எங்கள் பாடசாலைகளில் கற்றலுக்கான எல்லா இயலுமைகளைக் கொண்டிருந்தும் பின்னடைவான மாணவர்கள் உருவாவதற்கு இநத போதைப் பொருள் பாவனை நேரடியாக மாணவரைத் தாக்குவதும், மறைமுகமாக அவனது குடும்பம், சூழல் போன்றவற்றில் செலுத்தும் தாக்கத்தால் இந்தப் பின்னடைவான மாணவர்கள் பாடசாலைகளில் தோன்றவது அச்சமூட்டும் அம்சமாகும். எதிர்கால ஆரோக்கியத்தைக் கேள்விக் குறியாக்கி உள்ளது.

இதுவரை எமது பாடசாலைகளில் கற்றலுக்கான எல்லா இயலுமைகளையும் கொண்டிருந்தும் பின்னடைவான நிலையில் வருடந்தோறும் தொகை தொகையாக மாணவர்கள் உருவாகிப் பாடசாலையில் பத்தாண்டுகள் பயின்றும் கற்றல் அடைவில்சித்தி பெறாமல் வெறுங் கையோடு வெளியே அனுப்பிவைக்கப்படும் இந்த பின்னடைவான மாணவர்களுக்கான உருவாக்கல் பங்காளிகளாக நாமும் இருக்கிறோமா? என்பதை இக்கட்டுரை உங்கள் சுய மதிப்பீட்டிற்கு சமிக்ஞையாக அமையப்பெற்றால் ஆசிரிய மாகாநாட்டு முயற்சியின் நோக்கும் பயன்பெற்றதாகும்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Handling People's Property



**R.Maheswaran**
Teacher
(BA.Dip-in-Eng Sp Trd English)
J/Velanai Central College.

Before one attempts to write on the above subject. One should be clear about the term 'People's Property". In this context a historical explanation and interpretation is both necessary and indispensable. Millions of years ago mankind made its first appearance on the face of this earth for thousands of years Human beings lived as savages not very different from other animals and birds. There was no organized society then. At that time all that which existed on this earth belonged to all human beings, animals and birds and other living organisms.

The situation began to change when people who lived on this earth became more organized groups living first in villages and then in cities. The king at the apex of the society was responsible for the Government of the country and the wellbeing of his subjects.

The weath of the Country was divided into two categories namely that belonged to the people and that belonged to the king and the Government.

So property beloinging to the Government is referred to as Government or public property and the one that belongs to the people as people's of private property. In the early days it was the duty of the king and his officials to protect the property and wealth of both his country and its people. He was able to safe guard the national and personal property through his army,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

officials and through the special powers bestowed on him.

Property in ancient times was protected through low and the punishment that was Meted out to Robbers, thieves Bandits, Highwaymen burglars and other Criminals and low Breakers.

However, during times of war as normalcy was not maintained property and wealth got destroyed  History is full of examples where enemies in a war engage themselves in wilful damage and wonton distraction  to national property and personal wealth. For instance during the south Indian Chola and Pandya Invasions of Sri Lanka from the $9^{th}$ to the $13^{th}$ th centuries the Buddhist Dagobas, Temples and Viharaes and the massive reservoirs and tanks and Irrigation canals and channels were both intentionally and accidentally destroyed there by throwing the whole economy of the country out of gear.

Another classic example of how Wonton destruction was caused to public property is the fact that the Vandals (a set of Barbarians) who invaded the Roman Empire when is was in its declining stages and broke burnt and destroyed. Statues and painthings of exquisite and breath taking beauty. Even today such acts are referred to as "Vandalism" after the vandals.

Today monarchy has given way to Democracy. In democratic states where people rule, their property and that of the nations are safe guarded by the 3 armed forces namely the Army, Navy and Air force and the specialized agencies such as the police force and the C.I.D.

Even if property is destroyed the owner is compensated for his losses by the system of insurance schemes and institutions such as banks where people could safely deposit their execss wealth, money and valuables for safe keeping.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In conclision it should be stated that as the weath of a nation is measured in terms of the peoples property every effort should be made to handle them properly and to protect them.

# Anecodote

Once **Win son** Churchill while addressing the House of commons was in a fit of anger. He Said, **"Half this house consists of Fools, Iiots and Lunatics"** Immediately a number of MPS were on their toes and demanded the Speaker that Winson Churchill should with draw those words as they are highly unparliamentary. The speaker upheld their objections and asked churchill to with draw the words.

**Win son** Churchill remained cool and said, "I'll with draw My words. Half the house does not consist of Fools, Idiots and Lunatics".

**R.Maheswaran**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைக் கலையினூடாக மாணவரிடையே அருகிப்போகும் விழுமியங்களை வளர்த்தல்



திருமதி.க.நிதியரசன்
ஆசிரியர்
(B.F.A)
யா/காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயம்

இசைக் கலையானது 64 கலைகளிலும் மேன்மையானது. படித்தவர் முதல் பாமரர் வரை யாவரும் இரசிக்கக்கூடியது. இசை என்பது இசைய வைப்பது. இனிமை யான இசை சிறு குழந்தை முதல் முதியவர் வரை அனைவரையும் வசப்படுத்துகின்றது. இதனையே கவிஞர் "இசையால் வசமாகா இதயம் எது..." எனப் பாடியுள்ளார்.

உணர்ச்சிகளால் கட்டுண்ட வன் மனிதன். மனிதனின் ஒவ்வொரு உணர்வுகளையும் இசை மூலம் வெளிப்படுத்த முடியும் . பக்தி, துக்கம், மகிழ்ச்சி, கோபம் போன்ற பல உணர்வுகளையும் இசைப்பாடல் களில் வெளிப்படுத்துவதைக் காண முடிகின்றது. மனித வாழ்வில் இசையானது பிறப்பு முதல் இறப்பு வரை பின்னிப் பிணைந்துள்ளதைக் காணலாம்.

விழுமியம் எனும் போது, மனித வாழ்வு மேம்பாடானது எனக் கருதுவதற்கு உதவும் பெறுமதி மிக்க வாழ்க்கைப் பண்புகளே விழுமிய ங்கள் எனப்படுகின்றது. மனித வாழ்வு மிக எளிமையான தன்மைகளையும் உயர்வான எண்ணங்களையும் கொண்டதாக அமைய வேண்டும். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் தன்னுயிர் போல் மன்னுயிரையும் பேணி வாழும் வாழ்வே சிறந்தது. எமது வாழ்வில் போற்றி வளர்க்க வேண்டிய உயர்ந்த மனிதப் பண்பு கள் பல உள. அவை யாவும் மனி தனை மனிதனாக வாழ வைப்பன. மனித விழுமியங்களாவன அன்பு, பக்தி, சகிப்புத்தன்மை, பணிவு, பொறுமை, அமைதி, தலைமைத் துவம் போன்ற பலவாகும்.

காலத்தின் கோலத்திற்கு ஏற்ப இன்றைய சமுதாயத்தினரிடையே இந்த விழுமியப் பண்புகள் அருகிப் போவதைக் காணக் கூடிய தாக உள்ளது. அதற்குரிய முக்கிய காரணிகள் எமது வாழ்க்கை முறை யே ஆகும். முன்னைய காலத்தில் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை காணப்பட்டது. அங்கே முதியவர் கள் சிறியவர்களை வழிப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு, பக்தி, பணிவு போன்ற பல விழுமியங்களைச் சிறியவர்களிடம் அரவணைத்து ஊட்டுவார்கள். இன்று பெண்கள் வேலை பார்க்கச் செல்வதால் வீட்டில் குழந்தைகளுக்குப் போதிய அரவணைப்பு, விழுமியங்கள் ஊட்டப்படுவது குறைவாகவே உள்ளது. அத்துடன் வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலகின் சாதனை களும், கண்டு பிடிப்புகளும் மாணவரை இயந்திர மனிதனாக்கி விழுமியங்களைப் புறக்கணித்து விடுகின்றது. இவ்வாறான பல இன்னோரன்ன காரணங்களால் மாணவரிடையே விழுமியப்பண்புகள் அருகிப் போவதை அவதானிக்க முடிகின்றது.

**"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான்**
**மண்ணில் பிறக்கையிலே - அவன்**
**நல்லவனாவதும் கெட்டவனாவதும்**
**அன்னை வளர்ப்பினிலே............"**

ஆம், ஒரு குழந்தையை நல்ல பிரஜையாக உருவாக்குவதில் பிரதான பங்கு தாயையே சாரும். தாய் தன் குழந்தையைக் கருவில் சுமக்கும் போதே நல்ல இசையைக் கேட்க வேண்டும். அதன் மூலம் குழந்தை நல்லகுழந்தையாக ஆரோக்கியமாக வளரும் ஒரு குழந்தையின் குண இயல்புகளில் 50% மானவை கருவிலேயே வளர்க்கப்படும். எனவே கருவில் குழந்தையை சுமக்கும் போதே நல்ல விழுமியங்களை ஊட்டவேண்டும். அத்தகைய சக்தி இசைக்கே உள்ளது. எனவே தான் நல்ல இசையைக் கேட்க வேண்டும்.

பிறந்த குழந்தையை உறங்க வைக்க தாலாட்டுப் பாடியோ அல்லது இனிய பாடல்களை இசைத்தட்டில் போட்டு ஒலிக்கச் செய்தோ கேட்கச் செய்து மனதில் அமைதியை ஏற்படுத்தி உறங்க வைக்க வேண்டும். இதன்மூலம் அமைதி ஏற்படும். அமைதி அன்பை வளர்க்கும்.

இசை மூலம் இறையருளைப் பெறலாம். இசைப்பாடல்கள் பாடுவோரையும், கேட்போரையும் இறையுணர்வில் ஈடுபடச் செய்யும் ஆற்றல் கொண்டவை. திருமுறைப் பாடல்களை இசையோடு பாடும் போது இறைபக்தி, மனநிம்மதி, ஆன்மீக உணர்வு என்பன மேலோங்கும். இறைவன் இசை வடிவானவன், சரஸ்வதி வீணை வாசிப்பதன் மூலமும், சிவபெருமான் உடுக்குடன் புல்லாங்குழல் வாசிப்பதன் மூலமும் அறிய முடிகின்றது.

ஒருவருடைய மனதைச் சாந்தப்படுத்துகின்ற ஆற்றல் இசைக்குண்டு. விஞ்ஞான ஆய்வின் படி ஒருவருடைய இரத்த அழுத்தத்தை இனிமையான இசையைக் கேட்பதன் மூலம் குறைக்க முடியும் எனக் கண்டுபிடித்துள்ளனர். இன்றைய சமுதாயத்தினர் காலத்தின் வேகத்துடன் போட்டி போட்டு ஓடிக் கொண்டிருக்கின்றனர். இதனால் மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தம், கோபம், படபடப்பு போன்றவற்றிற்கு ஆளாகின்றனர். கோபம் பாவத்தை விளைவிக்கும் . எனவே மனதைச் சாந்தப்படுத்தி, கோபத்தை குறைக்கும் ஆற்றல் இசைக்கு உள்ளது. எனவே நல்ல இசையை எமக்கு கோபம் வரும் போதெல்லாம் கேட்க வேண்டும்.

இசை மனதை வசப்படுத்தும் ஆற்றல் கொண்டது. இராவணனின் சாமகானத்தைக் கேட்டு, சிவபெருமான் அவனுக்கு அருளினார். எனவே இத்தகைய சிறப்பினை அடைய இசையைப் பாடுவதன் மூலமோ, கேட்பதன் மூலமோ மாணவரிடையே அருகிப் போகின்ற விழுமியங்களை வளர்க்க முடியும்.

இசைமூலம் பக்தி ஏற்படும் இதனால் மனஅமைதி ஏற்படுகிறது. அதன் மூலம் அன்பு வளர்க்கப்படும். அன்பு உள்ள ஒருவரிடம் பொறுமை வளரும், பொறுமை சகிப்புத் தன்மையை ஏற்படுத்தும். சகிப்புத் தன்மையானது பணிவு, அடக்கம் என்பவற்றை ஏற்படுத்தும் இவை யாவும் நீதி, நேர்மை, சகோதரத்துவம் என்பவற்றை ஏற்படுத்தும். இப்பண்புகள் யாவும் உள்ள ஒருவர் சிறந்த தலைமைத்துவப் பண்புள்ள ஒருவராக வாழ்வார்.

இன்றைய நவீன காலத்தில் வாழ்ந்து வருகின்ற இளைய சமுதாயத்தினராகிய மாணவரிடையே அன்பு, பக்தி, பொறுமை, பணிவு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, சகோதரத்துவம், நீதி, நேர்மை, தலைமைத்துவப்பண்பு போன்ற பல விழுமியப் பண்புகள் அருகி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனவே இன்று மாணவரிடையே அருகி வருகின்ற விழுமியங்களை நல்ல இசையைப் பாடுவதன் மூலமும் கேட்பதன் மூலமும் கட்டி எழுப்ப முடியும். இசையானது மனதை இசைய வைக்கும். எனவே,

"இசையை இரசிப்போம்
விழுமியங்களை வளர்ப்போம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சமுதாயம் எங்கே செல்கிறது?



செல்வி.சந்திரதாஸ் அனுஷா
ஆசிரியர்,
யா/ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க.மகளிர் வித்தியாலயம்

" இன்றைய இளைஞர்களே நாளைய நாட்டின் தலைவர்கள்" என்ற கூற்று எம் அனைவரின் மனங்களிலும் ஆழமாகப் பதிந்த தொன்று.ஆனால் தற்காலச் சூழ் நிலைகளை உற்று நோக்கும் போது இன்றைய இளைஞர்களா நாளைய நாட்டின் தலைவர்கள்? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததா கின்றது. கடந்த 19ம் 20ம் நூற்றாண்டு வரை எமது மண்ணின் கல்வி, கலாசாரம், பண்பாடு, ஒழுக்கநெறி உலகளவில் பேசப்படு மளவிற்கு சீர்மியம் மிக்கதாகவே இருந்தது. பெற்றோர் பிள்ளைகளுக் கிடையே பொருத்தமான பயம் கலந்த இடைவெளி இருந்தது. அதனை இடைவெளி என்பதைவிட மரியாதை என்று சொல்லிக் கொள்ள லாம். அந்நாட்களில் பெற்றோர் முன் பிள்ளைகள் அமர்ந்திருந்து உரத்த குரலில் பேசுவது கூட மரியாதை யீனமாக கருதப்பட்டது. பாட சாலைகளில் ஆசிரியர் தெய்வமாகப் போற்றப்பட்டார். வாழ்வளிக்கும் கல்வியை தரும் குரு மாதா, பிதா விற்கு அடுத்ததாக தெய்வத்தைவிட மேலாக மதிக்கப்பட்டார். சமூகத் தில் ஒழுக்கம் நிறைந்திருந்தது. தவறு கள் அங்காங்கே நடந்தாலும் உடன டியாகவே தண்டனைகள் வழங்கப் பட்டு சீர்செய்யப்பட்டன. அனை வரும் சமூக நலனில் அக்கறை உடை யவர்களாக இருந்தனர்.

சமூகத்தை நல்வழியில் நடத்திச் செல்ல ஆன்றோர்களும் சான்றோர்களும் நிறையவே இருந் தார்கள். அவர்களின் வழிகாட்டல் கள், ஆலோசனைகள் ஒவ்வொரு செயலையும் சரியாகச் செய்வதற்குத் துணைநின்றது. வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் திருமணத்திற்கு பெண் தேடும் போது யாழ்ப்பாணத் துப் பெண் வேண்டும் என்று கேட்டு அலைவது யாழ் மண்ணின் பண்பாடு ,பாரம்பரியம், கலாசாரத்திற்கு உலகளவில் கிடைத்த மணிமகுடம் என்றே கூறவேண்டும். அவ்வாறு இருந்த யாழ். மண்ணிற்கு இன்று என்ன நடந்தது? கற்றறிந்தோர் உலகம் கூறும் ஒரே பதில் யுத்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வரலாற்றில் தமிழினம் தலை நிமிர்ந்து நின்ற நாட்கள் அழிந்து உயிரை கையில் பிடித்துக் கொண்டு வாழ்விடம் தேடி ஓடிய காலங்களில் கூட எம்மிடையே கலாசாரம், பண்பாடு பாதுகாக்கப்பட்டது. போர் ஓய்ந்து சமாதான சூழலில் மீள்குடியேற்றம், வாழ்வாதார உதவிகளில் தொடங்கியது எம் சமூகத்தின் முதல் சறுகல். தொழில் வழங்குதல் என்ற பேரில் இங்கிருந்து வெளியூர்களுக்கும் வெளியேறத்தொடங்கினர் எம் இளைஞர்களும், பெண்களும். நவநாகரிக பழக்கவழக்கங்களை மிக விரைவாகவே கைக்கொள்ளத் தொடங்கினர். வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு வெளியுலகு மிகவும் பசுமையாதாகவும் ரம்மிய மானதாகவும் காட்சியளித்தது. அதன் வசதி வாய்ப்புக்கள், கலாசார பழக்கவழக்கங்கள் இலகுவாகவே மனதில் இடம் பிடித்தது. அடைபட்டிருந்த பாதைகள் திறந்ததும் மடை திறந்து பாயும் வெள்ளம் போல கட்டுக்கோப்புக்கள் உடைந்து சின்னாபின்னமாக நின்ற எம் சமூகத்தை நோக்கி தென்னிலங்கை பாரம்பரியமும், கலாசாரமும், நவநாகரிகமும் இரு கைநீட்டி அணைத்துக்கொண்டது.

பிச்சைக்காரன் முதல் பள்ளி செல்லும் பிள்ளை வரை கைகளில் செல்லிடத் தொலைபேசிகள் தாராளமாய் புழக்கத்திற்கு வந்தது. தாவணியும், பட்டுச்சேலையும் கரையொதுங்கி குட்டைப்பாவாடைகளுக்கும், நீளக்காற்சட்டைக்கும் வழிவிட்டன. கவர்ச்சியோ கவர்ச்சி. கண்களுக்கு குளிர்ச்சி. பெற்றவர்களும் துணை நின்றால் பிள்ளைக்கு ஏது பயம்?. "நாலு இடத்திற்கு போற பிள்ள. நல்ல உடுப்பு போட்டா தானே மரியாதை" என்ற வியாக்கியானம் வேறு. பட்டுச்சேலையும், நீளப்பாவாடையும் பட்டிக் காட்டுத்தனமாகிப் போனது. நவநாகரிகம் எமது சமூகத்தின் உடைகளில் மட்டும் கைவைக்கவில்லை. மொத்த வாழ்க்கையிலுமே சிலந்தியைப் போல வலை பின்னத்தொடங்கி விட்டது. போதைப் பொருள் பாவனை, மதுபானம், புகைத்தல் ஆபாசப்படங்கள் உள்ளடங்கலாக முற்றுமுழுதாக சீரழிந்தது. அழிவை நோக்கி வீறுநடை போடத் தொடங்கியது. பள்ளிமாணவர்களைக் குறிவைத்து போதைப்பொருள் வியாபாரம், ஆபாச வீடியோ விற்பனை சூடுபிடித்தது.

கல்விக்கே முன்னுரிமை கொடுத்து உலகையே திரும்பிப் பார்க்க வைத்த தமிழினம் அதிலும் யாழ் மக்கள் இன்று இலங்கையின் கல்வி மட்டத்தில் 27ம் இடத்திற்கு தள்ளப்பட்டு நிற்பது நாம் எவ்வளவு ஆபத்தான கட்டத்தை நோக்கி செல்கின்றோம் என்ற உண்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவர்த்தனமாக எமக்கு வெளிக் காட்டி நிற்கின்றது. பெற்றவர்களின் பேச்சிற்கு எதிர்ப்பேச்சு பேசும் பிள்ளையைப் பெற்றவர்களே கண்டிக்க முடியாத நிலை. பிள்ளைக்குப் பெற்றவர்கள் பயப்படும் நிலையில் மற்றவர்கள் மட்டும் கண்டிக்கவா முடியும்?

பிள்ளைநேயம் என்ற பெயரில் பிள்ளைக்கு உலக நாடுகள் கொடுக்கும் சிறப்பிடத்தை பிள்ளைகளே துஷ்பிரயோகம் செய்வது மிகவும் வேதனைக்குரிய விடயம். யாழ்ப்பாணத்தில் பிரதான பாடசாலைகளில் மாணவர்களிடையே கைத்தொலைபேசி பாவனை உண்டு என்பது அனைவரும் அறிந்த விடயமே. அதுமட்டுமல்ல போதைப் பொருள் பாவனை, மதுபாவனை, புகைப்பொருள் பாவனை போன்றவை உண்டு என்பது பல்வேறு சந்தர்ப்பங்களில் பத்திரிகைகள் வாயிலாக வெளிவந்த செய்திகளே. பிள்ளைக்கு அளவிற்கு அதிகமாக வழங்கப்பட்ட சுதந்திரமும் உரிமைகளும் பிள்ளையை அழிவின் விளிம்பில் நிறுத்தியிருப்பது புரியாத தொன்றல்ல. ஆயினும் பெற்றவர்கள் எதுவும் செய்ய முடியாத, சொல்லித் திருத்த முடியாத நிலையில் இருப்பது கவலைக்கிடமே. இளைஞர்களுக்குத் தங்களைப்பற்றி அளவுக்கு மிஞ்சிய எதிர்பார்ப்பு இருப்பதும் ஒரு காரணம். அவர்கள் வளர்ந்த விதம். பிள்ளைகளைச் சுயமரியாதையோடு வளர்க்க வேண்டும் என்ற கருத்து இன்று மக்கள் மத்தியில் பிரபலமாகி வருகின்றது. இதை வேதவாக்காக எடுத்துக் கொண்டு சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வளர்க்கின்றார்கள். இந்த பிரபல கருத்து பின்வரும் நியமத்தின் அடிப்படையில் தோன்றியிருக்கலாம். நீங்கள் கொஞ்சம் புகழ்ந்தால் பிள்ளைகள் கெட்டிக்காரர்களாக வருவார்கள். அதேசமயம் பிள்ளைகளிடம் கொஞ்சம் முகம் சுளித்தால் கூட தன்னம்பிக்கை இழந்து விடுவார்கள் என்ற கருத்தும் நிலவுகின்றது.

பிள்ளைகளின் சுய மரியாதையை வளர்க்க துடியாய் துடிக்கும் உலகத்தில் பெற்றோர் இப்படியெல்லாம் செய்யாவிட்டால் அவர்கள் ஒரு பெற்றோராக இருக்கவே லாயக்கற்றவர்கள் என்ற எண்ணம் பிள்ளை களின் மனதில் வரக்கூடாது. அப்படிப்பட்ட எண்ணத்தை பெற்றோரும் ஏற்படுத்தக் கூடாது என்றும் நினைக்கின்றார்கள். பிள்ளைகள் சின்னதாக ஏதாவது நல்லது செய்தாலும் அது எவ்வளவு சாதாரணமாக இருந்தாலும் அப்பாவும் அம்மாவும் அதை ஆஹா! ஓஹோவென்று புகழ்ந்து தள்ளுகின்றார்கள். ஆனால் அவர்கள் ஏதாவது தவறு செய்தால் அது எவ்வளவு பெரியதாக இருந்தாலும் அதைக் கண்டும் காணாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுவிடுகின்றார்கள். எல்லா வற்றையும் புகழுங்கள். தவறைக் கண்டு கொள்ளாதீர்கள். பிள்ளை களைப் புகழ்வதின் மூலம் அவர்களு டைய தன்னம்பிக்கையை வளர்க்க முடியும் என்று பெற்றோர் நினைக் கின்றார்கள். ஆனால் நல்லது செய்யப் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்து அதன் மூலம் தன்னம்பிக்கையை வளர்க்க முடியும் என்று நினைப்ப தில்லை.

"ஜெனரேசன் மீ" என்ற நூல் கூறும் கருத்தை சற்று நோக்கினால் திறமைகளை வளர்த்துக் கொள் வதாலும் விசயங்களை கற்றுக் கொள் வதாலும் தான் ஒருவருக்கு தன்னம் பிக்கை பிறக்கிறதே தவிர வெறுமனே பாராட்டை அள்ளி வீசுவதால் இல்லை. என்று கூறுகிறது. அது மட்டுமல்ல பாடசாலை தவணைப் பரீட்சையில் வினாவொன்றிற்கு மாணவி ஒருவர் பதிலளித்த விதம் மிகவும் அதிர்ச்சியை அளித்தது. பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் என்ன என்ப தாக அவ்வினா அமைந்திருந்தது. அதற்கு மாணவி அளித்த பதில் பெற்றோர் பிள்ளைகளின் சொற்படி நடக்க வேண்டும். படி படி என்று சுமையை பிள்ளைகள் மேல் சுமத்தக் கூடாது. மிகமிக அதிர்ச்சியும் கலவையும் அளிப்பதான பதிலாக அமைந்தது. பிள்ளைகளுக்கு வழங் கப்படும் சுதந்திரமும், உரிமைகளும் பிள்ளையை எவ்வாறு சிந்திக்கத் தூண்டியிருக்கிறது? இவ்வாறான பிள்ளை தானே சமூக சீர்கேடுகளை சகயமாக செய்வதற்கு அஞ்சாத பிள்ளையாக மாறப்போகின்றது. பிள்ளைகளுக்கு உரிமையையும் சுதந்திரத்தையும் அளவோடு வழங்க வேண்டும். அழிந்து போகும் நிலையில் உள்ள எமது கல்வி, கலை, கலாசாரம் , பண்பாடு ,பாரம்பரியம் போன்றவை காக்கப்படவேண்டிய அவசியம் உணரப்படுகின்ற இவ்வேளையில் எமது சமூகத்தை பாதுகாக்க நாம் என்ன செய்யப் போகின்றோம்? பிள்ளையின் வாழ்வின் அடித்தளமாக அமையும் குடும்பத்தில் இருந்து முதலில் பெற்றோரும், பெரியோரும், அள வான சுதந்திரத்துடன் கட்டுப் பாடாக வளர்க்க முன்வரவேண்டும். பண்பாடு, கலாசாரம் என்பவற்றை இறுக்கமாகக் கைக்கொள்ளப் பழக்க வேண்டும். அதற்கு அடுத்தபடியாக பாடசாலையில் ஒழுக்கக் கல்வி மிகப் பிரதானமாகக் கற்பிக்கப்பட வேண் டிய பாடமாக உள்ளது. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியாக, வழிகாட்டுபவராக, தவறுகளைத் திருத்துபவர்களாக, கண்டிப்பவர் களாக மாற வேண்டும்.

பிள்ளைகளும் தமது பெற் றோர் ,பெரியோர், ஆசிரியர்களை கனம் பண்ணுபவர்களாக வாழ வேண்டும். பெரியவர்கள் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு தான் கண்டிக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நவ நாகரிகம் என்ற போர்வையில் சமூகச் சீரழிவிற்கான செயற்பாடுகளை நிறுத்தி கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இவ்வாறு தன்னிலை உணர்ந்து எமது சமூகம் செயற்படும் போது தான் நாம் தன் மானம் உள்ள தமிழினமாக தரணி யில் தலை நிமிர்ந்து வாழ முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# நாட்டியத்தில் பதங்களின் மெய்த்திறன்

திருமதி. அகிலபானு ராஜ்குமார்
ஆசிரியர்,
B.F.A, PGDE
யா/காரை இந்துக்கல்லூரி

தழுக்குவதும் மினுக்குவதும் நாட்டிய மாகாது. இசை கேட்டவுடன், உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரை ஆடவேண்டும். இதுவே நாட்டியமாகும். இக்கலையானது நுண்மதிகளைத் தன்னகத்தே கொண்டு வீறுநடைபோடுகின்றதென்றால் மிகையாகாது. "நாட்டியத்தில் பதங்களில் மெய்த்திறன்" என்ற சொற்றொடரை நோக்கின் பதம் என்ற சொல் "வார்த்தை" "கால்" எனப் பொருள்படும். உணர்ச்சியின் பல நிலைகளை அபிநயத்துக் காட்டுவது சாஹித்தியங்கள் "பதம்" என அழைக்கப்படும். ரஸங்கள் ஒன்பது இருப்பினும் சிறப்பானதான சிருங்காரமே பேசப்படுகிறது. இவ் ரஸத்தின் மூலம் காதல் உணர்வை நாயகன் நாயகி சித்தரிப்பதாகவே பதம் அமைந்துள்ளன. பதம் உருப்படி களின் வரிசையில் தன்னி கரில்லாத சிறப்பினைக் கொண்டு மிளிர்கின்றது. சில சந்தர்ப்பத்தை நோக்கின், மணிவாசகரது திருப்பதிகங்களும், ஆண்டாளின் திருப்பாசுரங்களும் இறைவனைத் தலைவனாவும், தம்மைத் தலைவியாகவும் கொண்டு உலகியல் காதலைத் தெய்வீக உறவாகக்கொண்டு பாடப்பட்ட பாடல்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக் களாக இவை அமைகின்றன.

"மத்தளம் கொட்ட வரி சங்கம் நின்றூத" என்று ஆண்டாளும்

"முள்ளிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்து தெம்மையாளுடையாள் இட்டிடையின்.."

என மாணிக்கவாசகரும் நினைந்து உருகியமையைக் குறிப்பிடலாம்.

கீத கோவிந்தத்திற்குரிய கருப்பொருளை அதன் ஆசிரியரான ஜெயதேவர் பிரம்ம வர்த்த புராணத்தின் கிருஷ்ண ஜன்ம காண்டத்திலிருந்தும், ராதாகிருஸ்ண எல்லைகளை வர்ணிக்கும் தேவிபாகவதத்தின் ஒன்பதாவது காண்டத்திலிருந்தும் சிறிதும் எடுத்துக் கொண்டிருக்கிறார். ஓர் இரவில் கண்ணனும், ராதையும் காமத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினாலும், பிரிவுத் துன்பத்தினாலும் படுகின்ற அவஸ்தையை இங்கு வர்ணித்துள்ளார். ஜெயதேவர் இதனூடாக ஜீவாத்ம, பரமாத்மா ஐக்கியம் பற்றி மானிட உலகிற்கு எடுத்துக் கூறியுள்ளார்.

கி.பி 17ம் நூற்றாண்டின் தொடக்கம் சாதாரணமானத் தலைவனது வீரப் பண்புகளையும் சாதனைகளையும் விபரிக்கும் சாகித்தியங்களையே குறித்துப் பின்வந்த காலத்திலேயேதான் குறிப்பாக சிருங்கார ரஸத்துடன் இது இனங்காணப்பட்டது. தஞ்சாவூர் நாயக்க அரசனான விஜய ராகவ நாயக்கர் இரகுநாதப்புரம் எனும் யக்ஷ கானத்தில் பதத்தைக் காதல் ரஸமாகக் காட்டியுள்ளார். இசைவழக்கில் பதம் எனும் சொற்கூறு நாட்டிய இசை சார்ந்தும் மதுர பாவத்தின் பல்வேறு பண்புகளைக் கையாளுவதுமான ஒரு உருப்படியாகக் கொள்ளப்படுகின்றது என்பது மிகையாகாது.

பதங்கள் இயற்றியோரில் மிகவும் போற்றப்படுபவர் சேத்திரக்ஞர்" ஆவார். ஆனால் இவரது தன்னிகரில்லாத எழுத்திற்கு முன்மாதிரியாக "நாயகன் நாயகி" எழுந்த பாடல்களுள் அன்னமாச்சாரியாருடைய "சிருங்கார சங்கீர்த்தன முலு" என்கின்ற பாடல் அமைந்தது. இவருடைய காலத்தில் பதங்கள் கடவுள் புகழ்ச்சியாகவும் இருந்தன. பின்னர் இவை மாறுபட்டு மனிதக் காதலைப் பேசுவதாகவே அமைந்தன.

தமிழ்ப் பதங்களின் முன்னோடியாகக் கனம் கிருஷ்ணையர் குறிப்பிடுகின்றார். இவர் இறைவனைப் புகழ்ந்து பாடிய பதங்கள் நாட்டியத்திற்கு ஏற்றவாறாக அமைந்திருந்தமையால் "நாட்டிய உருப்படியாகக்" கொள்ளப்படுகின்றது. நாட்டியத் தாரகை பால சரஸ்வதி அம்மையாரது "கிருஸ்ண நீபேகனே பாரோ" என்ற பத்த்திற்குரிய நாட்டியம், அதன் அபிநயம் மிகவும் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

இப் பதங்களை இசையியல் சார்நிலை கொண்டு நோக்கும் போது இது பெரும்பாலும் சௌக்க காலங்களிலேயே பாடப்படுகின்றது. நுண்ணியகலை நுட்பம், சாகித்தியங்கள் நுட்பமான வண்ணங்கள், மற்றும் உணர்ச்சிகரமான கோணங்களை மிகத் தெளிவாக வெளிப்படுத்தக் கூடிய இராகங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. பெரும்பாலான பதங்கள் "பக்தி" இராகங்களிலே பாடப்பட்டிருக்கின்றன. "காம்போதி, பைரவி, கல்யாணி, சங்கராபரணம், பந்துவராளி, சஹானா, அடானா" ஆகிய இராகங்கள் தமிழ்ப்பதவாக்கேயர்களால் கையாளப்பட்டிருக்கின்றன. சேத்திரக்ஞர் "காம்போதி" இராகத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக பதங்களை இயற்றியுள்ளார்.

தமிழ்ப்பதங்கள் இராகம், ரஸ பாவம் இவை மட்டுமல்லாது இலக்கிய மேன்மையும் கொண்டு இலங்குகின்றன. புராண நிகழ்ச்சி களின் குறிப்புகள் (அர்ச்சுனனுக்கு பாசு பதாஸ்திரம் கொடுத்தது, பாற் கடலைக் கடைந்தது) "எந்நேரம்" எனும் தோடி இராகப்பதத்தில் செறிந்து காணப்படுகின்றன. நம் நாட்டியத்திற்குரிய மேதைகளின் பதங்கள் பற்றி இவ்விடத்தில் குறிப் பிட வேண்டியது கடமையாகும். அந்த வகையில் "கொஞ்சும் தமி ழில் மிஞ்சி விளையாடிய சந்தக் கவிஞர்" கவிமாலை பிரம்மஸ்ரீ வீர மணி ஐயர் அவர்கள் தன்னிக ரில்லாச் சிறப்பினைப் பெற்றுத் திகழ்கின்றார். இவருடைய பதங் கள் சிருங்கார ரஸம் ததும்பியன வாகவே அமைகின்றன. எழில் வளம்மிக்க சிறந்த கருத்துக்களை இவருடைய பதங்களில் காணலாம்.

இவ்வாறு மானுட பரிணா மத்தோடு கூடி வளர்ந்த சிருங்காரம் ததும்பும் பாடல் வகைகள் அவ்வப் போது வடிவங்களிலே மாற்றம் பெற்றாலும் இன்று தமிழ்ப்பண் பாட்டு அழகியல் வளத்திற்கும், மேம்பாட்டிற்கும் மதிப்பிட முடி யாத பணியாற்றி வருகின்றன. அதன் வளம் குறையாது பேணிப் பாது காப்பது எமது கலை உலகின் தலை யாய கடன் ஆகும்.

"தன்னை மறந்தாள்
தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் - நங்கை
தலைவன் தானே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயமுகாமைத்துவமும் திறன்களும்



திருமதி.பரிமளா கேசவன்
ஆசிரியர்
(B.com,PGDE)
யா/நாரந்தனை றோ.க.மகா வித்தியாலயம்.

நாம் ஒரு வளம். எமக்குக் கடவுள் படிப்படியாக வளர்ந்து செல்லும் இரு வளங்களைத் தந்துள்ளார். ஒன்று உடல் நிதானமாகப் பராமரிக்கப்பட்டுப் பேணி வந்தால் வலிமையுடன் வளர்கிறது. இரண்டாவது மூளை, இது எமது தலைமை அலுவலகமாகச் செயற்படுகிறது. இது நாம் தொடர்ந்து படித்தாலும் சிந்தித்துப் பழகினாலும் வளர்ச்சியடையக்கூடியது. இவ் இரண்டையும் இணக்கமாகத் தொடர்புபடுத்தி ஒன்றையொன்று வலிமைபெற வழி வகுக்க வேண்டியது எமது தலையாய கடமை ஆகும்.

நல்ல ஆரோக்கியமான உடலைப் பேணுவதால் உடல் பலமடைந்து மூளைத்திறனிலும் விருத்தித் தன்மை ஏற்படுகின்றது. இதனால் தரமான கல்வியை ஏற்படுத்திக் கொள்ள முடிகிறது. இவற்றிலும் மேன்மையானது இன்னொரு வளமும் காணப்படுகிறது. அதுவே "நேரம்" எனும் முக்கியமான வளமாகும். இவ்வளமானது திட்டமிட்டு உச்சமாகப் பயன்பாட்டில் ஈடுபடுத்திச் சிறந்த வெளியீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டிய ஒன்றாகக் காணப்படுகிறது. எந்நேரமும் ஓர் இலக்கை நோக்கி உற்சாகத்துடன் இயங்கிக்கொண்டிருக்கும் ஒருவர் நேரத்தைப் பொன்போல உற்சாகமாகப் பயன்படுத்திக் கொள்வார். வாழ்வில் வெற்றியடைவதற்கு நேரமுகாமைத்துவம் மிகவும் இன்றியமையாததாகவும் சுய கட்டப்பாட்டின் கீழும் இருக்க வேண்டும்.

உடல், மூளை, நேரம் என்ற மூன்றையும் நிதானமாகப் பேணும் போது அவற்றுக்கிடையே சீரான தொடர்பு வளர்ந்து முன்னேற்றம் அடையக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. மாறாக இம் மூன்றும் சீராகத் தொடர்பற்று இயங்கும்போது வாழ்வும், தொழிலும் சிதறிப் போகிறது. ஊடல், மூளை, நேரம் என்ற மூன்றையும் இணைத்துக் கடையும்போதுதான் ஆற்றல் ஏற்படுகிறது. இதை நாம் உணர்ந்து செயற்படவேண்டும். இத்தகைய திறன்களை நேர்முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்க பூர்வமாக வளர்த்து எடுப்பதே சுயமுகாமைத்துவம் ஆகும்.

நேர் முறையில் ஆக்க பூர்வ மாகச் சிந்தித்தல் என்பதனுள் கீழ் வருவன அடங்குகின்றன.

- ஒருவர் தனது தொழில்சார் குறிக் கோளை நோக்கி அதனைப் பயன் படுத்தல்.
- நேரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்தல்.
- முயன்றால் நிச்சயம் முடியும் என்ற மன நம்பிக்கையுடன் செயற்படல்.
- நிதானமாகவும் மகிழ்வாகவும் இருக்க வேண்டும் எனத் தினமும் சிந்தித்தல்.
- எம்மைப் பலமாக்குகின்ற நற் பெயரை மேம்படுத்திக் கொள் ளும் சூழலுடனும் நண்பர்களுட னும் இணைந்து எம்மை வளர்த் துக் கொள்ள வேண்டும்.
- எம்மைப் பலவீனப்படுத்தும் நபர் கள், சூழல், பழக்க வழக்கங்களி லிருந்து கவனமாகவும், படிப்படி யாகவும் விலகிக்கொள்ள வேண் டும்.
- எம்மைச் சுற்றியுள்ளோரிடம் நிதானமானதும் நேர்முறைத் தொடர்புகளைப் பராமரித்துக் கொள்ளவேண்டும்.
- எம்மைச் சுற்றியுள்ளோர் கூறு வதை நிதானமாகச் செவிமடுக்க வேண்டும். அவற்றை அப்படியே நம்பிவிடக்கூடாது. விடயங்களை மறுபரிசீலனை செய்து மதிப்பீடு செய்து அதனடிப்படையில் தீர் மானம் மேற்கொள்ள வேண்டும்.

தனிமனிதன் குடும்பத்துக் கும் தொழில் வாழ்வுக்கும் இடைப் பட்டவன். இரண்டையும் ஒழுங்கு படுத்தினால் வாழ்வில் வளர்ச்சி பெற்றுக்கொள்ள முடியும். மாறாக இரண்டையும் ஏமாற்ற முனைத்தால் வாழ்வில் தோற்றுப் போய்விடக் கூடிய நிலை ஏற்படும்.

உதாரணமாக ஒருவர் தனது தொழிலையும் குடும்ப உறுப்பினர் களின் உறவுகளில் உயிர்விடும் விசுவாசத்தையும் கைவிடுவாராயின் வாழ்வில் வெற்றி பெறவே முடியாது. மற்றவர்களின் ஆசிர்வாதமே ஒரு வரை வாழ்விக்கும் மருந்தாகும்.

பரபரப்புடன் காணப்படு வது திறமையின் வெளிப் பாடல்ல. நிதானமான குறிக்கோளை நோக்கிய செயல்களைத் தான் திறமையாகக் கருதமுடியும் என்கின்றனர் புருக் (Bruch) கொஷல் (Chashal) ஆகி யோர் எத்தகைய திறன்கள் வளர்ந் தால் சுயமுகாமைத்துவம் வளர்ச்சி பெறும் என அவதானிப்போம்.

- ஒருவர் தனது இயலுமை, ஆற்றல், நேரம் என்பவற்றை அடிப்படை யாகக் கொண்டு தனது குறிக் கோள்களையும் செயல்களையும் திட்டமிடல் வேண்டும்.
- நேரத்தைத் திட்டமிட்டுச் செல விட வேண்டும். நாளாந்த வேலை கள், கிழமைக்கான வேலைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாந்த வேலைகளைத் திட்டமிட்ட அடிப்படையிலே செயற்படுத்த வேண்டும்.

- நேரத்தை வீணடிக்கின்ற, குழப்பத்துக்கு உட்படுத்துகின்ற, மகிழ்ச்சியற்றதாக்குகின்ற நிலைமைகளையும் நண்பர்களையும், பழக்கவழக்கங்களையும் இனங்கண்டு நிறுத்திவிட வேண்டும்.
- வாய்ப்புக்களைத் தவறவிடாது உச்சமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
- எமது பாதுகாப்பிற்கு எப்போதும் முன்னுரிமை கொடுக்கவேண்டும். ஒருவரது இருப்பிடம் ,தொழில், வருமானம், பாடசாலை, நற்பெயர், உடல்நலன், மகிழ்ச்சி, விழுமியங்களை எவரும் சேதப்படுத்த அனுமதிக்கக்கூடாது.
- புதிய சூழல், புதிய நபர்கள், புதிய தொழில்நுட்பம் பற்றி விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். இது வருமுன் காக்கும் வல்லமையாகும்.
- ஒவ்வொருவரும் தமது தொழில் முன்னேற்றம் பற்றியறியத் தினமும் தகவல் சாதனங்களுடன் தொடர்பு பேணல் வேண்டும்.
- ஒவ்வொருவரும் தங்களது பலவீனங்களை இனங்கண்டு அகற்றிவிடவும் பலமான விடயங்களை மென்மேலும் வளர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது சுயமுகாமைத்துவமானது வெற்றியடைந்து வீறுநடை போட்டுக் கொள்ளும் என்பது நிச்சயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# கல்வி மறுசீரமைப்பில் ஆரம்பக் கல்வியில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள்



திருமதி. சசிந்தா பிரபாகரன்
ஆசிரியர்
யா/வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம்

பிள்ளைக்கு முதல்முறையாக திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட கலைத்திட்டத்திற்கேற்ப வழங்கும் கல்வி ஆரம்பக்கல்வி ஆகும். முறை சார் கல்வியின் முதற்கட்டமாக தரம் - 1 தொடக்கம் 5வரை பிள்ளையின் அத்திவாரம் இடப்படுகின்றது. மாணவர்களின் முதிர்ச்சிப் படி முறைக்கேற்ப அவர்களின் உள்ளார்ந்த செயற்பாடுகளை மேம்படுத்தி வளர்க்கக் கூடிய வகையில் ஆரம்பக் கல்வி கற்றல் செயல் ஒழுங்குகள் வடிவமைக்கப்படு கின்றன.

உலகம் இருபத்தியோராயிரம் நூற்றாண்டில் காலடி பதித்துள்ளது. ஒரு நூற்றாண்டிலிருந்து அடுத்த நூற்றாண்டுக்கு மக்கள் காலடி பதித்தமையானது புதிய நூற்றாண்டு என்றுமில்லாத நவீன தொழிநுட்ப அறிவினைக் கொண்டதாக அமையப் போகிறது. இதனை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும். கணனி, இணையம் ஆகியவற்றின் வளர்ச்சி கல்வித் துறையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வளர்ந்து தொழில் நுட்ப விஞ்ஞான விருத்திக்கு ஏற்ப எமது மாணவர்களையும் நாம் தயார் படுத்த வேண்டும் எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் எமது கல்வி முறையும் மறு சீரமைக்கப்பட்டுள்ளது.

பிள்ளைப் பருவம் ஒவ்வொரு வருக்கும் வாழ்வில் மகத்தான அனு பவங்களைத் தோற்று விக்கும் இனிய பருவமாகும். இப் பருவத்தில் பெறும் கல்வி வாழ் நாள் முழுவதையும் வளப்படுத்தி முன்னெடுத்துச் செல்லும் வலுவுடையதாக இருக்கிறது. சிறுவர்களுக்கு ஆரம்பத்தில் கற்பிக்கப்படும் கல்வி இலகுவானதாகும் சிக்கலற்றதாகவும் சிறந்த கல்வியாகவும் அமைதல் வேண்டும். இதுவரை நடைமுறையில் இருந்து வந்த ஆரம்பக்கல்வி முறை எந்த வகையிலும் திருப்திகரமானதாக காணப்படவில்லை. பிள்ளைகளிடம் நடத்தை விருத்தி, திறன் விருத்தி, அறிவு விருத்தி என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்த தவறிவிட்டது என்பது ஆய்வாளர்களின் முடிவாகவுள்ளது. பிள்ளைகள் விருப்புடனும் மகிழ்வுடனும் பயனுள்ள கற்றற் செயற்பாடுகளில் இயங்குதல் ஒரு வகுப்பின் செயலூக்கநிலை எனலாம். இவ்வாறான மகிழ்ச்சிகரமான இயங்கு நிலைக்கு வகுப்பறையின் வசதிகளும், வளங்களும், ஆசிரியரின் மகிழ்ச்சிகரமான கற்பித்தல் அணுகுமுறைகளும் அவசியமான காரணிகளாகும்.

ஆரம்பக் கல்வியில் முறையான அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும் என்பது எல்லாக் கல்விமான்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். விசேடமாக குழந்தையின் கல்விக்கான அடித்தளம் நன்கு இடப்படுதல் வேண்டும். இப்பருவத்தில் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற கல்வியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஒரு வகுப்பறை மகிழ்ச்சியானதாக அமையும் போது தான் அங்கு வினைத்திறனான கற்றல் இடம் பெறும் வகுப்பறை மாணவரின் அனுபவம், செயற்பாடு, கவர்ச்சி போன்றவற்றிற்கு உரியதாக இருத்தல் வேண்டும். சுய கற்றல் மாணவரின் ஊக்கியாகச் செயற்படும் வண்ணம் ஆசிரியர் கற்பித்தல் அனுபவங்களை மாற்ற வேண்டும். "விளையாட்டு மூலம் கற்பித்தல் பிள்ளைகளிடையே மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும்" என்று புறொபல் குறிப்பிடுகின்றார்.

தரம் 1இல் பிரவேசிக்கும் பிள்ளையை ஆசிரியர் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட விளையாட்டுக்கள், செயற்பாடுகள் கலந்து பேசுதல் மூலம் இனங்கண்டு கொள்வர். தனித்தனியாகவும், குழுவாகவும் பிள்ளைகளை செயற் பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் ஆற்றல்களை இனங் கண்டு அவர்களுக்கு பொருத்தமான வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை ஆசிரியர் அமைத்துக் கொள்ள வேண்டும்.

மாணவர் ஒவ்வொரு தரத்திலும், ஒவ்வோர் பாடங்களிலும் பிள்ளைகளிடம் எய்த வேண்டுமென எதிர்பார்க்கப்படும் சில தேர்ச்சிகளை அவர்கள் எய்தினார்களா என ஆசிரியர்கள் கண்டறிதல் வேண்டும்.

1) தொடர்பாடல்சார்ந்த தேர்ச்சி.
2) சுற்றாடல் சார்ந்த தேர்ச்சிகள்.
3) ஒழுக்கமும் சமயமும் சார்ந்த தேர்ச்சிகள்.
4) விளையாட்டு, ஓய்வு சார்ந்த தேர்ச்சிகள்.
5) கற்றலுக்காக கற்றல் சார்ந்த தேர்ச்சிகள்.

என்பது பிள்ளைகளிடம் எதிர்பார்க்கப்படும் முக்கிய தேர்ச்சிகளாகக் கொள்ளப்படுகின்றன. இத்தேர்ச்சிகளை பிள்ளைகளிடம் விருத்தி செய்யக் கூடியதாக ஆசிரியர்கள் பாடங்களை அமைத்துக் கொள்ளு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் முக்கியமானதாகும். இதனால் தரம் - 3 இல் இருந்து இரண்டாவது தேசிய மொழி கற்பிக்கப்பட இருக் கிறது. ஆங்கிலம் தெரிந்திருத்தல் அவசியம் என்பதால் தரம் - 1 இல் இருந்து பிள்ளைகளுக்கு சுற்றாடல் சார்ந்த வாய்மொழி ஆங்கிலமும் தரம் 3இல் இருந்து முறைசார்ந்த ஆங்கிலமும் கற்பிக்கப்பட இருக்கி றது. இதன் மூலம் மாணவர்கள் ஆங்கில அறிவை விருத்தி செய்யக் கூடியதாக அமைகின்றது.

கூடுதலான மாணவர்கள் பரீட்சைகளில் சித்தி பெறாமைக்கு முக்கிய காரணமாக அமைவது மொழித் தேர்ச்சியின்மையே என்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டு ள்ளது. மாணவர்கள் ஆரம்ப வகுப்புக்களில் மொழியை சரியான முறையில் உச்சரித்து கிரகித்து வாசிக்க விளங்கிக் கொள்ளாமையே இதற்குக் காரணமாக அமைகிறது. எனவே தான் இன்று மொழிக்கு ஆரம்ப கல்வியில் மிக முக்கியமான இடம் கொடுக்கப்படுகின்றது. பிள்ளைகளிடம் மொழித் தேர்ச்சியை விருத்தி செய்வதற்காக குழு வேலைகள், ஆசிரியர், மாணவர், கலந்துரையாடல், நூலகத்தைப் பயன்படுத்துதல், வாசிப்பு, எழுத்து வேலைகள் தரம் - 6 மாணவர்களிடம் கலந்துரையாடல் சந்தர்ப்பம் வழங்கு தல் போன்ற செயற்பாடுகளுக்கு முக் கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

உடற்கல்விச் செயற்பாடுகள் ஆரம்ப வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இவை தனித் தனியாக இல்லாது சுற்றாடல் கல்வி பாடத்தினூடாக இணைக்கப்பட்ட செயற்பாடுகளின் ஊடாக கற்றல், கற்பித்தல் இடம் பெறுகிறது. இணைபாட விதான செயற்பாடு களிலும் ஈடுபட வழிசெய்யப்பட்டு ள்ளது. மாணவர்கள், சமூகம், பெற்றோர்கள் ஆகியவற்றுக் கிடையே தொடர்புகளை ஏற்படுத் துவதன் மூலமும் பிள்ளைகளிடையே மனப்பாங்கு விருத்தியை ஏற்படுத்தக் கூடியதாக அமைகிறது. அத்துடன் குழு வேலைகளில் ஈடுபடுவதன் மூலம் விட்டுக் கொடுத்தல், கூட்டாகச் செயற்படல், தலைமைத் துவம் ஆகிய திறன்களை வளர்க்கக் கூடியதாக அமைவதும் பிள்ளை களின் சுய கற்றல் திறனையும் விருத்தி செய்யக்கூடியதாக அமைகிறது.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றார் கள். இதனால் பயிற்சி பெறாத எவரும் ஆசிரியராக இவ்வகுப்பு களுக்கு அமர்த்தப்பட மாட்டார்கள் பிள்ளை களின் இயல்பு களுக்கமைய சுதந் திரத்திரனுடைய சுயகற்றலுக்கு ஊக்கம் அளிக்கப்படுகின்றது. ஆரம் பக்கல்வியில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மூன்றும் முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பங்களாக இடம்பெறு கின்றன.

1) திட்டமிட்ட விளையாட்டுக்கள் விநோதங்கள் மூலம் தேர்ச்சியை விருத்தி செய்தல்.
2) பாடஅலகுகளை செயற்பாடுகள் மூலம் பிள்ளைகளிடம் தேர்ச்சியை விருத்தி செய்தல்.
3) எழுத்து வேலைகளின் ஊடாக தேர்ச்சியை விருத்தி செய்தல்.

தரம் 1, 2 விளையாட்டு வினோத ங்கள் நுட்பத்தின் ஊடாக கற்றல், கற்றல் கற்பித்தல் செயற்பாடு களுக்கு அதிக நேரமும் எழுத்து வேலை களுக்கு குறைவான நேரமும் வழங்கப்படுகின்றது. இந்தத் தரங் களில் உள்ள மாணவர்களின் விளை யாட்டு விருப்புக் கேற்ப அதனூடாக தேர்ச்சி விருத்திக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

தரம் 3,4,5 எழுத்து வேலைகளின் ஊடாக செயற்பாடுகளுக்கு அதிக காலமும், விளையாட்டு வினோத செயற்பாடுகளிற்கு குறைவான காலமும் வழங்கப்படுகிறது. ஆரம் பக் கல்வியின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை நன்கு ஒழுங்க மைத்துக் கொள்வதற்கு பிள்ளை களின் கற்றல் தொடர்பான நிறைவு கள், குறைவுகள், இடர்பாடுகள் என்பவற்றை இனங்காணுதல் அவசியமாகும். கணிப்பீடு மூலம் மாணவர்களின் தேர்ச்சியை இனங் காணுதல் அவசியமாகும். அவ தானித்தல், வினாக்கேட்டல், செவி மடுத்தல், செயற்பாடுகளில் ஆர்வத் துடன் ஈடுபடுதல் மூலம் பிள்ளை களினதும் நிறைவு, குறைவுகளை இனங்கண்டு ஆசிரியர் திட்டமிட்ட அடிப்படையில் பிள்ளைகளின் உள் ளார்ந்த ஆற்றல்களை விருத்தி செய்யும் ஆக்கங்கள் நடத்தைகள் கொண்ட தேர்ச்சிக்கு கணிப்பீட்டு முறை வழி வகுக்கின்றது. இதுவரை காலமும் ஆரம்ப வகுப்புக்கள் திட்டமிட்ட முறையில் இயங் கியதாக இருக்கவில்லை. இனிவரும் காலங்களில் பாடசாலைகளின் செயற்பாடுகளில் முக்கிய இடம் வகிப்பது பௌதீக வளங்கள் ஆகும். பிள்ளைகள் குழு வேலைகளில் ஈடு படக்கூடிய இடவசதிகளையும் இருக்கைகளையும் பாதுகாக்கப் பட்ட வகுப்பறைகளைக் கொண்டி ருப்பதுடன் காற்றோட்டமுடையதா கவும் இருக்கும் பிரிவில் 25 பிள்ளைகள் ஓர் ஆசிரியர்களுக்கு இருப்பார்கள். வகுப்பறையில் புறச் சூழல் பிள்ளைகளின் விளையாட்டு உடற்பயிற்சிகளுக்கு ஏற்றதாக அமைக்கப்பட்டிருக்கும் ஆரம்பக் கல்வி மாணவர்களின் மகிழ்ச்சிகர மான கற்றலை பயனுறுதியுடைய தாக்குவதற்கு இன்றைய பிள்ளை நேயப் பாடசாலை அணுகுமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் உதவுகின்றது. பிள்ளையின் ஆரோக்கியம், பாதுகாப்பு, பால், சமத்துவம், வசதி வாய்ப்புக்கள் என்பவற்றை மேம்படுத்துவதனூடாக பிள்ளையின் தரமான கல்வியிலான உயர்வு நிலையை எந்த வித இடையூறுமின்றி பெறுவதனை ஊக்குவிப்பன பிள்ளைநேயப் பாடசாலையிலாகும்.

மகிழ்ச்சியான அனுபவங்களைப் பெறக் கூடிய வகையில் கற்றல் சூழலை ஒழுங்கமைத்துக் கொடுப்பது ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் கடமையாகும். பிள்ளைகள் அனுபவங்கள் மூலமே கற்கின்றனர். பிள்ளைகள் சுயமாகவும், சுதந்திரமாகவும், செயற்படுவதற்கும், விளையாடுவதற்கும் தொட்டுணர்வதற்கும் பயன்படுத்துவதற்குமான களமாக கற்றல் வட்டம் அமைய வேண்டும். கற்றல் வட்டத்தினுள் வைக்கப்படும் பொருட்கள் அடிக்கடி மாற்றப்படல் வேண்டும். கற்றல் வட்டம் பலவாகும். சித்திர வட்டம், சுற்றுச் சூழல் வட்டம், நாடக ஆற்றுகை வட்டம்,செய்தித் தகவல் வட்டம், இசைவும் அசைவும் வட்டம், புலன் விருத்தி வட்டம், பண்பாட்டியல் வட்டம், நீர்மணல் வட்டம், சமூகத் திறன்வட்டம் இத்தகைய சிறப்பான பௌதீக வளங்களைக் கொண்டு வகுப்பறைகள் அமைவதால் பிள்ளைகளின் தேர்ச்சி சிறப்படையக் கூடியதாக இருக்கும். இவ்வாறு கல்வித் திட்டத்தில் உள்ள குறைபாடுகள் யாவும் களையப்பட்டு ஆரம்ப வகுப்புக் கல்வியில் மறு சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் எதிர்கால சவால்களை மாணவர்கள் இலகுவில் எதிர் கொள்ளக் கூடியதாக இருக்கும். புதியதோர் சமூகம் உதயமாக வழிவகுக்கும் என்பது உறுதி

**உசாத்துணை நூல்கள்:**


1) மகிழ்ச்சிகரமான கற்றல் ஆசிரியர் சேவைக்கால செயற்றிட்டம் (Tip lGTz)

2) ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (2006) உலகச் சிறுவர் நிலை

3) உளசமூக தலையீடு ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் (யுனிசெவ்)

4) செல்வராஜா.ம 1995 கல்வி அபிவிருத்தி முகாமைத்துவம்

5) சின்னத்தம்பி.மா, (2002) கல்வியும் மனித வளவிருத்தியும் எஸ்.எச். பதிப்பகம் கொழும்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் பல்வகைமை இன்று ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பெரும் சவாலாகும்



திருமதி.சுபாஜினி சிவகுந்தன்
ஆசிரியர்,
B.A(Hons),PGDE, Dip.in.LIS (merit)
யா/வேலணை மத்திய கல்லூரி

பிள்ளைகள் ஒவ்வொருவரிடத்தும் குறிப்பிட்டளவு உள்ளார்ந்த ஆற்றல்கள் இருக்கின்றன. இவற்றினை விருத்தி செய்வதற்கான அறிவாற்றல் சார்ந்த சூழல் இன்றியமையாததாகும். எனவே தான் கல்வியானது மாணவர்களது பூரண வளர்ச்சிக்கான வாய்ப்பினை வழங்குகின்றது எனக் கூறப்படுகிறது. மாணவனது பூரண வளர்ச்சி எனும் பொழுது அது மாணவனது உடல், அறிவு, மனவெழுச்சி, சமய ஒழுக்கம் என்பவற்றை உள்ளடக்கிய ஆளமை வளர்ச்சி கருதியதாகும்.

இன்றைய யுகத்தில் பாடசாலைகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு வசதியளிப்பவராகவும், பயிற்சியளிப்பவராகவும் ஆசிரியர்கள் கொள்ளப்படுகின்றனர். முறைசார் கல்வி முறையில் மாணவர்களின் செயற்பாடுகள் நிகழும் களமாக விளங்கவது வகுப்பறையாகும். வகுப்பறைகளில் நிகழும் செயற்பாடுகளின் தரத்திலேயே மாணவர்களின் ஆற்றல் விருத்தியடைகின்றது. வகுப்பறைச் செயற்பாடுகளில் பிரதான முகவராக விளங்குபவர் ஆசிரியர் ஆவார். ஆசிரியரின் செயற்பாட்டுத் திறனிலேயே மாணவரின் செயல்திறன் ஆற்றல் வெளிக்கொணரப்படுகிறது. ஆசிரியரும், மாணவரும் தனித்தனி ஆட்களாகச் செயற்பட்டாலும் இருவரும் கூட்டாக இயங்கு வதிலேயே கற்றல் கற்பித்தல் செய்னமுறையின் வெற்றி தங்கியுள்ளது. எனவே ஆசிரியர்கள் வகுப்பறையில் மாணவர்களை நன்கு அறிந்து தெரிந்து அவர்களுக்குரிய கல்வியை அளிக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் இன்று கற்பித்தல் செயன்முறை நிகழ்த்துவதில் பல்வேறு சவால்கள் ஆசிரியர்களால் எதிர் கொள்ளப்படுகின்றன. அவற்றில் ஒன்றாகவே மாணவர்களின் பல்வகைமை என்பது காணப்படுகின்றது.

இந்தவகையில் மாணவர்களின் பல்வகைமை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியம், பண்பாடு, பால்நிலை, சமூகப் பொருளாதார நிலைமை, வயது, இயலுமைகள், சமய நம்பிக் கைகள், அரசியல் நம்பிக்கைகள் ஆர்வத்தைத் திருப்புதல் என்பவற்று டன் வேறு கருத்தியல்களும் சார்ந்து ஒவ்வொரு மாணவரிடையேயும் காணப்படும் வேறுபாடுகளாகும்.

இத்தன்மைப்பட்ட வேறு பாடுகளையுடைய மாணவர் குழுவினரே இன்றைய சாதாரண வகுப்பறை ஒன்றில் காணப்படு கின்றனர். அதாவது தற்காலப் பாடசாலை, வகுப்பறை ஒன்றை எடுத்து நோக்கின் மாணவர்களில் மீத்திறனுடையோர், மெல்லக்கற் போர், மொழிக் குறைபாடுடை யோர், நெறி பிறழ்வு உடையோர், ஏனைய அங்கக் குறைபாடு உடை யோர், சாதாரண மாணவர் எனப் பல வகையினர் சாதாரண வகுப்பறை ஒன்றில் இன்று காணப்படுகின்றனர். இவ் வேறுபாடுகளை உடையவர்கள் கூட்டிணைக்கப்படுகின்ற போது எழுகின்ற சூழலமைவைக் கையாளு கின்ற போதே ஆசிரியர்கள் பல சவால்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

அந்த வகையில் பாடசாலை கள் புதிய நவீனமான கல்வியின் இலக்குகள் தொடர்பான பிள்ளை களின் படைப்பாற்றல், புத்தாக்கச் சிந்தனை, பிரச்சினை தீர்க்கும் திறன், கற்கும் திறன்கள் என்பவற்றை வளர்க்கும் தொலை நோக்குடை யவை. அறிவையும் தகவல்களையும் மையமாகக் கொண்ட ஒரு புதிய நூற்றாண்டில் வாழத் தேவையான தேர்ச்சியையும் பயிற்சியையும் வழங்கும் நோக்குடையவை. இந்த இலக்குகளை அடையும் வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைத் தற்போதைய வகுப்பறைகளில் மேற்கொள்வது ஆசிரியர்களுக்குப் பெரும் சவாலாகவே உள்ளது.

அத்துடன் இன்றைய கல்வி முறையானது போதனைமுறை, ஆசிரியர் மையக் கற்பித்தல் முறை என்ற நிலைமைகளைத் தாண்டி மாணவர் மைய, பிள்ளைநேய, தேர்ச்சிமையச் செயற்பாட்டு முறை யிலான கற்றல் என்ற புதிய முறை யினுள் பிரவேசித்துள்ளது. இப் பிரவேசமானது சவாலுக்குப்படு கின்ற நிலைமையினை மாணவர் பல்வகைமையானது ஏற்படுத்து கின்றமையை இன்றைய வகுப்பறை களில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அந்த வகையில் மாணவர் களின் பல்வகைமைகள் தொடர்பாக ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால் களை நோக்குமிடத்து உடல் வலிமையும் சுகமும் உள்ள பிள்ளை தனது செயற்பாடுகளில் இயல்பாக வே ஆர்வமுடையவனாக இருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான். அதே போன்ற செயற்பாடு பலவீனமான சுகக்குறைவான பிள்ளையிடம் இருக்காது. அதனை ஆசிரியர் எதிர்பார்க்கவும் முடியாது. இவ்வாறான நிலைமைகள் சீரான முறையில் கற்பித்தலை மேற்கொள்ள ஆசிரியருக்குத் தடையாக உள்ளன.

அடுத்து உடலியற்குறை பாடுகள் பிள்ளைகள் கற்றலில் காட்டும் சிரத்தையைப் பாதிக்கச் செய்யும் உதாரணத்திற்கு பார்வைக் குறைபாடு, கேட்டற்குறைபாடு இரண்டையும் எடுக்கலாம். கண் பார்வை குறைவாக இருக்கும் பிள்ளை பெரும்பாலான சந்தர்ப்பங் களில் வகுப்பில் பின்னடைய நேரிடு கின்றது. கட்புல சாதனங்களை அடிப்படையாகக் கொண்டு கற்பிக் கும் பாடங்களில் பார்வைக் குறை பாடுடைய பிள்ளைகளின் முன் னேற்றம் குறைவாக இருத்தல் பொது வான நிலைமையாகும். அடிப்படை நிலைமைகளில் ஆசிரியருடைய விளக்கத்தின் முழுப் பயனையும் பெறமுடியாத பிள்ளை ஏனைய பிள்ளைகளுக்குச் சமமாகச் செயற் படமுடியாது.

அதேபோலக் கேட்டற் குறைபாடுகளும் வகுப்பறையில் பிள்ளைகளின் முன்னேற்றத்தைப் பாதிப்பனவாகும். வாய்மொழி அடிப்படையிலும் செவிப்புலன் சாதனங்களின் உதவியுடனும் நடை பெறும் கற்றல் கற்பித்தல் செயற்பாடு செவிக்குறைபாடுடைய பிள்ளைக்கு முழுப்பயனையும் கொடுக்க மாட் டாது. இத்தகைய குறைபாடுகளை அவதானித்து அவற்றிற்குத் தன்னால் இயன்ற பரிகாரத்தைக் காணமுயல் வது ஒவ்வோர் ஆசிரியருடைய கடமையாகும். அவற்றை முற்றாகத் தீர்க்க முடியாவிட்டாலும் அக்குறை பாடுகளை அறிந்து அவற்றுக்கேற்ப தமது அணுகுமுறைகளில் பொருத்த மான மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

அத்துடன் தனது மாணவரி டையே இருக்கக் கூடிய உடல் ரீதியான குறைபாடுகளை அறிந் திராத ஓர் ஆசிரியர், அவர்களுடைய அசட்டுத்தனம் அசிரத்தை என்று ஒதுக்கி வைத்து விடுகிறார்கள். இப்படியான நிலைமைகள் தவிர்க்கப் பட வேண்டுமேயானால் அதற்கான ஒரேயொரு வழி மாணவரின் பல்வகைமைகளை அறிந்து அவர் களிடத்தே தனிப்பட்ட கவனம் செலுத்தவதாகும். இவ் உடலியல் குறைபாடுகள் தவிர்ந்த பிற உடலியல் வேறுபாடுகளையும் ஆசிரியர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும். வயது அடிப்படையில் ஏற்படும் உடலியல் மாற்றங்கள் இந்த வகையினுள் அடங்கும். பருவ மாறறங்கள் உடலியல்பிலும் மாற்றத்தை உண்டாக்குகின்றன.

மேலும் சில பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது வாழ்க்கையில் ஏற்படும் விரும்பத்தகாத அனுபவங்களினால் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுவதுண்டு. அத்தகைய பாதிப்புக்கள் அவர்களுடைய நடத்தையில் வழமைக்கு மாறான போக்குகளை ஏற்படுத்துவதைக் காணலாம். வகுப்பறையில் அத்தகைய பிள்ளைகள் இருப்பின் ஆசிரியர் தமது அணுகுமுறைகளைப் பொருத்தமான வகையில் மாற்றியமைப்பது அவசியமாகும். இச்சந்தர்ப்பத்தில் முதலில் மாணவருடைய நடத்தை வேறுபாடுகளை அவதானிப்பதும் அவற்றிற்குரிய பின்னணிகளை ஆராய்வதும் அவசியம் ஆகும். அந்த நிலைமைகளில் தான் ஆசிரியரால் அதற்கேற்ப பொருத்தப்பாடான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

மேலும் ஆசிரியர் ஒருவர் தன்னிடம் கற்கும் மாணவரின் தனித்துவத்தை அறிந்து கொள்ளவும் அவற்றைப் புரிந்து கொள்ளவும் அவர்களுடைய குடும்ப சமூகப் பின்னணிகளை அறிந்திருப்பது அவசியம். ஒன்றாகக் கற்கும் மாணவர் எல்லோரும் ஒரே மாதிரியான சமூகப் பொருளாதாரப் பின்னணிகளிலிருந்து வருவதில்லை. ஆதலால் குடும்பப் பின்னணி பிள்ளைகளுடைய மனப்பாங்கில் தாக்கத்தை ஏற்படுத்தவது வழமையாகும். வசதிகள், வளங்கள் ஆகியன பிள்ளைகளின் மனப்பாங்கிகளை வளர்த்தெடுக்கும் காரணிகளாக அமைவதுண்டு. இவ்வாறான நிலையிலுள்ள மாணவனொருவன் கற்றலில் தனது முழுக் கவனத்தையும் செலுத்துவான் என்று எதிர்பார்க்க முடியாது.

மாணவர்களின் திறன்களை இனங்காணுதல் என்ற விடயத்தில் பல்வகைமை நிலைமையானது கணிசமான தாக்கத்தைச் செலுத்துகிறது. கூட்டு நிலையான வகுப்பறையில் தனியாள் நிலை சார்ந்த பகுப்பாய்வு என்பது சவாலுக்குரியதாகவே காணப்படுகிறது. அதே வேளை அனைத்து ஆசிரியர்களும் பல்வகைமைசார் நிலைமைகளைக் கையாள்வதற்குரிய அறிவைக் கொண்டிருக்கிறார்கள் என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது.

பிள்ளையை அறிந்தவராக ஆசிரியர் செயற்படும் போது தான் குறித்த மாணவர்கள் விசேட தேவையுடைய பிள்ளையாகவோ, உளக்குறைபாடுடைய பிள்ளையாகவோ, கற்றலில் இடர்படும் பின்னடைவான மாணவனாகவோ , ஆராயும் மனப்பாங்குடைய மீத்திறன் கொண்ட மாணவர்களாகவோ அடையாளம் காணப்பட முடியும். இதனால் தான் இன்று ஆசிரியர்கள் அனைவருக்கும் விசேட கல்வி உட்படுத்தல் கல்வி என்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றின் அவசியம் வலியுறுத்தப் படுகிறது.

எனினும் இன்றைய வகுப் பறைகளை எடுத்து நோக்கின், ஒரு வகுப்பறையில் சராசரியாக 30 -35 மாணவர்கள் காணப்படுகின்றனர். இத்தொகையை நோக்குமிடத்து தனியாள் வேறுபாட்டிற்கேற்ப கற்ப் பித்தல் என்பது மிகவும் சவாலுக் குரிய ஒன்றாகவே காணப்படு கின்றது. தனியாள் வேறுபாடுகள் நிராகரிக்கப்படும் போது நிறைவு பெறாத ஆளுமை உருவாக்கம் பெறு கிறது. சுயம் அழிக்கப்படுகிறது. ஒவ்வொருவரிடமும் மலர வேண் டிய புத்தாக்கங்களும் புதிய கண்டு பிடிப்புக்களும் ஏற்படாமல் போய் விடுகிறது. எனவே தனியாள் வேறுபாடுகளைக் கையாள்வதில் இருக்கின்ற சிக்கல்களும் கற்பித்தற் செயற்பாடுகளில் பெரும் சவாலா கவே காணப்படுகின்றது. அத்துடன் வகுப்பறைகளில் அதிகரித்த மாணவர் தொகையும், இதனால் இடப்பற்றாக்குறையும், இவற்றை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களும் ஆசிரியர்களுக்குப் பெரும் சவாலாகவே உள்ளது. அடுத்து எமது பாடசாலைகில் ஒரே சீர்த்தன்மை தொடர்கிறது. மாணவர்கள் யாவரும் ஒரே மாதிரியானவர்கள் என்ற நிலைப் பாட்டில் இவை இயங்குகின்றன.

- ஒரே பாடநூல்
- ஒரே பாடப் பொருள்
- ஒரே நேர அளவுத்திட்டம்
- ஒரே கலைத்திட்டம்
- ஒரே வேகத்தில் கற்க வேண்டி யிருத்தல்
- ஒரே தகவலை ஒரே நேரத்தில் அனைவருக்கும் வழங்கல்
- ஒரே சோதனை அனைவருக்கும் வழங்கல்

எது எவ்வாறு இருப்பினும் இன்றைய சமகால வகுப்பறைகளில் ஆசிரியர்கள் சமதரமுள்ள மாணவர் களை ஒரு போதும் சந்திப்பதில்லை. எல்லா மாணவர்களையும் அதிருப்தி செய்யக்கூடிய விதந்துரைக்கப்பட்ட கற்பித்தல் முறை எதனையும் ஆசிரியர்கள் பயன்படுத்த முடி யாமை. ஒரே காலத்தில் பல தரப் பட்ட கற்பித்தல் முறைகளைக் கையாளல், மாணவர்களுக்குப் பொருத்தமான கற்பித்தல் முறை களைக் கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்தல், வகுப்பறையின் கவிவு நிலமை, வகுப்பிலுள்ள மாணவர் தொகை, இடப்பற்றாக்குறை, தனியாள் வேறு பாடுகளை அறிவதில் காணப்படும் இடர்கள், மாணவர் களின் கற்றல் பாணிகளுக்கு ஏற்ப கற்பித்தல், எல்லா மாணவர் களுக்கும் தேவையான வழிகாட்டல் களைச் செய்தல் போன்ற எல்லாச் செயற்பாடுகளிலும் மாணவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வகைமை காரணமாக ஆசிரியர்கள் பெரும் சவாலையே எதிர்கொள்கின்றனர்.

எனினும் மாணவர்களின் பல்வகைமையானது ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகளில் சவாலை வழங்குகின்ற அம்சமாக உள்ள போதும் பல்வகைமை நிலைமையினைக் கையாளுகின்ற ஆற்றலையும், ஆளுமையையும் நவீன கல்வியியல் செல்நெறிகளுக்கு ஏற்ப ஆசிரியர்கள் தம்முள் உள்வாங்கும் போது இச்சவாலை இலகுவாக எதிர்கொள்ள முடியும்.

## உசாத்துணை நூல்கள்


*01.* சந்தானம், எஸ். (1987) கல்வியின் உளவியல் அடிப்படைகள்
சென்னை, பழனியப்பா பிதர்ஸ்

*02.* ஜெயராசா,சபா. (2008) உளவியல் முகங்கள்:
கொழும்பு, சேமமடு பதிப்பகம்

*03.* பெனடிக்ற்பாலன், யோ. (2009) கல்வி உளவியல்:
சென்னை, த்வனி

*04.* முத்துலிங்கம்,ச. (2010) கல்வியும் உளவிலும்:
கொழும்பு, சேமமடு பதிப்பகம்

*05.* கணபதி,வி. கல்வியின் உளவியல் அடிப்படை:
சென்னை, சாந்தா பப்ளிஷர்ஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர் மத்தியில் விழுமியக் கல்வியின் தற்போதைய நிலை



திருமதி.லதா ஜெகதீஸ்வரன்
ஆசிரியர்,
B.A,PGDE
யா/நரராந்தனை றோ. க. மகா வித்தியாலயம்.

மனித நடத்தையின் நன்மை, தீமையை நிர்ணயிப்பது விழுமிய மாகும். மனிதனுக்குள்ள சுதந்திரம் காரணமாக அவனுடைய செயற் பாடுகள் விழுமியத்தன்மை பெறு கின்றன. விழுமியங்கள் மனித வாழ் வை நெறிப்படுத்தி வாழ்விற்குப் பொருள் கொடுக்கின்றன. அதே வேளை விழுமியங்கள் வாழ்விற்குப் பொருள் கொடுத்து அவற்றை நெறிப் படுத்துகின்றன.

ஒரு சமூகத்தினுடைய விழு மியங்களை நிர்ணயிப்பதும் நெறிப் படுத்துவதும் மாற்றியமைப்பதும் கல்வியினாலும், சமயத்தினாலும் செய்யப்படுகின்ற விடயங்களையும் செல்நெறியையும் நிர்ணயிக்கும் காரணிகளாக அமைகின்றன. இங்கு கல்வி என்பது ஒரு பரந்த நோக்கில் பார்க்கப்படவேண்டியதொன்று. கல்வியின் முக்கியநோக்கம் மாண வர்களை எதிர்கால வாழ்விற்கு ஆயத்தம் செய்வதாகும். இன்றைய கல்வி முறை அவ்வாறான மாணவர் களை எதிர்கால வாழ்விற்கு ஆயத்தம் செய்கின்றதா என்பதைச் சிந்திக்க வேண்டியதொன்றாகக் காணப்படு கின்றது. மாணவர் உருவாக்கத்தில் பெரும்பகுதியை நிர்ணயிப்பது பாடசாலைகளில் கடைப்பிடிக்கப் படும் கலைத்திட்டமாகும். முறைசார் கல்வி மூலம் விழுமியக்கல்வியை வழங்குவதற்குச் சிறந்தபாடம் சமய பாடம் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். பாடம் சம்பந்தமான விடயங்களிலே சமய பாடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளை மிகவும் குறைவாக வுள்ளது. சமய பாடத்தை விட ஏனைய பாடங்களைப் போன்று இதுவும் பரீட்சை நோக்குடையதாக வும், கூடிய புள்ளிகளைப் பெறுவதற் குரிய பாடமாகவும் கற்பிக்கப்படு கின்றது.

இன்றைய மாணவர்களிடம் விழுமியப் பண்புகள் குறைந்தளவி லேயே கடைப்பிடிக்கப்பட்டு வரு கின்றமை கண்கூடு. மாணவரிடம் குறைந்து காணப்படும் விழுமி யங்களை மூன்று வகையாக வகைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி நோக்கலாம். அவைமுறையே அ).சமூகவிழுமியம், ஆ).ஆன்மீக விழுமியம், இ).தனிநபர்விழுமியம் என்பனவாகும். பெரும்பான்மை யோர் சுட்டிக் காட்டும் விடயம் பெரியோர் முதியோர் மதிக்கப் படாமையாகும். இவற்றோடு இணைந்தாகப் பொறுப்பின்மை, கடமையுணர்வின்மை, மனித மாண்பு மதிக்கப்படாமை, பிறர் கருத்துக்கு மதிப்பு அளிக்கப் படாமை, குடும்பவாழ்வின் முக்கியத் துவம் உணரப்படாமை, வாழ்வின் அடிப்படை உண்மைகள் உணரப் படாமை என்பனவும் மாணவரிடம் குறைந்து காணப்படும் விழுமியத் தன்மைகளாகும். மேலும் தமிழ்க் கலை, கலாசாரத்தைக் குறைவாக மதிப்பிடுகின்ற தன்மையும் மாணவ ரிடம் மேலோங்கும் நவநாகரிகப் போக்கும் வரட்டுக்கௌரவமும் குறைபாடுள்ள விழுமியங்களாகக் காணப்படுகின்றன.

ஆன்மீக விழுமியங்களைப் பிறரன்புக் குறைவு பொறுமையின் மை, நன்றியின்மை, பிறர் நலனில் அக்கறையின்மை, சமய வாழ்விலும், சமயவிடயங்களிலும் வேண்டிய ஈடுபாடின்மை போன்றன இன்றைய மாணவர்களிடம் காணலாம்.

தனிநபர் விழுமியங்களான ஒழுக்கமின்மை , நேர்மையின்மை, சந்தேக மனநிலை, தேடுதலுக்கு ஆர்வமின்மை, புதிய நுட்பங்களைக் கண்டறிய ஆர்வமின்மை, உயிரை மதித்தல், தன்னடக்கம், பிறரையும் பெரியோர்களையும் மதித்தல், ஒற்றுமையுடன் செயற்படல், பொறு ப்புக்களை ஏற்க முன்வருதல், ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்கல், பொதுநலம் பேணல், தொழிற் கல்விக்கு உரிய இடம்வழங்கல், உடல் உள வளர்ச்சிக்கு முக்கியத் துவம் அளித்தல் போன்றனவும் மாணவரிடம் மிகக்குறைந்தளவி லேயே காணப்படுகின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனவே மாணவர் மத்தியில் விழுமியப்பண்புகளை அறிமுகம் படுத்தி, அவற்றைப் பின்பற்றத் தவறு வதால் ஏற்படும் பாதிப்புக்களை எடுத்துக்காட்டுவதுடன், விழுமியக் கல்வியை ஆர்வத்துடன் கற்றுக் கொள்வதற்கான மனப்பாங்கை ஏற்படுத்துவதுடன் ஊடாகவும் ஆன்மநெறிப்படுத்திற் கல்வியுடன் தன் சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றிடையே சமனிலையைப் பேணும் தன்மையை ஏற்படுத்து வதுடன் விழுமியக்கல்வியினை மாணவர் மத்தியில் ஏற்படுத்தி நற்பிரஜைகளை உருவாக்க அனை வரும் முன்வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் தர விருத்தி

செல்வி.ப.சித்திராதேவி
ஆசிரியர்
யா/புங்குடுதீவு றோ.க.த.க. வித்தியாலயம்

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணி கல்வி ஆகும். வளப் பற்றாக்குறைக்கு மத்தியிலும் வேக மாக வளர்ந்து வரும் நாடுகளின் எண்ணிக்கையிலிருந்தும் இது தெளி வாகின்றது. கிரமமான கல்விச் செயற் பாடுகளின் மூலம் மானிட தகைமைத் திறனும், மனித மூலதனமும் விருத்தியுறுவதே அதற்கு பிரதான காரணமாகும்.

கல்வியின் தர விருத்தி தொடர்பாக கூறப்படுவது கல்வியின் பிரதானமான சேவை பெறுநராகிய மாணவர்களிடத்தே தகைமைத் திறன்களை விருத்தி செய்ய வேண்டும் என்பதாகும். தேசிய கல்வி மறுசீரமைப்பின் தெட்டத் தெளி வான பண்பாகக் கருதப்படுவது அறிவை அடிப்படையாகக் கொண் டதும் பரீட்சையை இலக்காகக் கொண்டதுமான பாரம்பரிய ஆசிரிய மையக்கற்பித்தல் செயன் முறைகளுக்குப்பதிலாகத் தகைமைத் திறன் விருத்தியை அடிப்படையாகக் கொண்ட விரிவான பொருள் உள்ள மதிப்பீட்டுச் செயன் முறையொன்றி னூடாக மாணவனது தகைமைத் திறன்கள் உட்பட முழுமையான தரத் தைத் தீர்மானிக்கக் கூடியவாறான மாணவர் மையக் கற்றல் செயன் முறையொன்றினை கல்வித் தொகுதி யின் ஒவ்வொரு மாணவன் - மாணவி தொடர்பாகவும் பிரதியீடு செய்வ தாகும்.

இவ்வாறான தகைமைத் திறன்களை அல்லது தரங்களைக் கொண்ட மாணவர்களைச் சமூகத் தின் பால் பிரகாசிக்க பாடசாலைக் கல்வி முறையில் உள்ளீடுகளாகப் பயன்படுத்துகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்வியியலாளர்கள், கல்வி அதிகாரிகள் உட்பட கல்வி சார்ந்த சகல பணியாளரிடத் தேயும், பல்வேறு சேவைகளைச் சேர்ந்த கல்வி சாராப் பணியாளரிடத்திலும் தம்மிடம் பொறுப்பளிக்கப்படும். பணிகளைப் பொறுப்புடன் ஆற்று வதற்குத் தேவையான தகைமைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன்கள் அல்லது தரங்கள் காணப்படல் வேண்டும். அத்தோடு கல்விக்காகவும் அது தொடர்பான பல்வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படும் சகல பௌதீக வளங்களும் குறித்த அத்தியாவசிய தரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

எமது நாட்டில் தொழிலில் அல்லது பதவியில் நியமிக்கப்படும் ஒருவனுக்கு தொழில் விபரங்களை அல்லது கடமைப் பட்டியல்களை வழங்குவது பாரம்பரிய வழக்க மாகும். எனினும் அவற்றை ஆற்று வதற்குத் தேவையான தகைமைத் திறன்களைப்பற்றி தேடியறிவதோ அவற்றை அறிமுகம் செய்வதோ தேவைக்கேற்றவாறு சேவை முன் பயிற்சி வழங்குவதோ உரிய முறை யில் நிகழ்வதில்லை. மாணவர் மையக்கற்றல் செயன் முறையில் தகைமைத் திறன்களைக் கொண்ட மாணவர்களை உருவாக்குவதற்காக ஆசிரியர்களும் ஏனைய கல்வி சார்ந்த ஆளணியினருக்கும் அத்தியாவசிய தகைமைத்திறன்கள் கிடைக்கப் பெறும். அவ்வகையில் ஆசிரியர் கல்வி முறையொன்றும் முகாமைத் துவ ஒழுங்கமைப்பும் ஏற்படுத்துவது இன்றியமையாததாகும். மற்றும் தகைமைத்திறன்களை அடிப்படை யாகக் கொண்டு பதவிகளுக்கு நியமித்த பின்பும் கிரமமான மதிப்பீடு மூலம் கிடைக்கப்பெறும் விபரங்களைக் கொண்டு தகைமைத் திறன் அளவைமேலும் அபிவிருத்தி செய்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்தல் வேண்டும். சம்பள உயர்வு வழங்கும் போதும், பதவியுயர்வு வழங்கும் போதும், கல்வி தொழில் தகைமை களையும் சிரேஷ்டத்தையும் மாத்திரம் கருத்தில் கொள்ளாது தகை மைத்திறனை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறனை மதிப்பிட்டு, அம்மதிப்பீட்டுப் பெறு பேறுகளைத் துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

இன்று கல்வி ஒரு முக்கிய உற்பத்திக்காரணியாகக் கருதப்படு வதால் மாணவர்களின் அறிவாற்றல் களை "பேரறிகை" என்ற ஓர் உயரிய நிலையில் வளர்த்தெடுக்க வேண்டிய தேவை உள்ளது. இன்று தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி யினால் புதிய அறிவுத் தொகுதிகள் வேகமாக வெளிவருகின்றன. "மாற்றம்" என்ற சொல்லை தவிர ஏனைய அனைத்துமே மாறிக் கொண்டிருக்கின்றன. இன்றைய அறிவு நாளை காலாவதியாகிப் போகின்றது. சர்வதேசமும் பல்தேசிய கம்பனிகளும் தனித்து கோட்பாட்டுரீதியான அறிவை மட்டும் பெற்றிருக்கின்ற தொழி லாளர்களை எதிர்பார்க்கவில்லை. தொழில் சார் திறன்களைக் கொண்ட வேலையாட்களையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கின்றனர்.

இதற்கு பாடசாலை என்ற கட்டமைப்புக்குள் ஒரு தொடர் மதிப்பீட்டுச் செயற்பாடு மிகவும் அவசியமாகும். இதற்குக் கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை பெற்றோர்களும் இந்த மதிப்பீட்டிற்கு உட்படுத்தல். மேலும் பயனளிக்கும் இவை எல்லாவற்றுக்கும் மேலாக பொருத்தமான முறையில் தம்மைத் தாமே சுய மதிப்பீட்டிற்கு உட்படுத்தல் மிக முக்கியமானதாகும். அறியப்பட்டவற்றை மேலும் பலமுள்ளதாக்கி, குறைபாடுகளைக் களைவதன் மூலம் பண்பு விருத் தியை ஏற்படுத்தலாம். தொழில் நுட்பவியலாளர் அல்லது பயன்படுத்தும் மூலப்பொருட்கள் குறித்த தகைமைத் திறன்களைக் கொண்டிராவிடின் ஆக்கப்படும் பாவனைப் பொருளும் தரத்தை கொண்டிருக்க மாட்டாது என்பது தெளிவு.

இத்தர உறுதிச் செயற்பாட்டை ஒரு நல்ல அதிபர் முறையாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். பண்பு சார் விருத்தியை மேம்படுத்த பல பன்முகப்பார்வையை இதன் மூலம் ஆசிரியர்களிடையே விரிவாக்க இயலும். இதன் மூலம் தரமான சமூகத்திற்குத்தரமான கல்வியை வழங்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வி ஆசிரியர் மாணவர்களின் விடிவெள்ளி



திருமதி.சர்மிளி குகச்சந்திரன்
ஆசிரியர்
யா/ஊர்காவற்றுறை றோ.க.தமிழ் ஆண்கள் பாடசாலை

சுவாமி விவேகானந்தரின் வாக்கிற்கிணங்க மனிதனை மனிதனாக்கும் பணியே கல்வியின் முதன்மையான நோக்கமாக அமைய வேண்டும். "இன்றைய சிறார்களே நாளைய தலைவர்கள்" அவர்களை ஆளுமைமிக்கவர்களாக, நற்பிரஜைகளாக அந்நிலைக்கு ஆக்குவதற்கு, அவர்களிடையேயுள்ள ஆற்றல்களை வெளிப்படுத்த உதவும் ஒரு தூண்டுகோலே ஆசிரியர் ஆவார். மனிதனின் குழந்தைப்பருவம் மாண்புமிக்கதாகும், மகத்துவமானதாகும். கட்டடமொன்றின் உறுதி அதன் அத்திவாரத்தில் ஏற்படுத்தப்பட்ட உறுதியிலேயே தங்கியுள்ளது. மனித வளர்ச்சியின் அடிப்படையும் இளம் பராயத்திலேயே அமைந்துள்ளது. ஒரு பிள்ளையின் கல்வியும் அவ்வாறே. ஆரம்பநிலை ஆட்டங் காணாது ஆணித்தரமாக அமைய வேண்டியது மிக மிக அவசியமானதாகும்.

சின்ன விழி அசைத்து சிரித்து வரும் சின்னஞ்சிறார்களை அள்ளி அரவணைத்திடும் அன்னையாக, அன்புள்ளம் கொண்டவராக ஆரம்பக்கல்வி ஆசிரியர் இருக்க வேண்டும். பாடசாலையில் காலடி எடுத்து வைக்கும் பிள்ளைகள் முற்று முழுதாக வீட்டுச்சூழலிலிருந்து வருபவர்கள். வீட்டில் எங்ஙனம் இருந்தார்களோ அவ்வாறே தான் பாடசாலையும் என்ற சுகமான எண்ணங்களைச் சுவாசிக்கும் வானம்பாடிகளாய் வருகை தருபவர்கள் அவர்கள். எல்லா இயல்புகளையும் விட பிள்ளைகள் விளையாட்டிலேயே தமது கவனத்தை அதிகளவு செலுத்துவார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆசிரியர் அவர்களது ஊக்கங்களிற்குத் தனது பங்களிப்பினை நல்குபவராகவும் சிறுவர் நேயத்துடன் அவர்களை அணுகுபவராகவும் இருத்தல் முக்கியமாகின்றது. இந்த வகையிலேதான் "கற்றலுக்கான மகிழ்ச்சிகரமான ஆரம்பம்" எனும் எண்ணக்கருவின் கீழ் பிள்ளையை அறிவோம் செயற்பாடும் அதன் முதல் அங்கமாக "விளையாட்டு வீடு விளையாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோம் எனும் கருப்பொருளும் அமைந்துள்ளமை ஆரம்பக் கல்விப் புலத்தின் சிறப்பிற்குரிய விடய மாகும்.

தூண்டல்களுக்கேற்ப துலங் கல்களை ஏற்படுத்துவதே கல்விப் பணி. ஆசிரியரின் செயல்கள் மாணவர்களைக் கற்கத் தூண்டுவ தாக அமைய வேண்டும். தன்னிடம் வரும் பிள்ளையை நல்லவனாக, ஆளுமை மிக்கவனாக, ஞானியாக மாற்றுவது ஒரு நல்லாசானின் கை களிலேயே தங்கியுள்ளது. எனவே இன்றைய குழந்தைகளே எதிர்கால அறிவின் தீபங்கள் எனும் எண்ணக் கரு ஒவ்வொரு ஆசிரியரின் மனதி லும் உயிர்த்துடிப்புடன் இருக்கும் வரையில் சமூகத்திற்கு இணக்கமான ஒரு சமுதாயத்தைச் சிருஷ்டிக்கலாம் என்பதில் எதுவித ஐயமுமில்லை எனலாம்.

"தன்சுடர் எரிந்து கொண்டி ருந்தாலொழிய ஒரு விளக்கால் இன்னொரு விளக்கை ஏற்றி வைக்க முடியாது" என்பது கவிஞர் தாகூரின் பொன்மொழி. இதன்படி ஆசிரிய ரும் அறிவைத் தேடும் பணியில் தொடர்ந்து ஈடுபடுதல் வேண்டும் என்பது புலனாகிறது. மாணவர் களிற்கு அறிவை ஊட்டுவதோடு ஆசிரியரின் பணி முற்றுப் பெறமாட்டாது. ஒழுக்கத்தை வளர்ப்பதும் ஆசி ரியரின் பணியே யாகும்.

**கேட்கின்றேன் - மறந்து விடுகின்றேன்**
**பார்க்கின்றேன் - ஞாபகமிருக்கின்றது**
**செய்கின்றேன் - விளங்கிக் கொள்கின்றேன்**
**கண்டுபிடிக்கின்றேன் - அகமகிழ்கின்றேன்.**

என்பதற்கமைய ஐம்புலங் களிற்கும் பயிற்சி கொடுப்பதே ஒரு நல்லாசிரியரின் நற்பணியாகின்றது. ஆரம்பக்கல்வியைப் பொறுத்த வரை யில் கற்றலில் அடிப்படைத் திறன் களாகிய செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்பவை சரியான முறையில் ஆணித்தரமாக அடித்தள மிட்டுவிட்டால் ஏனைய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மிக இலகுவானதாக அமைந்துவிடும். ஆரம்பக்கல்வி மாணவர்களிற்கு கல்வி ஒரு சுமையாக இருக்கக் கூடாது. அவர்களின் இயல்பான திறன்கள் வெளிக்கொணரப்படும் வகையிலும் அத்திறன்கள் மேலும் வளர்த்தெடுக்கப்படும் வகையிலும் ஆசிரியரது கற்பித்தல் முறைகள் அமைய வேண்டும். அத்துடன் மகிழ்ச்சிகரமான வகுப்பறைக் கவின் நிலையும் சிறப்பான திட்டமிடலும், சிறந்த உபகரணப் பிரயோகத்துட னான கற்றல் கற்பித்தல் முறைகளும், சிறுவர்நேய அணுகுமுறைகளும், அர்ப்பணிப்பு, சேவை, தியாகம் போன்றனவும் மாணவர்களுக்கு உறுதியான ஆரம்பத்தைக் கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெழுப்ப வல்லவையாகும். ஆரம்பக் கல்வி ஆசிரியர் மாணவரது வரலாற்றில் அழியாத இடத்தினைப் பெறுகின்ற, சமூகத்தின் ஒரு விடிவெள்ளியாக விளங்குகின்றார்.

அந்த வகையிலே ஆசிரியர் அர்ப்பணியுள்ளவராகத் தனது சேவையில் மகிழ்வுறுபவராக இருந்தால் தான் சேவை எனும் வார்த்தை பொருட் செறிவுள்ளதாகும். வழிகாட்டல், ஊக்கல் என்பன ஆசிரியர்களால் சிறார்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊக்கிகளாகும். கல்லிற் செதுக்கியது போன்று காலத்தால் பாதிக்கப்படாது நிலைத்து நிற்கும் தன்மை இளமைக் கல்விக்கு உண்டு. இதன் பிரகாரமே ஆரம்பக்கல்வியின் முக்கியத்துவமாகும்.

எனவே எம்மிடம் வரும் சிறார்களை வானில் கண்சிமிட்டி ஒளி பெறச் செய்யும் நட்சத்திரங்களாக்கி சிறந்ததொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப விடிவெள்ளியாகச் செயற்படுவோம். அர்ப்பணிப்புடனான எமது சேவை அவர்களது நல்வாழ்விற்கு வித்திடும், வாழ்வை வளப்படுத்தும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையால் வசமாவோம்



திருமதி.கேமலதா கண்ணதாசன்
ஆசிரியர்
B.F.A. கலாவித்தகர்
யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்

ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் மாந்தர் மனம் கவரும் இன்பக்கலை , மகத்துவம் மிக்கது இசைக்கலையாகும். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பைந்தமிழில் பண்ணிசை பாடி இன்புற்றவர்கள் தமிழர்கள் ஆவர். இவர்கள் பயன்படுத்திய பண்ணி சையே காலவோட்டத்தில் தென் இந்தியா எங்கும் பரவி பின் கர்நாடக இசை என அழைக்கப் பட்டது.

இசைத்திறமை, மொழிப் புலமை இசையுணர்வு கொண்ட மேதைகளான வாக்கேயகாரர்கள், இசை விற்பன்னர்கள் இக்கலை வளர்ச்சிக்கு ஊன்று கோலாக விளங்கினர். இவ்விசை மேதைகளின் அடியொற்றி கர்நாடக சங்கீதம் காலவோட்டத்திற்கேற்ப கவின் பெற்று வளர்ந்து வந்துள்ளது.

மனித வாழ்க்கையின் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை இசையானது பின்னிப் பிணைந்துள்ளது. குழந்தை பிறந்ததும் மருத்துவிச்சி ஆனவள் குழந்தையை வாழ்த்திப் பாடுவாள். அது மருத்துவிச்சி வாழ்த்து எனப்படும். பின்னர் குழந்தையை உறங்க வைப்பதற்கு தாலாட்டு பாடுவர், விளையாடும் பொழுது விளையாட்டுப் பாடல் பாடுவர். தொழில்களின் நிமித்தம் தொழிற் பாடல் பாடுவார்.

திருமணத்தின் பொழுது நலுங்கு எனப்படும் ஊஞ்சற்பாடலும் இறப்பின் பொழுது இறந்தவரின் அருமை, பெருமைகளைக் கூறி ஒப்பாரியும் பாடப்படுகின்றது. இவ்வாறு ஒவ்வொரு நிலையிலும் இசை பின்னிப்பிணைந்துள்ளது.

இசை கற்பதனால் மனிதனி டம் அன்பு, பண்பு, அடக்கம், அறிவு, அமைதி, சாந்தி என்கின்ற பண்புகள் வளர்க்கப்படுகின்றன. இவ்வாறான இசையானது நோய்கள் தீர்க்கும் ஔடதமாகவும் விளங்குவது ஆராயச்சிகளின் முடிவாக உள்ளது. மனஅழுத்தம், இரத்தக்கொதிப்பு, மனப் பிறள்வு, வலிகள் என்பவற்றிற்கு இசைமூலம் சிகிச்சைகள் அளித்து வெற்றியும் கண்டுள்ளனர்.

அதே போல் மென்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல் மென்மையான மனதை உருக்கும் நல்ல இசையையும், இரைச்சல் உள்ள இசையையும், இசைத்தட்டில் ஒலிக்கவிட்டு இரு தாவரங்களையும் அவற்றின் அருகே நடப்பட்டு ஆராய்வு மேற்கொண்டதில் மென்மையான இசைக்கு அருகில் நடப்பட்ட தாவரம் ஆரோக்கியமாகவும் இரைச்சலான இசைக்கு அருகே நடப்பட்ட தாவரம் வரட்சியாகவும் இருந்ததன் மூலம் தாவரங்கள்கூட இசைக்கு வசமாவதை விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர்.

ஒரு தாயானவள் கருவினில் தனது பிள்ளையினை சுமக்கும் பொழுது மென்மையான சாந்தமான இசையை கட்டாயமாகக் கேட்க வேண்டும். கருவிலிருக்கும் குழந்தை இசையை ரசிப்பதன் மூலம் ஆரோக்கியமான விழுமியப் பண்புகள் கொண்ட பூரணமான மனிதனாக வாழ வித்திடுகிறது. குழந்தைகளுக்கு சிறுவயதிலிருந்து இசையுடன் சம்மந்தப்பட்ட ஏதாவது ஒரு கலையைக் கற்க கட்டாயமாக ஒரு சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இன்றைய இயந்திர மயமான உலகில் மனிதன் மனிதனாக மனிதப் பண்புகளுடன் வாழ இசை இன்றியமையாததாகும். கால வெள்ளத்திலினைக் கடந்து நிற்கும் இசைக் கலையினைப் பேணிக்காத்து இன்றைய இளஞ்சந்ததி நல்ல ஆளுமை, அறிவுள்ள, ஒழுக்கமுள்ள சமூகமாக வளர இசை துணை புரியும் என்பதில் ஐயமில்லை.

இறைவனே இசை வடிவானவன் சரஸ்வதி வீணையுடனும் கிருக்ஷ்ணன் புல்லாங்குழலுடனும் சிவன் உடுக்கையுடனும் நந்தி மத்தளத்துடனும் இருப்பதிலிருந்து இறைவன் இசைப்பிரியன், சாம கானப்பிரியன் என்பது புலனாகின்றது. காலத்தால் அழியாத இசையை இயற்கையிலும் அனுபவிக்கலாம். என்பதை

<u>நதி</u> - நடந்து போகும் சங்கீதம் என்றும்

<u>மழை</u> - அவரோகண சங்கீதம் என்றும்

<u>பிள்ளைமழலை</u> - பிழைகளின் சங்கீதம் என்றும்

<u>மௌனம்</u> - உறைந்து போன சங்கீதம் என்றும்

கூறினால் மிகையாகாது. மரக்கிளை அசைவில் மணிகளின் ஒலியில், பறவைகளின் பாட்டில் அலைகளின் அதிர்வில் எல்லாமே சங்கீதம் தான். இயற்கையாகவே உள்ள இசையை மனதார உணர்ந்து இசைக்கு வசப்படுவோம். நல்ல பண்புகள் உள்ள ஒழுக்கமுள்ள மனிதர்களாக தரணியில் மிளிர்வோம். எதிர்காலச் சமூகத்தைப் பண்புள்ளவர்களாக மாற்றுவோம் இசைக்கு வசப்படுவோம்.

"இசை இன்பமே நிலை இன்பமாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ந்து வரும் மாணவர்களிடையே அருகி வரும் ஞாபகம்



திருமதி. இந்துவாணி தயாகரன்
ஆசிரியர்
யா/மண்டைதீவு றோ.க.வித்தியாலயம்.

கற்றலும் ஞாபகத்திலிருத்தலும் ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்புடைய ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்ற பெறுமதி தரும் விடயமாகும். நாம் பெற்றுக் கொண்ட அனுபவங்களையும், கற்றுக்கொண்ட அனுபவங்களையும், கற்றுக்கொண்ட விடயங்களையும் தேவையான சந்தர்ப்பத்தில் வெளிக்காட்டும் செயற்பாடுகளையே ஞாபகப்படுத்தல் என்கின்றோம். புலக்காட்சி மூலம் உள்ளத்தினுள் உருவாகும் அமைப்புக்களை மீட்டறியும் சக்தியே ஞாபகம். ஞாபகத்தில் மீட்டெடுக்க முடியாத கற்றல் அர்த்தமற்றதாகின்றது.

இன்றைய மாணவர்களிடத்தில் ஞாபகப்படுத்தல் அருகி வருவதைக் காண முடிகிறது. ஒவ்வொருவரும் தன் ஞாபகத்திறனை வளர்க்கவே விரும்புவர். சில விடயங்களை ஞாபகத்தில் நிலை நிறுத்தத் தாங்களே பல உத்திகளைத் கையாளுகின்றனர். புதிய விடயங்கள், சிக்கலான விடயங்கள், பிரச்சினை தீர்த்தல் என்பவற்றிக்குத் தேவையான நேரத்தை ஒதுக்கிக் கொண்டு கற்றலில் ஈடுபட வேண்டும். எதனை எப்படி எவ்வாறு ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற முனைப்புடன் கற்கத் தொடங்குதல் வேண்டும். முடிந்த வரை கற்கும் போது வாசித்தல், காட்சிக்கு கொண்டு வருதல், உணர்ந்து படித்தல் அவசியமானது. உயிரோட்டமாக வாசித்தல், தொடர்ச்சியாக வாசித்தல், குறிப்பெடுத்துப் படித்தல், சந்தேகங்களை உடனடியாகத் தேடல் மூலம் நிவர்த்தி செய்தல் போன்றவை அடங்கும். சோம்பலாக வாசித்தல் ஞாபகத்திற்கு தடையாக அமையும். கற்றவற்றை உடனடியாக மீட்டல் அவசியம். ஒவ்வொரு முறை கற்ற பின்னரும் கற்றவற்றை உடனடியாக மீட்டல் வேண்டும். நாம் கற்கும் போது, கடினமான விடயங்கள், நாம் மறந்து போகலாம் என நினைக்கும் விடயங்கள் என்பவற்றிக்கு அழுத்தம் கொடுத்துக் கற்பதுடன், மீட்டல் செய்வதால் கற்ற விடயங்கள் நிலையான ஞாபகத்திற்கு இலகுவாக இருக்கும்.

கற்றலைப் பரிசோதித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தல் ஞாபகப்படுத்தலை வினைத்திறனுள்ள தாக்கும் ஒரு செயற்பாடாகும். நிறையப்பேர்தாம் கற்றவற்றை மறந்து போவதற்கு இடைக்கிடை பரிசோதித்துக் கொள்ளாமையே காரணமாகும். ஒரு புதிய விடயத்தைக் கற்க ஆரம்பிக்கும் முன்னர் நாம் கற்கும் விடயம் எளிதாக மாறவும், ஏற்கனவே நாம் கொண்டுள்ள முன்னறிவுடன் தொடர்புபடுத்தவும், மேலோட்டமான நோக்கு அவசியமாகும். உதாரணமாக புதிய அலகொன்றைக் கற்பதற்கு முன்னர் அதன் உப தலைப்புக்களையும், படங்கள், அட்டவணைகள், வரைபுகளை மேலாட்டமாக நோக்கலாம். ஒழுங்குபடுத்திக் கொள்வதனூடாக நீண்ட கால ஞாபகத்தை வலுவூட்டலாம். நாம் கற்கும் போது விடயங்களிடையேயுள்ள தொடர்புகளைக் கண்டறிதல், வரிசைப்படுத்திக் கற்றல் என்பன அவசியமாகும்.

மாணவர்கள் கற்பதற்கும் அதனை ஞாபகப்படுத்தி வைத்திருப்பதற்கும் ஆசிரியர்களால் வளர்க்க வேண்டிய விடயங்களாக பின்வருவன அமைகின்றன. ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு ஒரு நோக்கம் இருத்தல் வேண்டும். நோக்கம் இன்றிக் கற்பவை நினைவில் நிற்க மாட்டாது. அதனாலேயே புலமைப் பரிசில் பரீட்சை , க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) என்ற வரையறைகள் காணப்படுகின்றன. தமது கற்பனைத் திறனை மாணவர்கள் அதிகளவு பயன்படுத்த வேண்டும். உதாரணமாக ஒரு நபரை ஞாபகப்படுத்த முகம், உருவம், பேசும்திறன் முதலியவற்றை அவதானித்தல் வேண்டும். கற்றவற்றை மாணவர்களின் அனுபவங்களுடன் இணைத்து வைத்திருத்தல் வேண்டும். எதுகை,மோனை சந்த அமைப்பு ஞாபகத்தை நிலையநிறுத்த உதவும்.

நீண்ட காலம் ஞாபகத்தில் வைத்திருக்க நீண்டகால இடைவெளி விட்டுப்படித்தல் நன்று. முடிந்த வரையில் கற்றவற்றை மீட்டுக் கூறிப்பார்க்க மாணவருக்கு உதவ வேண்டும். கற்ற பின்னர் ஓய்வெடுத்தல், நித்திரை செய்தல் நல்லது. தொடர்ச்சியாகக் கற்பதைத் தவிர்த்தல் வேண்டும். அளவுக்கு மிஞ்சிய கற்றல் அதாவது மாணவர் புரிந்து கொண்ட ஒரு விடயத்தைத் தொடர்ந்து கற்குமாறு ஊக்குவித்தல் வேண்டும். ஒரே அமைப்புடைய விடயங்களை ஒன்றன் பின் ஒன்றாகக் கற்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

மனனம் செய்வது சிந்தனைக்கு மிக முக்கியமானது. ஒருவருடைய மனனம் செய்யும் திறமை அவரது நுண்மதியில் பெருமளவு தங்கியுள்ளது. மனனம் செய்பவன் குறிப்பிட்ட விடயத்தைக் கற்கும் நோக்கத்தைத் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும். விடயத்தின் பொருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தால் இலகுவில் மனனம் செய்யலாம். அது ஞாபகத்தில் பதியும் ஒரு பந்தியை மீண்டும் மீண்டும் மௌனமாக வாசிப்பதை விட அதை உரத்து வாசித்தல், இன்னுமொருவருக்குக் கூறுதல், பார்த்து எழுதுதல் ஆகிய முறைகள் மனனம் செய்வதில் துணை புரியும். ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்ப மீட்பதால் அதனை ஞாபகத்தில் பதிக்கலாம். ஒரு விடயத்தைப் படிக்கும் போது ஒவ்வொரு முறைக்கும் ஒரு விடயத்தைப் படிக்கும் போது ஒவ்வொரு முறைக்கும் இடையில் ஓய்வு எடுக்கும் போது தான் கற்ற விடயங்கள் மூளையில் ஓர் ஒழுங்கமைப்பைப் பெற்று உறுதியாகின்றது. ஒரு பாடலை ஒவ்வொரு வரியாக மனனம் செய்வதை விட அதனைத் தொகுதியாகப் படித்து மனனம் செய்வதே சிறந்தது.

கற்ற விடயங்களை ஞாபகத்தில் இருத்தல் என்பது மாணவரிடையே பெரும் பிரச்சினையாக தோன்றியுள்ளதை அவதானிக்கலாம். ஞாபகச் செயன்முறை மூன்று ஊக்கச் செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.

- ❖ கற்ற தகவல்களை ஞாபகத்தினுள் நுழைத்தல்.
- ❖ களஞ்சியப்படுத்தல்.
- ❖ நினைவு கூர்தல்.

நாம் சூழலில் இருந்து பெறும் தூண்டல்களினால் புலனுறுப்புக்களை அடையும் நிலையை புலனுக்குரிய ஞாபகம் என்கின்றோம். இது நாம் ஒன்றைப் பார்த்து, செவிமடுத்து, தொட்டுணர்ந்து, மணந்த பின்னர் நான்கு விநாடிகள் வரை புலஞ்சார்ந்திருக்கும். நாம் ஒரு அனுபவத்தைப் பெற்ற பின்னர் இரண்டாவது படி முறையாகிய குறுங்கால ஞாபகத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இது தொலைபேசி இலக்கங்களைச் சுழற்றி முடியும்வரை மட்டுமே இலக்கத்தை ஞாபகத்தில் வைத்திருக்கின்றோம்.

நாம் கற்றவற்றை எமது ஞாபகத்தில் நிலையாக இருத்த வேண்டுமானால் அடுத்தபடி முறையாகிய நீண்ட கால ஞாபகத்தினுள் அனுப்புதல் வேண்டும். எமது சிறு வயது அனுபவங்கள், கற்ற விடயங்கள் எல்லாம் நீண்ட கால ஞாபகத்திலேயே களஞ்சியப்படுத்தி வைக்கப் பட்டிருக்கும். ஞாபக சக்தி என்பது எமது மூளையில் காணப்படும் ஒரு சக்தியல்ல. கற்றவற்றை நாம் பதிவு செய்யவும் பின்பு தேவையான போது மீட்டுக் கொள்ளவும் எமது மூளையை எந்தளவிற்குப் பழக்கப் படுத்தி வைத்திருக்கின்றோமோ அந்தளவிற்கே எமது ஞாபக சக்தியும் வலுவானதாக இருக்கும்.

கற்றலுக்கு மறதி தடையான ஒரு காரணியாகும். நாம் கற்றுத் தேர்ந்த விடயங்கள் நாளடையில் வலுவிழந்து எமது மனதிலிருந்து மறைந்து போவதை மறதி என்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோம். மறதி எனும் தடைக்கல்லுக்கு பலவீனமான பதிவுகள், தொடர்ந்து பயன்படுத்தப்படாத பதிவுகள், குறுக்கீடுகள், மனஅழுத்தங்கள், மீட்கும் சூழலிலுள்ள குறைபாடு போன்றவை காரணங்களாக அமைகின்றன. இருந் தாலும் உளவியல் ஆய்வாளர்கள் பின்வருவன ஒருவரின் மறதியில் அதிக தாக்கம் செலுத்துகின்றன எனக் குறிப்பிடுகிறார்கள்.

❖ ஆர்வமின்றிக் கற்கும் விடயம்.

❖ தாழ்வு மனப்பான்மை.

❖ போதியளவு நித்திரையின்மை.

❖ அளவுக்கதிகமாக உண்ணுதல்.

❖ மூளைக்கு ஏற்படும் திடீர் அதிர்ச்சி.

❖ இலக்கின்றிய கற்றல்.

❖ ஓய்வின்றிக் கற்றல்.

❖ ஆர்வமின்றிக் கற்றல்.

❖ பொருத்தமற்ற கற்றல் முறைகளைப் பயன்படுத்தல்.

❖ பதற்றம், பயம், வெட்கம், கோபம் போன்ற மனவெழுச்சிகள்.

எது எப்படி இருந்தாலும் விரைவான ஞாபகப்படுத்தலே இன்றைய மாணவர்களுக்கு அவசியமாக இருப்பதனால் கல்வி வழங்கும் ஆசிரியர்களிலிருந்து பாடசாலைகள், கல்வி வலயங்கள், மாகாணக் கல்வி அலுவலகங்களினூடாக பரீட்சைகள், மனனப்போட்டிகள், எழுத்தாக்கப் போட்டிகள் என்பன நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அவை மட்டுமல்ல ஊடகங்கள் கூட ஞாபகப்படுத்தலுக்குத் துணை நிற்பதனைக் காணமுடிகின்றது. இந்திய ஊடகங்களில் ஒன்றான விஜய் தொலைக் காட்சி வழங்கி வரும் ஒரு வார்த்தை ஒரு இலட்சம் எனும் நிகழ்வு சொற்களை ஞாபகப்படுத்தி அதனை வேகமாக மீட்டெடுக்கும் களமாக மாறியுள்ளதுடன் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான சொல்வளவிருத்தியையும் வளர்த்துக் கொள்ளும் இடமாகவும், கருத்து மூலம் சொல்லை அறிந்து அச்சொல் உள்ளடக்கும் திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் வரிகளை ஞாபகப்படுத்தி கூறுமளவிற்கு ஒரு நிமிடம் என்ற கால வரையறைக்குள் போட்டியிட்டு வெற்றி பெறும் ஞாபகத்தைத் தூண்டும் உயிரோட்டமான நிகழ்வாகப் பார்ப்பவர்களை மெய்சிலிர்க்க வைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகத்தில் தித்திக்கும் இசைக்கலை



திருமதி.யோகமோகன் அமிர்தகௌரி
ஆசிரியர்
B.F.A,PGDE
கலாவித்தகர்
யா/புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயம்

சப்த தீவுகளைத் தன்னகத்தே கொண்டு
சாலச் சிறந்து விளங்கிடும் பூமியாம் - எம் தீவு
சங்கீத ஓசையுடன் கடல் அலைகள் தாளமிட
சந்தோசக் காற்றை எம் மக்கள் பெற்றிடுவார்.

பெருமை மிகு பல தலங்கள் தொட்டு
பெயர் பெற்ற பாடசாலைகள் முதல்
இசைக்கலையின் இனிய நாதத்தை இங்கு கேட்டிடலாம்.
இறை ஆசி பெற்று இனிமையுடன் வாழ்ந்திடலாம்.

கடலின் இசையும் காற்றின் இசையும் எமக்குக்
கற்றுத்தருகின்றது இனிய இசையின் மகத்துவத்தை
பண்ணைப்பாலம் தாண்டியவுடன் பார்த்திடலாம் பல ஆலயத்தை
பல இசைக் கருவிகளுடன் இனிதாய் இருக்கும் இறைவன்.

பாரினிலே நிமிர்ந்து நிற்கும் சிறப்பான பனை மரத்தின்
சலசலப்பு ஓசை படையெடுத்து எம் தீவகத்தில்
வந்தமரும் - வலசைப்பட்சிகளும் பாங்கான
இராகத்தைப் பகன்றிடுமே.

கண்ணகைத்தாயின் காண்டாமணி யோசை
கனிவான இசையாய் எம் காதிலே ஒலித்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக் கவலைகளை மாற்றிடும் மருந்தாய்
மகாமாரியின் மணி ஓசையும் மகிழ்வாய் ஒலித்திடும்.

தீவகப் பள்ளிகளில் இசைக்கலையைத் திகட்டாது
மாணவர்கள் கற்றதனால் திசையெங்கிடும்
புகழ் பரப்பி வாழுகின்றார்.
தீவகத்தின் பெருமைதனைப் பாடுகின்றார்.

எந்தக் கலைக்கும் இல்லாத சிறப்புத்தான்
இந்த இசைக்கலைக்கு இன்றும் இருக்கிறது.
இசையாலே வசமாக உயிர்கள் இல்லை என்பதனை
இறைவன் கூடஉமக்கு உணர்த்துகின்றார்.

அவனியிலே வாடுகின்ற மக்கள்
அனுதினமும் இசைக்கலையை இரசித்திடுவார்கள்.
ஆழ் மனக் காயங்களை இசையால் ஆற்றி
ஆனந்தமாய் வாழ்ந்திடுவார்கள் நீண்ட ஆயுளுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பசுவின் பெருமை

திருமதி ரஞ்சிதமலர் பத்மலிங்கம்
ஆசிரியர்.
SP.Tr.d(primary)
யா/நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலயம்

பசு சாதுவான மிருகம், பசு பால் தரும் என்பது பாலர் வகுப்பில் படித்த பாடம் ஒரு தாயானவள் தன் பிள்ளைக்கு குழந்தைப் பருவத்தில் பாலூட்டி வளர்ப்பாள், ஆனால் நம் அனைவருக்கும் குழந்தை முதல் விருத்தர்வரை பால் தந்து காப்பது பசுவாகும்.

நமது வீட்டையும் சுற்றாட லையும் சுத்தமாக வைத்திருப்பதற்கு உபகாரமாகக் சாணத்தைப் பயன் படுத்துகின்றோம். சிவகதி நல்கும் சிவ சின்னமாக திருநீற்றின் மூலப் பொருளான சாணத்தின் உற்பத்தித் தானமாயிருப்பது பசுவே, புதுவீடு அமைக்கும் போது தானசுத்திக்காக , அங்கு கட்டப்படுவது பசுவையே! திருமணத்தின் போது மாங்கல்ய தாரணம் முடித்தவுடன் எல்லாத் தேவர்களின் ஆசீர்வாதத்தையும் பெறுவதற்காகத் தரிசனமாவது பசு.

மணமக்கள் நாள் முகூர்த்தத் தில் அருந்துவதற்குரிய பால் பழத் துக்கான பாலை தருவது பசு.

சைவசமய கிரியைகள் அனை த்தின் ஆரம்பத்திலும் செய்யப்படும் புண்ணிய ஆவாகனத்துக்குரிய பாலை தருவதுடன் இறைவன் உவக்கும் அபிஷேகத்திற்குரிய பஞ்ச கௌவியத்துக்கான பால், தயிர், நெய், கோசலம் என்பவற்றைத் தரும் தெய்வீகத் தன்மையைக் கொண்டு ள்ளது.

நம் உயிர் பிரியும் வேளையிற் கூட இறுதியாக உற்றார், உறவினர் எம் வாயில்விட பால் தருவது பசு. நாம் எமக்கு தேவையின்றி கழித்து விடப்படும் புல், தவிடு, கழிவு நீர் வைக்கோல், பிண்ணாக்கு, இலை, குழை முதலானவற்றை உண்டு. அதிசயிக்கத்தக்க பூரண சத்துள்ள பாலைத் தருகின்றது. இதனாலேயே பசுவை கோமாதா எனவும், குல மாதா எனவும் போற்றப்படு கின்றது.

பசுவுக்கு உணவு கொடுத்தல் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய இன்றியமையாக்கடமை.

"யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை" என்னும் திருமூலர் திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரத்தால் உணரப்படுகின்றது. பசு ஓம்புதல் இன்மை, மறுமை, ஆகிய இருமைப்பயனையும் தரவல்லது. திருமூலர் சண்டேஸ்வரர் மனுநீதி கண்ட சோழன், ஞானப்பிரகாச முனிவர் பசுவோம்புதல் மூலம் சிவ கதி அடைந்த செய்தி ஆதாரமாக வுள்ளது.

பசு மேய்பவன் ஒருவன் பசுவை கோலால் அடிப்பதைக் கண்டு மனம் பொறுக்கமாட்டாத, விசாரசருமர் எனும் பிராமணச் சிறுவன் அன்று முதல் மேய்ப்பவனை விலக்கித் தானே மேய்த்து வந்தான். அவை தாமாகச் சுரந்து பொழிந்து பால் கொண்டு அப்பால் வீணாகா வகையில் மணலில் அமைத்த சிவ லிங்கத்திற்கு அபிஷேகம் செய்து வழிபட்டான். இதன் உண்மையை அறியாத மூடர் சொற் கேட்ட தந்தை யார் பாலை மண்ணிற் சொரிந்து பாழ் செய்கின்றானே என அதை காலால் இடறத் தன் சிவ பூசைக்கு குந்தகம் செய்தவர்களைச் சிறுவன் கோலால் அடிக்க அது மழுவாசித் தந்தையின் கால்கள் தறிபட்டன. சிவபூசையின் உறுதி கண்ட சிவபெரு மான் தந்தைக்கும் மகனுக்கும் அருள் புரிந்து சிவபதம் நல்கினார்.

மனுநீதி கண்ட சோழன் தன் மைந்தன் அரச வீதியில் உலாவரும் போது தேரின் கடைப்புகுந்த பசுக்கன்று அடியுண்டு இறந்தது. இதனைக் கண்ட தாய்ப்பசு தாங் கொணாத் துயரால் கண்ணீர்விட்டு கதறி அழுதது இதை அறிந்த மன்னன் பெருந்துயர் உற்றான். மந்திரிகள் சொன்ன வழிமுறைகள் பசுவின் துயரைத் துடைக்க உதவா என உணர்ந்தான்.

கன்றை இழந்து வருந்தும் தாய் பசு போலத்தானும் தன் ஒரே மகனை இழந்து வருந்துவதே முறை எனத் துணிந்தான். மகனை வீதியிற் கிடத்தித் தானே மகன் மீது தேர் செலுத்திக் கொன்றான் தருமம் தன்வழி செல்வதைக் கடனென்று அருமந்த செயல் கண்ட சிவபெரு மான் அருளாள் பசுக் கன்றும் அரசிளங் குமரனும் உயிர் பெற்று அனைவரும் சிவகதி பெற்றனர்.

எனவே பசுவை நாம் கொல்ல வோ வதைக்கவோ கூடாது. ஒரு பசுவில் முப்பத்து முக்கோடி தேவர் கள் நிறைந்துள்ளனர். பசுவை கொல் வது ஓராயிரம் அந்தணர்களைக் கொன்ற பாவம் நம்மைச் சேரும்.

"பசுவை பணிந்து வணங்கிப்
போற்றுவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிவகாமி சபதம்" நாவலில் கூறப்படும் கலை வெளிப்பாடுகள்



திருமதி.விபில்ஆனந்தன் கிருபாலினி
B.F.A, PGDE
யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம்.

புதினம் அல்லது நாவல் என்பது மக்களால் பரவலாக விரும்பப்படும் ஒரு இலக்கிய வடிவமாகும்.இதில் வாழ்க்கையும் நிகழ்வுகளும் கற்பனையாக உரைநடையில் எழுதப்படுகின்றன. தமிழில் எழுதப்பட்ட முதலாவது நாவல் 1879 இல் வெளிவந்த "பிரதாப முதலியார் சரித்திரம்" இது மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களால் எழுதப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல்வேறு நாவல்கள் தோற்றம் பெற்றன. இந்த நாவல்களைத் துப்பறியும் நாவல், வரலாற்று நாவல், சமூக நாவல், மொழிபெயர்ப்பு நாவல், தழுவல் நாவல், வட்டார நாவல் எனப் பல வகைப்படுத்தலாம்.

வரலாற்று நாவல் வரிசையிலே "கல்கி" என்ற புனைபெயர் கொண்ட கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்குகின்றார். இவரது முதலாவது வரலாற்று நாவலான "பார்த்தீபன் கனவு" என்னும் நாவலைத் தொடர்ந்து எழுதப்பட்டதே "சிவகாமி சபதம்" என்னும் நாவலாகும். இந்த நாவல் 1944 ஆம் ஆண்டு எழுதத்தொடங்கி இரண்டரை வருடங்களுக்கு மேலாக "கல்கி" பத்திரிகையில் வெளியாகியது. 1948ஆம் ஆண்டில் நூல் வடிவம் பெற்றது. இந்த நாவல் நான்கு பாகங்களைக் கொண்டமைந்துள்ளது. இது பல்லவ மன்னர்களுடைய வரலாற்றை ஒட்டி உருவான நாவலாகும்.

இந்த நாவலிலே மகேந்திர பல்லவச் சக்கரவர்த்தி, மாமல்லர், ஆயனர்,சிவகாமி, பிக்கு, பரஞ்சோதி போன்ற பல பாத்திரங்களைப் படைத்துள்ளார். கல்கி, நடனம், சிற்பம், சித்திரம், ஓவியம் போன்ற கலைகளின் வெளிப்பாட்டுத் தன்மையினை இந்த நாவலின் ஊடாக அறியமுடிகின்றது. பல்லவர்கால மன்னர்கள் கலைகளை அரும்பாடுபட்டு வளர்த்தமையினால் சோழர் காலம், கலைகள் வளர்வதற்கு இசைவுடையதாக அமைந்து இருந்தது.

மகேந்திர பல்லவச் சக்கரவர்த்தி சிற்பம், சித்திரம் ஆகிய கலைகளில் ஆர்வம் கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடல்லாமல் அவற்றை நன்றாகப் பயின்று அந்தக்கலைகளிலே கலை வாணர்களாய் இருந்தவர்கள் வியக்கும் படியான தேர்ச்சியும் பெற்றிருந்தார். சிற்பத்துறையிலே இவரது சிறப்பைக் கண்டு சிற்பசாஸ்திர பண்டிதர்கள் இவருக்கு "விசித்திர சித்தர்" என்ற பட்டத்தை வழங்கியிருந்தார்கள். அவ்வாறே சித்திரக் கலை வல்லவர்களிடமும் "சித்திர காரப்புலி" என்னும் பட்டத்தினையும் "மத்தவிலாஸப் பிரகாசனம்" என்னும் ஹாஸ்ய நாடகத்தையும் வடமொழியில் இயற்றி "மத்த விலாஸர்" என்னும் பட்டத்தையும், ஸங்கீர்ண ஜாதி தாளத்தினை அதிசயமாகக் கையாளும் வல்லமை காரணமாக "ஸங்கீர்ண ஜாதிப் பிராகரணர்" என்ற பட்டமும் சக்கரவர்த்திக்குக் கிடைக்கப்பெற்றதாக நாவலாசிரியர் குறிப்பிடுவதிலிருந்து அக்காலத்து மன்னர்களின் கலையார்வத்தினை தனது நாவலின் ஊடாகப் படம் பிடித்துக்காட்டியுள்ளார்.

இந்த நாவலில் குறிப்பிடத் தக்க பாத்திரமாக விளங்குபவர் ஆயனர் என்கின்ற சிற்பி, "காஞ்சி மாநகரிலே பிறந்து, வளர்ந்து, பயின்ற ஆயனர் இளம் பிராயத்திலேயே "மகா சிற்பி" எனப்பெயர் பெற்று விளங்கினார். இவர் சிற்ப, சித்திரக் கலைகள் மட்டுமல்லாது பரதசாஸ்திரம் என்னும் மகா சமுத்திரத்தையும் கரைகண்டவராக விளங்கினார்" என்று கூறுவதிலிருந்து பல்கலைகளின் வடிவமாகக் காட்சியளிக்கின்றார். தனது மகளுக்குச் சிறுவயதிலேயே நடனம் கற்பிப்பதுடன், அவளது நடன நிலைகளுக்கேற்ப சிற்ப சித்திரங்கள் செய்ய வேண்டும் என்ற விருப்புக் கொண்டவராகவும் காட்டப்படுவதன் மூலம் "சிவகாமி சபதம்" என்னும் நாவலிலே பல்வேறு கலையம்சங்கள் அமைக்கப்பட்டிருப்பதனை அறிய முடிகின்றது.

இந்நாவலின் பிரதான பாத்திரமான சிவகாமி நடனக்கலையிலே சிறந்தவளாக விளங்கினாள். "ஆஹா! இந்த ஆனந்த நடனத்தில் எத்தனை விதமான நடைகள்? மத்தகஜத்தின் மகோன்னத நடை, பஞ்ச கல்யாணிக் குதிரையின் சிருங்கார நடை, அன்னப்பட்சியின் அழகு நடை......." இவ்வாறெல்லாம் சிவகாமி நடனமாடுவதாகக் குறிப்பிடுகின்றார் நாவலாசிரியர் கல்கி.

இவ்வாறாக "சிவகாமி சுழன்றாடிய பொழுது பார்த்துக் கொண்டிருந்தவர்களின் கண்கள் சுழன்றன, அரங்க மேடையும் அகல் விளக்குகளும் சுழன்றன, கோயில் சுழன்றது, கோபுரங்கள் சுழன்றன, ஸ்தூபி சுழன்றது, வானமும் பூமியும் கீழ் மேலாகச் சுழன்றன..." என்று சிவகாமியின் நடத்தை வர்ணிக்கும் நாலாசிரியரின் மொழிநடையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படைத் தாளக்கட்டுப் பாட்டிற்கு அமைய மிருதங்க ஜதியும் பாட்டும் ஒன்றிணைய ஒரு சிறந்த நாட்டியப்பெண் தனது கால்களால் அற்புதச் சிக்கலான அமைப்புக்களை நாட்டியமாக்கும் போது உன்னத மான, உயர்வான, நுட்பமான திறமைகளை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இத்தகைய நுட்பங் கள் அனைத்தும் சிவகாமியினது நாட்டியத்திலே மிகத்தெளிவாகவும் துல்லியமாகவும் விளங்குகின்றன எனக் குறிப்பிடுகின்றார் ஆசிரியர்

**“வடிவேறு திரிசூலம்**

**தோன்றும் தோன்றும்.....”** என்ற திருநாவுக்கரசருடைய பாடலுக்கு சிவகாமி அபிநயம் செய்யும் போது பார்வையாளர்கள் தங்களை மறந் தார்கள். தாங்கள் இருக்குமிடத்தை மறந்தார்கள். அங்கு நடப்பது என்ன என்பதை மறந்தார்கள் என்று நாவ லாசிரியர் எடுத்துக் காட்டியிருப்பது சிவகாமியின் பாவ அபிநயத்திலே இரசிகர்கள் தம்மையே பறி கொடுத்துவிட்டார்கள் என்பதை உணரமுடிகின்றது.

கலைகள் பலவற்றையும் விளக்கிய நாவலாசிரியர் கல்கி மேடையமைப்பு முறைகள் பற்றியும் இந்த நாவலியே விளக்கியுள்ளார். சிவகாமியினுடைய அரங்கேற்றம் காஞ்சி இராஜசபையிலே இடம் பெற்றது. அந்த சிவன் கோயில் கண் கொள்ளக் காட்சியளித்தது. கோயி லின் முன்கோபுர வாசலைப் பசுமை யான வாழைமரங்களும், மகரதோர ணங்களும், திரைச்சீலைகளும் அலங் கரித்தன. உள்ளே அர்த்த மண்டபத் தையும் வெளிக்கோபுரத்தையும் சேர்த்துப் பிரகாரத்திலே விஸ்தார மான பந்தல் போட்டிருந்தார்கள். பந்தல் முனைகளிலே வரிசை வரிசை யாகத் தந்த வர்ணமுள்ள இளந்தென் னங்குருத்துத் தோரணங்களும் அவற்றின் இடையிடையே செந்தாம ரை மொட்டுக்களும் தொங்கிக் கொண்டிருந்தன என மேடையின் அழகை தனது நாவலிலே எடுத்துக் காட்டியுள்ளார்.

இவ்வாறாகத் தனது நாவலிலே சிற்பம், சித்திரம், ஓவியம், நடனம், மேடை அலங்காரம் போன்ற அழகியற் கலைகளைத் தனது நாவலிலே முதன்மைப்படுத்தி பல்லவ மன்னர்களின் வரலாற்றை எடுத்துக் கூறுகின்ற நாவலாக “சிவகாமி சபதம்” என்னும் நாவலை நாவலாசிரியர் “கல்கி” படைத் திருப்பது சிறப்புக்குரியது. இதனூ டாக அக்காலத்திலே கலைகளுக்கு இருந்த நிலை, மன்னர்கள் வழங்கிய ஆதரவு, மக்கள் அதனை அணுகிய விதம் போன்ற விடயங்களை தனது கமராவினால் பதிவு செய்துள்ளார் கல்கி என்கின்ற கிருஷ்ணமூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடன பாட சாதாரண தர செய்முறை பரீட்சையில் மாணவர்கள் ஆசிரியர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும்



**திருமதி.பகீரதி நகுலேஸ்வரன்**
ஆசிரியர்
B.F.A.
யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்.

நடன பாடச் செய்முறைப் பரீட்சையில் ஆசிரியர்கள் மாணவர்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றார்கள். அவைகளை நாம் எடுத்து பார்ப்போம். அதற்கான தீர்வுகளையும் என்ன என்று நோக்குவோம்.

ஆசிரியர்கள் செய்முறையை பாட வேளைகளில் மாணவருக்கு பயிற்சிகளைக் கொடுப்பார்கள். அதனை மாணவர்கள் முழுமையாகப் பாட வேளைகளில் பயிற்சி செய்ய முடியாமல் இருக்கும். அதனை மீள வீட்டில் பயிற்சி செய்யுமாறு ஆசிரியர் கூறினால் அதனை மாணவர்கள் மீள் பயிற்சி செய்வது இல்லை. இதனால் செய்முறை செய்யும் போது மாணவர்கள் இடர்படுவார்கள். இதனால் ஆசிரியர்கள் பரீட்சையின் போது மாணவரைத் தயார்ப்படுத்துவது கடினமாகும்.

இதற்குரிய தீர்வாகக் கட்டாயமாக மாணவரை வீட்டில் பயிற்சி மேற்கொள்ள வழிப்படுத்தல் வேண்டும்.

அடுத்த படியாக சில ஆசிரியர்கள் மாணவரிடம் முரண்பாடாக நடந்து கொண்டாலோ செய்முறையில் மாணவர் விருப்பம் இல்லாமல் பயிற்சி எடுக்கமாட்டார்கள். ஒரு பாடத்தினைப் படிப்பதற்கு முதலிலே ஆசிரியர் மீது மாணவருக்கு விருப்பம் ஏற்பட்டால், அந்தப் பாடத்தினை மாணவன் விரும்பிக் கற்பான். எனவே மாணவரின் மனநிலை, சூழ்நிலைக்குத் தக்கபடி அவனை அன்போடு கல்வி கற்றலில் ஈடுபடுத்தினால் மாணவன் பாடத்தின் மீது விருப்பம் கொண்டு படிப்பதற்குத் துணையாக இருப்பான். இதனால் மாணவன் செய்முறையை இலகுவாகச் செய்ய முடியும்.

எமது நடனபாடத்திலே “வினியோகம்” என்ற பகுதியை அநேகமான மாணவர்கள் விரும்பிக் கற்பதில்லை. அது கடினம் எனச் சொல்வார்கள். ஏனெனில் அது வடமொழியில் அமைந்து காணப்படுவதனாலாகும். இதனை ஒரு சில ஆசிரியரும் சரியான முறையில் உச்சரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் மாணவருக்குச் சொல்லிக் கொடுக்காமல் இருப்பதும் மாணவர் அதனைப் புரிந்து கொள்ள இடர்படு கின்றார்கள். இதனால் இப்பகுதியை செய்முறைப் பரீட்சையில் அநேக மான மாணவர்கள் செய்வது இல்லை.

எனவே இதற்குரிய தீர்வாக வேறு ஆசிரியரை வளவாளராகக் கூப்பிட்டு மாணவருக்குச் செய்யும் போது அதில் ஆர்வம் ஏற்பட்டு மனப்பாடம் செய்ய உதவியாக இருக்கும் என நம்புகின்றேன்.

அடுத்ததாக சில மாணவர் கள் கூறும் குறையாக சில ஆசிரியர் கள் செய்முறைப் பாடத்தினை மாணவருக்கு எழுந்து நின்று அதனை செய்துகாட்டுவதில்லை என்று கூறுவதுண்டு. எழுந்து நின்று செய்து காட்டினால் தான் மாணவருக்கு அதனைத் தெளிவான முறையில் பயிற்சி செய்ய இலகுவாக இருக்கும். பூரணமாக அவ் அடவு களை புரிந்து செய்யச் சுலபமாகக் காணப்படும். எல்லா ஆசிரியர்களும் அல்ல. ஒரு சில ஆசிரியர்கள் மட்டு மே இவ்வாறாக நடந்து கொள்கின் றார்கள்.

இதற்குரிய தீர்வாக கூடிய அளவு செய்முறை பாடம் கற்பிக்கும் போது மாணவருக்கு ஆசிரியர் தாம் செய்து காட்டுவது சிறந்த ஒரு முறையாகும். அத்துடன் சேர்ந்து ஒலி ஒளி நாடாவுடன் மாணவருக்கு விளக்கம் கொடுக்கும் போது மேலும் அறிவினைப் பெறுவர்கள்.

அடுத்த ஒரு பிரச்சினையாக மாணவர்கள் கூறுவார்கள் அடிக்கடி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப் படுவது. ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ் வொரு மாதிரியாகக் கற்பிக்கின்றார் கள் என்று. இதுவும் செய்முறைப் பரீட்சைக்கு மாணவர் இடர்படும் ஒரு காரணமாகும்.

சில பாடசாலைகளில் நடன பாடத்திற்குப் போதுமான இடவசதி இல்லாத காரணமும் பிரச்சினையாக காணப்படுகின்றது. இதனைப் பாடசாலை அதிபர் தீர்த்து வைக்க முடியும்.

மாணவருக்கு ஞாபக சக்தி குறைந்து வருவதும் ஒரு பிரச்சினை யாகும். படிப்பதனை மீள் பயிற்சி எடுக்காது இருப்பது. ஒன்று வீட்டு சூழ்நிலையும் மாணவரை இடர்படச் செய்கின்றது. பெற்றோர்கள் மாணவ ருக்கு ஊக்கம் கொடுப்பவர்களாக இருத்தல் வேண்டும். தற்போது தொலைக்காட்சி நாடகங்களில் பெற் றோர்கள் இருப்பதனால் மாணவரை ஊக்கம் கொடுப்பது குறைவாக காணப்படுகின்றது.இதனால் மாண வர்கள் செய்முறை செய்யக் கடினமாகக் காணப்படுகின்றது. மற்றும் பெற் றோர்கள் கல்வி அறிவு குறைந்து காணப்பட்டாலும் மாணவருக்கு வீட்டில் அக்கறை எடுக்க யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் இருப்பார்கள்.

எனவே இதற்கு உரிய பொது வான தீர்வாக ஆசிரியர் மாணவரிடம் அன்பாக நடந்து கொள்ளல் கூடியளவு தேர்ச்சி அடைய வெற்றி தரும். அத்துடன் பெற்றோரும் மாணவரது கல்வியில் கூடியளவு கவனம் எடுத்துக் கொண்டால் மாணவன் தேர்வில் அதிகளவு புள்ளி களைப் பெறுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன நிலையும் செயல் நிலையும்

திருமதி.சுதர்சினி வில்சன்
ஆசிரியர்,
யா / செட்டிபுலம் அ. த. க பாடசாலை

மனக்கருத்தின் வழியே தான் சொல், செயல்கள் இயற்கையாக நிகழ்கின்றன. சிலவேளை அவை வேறுபட்டிருக்கலாமாயினும் நெடுங்காலம் அவ்வாறு இருக்க முடியாது. மனதின் வழியே திரும்பி விடுகின்றன. எத்தனை நாளைக்குத் தான் மனதோடு பொருந்தாத விடயத்திற்காக நடித்துக்கொண்டு வாழ்வு நடத்தலாம். மனதுக்கு மாறுபட்டு செய்யும் விடயங்கள் யாவும் மனிதனால் முடியவில்லை. அவ்வாறு முடிந்தனவாயின் அவை எவ்வாறோ ஓரளவு மனதோடு இயைந்தவையாக இருக்க வேண்டும்.சரியான நோக்கம் பிறருக்குப் புலப்படாமல் இருக்கலாம். ஒருவன் மனதைக் காண்பதற்கு அவனது சொல், செயல்கள் கருவியாக இருக்கின்றன.மனம் என்ற இயந்திரத்தின் வேலையே வாழ்க்கை ஆகும். சிறிய உயிர் தொடக்கம் பெரிய மகாத்மாக்கள் வரை செய்யும் வேலையெல்லாம் மனதின் ஊக்கத்தால் உண்டாகி அதன் வேலைகளுக்குத் திருப்தியளிப்பதே தான். மனதோடு பொருந்தாத வாழ்க்கையுடையான் அமைதி இழந்து நிற்கின்றான் அதன் பயனாக மனதோடு இயைந்து வாழ மிக மூர்க்கமான வேலை செய்கின்றான். ஒரு பாரமான பொருளை அசைக்கத் தள்ளும் போது அது அசையாமல் எம்மை எதிர்விசை காட்டுகின்றது. அப்படித்தான் மனமும் அடக்கப்படும் போது வீறு கொண் டெழுகின்றது. எங்கே அடக்கு முறை அதிகமாக கையாளப்படுகின்றதோ அங்கே நிச்சயம் சட்ட மறுப்பு நிகழ்கின்றது. நியாயத்தினாலோ இதத்தினாலோ மற்றவரின் மனதைத் திருப்ப முயல்வதேயன்றி, நமக்கு கிடைத்த அதிகாரப் பலத்தினால் மற்றவரை அடக்கப்பார்த்து வீண் வேலையுமல்லாமல் நமக்கும் நம் சந்ததிக்கும் தீங்காகவும் முடிவதோடு, விரோதமும் வளரும். அதிகாரப் பலத்தாலோ நயவஞ்சகத்தாலோ இப்போதைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி கிடைத்தாலும் அவ் வெற்றி அழிவுக்கே காரணமாகும். நம் முடைய மனோநிலையை மறக்க பார்த்தும் கூட அன்பு, குரோதம் முதலிய குணங்கள் எப்படியோ உரிய இடத்தில் சென்று தாக்கிப் பயன் விளைத்து விடுகின்றன. நாம் எவ்வளவு தூரம் ஆசைப்பட்டாலும் நம் குற்றங்கள் ஒரு நாளில் வெளிப் படடே தீரும். ஒருவருக்குச் செய்யும் குரோத குணம் அவரது பரம்பரை வழியாக மற்றோரிடத்தில் அடாப் பழியாக படியாக நமது தலையிலே முடியும் என்பதை மறந்து விடக் கூடாது. குற்றமில்லாமல் இருந்தும் நாம் பழி பெறலாம். அங்கேயும் உரிய இடத்தில் உண்மை புல னாவது நிச்சயம். குற்றத்தைச் செய்து விட்டு உலகில் இருந்தோ கடவுளிட மிருந்தோ தப்பலாம் என்று எண்ணிவிடக்கூடாது. "குறைகளில் எல்லாம் பெரிய குறை ஒரு குறையு மில்லை" என எண்ணிக்கொள்வதே எமது குறையாகும். எனவே என்னுடைய மனதை நான் ஒரு நிலைப்படுத்தி அதன் வழியாகப் பிறக்கும் செயற்பாட்டை வளைந்து கொடுக்கக் கூடிய வகையில் உலகோடு ஒன்றித்து வாழ்வதற்குத் தன்னலமும் வீண் பெருமையும் கொள்ளாது பணிவுடன் இருந்து நீங்கள் உங்களுக்குத் தரும் மரியாதையை விட மற்றவர் களுக்கு அதிக மரியாதை கொடுத்து மனிதத்தைப் பேணிக் காப்பதே சிறப்புடையதாகும். மனிதம் உயர புனிதனாய் வரமுடியும் என்றால் மனதைப் பிறழ்வு கொள்ள விடாது நம்மு டைய கட்டுப்பாட்டுக்குள் வைத்து கொண்டே உலகை வெற்றி கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் திறமைவாற்றலை வளர்க்கும் நாடகம்

திரு.கோ.மதனகோபன்
ஆசிரியர்
யா/புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை.

வேறெந்தத் துறைகளையும் விட நாடகத்துறைக்கு உலகளாவிய ரீதியில் மிக நீண்டதொரு வரலாறு உண்டு. கி.மு, இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டு காலப்பகுதியிலேயே நாடகம் மிக உயர்ந்த அளவில் நடைபெற்றுள்ளமைக்கான சான்றுகளை ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். இம்முயற்சியானது அரசினால் ஊக்குவிக்குவிக்கப்பட்ட ஒரு செயற்பாடாகும். இக்காலத்தில் தோற்றம் பெற்ற "(Tragedy)" எனப்படும் துன்பியல் நாடகங்கள் இக்காலத்திலும் மனித உள்ளங்களைக் கொள்ளை கொண்டனவாகக் காணப்படுகின்றன. உதாரணமாக அன்ரிகனி, ஈடிப்பஸ் மன்னன் போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம். மேலும் பொறியியல் துறையில் இயந்திரப் பாவனையற்ற காலத்தில் கிரேக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த மிகப் பெரிய திறந்த வெளியரங்கானது இன்றைய பொறியியல் வல்லுநர்களை வியப்பிற்கு உள்ளாக்கியுள்ளது. அதாவது மலைச்சரிவில் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டு அடிவாரத்தில் "ஓகாஸ்ரா" என்கின்ற வட்டமான ஆடுகளம் அமைக்கப்பட்டிருந்தது. இவ்வரங்கில் 18000ற்கு மேற்பட்டோர் அமர்ந்து இருந்து பார்க்கக் கூடியதாக வசதிகள் செய்யப்பட்டிருந்தன. இக்காலத்தில் சர்வதேச கிரிக்கெட், உதைப்பந்தாட்ட அரங்குகள் மட்டுமே இத் தொகைக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக உள்ளது. கிரேக்க நாடக மரபினை அடுத்து உரோம நாடக மரபு தோற்றம் பெறுகின்றது. இக்காலத்தில் சிறந்த அரங்கக் கட்டிடங்கள் சிறப்புப் பெறுகின்றன. உரோம காலத்தை அடுத்து வருகின்ற மத்திய காலத்தில் முழுக்க முழுக்க கிறிஸ்தவமதம் சார்பான நாடகங்கள் மட்டுமே காணப்பட்டன. பிற்பட்ட காலத்தில் இங்கிலாந்தினை எலிசபெத் மகாராணியார் ஆட்சி செய்த காலம் ஒரு மறுமலர்ச்சிக் காலமாகும். இக்காலத்திலேயே தான் வில்லியம் ஷேக்ஸ்பியர் (1564-1616) என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரும் ஆங்கில இலக்கிய கர்த்தா உலகின் தலைசிறந்த நாடகங்களைப் படைத்தார். இவருடைய நாடகங்கள் கவிதை மொழியிலேயே அமைந் துள்ளன. இவருடைய நாடகங்களில் தலைசிறந்த பாத்திரங்கள் படைக்கப் பட்டுள்ளன. வள்ளுவரின் குறட் பாக்கள் எக்காலத்திற்கும் பொருந்து வது போல் இவருடைய பாத்திரங் களும் எக்கர்லத்திற்கும் பொருந் துவன ஆகும். ஒதெல்லோ, யூலிய சீசர், கம்லெட், மக்பெத் கிங்லியர், 2ம் றிச்சர்ட் போன்ற நாடகங்கள் ஷேக்ஸ்பியரின் படைப்புக்கள் ஆகும். இந்நாடகங்கள் பார்வை யாளர்கள் நின்று கொண்டு பார்க்கு "குளோப்" எனப்படும் மூடிய அரங்கிலேயே பகல் வேளையில் இடம் பெற்றது. பின்னர் பத்தொன்ப தாம் நூற்றாண்டில் நோர்வே நாட் டைச் சேர்ந்த ஹென்றிக் இப்சன் என்பவரது "ஒரு பாவையின் வீடு" எனும் நாடக மானது பெண்ணடி மைத்தனத்தை உலகிற்கு எடுத்துக் காட்டி நாடக வரலாற்றில் இடம் பிடித்தது. நவீன காலத்தில் உலக ளாவிய ரீதியில் நல்ல நாடக ஆசிரி யர்கள் தோன்றா விட்டாலும் தலை சிறந்த நாடகக் கோட்பாட்பாட்டா ளர்கள் காணப்பட்டுள்ளனர். ஸ்ரனிஸ்லவஸ்கி, மேயர் கோல்ட், இமோல்ப் அப்பியா பேட் றோல் பிறெக்ற், குரோடோவ்ஸ்கி, பீற்ற புறூக், அகஸ்ரா போல், பாதர் சக்கார் போன்றோர் நவீன அரங்கக் கோட் டாளர்கள் ஆவர். நாடகப் பாட நெறியைத் தொடர்பவர்கள் இவர் களின் கோட்பாடுகளை விரிவாக அறிந்து கொள்வர். இவ்வாறாக உலக நாடக வரலாறு ஆனது மொழியிய லைப் போல் பரந்து விரிந்துள்ளது.

சடங்கிலிருந்து நாடகம் தோற்றம் பெற்றது என்ற பேராசிரி யர் றோர்ச் தொம்சனின் கருத்துக்கு அமைவாக சங்ககால சடங்குகள், சம்பிரதாயங்களுடனேயே இந்திய நாடக வரலாறும் தோற்றம் பெறு கின்றது. மாநிலத்திற்கு மாநிலம் ஒவ்வொரு கலைகள் தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்றன. கேரளா வில் கதகளி போல் யட்சகானம், மணிப்புரி, ஒடிசி, கர்நாடகம் சங்கீ தம், பரதநாட்டியம் போன்றன ஒவ் வொரு மாநிலங்களுக்கும் உரிய கலைவடிவங்கள் ஆகும். இவற்றில் கர்நாடக சங்கீதமும், பரதநாட்டிய மும் உலக கலையாகப் பரிணமித் திருப்பது அதன் சிறப்பாகும். இதற் கெல்லாம் மூலவேராக இருப்பது கி.பி இரண்டாம் மூன்றாம் நூற்றா ண்டில் பரதமுனிவர் என்பவரால் எழுதப்பட்ட நாட்டிய சாஸ்திரம் எனும் நூல் ஆகும். நாடகம் பற்றிக் குறிப்பிடும் பழைமையான நூலாக வும் இது விளங்குகின்றது. பிற் காலத்தில் விசேட நாடகம் எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் இசை நாடகத்தோற்றத்தினால் அனைவரும் நாடகத்தின் பால் ஈர்க்கப்பட்டனர். இதன் மூலம் சங் கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் போன்றறோர் சிறப்புப் பெற்றனர். பின்னர் கருணாநிதி, அண்ணாத்துரை, போன்றோரின் வசனங்களில் நாடகத்துறை எழுச்சி பெற வெள்ளம் அனைத்தையும் விழுங்குவது போல் சினிமா அனைத் தையும் மூடி மறைத்து விட்டது.

ஈழத்திலும் பிரதேசத்திற்குப் பிரதேசம் சொந்தமான கூத்துக் களுடன் நாடகம் ஆரம்பமாகிறது. உண்மையில் நாடகத்தைக் குறிக்கும் பண்டைத்தமிழ் சொல் "கூத்து" ஆகும். யாழ்ப்பாணம் காத்தவராயன் கூத்துக்கும், மட்டக்களப்பு வட மோடி, தென்மோடி, கூத்துக்களிலும் பிரசித்தி பெற்றவையாக விளங்கின. இவற்றை விட மன்னார், வன்னி, மலையகம் போன்ற இடங்களிலும் சிறந்த கூத்துக்கள் ஆடப்பட்டுள்ளன. இவற்றைப் போல கோலம், சொக் கறி நாடகம் போன்றன சடங்கிலிரு ந்து விடுபட்ட சிங்களக் கலை வடி வங்கள் ஆகும். சினிமாவின் வருகை யினால் தமிழ்க் கூத்துக்கள் நலி வடைய பேராசிரியர். சு. வித்தியான ந்தன் பல்கலைக்கழகமட்டத்தில் அவற்றிற்கு புத்துயிர் கொடுத்தார். பேராசிரியர். க. கணபதிப்பிள்ளை யின் மண் வாசனை ததும்பும் யதார்த்த நாடகங்களும், கலையரசு சொர்ணலிங்கத்தின் நவீன நாடக உத்திகளும் ஈழத்தில் பல கலைஞர் களைத் தோற்றுவித்தது. நா. சுந்தரலி ங்கம், சுவைகிர்ஹமீட், தாஸீஸியஸ் பிராசிஸ்ஜெனம், குழந்தை ம.சண் முகலிங்கம், பேராசிரியர் சி.மௌன குரு போன்றோர் ஈழத்தின் தலை சிறந்த நாடகக் கலைஞர்களாவார் கள். ஆயிரத்து தொளாயிரத்து எழுப துகளில் கொழும்பில் இடம் பெற்ற நாடக டிப்ளோமா பாட நெறியோடு யாழ். பல்கலையிலும் நாடகப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் க.பொ.த. உயர் தரத்திலும் ஒரு பாடமாக்கப்பட்டு க. பொ.த. சாதாரண தரத்தில் தோற்றும் அழகியல் பாடமாக்கப்பட்டது. இது ஈழத்துத் தமிழ்க் கல்வியுலகில் நாடக த்திற்கு கிடைத்த ஒரு வரப்பிர சாதமாகும். பல்கலைக்கழகத்தில் சிதம்பரநாதன் அவர்கள் எழுச்சி மிக்க சமூகமாற்ற அரங்கில் பணி யாற்றினார். எல்லாவற்றிற்கும் மேலாக சிறுவர் நாடகத்தை தோற்று வித்த பெருமை கலாநிதி. குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களையே சாரும். "கூடி விளையாடு பாப்பா" என்ற சிறுவர் நாடகத்தின் மூலம் ஈழத்தில் சிறுவர் அரங்கத்தைத் தோற்றுவித்தார். இன்று பாடசாலை மட்டங்களில் சிறுவர்நாடகப் போட்டி, கூத்துப்போட்டிகள், இசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

நாடகப் போட்டிகள் என்பன இடம் பெறுகின்றன. சண்முகலிங்கத்தின் நாடக ஆளுமை பன்முகப்பட்டது. அவர் பாடசாலை மாணவர்களுக் கெனப் பல நாடகங்களை எழுதி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஊடாக வெளியிட்டவர், மருத்துவ பீட மாணவர்களைக் கொண்டு பல நாடகங்களை மேடையேற்றினார். அது மட்டுமல்லாமல் கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கலா சாலை புகுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தும் நாடக பயிற்சிப் பட்டறையை நடாத்தியவர். இவர் வெறுமனே சமூகப் பாங்குடைய நாடகங்களை மட்டும் படைக்க வில்லை. "ஆர்கெலோ சதுரர்" எனும் நாட்டிய நாடகத்தையும் எழுதி நெறிப்படுத்தியுள்ளார். அது மட்டும் ல்லாமல் "ஒரு பாவையின் வீடு" "அன்ரிகனி" போன்ற நாடகங்களை தமிழில் மொழி பெயர்த்து உள்ளார். இவரைப் போலவே கூத்துமரபினை நவீன நாடகத்தினுள் புகுத்திய பெருமை பேராசிரியர்.சி. மௌன குரு அவர்களையே சாரும். பண்டித மணியும், புலவர்மணியும் வடக்கி லும், கிழக்கிலும் தமிழ் பணியாற்றி யது போல் இவர்கள் இருவரும் வடக்கிலும், கிழக்கிலும் நாடகப் பணியாற்றினார்கள்.

கடந்த தசாப்தம் சுனாமி ஏற்பட்டுப் பேரழிவு ஏற்பட்டது. இதனால் உளப் பாதிப்புற்றோர் உள ரீதியாகப் பெரும்சவாலை எதிர் கொண்டனர். இவர்களுக்காகக் கல்வி நிறுவனங்களாலும் ஏனைய நாடக நிறுவனங்களாலும் ஆற்றுப்படுத்தல் அரங்கு தோற்றுவிக்கப்பட்டு ஆற்று ப்படுத்தப்பட்டது. அதனைத் தொட ர்ந்து யுத்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கென இவ் ஆற்றுப்படுத்தல் வழிநடாத்தப்பட்டது. இது இன்று விசேட தேவையுடைய மாணவர் மத்தியில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆரம்பப் பிரி வில் ஒதுங்கியிருக்கும் மாணவர்கள் சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் மூலம் ஆற்றல்கள் தூண்டப்பட்டு பேச்சு, மொழித் திறன் விருத்தி யாக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி யாக அரங்கச் செயற்பாட்டில் ஈடு படுத்தும் பொழுது ஆளுமை விருத்தி யாக்கப்படுகிறது. இதனை இன்றும் திருமறைக் கலாமன்றம், ATM ஆகிய நிறுவனங்கள் மேற்கொண்டு வரு கின்றன. இவ் வாறு முன்பள்ளி முதல் பல்கலைக்கழகம் ஈறாக முதுமை வரை நாடகம் மனிதனிடம் பல் திறவாற்றலை உண்டு பண்ணுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (அ) நான் பாரதியார்



திருமதி.ந.வனஜா
ஆசிரியர்,
B.F.A
யா/மண்டதீவு மகா வித்தியாலயம்.

வானிற் பறக்கின்ற புள்ளெலாநான்
மண்ணிற்திரியும் விலங் கெலாநான்
காணிழல் வளரும் மரமெலாநான்
காற்றும் புணலுங் கடலுமே நான்

விண்ணிற் தெரிகின்ற மீனெலாநான்
வெட்ட வெளியின் விரிவெலாநான்
மண்ணிற் கிடக்கும் புழுவெலா நான்
வாரியிலுள்ள உயிரெலாநான்

கம்பனிசைத்த கவியெலாநான்
கருகர் தீட்டு முருவெலாநான்
இம்பர் வியக்கின்ற மாடகூடம்
ஏழிநகர் கோபுரம் யாவுமே நான்

இன்னிசைமாத ரிசையுனேனான்
இன்பதி திரள்களனைத்துமே நான்
புன்னிலை மாந்தர் தம் பொய் யெலாநான்
பொறையருந் துன்பம் புணர்ப்பெலாநான்.

மந்திரங்கோடி யிலக்குவோனான்
இங்கு பொருளியல் பெலாநான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்திரங்கோடி அமைத்துளோனான்
சாத்திர வேதங்கள் சாற்றினோனான்.

அண்டங்கள் யிவையு மாக்கினோனான்
அவை பிழையிமே சுழற்றுவோனான்
கண்டநற் சக்திக் கனமெலாநான்
காரணமாகிக் கசிந்துளேனான்

நானெனும் பொய்யை நடந்துவோனாள்
ஞானச்சுடர் வினிற் செல்லுவோனான்
ஆன பொருள்கள் அனைத்தினு மொன்றாய்
அறிவாய் விளங்கும் முதற்சோதியான்.

## (ஆ) அரைகுடத்தின் நீரலைகள்

ஒவ்வொரு சொட்டு
வியர்வை துளியும் உள்ளே
ஒரு வெற்றிலையேனும்
வைத்துக்கொண்டே சொட்டுகிறது.
வீட்டின் சுவர்களுக்கு மத்தியில்
நிறைய பொருட்கள் இருக்கின்றன.
எல்லாம் இருந்தும்
அம்மா இல்லாத வீடு!
ஒன்றுமே இல்லாதது போல்
கண்ணீரின்றி மூழ்கிறது.
அம்மாவை ஊருக்குக் கொண்டு சென்றவிமானம்
என்று கொண்டு வருமோ மீண்டும் அந்த
நேரில் காணும் அம்மாவின் சிரிப்பை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்திரங்கோடி அமைத்துளோனான்
சாத்திர வேதங்கள் சாற்றினோனான்.

அண்டங்கள் யிவையு மாக்கினோனான்
அவை பிழையிமே சுழற்றுவோனான்
கண்டநற் சக்திக் கனமெலாநான்
காரணமாகிக் கசிந்துளேனான்

நானெனும் பொய்யை நடந்துவோனாள்
ஞானச்சுடர் வினிற் செல்லுவோனான்
ஆன பொருள்கள் அனைத்தினு மொன்றாய்
அறிவாய் விளங்கும் முதற்சோதியான்.

## (ஆ) அரைகுடத்தின் நீரலைகள்

ஒவ்வொரு சொட்டு
வியர்வை துளியும் உள்ளே
ஒரு வெற்றிலையேனும்
வைத்துக்கொண்டே சொட்டுகிறது.
வீட்டின் சுவர்களுக்கு மத்தியில்
நிறைய பொருட்கள் இருக்கின்றன.
எல்லாம் இருந்தும்
அம்மா இல்லாத வீடு!
ஒன்றுமே இல்லாதது போல்
கண்ணீரின்றி மூழ்கிறது.
அம்மாவை ஊருக்குக் கொண்டு சென்றவிமானம்
என்று கொண்டு வருமோ மீண்டும் அந்த
நேரில் காணும் அம்மாவின் சிரிப்பை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிரில் உடல் சற்று நடுங்க
ஒரு குவலையில் கூடாக நீர் தருகிறார் மனைவி
வாங்கி மேசையில் வைத்துவிட்டு
எழுத்துக்களில் தொலைந்து போனதில்
நீரும் குளிர்ந்து போனது.
நினைவு வந்தவனாய்
எடுத்துக் குடிக்கிறேன் தண்ணீரின் குளுமை
உடம்பெல்லாம் பரவியது.
நாவில் குளிர்ந்து நனையும்
இதே தண்ணீர் தான்
சற்று முன்பு கொதிக்க கொதிக்க
அடுப்பிலிருந்து இறக்கி கொடுக்கப்பட்டது.
வாழ்க்கையின் நிறைய விடயங்களும் இப்படித்தான்
காலத்தின் நகர்தலில் மாறிப்போகின்றன.
எல்லாம் கடந்து விடுகிறது
வெறுமனே கிடக்கிறது
நிறைய இடங்கள்
எதையேனும் இட்டு வையுங்கள்.
இல்லார்க்குக் கொடுத்தேனும் செல்லுங்கள்
நீங்கள் கொடுத்த இடத்திலிருந்து
நாளைய தலைமுறை பிறக்கலாம்
இன்றைய தலைமுறையின்
ஒரு குடும்பமேனும்
மானத்தோடு வாழலாம்
இல்லார்க்கு கொடுக்கும் பணமோ பொருளோ
இருப்போரை நட்டமாக்குவதில்லை.
இல்லாரை வாழவைக்கிறது.
ஒவ்வொருவருக்கான வெற்றியும்
அவருக்காக காத்தே இருக்கின்றது.
பிறப்பவர் அத்தனை பேரும் ஒவ்வொன்றிலும் ஜெயிப்பவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிதலில் தெளிதல்



திருமதி.தமிழினி வலன்ரீனா ஜோஷப்
ஆசிரியர்,
B.F.A
யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.

தில்லைக்கூத்தனின் திருப்பாத அதிர்வின் அளப்பெரும் அற்புதமே நடனக்கலை. அந்த எல்லை கடந்திலங்கும் பேரருட்சோதியின் பெரும்பேறாம் இக்கலைவடிவத்தினைப் பொற்கரும் செல்வமாய் போற்றிப் பேணல் நம் பெரும் பணி. இது உயிரின் மூல அதிர்விற்கும் உடலின் செயற்றிறன் விளைவிற்கும் பெருந்துணையாகின்றது. மனித சிந்தனைகளை ஒரு நிலைப்படுத்தி மனத்தினைக் சீராக்கும் மகாயாகமே நடனம். இவ்வகை பெருமைகளையுடைய நடனம் மாணவர்கள் மத்தியில் இன்று பெற்றிருக்கின்ற முக்கியத்துவம் பற்றியும் இப்பாடத் தெரிவினில் அவர்களின் நிலைப்பாடு பற்றிய ஓர் அலசலே இக்கட்டுரை எனலாம்.

தரம் ஒன்றிலிருந்து அழகியல் என்கின்ற வட்டத்தினுள் பாடுதல், ஆடுதல், வரைதல் எனப்படுகின்ற கலைச் செயற்பாடுகளினிலே எல்லாப் பிள்ளைகளும் ஈடுபடுத்தப்படுகின்றனர். பின்னர் அவர்கள் தரம் ஆறினிலே புகுகின்ற போது இக்கலைப் பாடங்கள் தனிப்பாடங்களாக அவர்கள் முன் உடைபடுகின்றன. இவ்வாறு அவற்றைத் தனியன்களாக உடைத்தல் அவரவர் தனித்திறமைக்கும் விருப்பிற்கும் இடமளித்து, அவ்வத்துறைகளில் அவர்களை மேலோங்கச் செய்யவே. ஆனால் இன்று கலைப் பாடங்களுக்குப் பிள்ளைகளைத் தெரிதல் பிள்ளைகளின் விருப்பிற்கு அப்பால் பெற்றோரினதும் பாடஆசிரியர்களின் தலையீடும் பிள்ளைகளைத் திசை மாற்றி விடுகின்ற ஒரு துர்ப்பாக்கியமான நிலை மெல்லத் துளிர்ப்பதனைக் காண முடிகின்றது. சங்கீதத்திற்கும், நடனத்திற்கும் தாளம் இன்றியமையாதது. நாடகமும், அரங்கியலுக்கும் நடிப்புப் பற்றிய ஓர் புரிதல் இருக்க வேண்டும். சித்திர பாடத்திற்கு வரைதல் என்பது அவசியமாகின்றது. இந்த மூன்று துறைகளிலும் நடனபாடத்தினைக் தெரிவு செய்கின்றபோது அங்கே தாளம் மிக முக்கியமானதாகவே கொள்ளப்படுகின்றது. உடல் முழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதும் ஒருவித லயத்தில் கட்டுப் பட்டு நிற்க வேண்டியது அவசியமா கின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அந்தப் பிள்ளையின் விருப்பு என்பது இங்கே அவசியமாகின்றது. அப்படியானால் விருப்பினை மட் டும் வைத்திருக்கின்ற தாளப் பிடிப் பற்ற ஒரு பிள்ளை இந்தப் பாடத்தி னைத் தெரிவுசெய்தல் சரியாகுமா? அந்தப் பிள்ளையினால் அப்பாடத் தில் உயர்நிலையை எட்டவைக்க முடியுமா என்கின்ற வினா ஒன்று இங்கே எழுகின்றது. குறித்த அந்தப் பிள்ளை இப்பாடத்தினை விரும்பு வதினூடாக அந்த மனநிலையினை வைத்து மெல்ல தாளக்கட்டுப் பாட் டினைச் சொல்லிக் கொடுக்க முடி யும். மாறாக விருப்பமற்ற ஒரு பிள் ளையை வைத்து இந்தப் பாடத்தினை நகர்த்திச் செல்வதே கடுமையாக இருக்கும்.

பாடும் ஆற்றலை இயற்கை யாகக் கைவரப் பெற்ற பிள்ளைகள் சங்கீத பாடத்தினைத் தெரிவு செய் கின்றபோது அது மேலதிக பயிற்சி யினாலே மேலும் மெரு கூட்டப் பட்டு, அந்தப் பிள்ளை அப்பாடத் தினில் தேறுவது மட்டுமல்லாது ஒரு கலைஞனாகவோ, வித்துவானாக வோ திகழ்வதற்கான வாய்ப்புக்களும் அதிகமாகின்றன.

அவ்வாறே நடன பாடம் தொடர்பான அடிப்படை அறிவி னையும் அதன் மேல் பெருவிருப்பும் கொண்ட பிள்ளைகள் அப்பாடத் தினைத் தெரிவு செய்து நகர்த்துகின்ற போது காலப்போக்கில் அவர்கள் அதில் வித்துவம் கைவரப்பெற்று அத்துறையில் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளக்கூடிய நிலை உருவாகும். பெற்றவர்கள் தம் விருப்புக்களைப் பிள்ளைகள் மீது திணிக்க முற்படு கின்றபோது சற்றுச் சிந்திக்க வேண் டிய கடமை அவர்களுக்கு உண்டு. தமது பிள்ளையின் நிலை என்ன என்பதையும் என்ன துறைக்கு பிள் ளை சரியானது என்ற விழிப்பும் அவர் களிடம் கட்டாயம் இருந்தேயாக வேண்டும். அவர்கள் மட்டுமன்றிப் பாட ஆசிரியர்களும் சரியான செயன் முறைகளின் மூலம் பிள்ளைகளைப் பரீட்சித்து அவர்களது விருப்பினைக் கேட்டறிந்து, அதற்கு ஏற்ப அவர் களை வழிப்படுத்த வேண்டிய பொறு ப்பினையுடையவர்களாகத் திகழ் கின்றனர். பிள்ளைகளும் தேடலின் மூலம் தம் அறிவினைப் பெருக்கி தமக்கேற்ற கலைப்பாடத் தெரிவில் களமிறங்க வேண்டும். ஆகவே கலைப்பாடத்தெரிவில் குறிப்பாக, நடனபாடத்தெரிவில் பிள்ளை, பெற்றோர், ஆசிரியர் ஆகிய மூவரும் தெரிதலே தெரிவை தெளிவாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரத நாட்டியம் பற்றி தீவக வலய பெற்றோர் மாணவர்களின் மனநிலை



திருமதி.சுதர்சினி வில்சன்
ஆசிரியர்,
Dip.in.Teaching (Dance)
யா/மண்டைதீவு மகா வித்தியாலயம்.

கருவறை தொடங்கி கல்லறை வரையும் ஒருவருடைய வாழ்க்கையில் அழகியலும் இணைந்து புரையோடியுள்ளது. அழகியல் இரசனை இல்லாதவன் "பசாசுகள் வாழ்கின்ற உலகிற்குப்" பொருத்த மானவன் என்று ஆங்கிலக்கலைஞன் சேக்ஷ்பியர் கூறியுள்ளார்.

"ஆளுமையுள்ள ஒருவன் அழகை விரும்புகின்றான்" என்றார் கிரேக்க தத்துவஞானி பிளேட்டோ.

"அழகியல் உணர்வு மனிதப் பண்புகளையும் ஆளுமைகளையும் வளர்க்கின்றது" என்றார் கவியரசர் இரவீந்திரநாத்கூர் என அழகியலின் பெருமை பற்றிப் பேசியோர் பலர்.

உலகம் போற்றும் உன்னத மான பண்பாட்டு விழுமியங்களைத் தன்னகத்தே கொண்ட பெருமை மிக்கது இந்துமதமாகும். இந்து மதத்துடன் இரண்டறக் கலந்ததே நடனக்கலை. நடனக்கலையானது ஆலயத்தை மையமாகக் கொண்ட நடராஜப் பெருமானின் வடிவம் தான். நடனக்கலை தெய்வீகத் தன்மை கொண்டது. கலை என்பது சதா வளர்ந்து கொண்டே செல்லும். ஆடல், ஓவியம், சிற்பம் என்பன நுண்கலைகளாகும். மாணவர்களின் செயற்பாட்டை வெளிப்படுத்துவது நடனக்கலை என்றால் அதுமிகை யாகாது. அழகியல் இரசனை உள்ள வன் வாழ்க்கையைச் செம்மையாக வாழ்ந்து முடிப்பான். சோகம், துன்பம், நோய் என்பன அவனை எதுவும் செய்யமாட்டாது. எந்தச் சவால்களையும் எதிர்கொள்ளும் ஆற்றல் வளரும். பிரச்சினையை பிரச்சனையாக எடுத்தால் தான் துன்பம். அதனை சவாலாக எடுத்து வெற்றி கொள்ளும் திறமையும் மனப் பக்குவமும் உள்ளவர்கள். "ஆக, அழகியலுக்கு இவ்வளவு சக்தியுண்டு என்றால் அது மிகையாகாது"

விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் நாகரிகம் மிகவும் வேகமாக வளரும் இக்காலகட்டத்தில் கூட சங்ககாலம், சங்கமருவியகால மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் போல இன்றும் வாழத்தான் செய்கிறார்கள். மனிதனைக் கவரும் நிலையில் உள்ள நடனமானது இலங்கைவாழ் மக்களிடையே பெரும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. அந்த வகையில் யாழ். மாவட்டத்திலே நடனக்கலைக்கு என்று ஒரு தனி இடமே உண்டு. வட இலங்கை சங்கீத சபை, பல்கலைக்கழகம், கல்வியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை போன்ற கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்பட்டு கலாவித்தகர், கலைமாணி, முதுகலைமாணி, டிப்ளோமா, கலாநிதிப் பட்டம் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு இருக்கும் போது யாழ். மாவட்டத்திலே தீவக வலயத்திலே நடனத்துக்குரிய மதிப்பும், மகிமையும் குறைவாகவே காணப்படுகிறது.

தீவக வலயம் வறண்ட வலயம் எனக் கூறினாலும், நான்கு பக்கமும் கடலினால் சூழப்பட்ட செழுமையான ஓரிடமாகவே காட்சியளிக்கின்றது. தீவகவலயத்திலே பல்வேறு தீவுகள் காணப்பட்டாலும் மண்டைதீவானது எல்லாத் தீவுகளுக்கும் தலையாய ஒரு தீவாகக் காணப்படுகிறது. எத்தனையோ பெருமைகளையும், திறமைகளையும் தன்னகத்தே கொண்ட பெருமைமிக்க தீவாகும். இவ்வாறான இடத்தில் சிறப்பான ஒரு பாடசாலையாக மிளிர்ந்து கொண்டிருப்பது யாழ். மண்டைதீவு மகா வித்தியாலயம் ஆகும். நடன பாடமே இல்லாத இப்பாடசாலையில் நடனபாடத்தை உருவாக்க வேண்டும் என்று நடன பாட ஆசிரிய ஆலோசகரின் வேண்டுகோளுக்கிணங்க இப்பாடசாலையில் நடன பாடத்தைக் கற்பிக்க வந்தேன். அன்றிலிருந்து இன்று வரை நடன பாடத்தில் இருந்த ஆர்வமும் ஈடுபாடும் குறைகின்றதே தவிரக் கூடவில்லை. நடன பாடத்துக்கு இது தான் மதிப்பா? தெரிந்தும் தெரியாமல் இந்தப் பாடத்தை எடுத்து விட்டோமா? என மனம் நோகும் அளவிற்கு இங்குள்ள மாணவர்களின் கருத்துக்கள் அமைந்தன. சென்றவுடன் ஆர்வமாகச் சில மாணவர்கள் வந்து சேர்ந்தார்கள். காலப்போக்கில் சேரும் மாணவர்கள் வீதம் குறைவாக வே காணப்பட்டது.

சென்ற ஆண்டில் தரம் 06 இற்கு மாணவர்கள் சேரும்போது அவர்கள் கூறிய கருத்துக்கள் மிகவும் வேதனைக்குரியது. பாடத்திட்டம், கணிப்பீட்டுக்கருவி எல்லாம் எழுதி முடித்துவிட்டேன். ஆனால் என் பாடத்துக்கு மாணவர்கள் யாரும் வந்து சேரவில்லை. அம்மாணவர்கள் கூறிய கருத்துக்களில் இருந்து அறிந்து கொள்ளக்கூடியது யாதெனில், நடனம் செய்வது பெண் பிள்ளைக்கு அழகல்ல. அடக்கமாக இருக்க வேண்டும். "ஆட்டக்காரி" என்று பட்டம் சூட்டிவிடுவார்கள் எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் கூறுவதாக சக மாணவர் களுக்குக் கூறி, அவர்கள் மூலமாக அறிந்து கொண்டேன். இவ்வாறான காரணங்களைப் பெற்றோர் பிள்ளை களுக்குக் கூறி, அவர்களின் அழகியல் உணர்வைத் தடுக்கின்றனர். மாண வர்கள் விரும்பாத ஒரு பாடத்துறை க்கு பெற்றோரால் திணிக்கப்படு கிறார்கள். மகள் "டான்ஸ்ஆடுது" என்று சொந்தபந்தம் அறிந்தால் தம்மைக் கேவலமாக நினைப்பார் கள் என்ற இவர்களது கேவல மான எண்ணங்கள் மிகவும் வருத்தத்திற் குரியது.

அடுத்து மாணவர்களைப் பொறுத்த வரையில் சித்திரம், சங்கீத பாடங்கள் சுகமானது என்றும், நடன பாடம் என்றால் உடல் களைப்புப் பெறும்வரை ஆடவேண்டும் எனவும் காரணம் கூறுகிறார்கள். நடனப் பாடத்தில் உள்ள விநியோகப் பகுதி சமஸ்கிருத வயப்பட்டிருப்பது அனைத்து மாணவர்களும் கடினப் படும் ஒரு விடயமாகும். நடன பாடத்தைப் பற்றிச் சரியாகத் தெரி யாத மாணவர்கள் நடனபாடம் முழு வதுமே சமஸ்கிருதம் என்று நினைத் துக்கொண்டு பாடத்துக்கு வரத் தயங்குகிறார்கள்.

ஒரு சில பெற்றோர் நடனம் கற்பதென்றால் நிறைய செலவாகும் என்ற தப்பான அபிப்பிராயம் கொண்டுள்ளார்கள். பாடசாலை விழாக்கள், ஊர் நிகழ்வுகளுக்கு ஆட வேண்டும் என்று மாணவர்கள் பாடத்துக்கு வர விரும்புகிறார்கள் இல்லை. நடன ஆசிரியர்கள் தங்க ளை அழகுபடுத்துவது பிள்ளைகள் தங்களைக் கவர வேண்டும் என்பதற் காக. அழகு என்பது அனைவரும் விரும்பும் ஒன்று. ஆரம்பக் கல்வி, அழகியல்கல்வி ஏன் ஏனைய ஆசிரி யர்களும் கூட அழகுணர்வுடன் காட்சியளித்தால் தான் மாணவர்கள் விரும்பிக் கற்பார்கள். இதனைப் பெற்றோர் சிலர் இன்றைய காலத்தில் கூடத் தப்பாக நினைக்கிறார்கள். நடனபாடத்துக்குக் கல்வி நிறுவனங் களில் கொடுக்கும் பட்டத்தைவிட இவ்வாறான இடங்களில் கொடுக் கும் பட்டங்கள் அதிகம்.

ஏதோ ஒரு தொழில் வேண் டும் என்பதற்காக கலைத்துறைக்கு வந்தவர்கள் அல்ல நடன ஆசிரியர் கள். ஆடல்கலை அவர்கள் தொழில் அல்ல. அது எங்கள் ஆன்மாவுடன் சங்கமமாகிவிட்ட ஒன்றாகும். பொருள் தேடல் மட்டும்தான் எமது வாழ்வின் இலக்கானால் வேறு எத்தனையோ தொழில் வாய்ப்புக்கள் தேடிப்பெற்றிருக்க முடியும். அழ கியல் இரசனை இல்லாதவர்களிடம் அழகியல் கற்பிப்பது ஒரு போராட் டமாகத்தான் உள்ளது. வளர்ந்த ஒவ்வொருவருடைய செயல்களிலும் அழகியல் இரசனையும் இணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதால்தான் அவர்களின் எண்ணம், சொல், செயல், தூய்மையாகவும், நேர்த்தியாகவும், முன்மாதிரிகையா கவும் அமைகின்றன.

தரம் 06, 07, 08 இல் மேடையில் ஏறி நடனமாடிய என் மாணவர்கள் தற்போது மேடையில் ஏற மறுக்கிறார்கள். காரணம் வீட்டிலே பெற்றோரின் கண்டிப்பு. மேடையில் என்ன நிகழ்வும் செய்யத்தயார். ஆனால் நடனமாட முடியாது. பிள்ளையை ஆட்டக்காரி என்றும் தரக்குறைவாகப் பார்த்து விடுவார்கள் என்னும் எண்ணம் கொள்கிறார்கள். நாங்கள் பார்த்த வரை பட்டமளிப்பு விழாவிற்குக்கூடச் செல்லாத பெற்றோர் பிள்ளை மேடையில் நடனமாடுகிறது என்று ஆசையாக செல்வதைக் கண்டிருக்கிறோம். பிள்ளை நடனமாடினால் உடல் மெலிந்து விடும் என்றும், ஆடிவிட்டு விட்டால் உடல் பருத்து விடும் என்றும், அதுதான் சில நடன ஆசிரியர்கள் உடல்பருத்து இருக்கிறார்கள் என்ற கருத்தும் பெற்றோர் மாணவர்களுக்கிடையில் உண்டு.

பரத நாட்டியமும் ஏனைய பாடங்களைப்போல முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பல்வேறு கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்பட்டு, வெவ்வேறு பட்டங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றமையை இவர்கள் அறியவில்லை போலும். எனவே, பெற்றோர் மாணவர்க்கு உள்ள அறியாமையை நீக்கி, மாணவர்களின் தரத்தை மேம்படுத்தி, நடனக்கலையில் ஆர்வத்தை ஊட்டி, அதன் மூலம் விழுமியங்களைப் பேணி, அவற்றுக்கு ஆதரவளித்து, அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் சிறந்த சமூகத்தை உருவாக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியன்



**திரு. அ.குகதாசன்**
ஆசிரியர்,
யா/மெலிஞ்சிமுனை றோ.க.த.வித்தியாலயம், ஊர்காவற்துறை

ஆனைமுகத்தானைப் பணிந்து
அனைவர்க்கும் வந்தனங்கள்.
ஆசிரியம் என்பது அர்ப்பணிப்பு
ஆசிரியன் என்பது அன்பான அரவணைப்பு.

ஏணிப் படிகளாய் உலகில் நின்று
ஏற்றி வைக்கும் உத்தமனாம் ஆசிரியன்
ஏற்றமுற பிள்ளையின் உன்னத கல்விக்காய்
எறும்பு போல உழைத்திடுவான் ஆசிரியன்.

கடல் கடந்து கடுகடுத்து பள்ளி சென்றாலும்
கண்ணியமாய் வாயில் நுழைந்தவுடன்
கனத்த கவலைகள் யாவும் மறந்து
கனிவான மொழிபேசி மழலைகளை அரவணைப்பான் ஆசிரியன்.

மழலைகளின் குற்றத்தை நீக்கிடும்
மாநிலத்தின் மகத்தான ஆசிரியன்
மன்னவனாய் அவன் வகுப்பறையில்
மாண்புமிகு நல் நடிகன் ஆவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கல்விச் சீர்திருத்தம் பிள்ளைக்கு
நன்றான பற்பல கணிப்பீடு
நலம் பல தந்திடும் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி
நாள்தோறும் நடத்திடுவான் நல்ல ஆசிரியன்.

ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என
ஆழ் மனதில் பசுமரத்தாணி போல பதியவைத்து
ஆணித்தரமாக ஆசிரியன் மீள்வலியுறுத்தி
ஆல் போல் எதிர்காலச்சமூகத்தை அரவணைத்து காத்திடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களின் சமூகத்திறன்களை விருத்தி செய்தல் குடும்பம் மற்றும் பாடசாலைகளின் பங்களிப்புக்கள்


செல்வி.நி.நவகீதா
ஆசிரியர்,
B.F.A
யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் ம.வித்தியாலயம்


ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு சமூகக் காரணிகளின் பங்களிப்பு அதிகமாகும். சமூகத்தின் மத்தியில் வாழ்கின்ற மனிதன் ஒரு சமூக விலங்கு எனப்படுகின்றான். சமூகச் சூழல் இன்றி தனிமனிதன் இயங்க வோ வளர்ச்சி பெறவோ முடியாது. ஆகையால் சமூகத்தோடு பொருந்தி வாழும் மனப்பக்குவம் அவனிடம் ஏற்பட வேண்டும். இதனால் அவன் சமூகத்தின் திறன்களைப் பெறுவ தோடு, அவற்றை விருத்தி செய்யும் புது மனிதனாக மாற்றம் பெற வேண்டும். இதனை அடியொற்றி இன்று பல சமூக அமைப்புக்களும் நிறுவனங்களும் தோன்றியுள்ளன. இத்தகைய சமூகத்தில் தோன்றி வளர்ந்து சாதனைகள் பல படைத்து வாழ்கின்ற மனிதன் சமூகத்திறன் களைப் பெற்று வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று சமுதாயம் என்பது ஆரம்ப காலங்களைப் போல் அல்லாமல் பரந்து விரிந்ததொரு பொருளைத் தருகின்றது என்று "மீரியம் கிளைஸ்பி" (merium clasby) என்பவர் குறிப்பிட்டுள்ளார். இத னால் சமுதாயத்தின் பல்வேறுபட்ட அம்சங்களைப் பிரதிபலிக்கும் வகை யில் பாடசாலையின் கலைத்திட்டம் அமைதல் வேண்டும். அத்துடன் பாடசாலைக்கும் அதன் அயற் சமூகத்திற்கும் நல்ல தொடர்புகள் பேணப்பட வேண்டும். பாடசாலை யை உலகுக்காகத் திறந்து விடல் வேண்டும் என்ற கருத்தின் அடிப் படையில் ஆழமான கருத்துக்கள் பல சமூகம் தொடர்பாகக் காணப்படு கின்றன. சமுதாயம் மதிக்கும் கலா சாரப் பண்புகள், விழுமியங்கள் சமுதாயத்தின் வாழ்க்கையில் எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள், சமு தாய வளங்கள் போன்ற பல விடய ங்கள் எல்லாம் பிள்ளைகளினுடைய சமூகத்திறன்களை வளர்த்துவிடும் என்பதனால் இவற்றைக் கலைத்திட் டத்தில் புகுத்தும் வகையில் கல்விச் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

சமூகத்திறன்களை வளர்த்தல் என்னும் விடயத்தில் பாடசாலைசார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணி, குடும்பக்காரணிகள் என்ற இரு காரணிகளின் வலுவூட்டமான செயற்பாட்டைக் காண முடிகின்றது. இன்றைய நிலையில் சமூகத் திறன்களைப் பெற்று வாழ்தல் என்பது முக்கியமானதொரு விடயமாகும்.

சமூகத்திலே வாழும் ஒரு பிள்ளை ஒருபோதும் சமூகத் தொடர்பைச் சரியான முறையில் மேற்கொள்ளாதவிடத்துப் பல பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படுகின்றன. சமூகத்திலே பல்வேறு பாத்திரங்களை ஏற்றுவாழ வேண்டிய பிள்ளைகள் சமூகத்திறன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சமூகத்தில் வாழ்ந்தால் மட்டும் போதாது. அச்சமூகத்தின் போக்குகளை விளங்கி, அதற்கேற்ப வாழ்க்கையின் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். ஆனாலும் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் எல்லாம் சமூகத்திற்குச் சாதகமான மாற்றங்களாகத் தான் இருக்கும் என்று கொள்ள முடியாது.

இன்றைய எமது நாட்டில் ஏற்படும் மாற்றங்கள் எல்லாவற்றையும் எமது நாட்டின் எல்லா இன மொழி பேசும் மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வர் என எதிர்பார்க்க முடியாது. அவ்வினத்தின் பண்பாடு, கலாசாரம் என்ற விடயத்தோடு தொடர்புபட்ட மாற்றங்களையே மக்கள் விரும்புவதோடு, அதனை ஏற்றுக்கொள்ளவும் முன்வருகின்றார்கள். இத்தகைய பொருத்தமான மாற்றங்களுக்கு அமைய மக்களை இயைபாக்கமடையச் செய்வதோடு, தேவையான அறிவு, திறன், மனப்பாங்குகள் போன்றவற்றை வளர்த்துச் சமூக மாற்றங்களுடன் பொருந்திச் செல்ல அவர்களை வழிப்படுத்த வேண்டும். குறிக்கப்பட்ட ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் அச்சமூகத்தில் தான் வாழ்வதற்குப் பொருத்தமாக உள்ள திறன்களைப் பெற்றுக்கொள்ளாவிடில் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் போய்விடும்.

எனவே, ஒரு தனிநபரும் சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான திறன்க்ளை எல்லாம் பெற்றுக் கொள்ளலே சமூகத் திறன்களாகும். பிள்ளைகள் சமூகத்திறன்களைப் பெற்று வாழ்தலின் அவசியத்தை நோக்குவோம்.

மனிதன் பிறந்த நேரத்தில் இருந்தே சமுதாயத்தில் இயைபுபட்டு வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு கணமும் மாறிக்கொண்டு இருக்கும் சமூக மாற்றத்தில் ஒரு தனிமனிதன் தான் வாழ்வதற்குத் தேவையான திறன்களையெல்லாம் பெற்றுக்கொள்ள வேண்டும். நாளாந்த வாழ்க்கையில் தோன்றும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் ஆற்றலும் விவேக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் உடைய மக்கள் தம்முடைய சிறப்பான வாழ்க்கைக்காகத் தமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப் பும் மக்கள், இதனால் சிறந்த தொழில் ஒன்றைத் தேடும் மக்கள், தாம் வாழ்வதோடு மட்டுமல்லாமல் தமது சந்ததியின் நலத்தையும் கருத்திற் கொண்டு செயற்படும் மக்கள், விழு மியங்கள், அறநெறிகள், பழக்க வழக் கங்கள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு வாழ்கின்ற மக்கள் மற்றவர் களோடு சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்தும் மக்கள், எல்லாவற்றுக் கும் மேலாகத் தமது சமூக வளர்ச்சி க்கு வழிகாட்டும் கல்வியையே தமது முக்கிய கருவியாகக் கருதி வாழும் மக்கள் என்ற வகையில் ஒவ்வொரு வரும் சமூகத்திறன்களை எல்லாம் பெற்று வாழ்வதை அவதானிக்க முடி கின்றது.

மனித வாழ்க்கை என்பது ஏனைய உயிரிகளின் வாழ்வியல் நெறிகளில் இருந்து வேறுபட்டது. உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டது. பல்வேறு எதிர்பார்ப் புக்களைக் கொண்டது. இத்தகைய செயற்பாடுகள் இருந்த போதும் நவீன மாற்றங்களின் அடிப்படை யில் தோன்றும் சாதக விளைவுகளை ஏற்று வாழும் சமூகத் திறன்களைப் பெற்றுக்கொள்ளல் இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

## நவீனகால சமுதாயத்தின் மாற்றங்கள்

இன்றைய சமுதாய மாற்றத் தின் முக்கிய அம்சங்களைப் பின்வரு மாறு வகைப்படுத்திப் பார்க்கலாம்.

1. வேளாண் பொருளாதாரமே பிரதானமாக இருந்த மரபு நிலை யில் மாற்றம் காணப்பட்டு இன்று தொழில்நுட்பப் பொரு ளாதாரத்திற்கு மாற்றம் செய்யப் பட்டது.
2. எதனையும் அறிவியல் அடிப் படையில் விளக்கமளிக்க முயற் சித்ததன் விளைவாக அறிவு பல் வேறு சிறப்புத் துறைகளாக மாற்றமடைந்தன.
3. ஆபத்தான பல நோய்களுக்கும் மருத்துவ ரீதியான தீர்வு காணப் பட்டது.
4. தொழில்நுட்பங்களின் வளர்ச் சியினால் உலக நாடுகளிடையே நடைபெறும் பல விடயங்களை உடனுக்குடன் அறிய முடிந்தது.
5. இயற்கைச் சக்திகளை அறிவிய லின் துணைகொண்டுமனிதன் தனது கட்டுப்பாட்டிற்கு உட் படுத்தினான்.
6. கிராமப்புற வாழ்க்கை நகரப் புறங்களை நோக்கி நகர்வதாக அமைந்தது.
7. அறிவியல் சார்ந்த ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன.

இவ்வகையில் நாட்டில் ஏற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட புதுமைப்புரட்சியின் விளை வாகச் சமூக மாற்றங்கள் விரைவாக ஏற்படத் தொடங்கின. இத்தகைய சமூக மாற்றங்களைப் புரிந்து அதற்கேற்ப வாழும் சமூகத்திறன் களைப் பெற்று வாழ்பவர்களாக இன்றைய இளம் சந்ததியினரை வழிப்படுத்த வேண்டும். சமூகத்திறன் களைப் பெற்று வாழ்தல் என்னும் போது மாணவர்களின் இத்தகைய விருப்பத்திற்கு மாற்றங்களுக்கெல் லாம் காரணமாக விளங்கும், காரணி களை இரு வகைப்படுத்திப் பார்க்க லாம்.

மாணவர்களின் சமூகத்திறன் களைப் பெறுதலில் குடும்பம்சார் காரணிகளாக, சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் எப்போதும் சமூகத் திற்குப் பொருத்தமான பெறுபேறு களைத்தான் தரும் என்பது ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே இத் தகைய மாற்றங்களைச் சமூகம் தமக்குப் பொருத்தமாக மாற்றிக் கொள்வதற்குக் கல்வி பெரும் உதவிபுரிகின்றது. இதனால் குடும்ப ங்கள் தமது பிள்ளைகளின் சகல விதமான வளர்ச்சிக்கும் கல்வியையே நம்பியிருக்கும் நிலை இன்று காணப் படுகின்றது. ஒரு பிள்ளையினுடைய கல்வி வளர்ச்சியில் முதலாவது பொறுப்பினை ஏற்றுக்கொள்ளும் நிறுவனம் குடும்பமாகும். உளப் பகுப்பாய்வாளரான "புரொய்ட்" என்பவர் ஒரு மனிதன் தனது குடம் பத்தில் இருந்து கற்கும் விடயங் களையே சமூகத்தில் பிரதிபலிக் கின்றான் எனக் குறிப்பிடுகின்றான். எனவே, குடும்பம் என்பது பிள்ளை களது சமூக வளர்ச்சிக்கு மிக அவசிய மான ஒரு வழிகாட்டி எனலாம்.

சமூகத்திறன்கள் என்னும்போது பின்வரும் விடயங்கள் குடும்பத்தில் இருந்து பிள்ளைகளுக்கு கிடைக் கின்றன.

1. மொழி, கல்வி, பண்பாடு, பழக்கவழக்கங்கள், விழுமிய ங்கள், சமூகத் தொடர்புகள், சேர்ந்து வாழ்தலின் அவசியம், ஆபத்துக் காரணிகளை இனம் காணும் நிலை, பொருளாதாரச் சிந்தனைகள், தொழிலின் அவசியம்.

என்ற வகையில் பல விடயங்களை அறிந்து கொள்வதில் பிள்ளைகளை வழிநடத்துவதில் குடும்பக் காரணிகள் பல கடமை களைச் செய்கின்றன. குடும்பத்தி லிருந்தே முதலில் பிள்ளைமொழி பேசக் கற்றுக் கொள்கின்றது. இதன் அடிப்படையில் தொடர்பாடலை ஏற்படுத்தும் பிள்ளையானது சமூகத் தின் புத்தாக்கப் பங்களிப்பாளர் களாக மாற்றம் பெறுவதில் மொழி யும் முக்கிய பங்கு வகிக்கின்றது. குழந்தையின் வளர்ப்பு முறையில் பெற்றோர்கள் அதிக முக்கியம் வாய்ந்த பங்குதாரர்களாக விளங்க வேண்டும். அப்பருவத்தின் முக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்துவத்தைக் கருத்திற்கொண்டு செயற்படும்போது தான் குழந்தை சீரான முறையிலே சிந்திக்கவும், வளரவும் முடிகிறது. அவர்களின் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டங் களிலும் அவர்களுடைய உடல், உள விருத்தியில் கவனமெடுத்தல் அவசி யமானது. அவர்களின் பாதுகாப்பு, போசாக்கு, கல்வி போன்ற விடயங் களில் பெற்றோர்களின் கவனம் அதிகமானதாக இருத்தல் அவசியம். இப்பருவத்தில் குழந்தைகளைச் சரியான முறையில் நெறிப்படுத்தும் போது பிள்ளைகள் சமூகத்திறன் களைப் பெற்று வாழ்பவர்களாக மாற்றப்படுவார்கள்.

சமூக உணர்வுகள் சரியான முறையில் கட்டியெழுப்பப்படாத பிள்ளைகள் சமூகத்திறன்களைப் பெற்று வாழ்பவர்களாக மாற்றப்படு வார்கள். சமூகத்தில் தமக்குள்ள உரிமைகளையும், கடமைகளையும் அறிய முடியாதவர்களாக இருப்பார் கள். சமூகத்தில் தனக்குரிய இடம் வரையறை போன்றவற்றை அவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். குடும் பத்தில் கூட தமக்கு இருக்கின்ற வீடுசார் ஆபத்துக் காரணிகள் பற்றி விளங்கிக்கொள்ளும் திறன் இருக்க வேண்டும். சமூக உறவுகளோடு கூடிவாழ்தலின் அவசியத்தைப் புரிவ தோடு, அவர்களுடன் எப்படியான வகையில் தொடர்புகளை ஏற்படுத் தலாம் என்பதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். வாழ்க்கையின் சிறப்புக்கு அவசியமானது பொருளா தார நிலை என்பதையும் அதற்கான வழியாகத் தனக்கு ஒரு உயர்ந்த தொழில் ஒன்றைப் பெறும் தேவை உள்ளது என்பதையும் பிள்ளைகள் நன்கு விளங்குவதற்குரிய இலட்சி யங்களை ஏற்படுத்திக் கொடுப்பவர் களாகப் பெற்றோர்கள் செயற்பட வேண்டும். அதாவது பிள்ளை களுக்குத் தெளிவான இலக்குகள் குடும்பங்களில் இருந்து வளர்க்கப் படவேண்டும். எதிர்காலத்திற்குத் தயாராகின்ற நிகழ்காலத்தை அவர் களுக்கு வழங்க வேண்டும். இதன் மூலம் அவர்களிடத்தில் சமூகத் திறன்கள் வளர்த்தெடுக்கப்படுகின் றன. நிகழ்காலத்தின் தூண்டல்கள் சரியாக அமையும் பட்சத்தில் எதிர் காலம் பற்றிய எதிர்பார்ப்பு பிள்ளை களை நன்கு செயற்பட வைக்கும்.

குடும்பங்களில் பெற்றோர்கள் மத்தியில் புரிந்துணர்வு அந்நி யோன்னியம் இருக்கும் நிலையில் பிள்ளைகளுக்கும் தமது எதிர்காலம் பற்றிய ஒரு நம்பிக்கையிருக்கும். அதன் வாழ்க்கை அதற்கு அர்த்த முள்ளது போல இருக்கவேண்டும். இல்லையேல் அவர்களுக்குள் ஒரு வெறுமை தோன்ற வாய்ப்புண்டு. குடும்பத்தில் பிள்ளைகளுக்கு சரி யான பாதுகாப்பு உணர்வு வழங்கப் பட வேண்டும். எல்லாச் சந்தர்ப் பத்திலும் தன்னைப் பாதுகாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன் வளர்க்கப்பட வேண்டும். சமூகத்தின் தீய விளைவுகள் மனிதர்களின் தீய செயற்பாடுகள், இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றிலும் இருந்து தம்மைத் தப்பிக்க வைக்கும் திறன்கள் பிள்ளைகளிடம் வளர வேண்டும். இக்கட்டான சந்தர்ப்பங்களுக்கு அகப்படாமல் இருக்கும் திறன்களைப் பெற்றுக்கொண்ட பிள்ளைகள் சமூகத்திறன்கள் உடையவர்களாகக் கருதப்படுவர்.

ஒவ்வொரு பிள்ளையும் சமூகத்தில் தனக்கு இருக்கும் உரிமைகள், கடமைகள், தேவைகள் பற்றி உணர்வதற்குப் பெற்றோர்களின் வழிகாட்டல்கள் அவசியமானவை. சமூகத்தில் தனக்கு இருக்கும் வரையறைகள் பற்றி விளங்கிக்கொள்ளல் அவசியமாகும். குடும்பப் பெரியவர்கள் சிந்திப்பதையும், செயலாற்றுவதையும் பார்த்து பிள்ளைகள் செயற்படுவதைப் பெற்றோர்கள் கவனித்து, அது தொடர்பான விளக்கம் கொடுத்தல் இன்றியமையாதது. இவ்வகையில் சமூகம் தொடர்பான பல கருத்துக்கள் தனிநபர் வாழ்க்கையில் சமூகத்தின் பங்களிப்பு, சமூக உறவுகள் போன்ற பல விடயங்களையும் பிள்ளைகளிடத்தில் உணர வைத்தல் மூலம் சமூகத்திறன்களை அவர்கள் மத்தியில் வளர்த்துக் கொள்ளலாம். எனவே சாறுண்ணி போலவோ பொம்மை போலவோ, தன்னைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் வாழும் குருட்டு வாழ்க்கைக்கு விடை கொடுத்து, பிள்ளைகள் தன்னைப் பற்றிய முழுமையான விழிப்புணர்வுடன் முன்னிலையாளராகவோ வாழுகின்ற சமூகத்திறன்கள் பெற்ற வாழ்க்கையை வாழுவதற்குக் குடும்பங்கள் பெரிதும் பங்களிப்பைச் செய்யவேண்டும்.

மாணவர்களின் சமூகத்திறன் வளர்ச்சியில் பாடசாலைகளின் பங்களிப்பு, தனி மனிதர்கள் தம்முடைய ஆற்றலை அறிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வைத் தூண்டும் வகையிலும் பாடசாலைகள் பிள்ளைகளை வழிநடாத்த வேண்டும். பிள்ளைகள் படிக்கும் பாடங்கள் தனித்து அறிவு என்ற உயர்ந்த நோக்கு என்பதோடு அவர்களின் வாழ்க்கை என்ற விடயத்தையும கவனத்திற் கொண்டதாக அமைய வேண்டும். தான் வாழும் சமூகச் சூழலின் பின்னணியில் அமைந்த பாட ஏற்பாடுகள் பிள்ளைகளின் சமூகத்திறன்களைக் கட்டியெழுப்பும் என்ற வகையில் அவர்கள் தூண்டப்பட வேண்டும். இன்றைய சமூக மாற்றத்தைக் கருத்திற் கொண்ட கல்வி முறைகள் பிள்ளைகளின் சமூகத்திறன்களை வளர்க்கின்றன. ஆரம்பக்காலக் கலைத்திட்ட அமைப்புகளின் பாட அலகுகள் உள்ளடக்கங்கள், கற்பித்தல் முறைகள் பல இன்றைய காலத்தின் தேவை கருதி மாற்றமடைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளன. இன்றைய காலத்தின் தேவையை உணர்த்தும் கல்வி முன்னெடுப்புக்கள் பற்றி கல்வியியலாளர்கள் சிந்தித்துள்ளனர். கொள்கைகளையும், கோட்பாடுகளையும் கற்பித்த நிலையில் அவ்விடயங்களை மாணவர் மனனம் செய்யலாமே தவிர, வேறு வழிக் கற்றல் முறைகள் இருக்கவில்லை. நவீன கற்றல், கற்பித்தல் முறைகள் பிள்ளைகளின் வளர்ச்சிக்குத் தேவையான சமூகத் திறன்களைப் பெறுதல் எனும் நோக்கில் திட்டமிட்டுள்ளன. செயல்முறையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

எனவே மாணவர்களின் அதாவது ஒவ்வொரு மனிதனினதும் சமூகத்திறன் விருத்திக்கு குடும்பம் மற்றும் பாடசாலைகளின் பங்களிப்புக்கள் அவசியமானதாகக் கொள்ளப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்று உயர் வாழ்வேது உலகில்



திரு.அ.மனோகரன்
B.A
சைவப் புலவர் (விசேட பயிற்சி தமிழ்)
யா/யாழ்ற்றன் கல்லூரி

தாழி பணிந்திடுவாய் பரம் பொருளை நாடி
தாழ் விலாச் செல்வம் கல்வி கற்றுணர்ந்தால்
ஆழ்கடல் சூழ் உலகும் அடி பணியும்
வாழ்வு செழித்தோங்கி வளங்கொளிக்கும்.

உலகு புகழ் ஓங்குயர் தீவு தன்னில்
பலவுலகும் படைத்தளித்த இறையருளால்
இலங்கு நூல் மெய்யறிவு கற்றுணர்ந்தே
துலங்கி நின்றார் தூமதியாய் பல்வோர்.

கல்வியினால் பேறுயர்ந்த முன்னவர்
நல்ல பேரறிஞர் திருக்கூட்டமதாய் நம்
கலங்கரைவிளக்காய் வாழ்ந்திருக்க
அல்லலுறலாமோ கல்விதனை மறந்து.

பாதை தெளிவிருக்கப் பயணத் தடை ஏது
போதை புத்தொழுக்கம் புகுமோ உமக்கும்
வேதனை யுறுவீர்! வீணே வாழ்விழந்தே
சாதனைகள் புரியுமப்பா சற்றே நிமிர்ந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி தனைக் கற்றுயர்வீர் - நாளும்
நல்ல றிவைப் பெற்றுய்வீர் நாளும்
வெவ் வல்ல தொழில் நுட்பக் கல்வி
நல்ல வழி உமக்கிருக்கே வாழ்வில்.

கற்றலை மறந்து நீயிருந்தால் நாளும்
பெற்ற வாழ்விழந்து விலங்கொப்பாய்!
உற்ற உறவிழந்து உயர்விழப்பாய்!
மற்று உயர் வாழ்வேது உலகில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட கல்வி ஓர் அறிமுகம்



திரு.இர.ஜெயகரன்
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்(விசேடகல்வி)
B.Com,PGDE(DIS), PGDSNE,Dip.in Special Education,N.D.T(Spe)

இன்று உலகளாவிய ரீதியில் சாதாரண கல்விக்கு எவ்வாறு முக்கியத்துவம் வழங்கப்பட்டு வரப் படுகின்றதோ அந்தளவுக்கு விசேட கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப் பட்டுவரப்படுகின்றது. இதன் அடிப் படையில் ஏதாவது ஓர் அடிப்படை யில் விசேட தேவையினை வேண்டி நிற்கும் விசேட தேவையுடைய பிள்ளைகளிற்காக விசேட பயிற்சி பெற்ற ஒருவரினால் விசேட உபகர ணங்கள் மற்றும் விசேட கற்பித்தல் முறைகளினைப் பயன்படுத்தி வழங் கப்படும் கல்வி விசேடகல்வி எனலாம்.

எனவே, விசேட தேவை களினை உடைய பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்வி விசேட கல்வி என்பதனால் விசேட தேவையுடைய பிள்ளைகளினை இணங்காண வேண்டிய தேவையுள்ளது. அந்த வகையில் பல்வேறு வகைப்படுத்தல் களின் மத்தியில் பின்வரும் 14 வகை யான பிள்ளைகள் விசேட தேவை யுடைய பிள்ளைகளாக கருதப் படுகின்றனர்.

- கற்றலில் இயலாமையுடையோர். (கற்றல் குறைபாடு)
- பேச்சுக்குறைபாடுடையோர்.
- மனவெழுச்சி குழப்பம் - நடத்தை குறைபாடுடையோர்.
- உள ரீதியாக பாதிக்கப்பட்டோர்
- முழுமையாக பார்வையற்றோர்.
- பார்வைக்குறைபாடுடையோர்.
- முற்றாகக் கேட்டல், பேச்சுக் குறைபாடுடையோர்.
- கேட்டல் குறைபாடுடையோர்.
- மெதுவான உள வளர்ச்சியடை வோர்.

➢ உளவளர்ச்சி குன்றியோர்.

➢ டவுன்சிங்ஹோம்

➢ துறுதுறு குழந்தைகள்

➢ உடல் அங்கவீனமானவர்கள்

➢ தர்சிந்தனை (Autism) உடையோர்.

➢ சுகாதாரக் குறைபாடுடை யோர் (நோயினால் பாதிக்கப் பட்டவர்கள்).

➢ மூளைக்காயம் அல்லது மூளை பாதிக்கப்பட்டோர்.

➢ அவதானக் குறைபாடு டையோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற 14 பெரும் பகுதிகளாக இவ்விசேட தேவையுடைய மாணவர்களினை வகைப்படுத்திக் கொள்ளலாம்.

## விசேட தேவையுடைய மாணவர்களிற்கான கற்பித்தல் முறைகள்

➢ **கற்றலில் இயலாமையுடையோர் - மீத்திறன் மாணவர்கள்**

இவர்கள் இரண்டு தேவைகளையுமுடைய மாணவர்கள் எல்லாப் பாடசாலைகளிலும் வகுப்பறைகளில் காணப்படுவார்கள். எனவே இப்பிள்ளைகள் தொடர்பாகப் பாடசாலையின் அதிபர்,ஆசிரியர்கள் எல்லோரும் கவனம் எடுக்க வேண்டும். இதன்படி கற்றலில் இயலாமை என்கின்ற மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு விசேட வகுப்புகள், செயற்றிட்டங்களை வகுத்துப் பிள்ளையின் இயலுமைக்கு ஏற்கப கற்றலினை மேற்கொள்வதுடன், மீத்திறனுடைய பிள்ளைகளுக்கு அவர்களின் சிந்தனையினைத் தூண்டக்கூடிய ஆக்க, ஆராய்ச்சி செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும்.

➢ **பேச்சுக்குறைபாடுடைய மாணவர்கள்**

இப் பிள்ளைகளுக்கு மொழி விருத்தியினை ஏற்படுத்தக்கூடிய பயிற்சிகளினை வழங்கவேண்டும் இதற்காக "உதட்டு வாசிப்பு" பயிற் சியினை அதிகளவில் வழங்க வேண்டும். மேலும் சொல்லட்டைகள், புத்தகங்களை வாசிப்பதிலும் பயிற்சிகளினை வழங்க வேண்டும்.

➢ **மனவெழுச்சி குழப்பம் - நடத்தை குறைபாடுடையோர்**

இப் பிள்ளைகளுக்கு முதலில் அதிகம் தேவைப்படுவது சிறந்த வழிகாட்டல், ஆலோசனை சேவையேயாகும். மேலும் ஆரோக்கியமான இசையினைக் கேட்டல், ஆடல், பாடல் மற்றும் தியானம், யோகாசனம் போன்றவற்றிலும் இறை வழிபாடுகளிலும் இம் மாணவர்களினை ஈடுபடுத்த வேண்டும்.

➢ **உளரீதியாக பாதிக்கப்பட்டோர்**

இவர்களுக்கு உளச்சிகிச்சையினை பெற்றுக்கொள்ளக் கூடியதான வழிகாட்டல்களினை வழங்க வேண்டும். அத்துடன் மனதிற்கு மகிச்சியினை ஏற்படுத்தக்கூடிய சங்கீதம் பயிலுதல், சித்திரம் ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும்.

➢ **முழுமையாக பார்வையற்றோர்**

இவர்களுக்கு என உருவாக்கப்பட்டுள்ள "பிறையில்" மொழியில் கற்பிக்க வேண்டும். இதற்காக பிறையில் சிலேட், பிறையில் தட்டச்சு போன்ற உபகரணங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அத்துடன் விரிவுரைக் குறிப்புகளைப் பதிவு செய்து கற்றுக்கொள்ள, பதிவு செய்யும் கருவிகளை பயன்படுத்தி கொள்ள முடியும். மேலும் கணித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளிற்காக "அபகஸ்" கருவியினை பயன்படுத்திக் கற்றுக் கொள்ள வேண்டும்.

➢ **பார்வைக் குறைபாடுடையோர்க்கு**

இவர்களுக்கு கண் பரிசோதனை செய்து அவர்களின் குறைபாட்டுக்குப் பொருத்தமான மூக்குக் கண்ணாடியினை பெற்றுக்கொடுக்க வேண்டும். பின்னர் பிள்ளையின் தேவையினை அறிந்து வகுப்பறையினை ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். பிள்ளை அமரும் இடம், கரும்பலகையில் ஒளிபடுதல் போன்றவற்றை கவனிக்கவேண்டும். இவ்வாறான உதவிகளுடன் சாதாரண கல்வியினை வழங்கி கொள்ளலாம்.

➢ **முற்றாக கேட்டல். பேச்சுக்குறைபாடுடையோர்**

இவர்களுக்கு "சைகை" மொழி மூலமே கற்பித்தலினை இலகுவாக மேற்கொள்ள முடியும். எனினும் பிள்ளைகளின் கேட்டல் திறனை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தால் அவர்களிற்கு உதட்டு வாசிப்பு முறை மூலம் பிள்ளைகளினை முகத்துக்கு நேரே வைத்துச் சொற்களினைக் கற்பித்துக் கொள்ளலாம். மேலும் இவர்களிற்கு விடயங்களினைப் பார்த்து எழுதி கற்பிக்கக் கூடியதாக இருப்பதுடன் சாதாரண பாடங்களைக் கற்பிக்க முடியும்.

➢ **கேட்டல் குறைபாடுடையோர்**

இவர்களுக்கு உதட்டு வாசிப்பு மூலம் கற்பித்தலினை மேற்கொள்வதுடன் பெரிய ஒலியில் மற்றும் வானொலி மூலமான கற்பித்தலினை மேற்கொள்ள முடியும் என்பதுடன்,கேட்டல் கருவியினைப் பயன்படுத்தி கற்றலில் ஈடுபட மாணவர்களை வழிப்படுத்த வேண்டும் என்பதுடன் சாதாரண பாடங்களைக் கற்பிக்க முடியும்.

➢ **மெதுவான உளவளர்ச்சி உடையோர்**

இவர்களில் உளவளர்ச்சி குன்றியோர் டவுன்சிங்றோம், துறுதுறு குழந்தைகள் போன்றோர் அடங்குகின்றனர். இவர்களுக்கு கால வயதுக்கு ஏற்ப உளவயது (நுண்ணறிவு) வளர்ச்சியடைவதில்லை. எனவே உளவளர்ச்சிக்கு ஏற்றதான பயிற்சிகளை வழங்கவேண்டும். இவர்களுக்கு மன வளர்ச்சியினை ஏற்படுத் தக்கூடிய இசை, ஆடல் ,பாடல் மற்றும் விளையாட்டு முறையில் கற்பித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் இறைவணக்கம், தியானம் போன்றவற்றிலும் ஈடுபடுத்திக் கொள்ளலாம். எனினும், இவர்களுக்கு எதிர் பார்த்தளவு சாதாரண கல்வியினை வழங்குவது கடினமாகக் காணப்படும்.

➢ **உடல் அங்கவீனமானவர்கள்**

இவர்களின் அங்கவீனத்திற்குத் தேவையான உபகரணங்களை (சக்கர நாற்காலி, ஊன்று கோல், செயற்கை கால்,கை) பெற்றுக் கொடுப்பதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான சிகிச்சையினைப் பெறுவதற்கும் வழிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் இப்பிள்ளைகளிற்கு அசௌகரியம் ஏற்படாவண்ணம் வகுப்பறை தளபாடங்களையும் பொருட்களையும் ஒழுங்கு படுத்திக் கொள்வதுடன் சாதாரண பாடங்களை க் கற்பிக்க முடியும்.

➢ தற்சிந்தனை (Autism) உடையோர்

இவர்கள் ஒரு துறையில் நாட்டமுடையவர்களாகவும் ஒரு துறையில் வளரக்கூடியவராகவும் காணப்படுவார்கள். பெரும்பாலான விஞ்ஞானிகள் Autism இயல்பு உடையவர்களாக காணப்பட்டார்கள். இவர்களுக்கு கண், கண் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய கற்பித்தல் முறை, பொருட்களுடன் விளையாடுதல், இசையினை இரசிக்க விடுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியும். எனினும் இவர்களுக்கு என்று பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கொண்ட "ஒடிஷம்" நிலையங்களில் வைத்துக் கற்பிப்பதன் மூலம் இவர்களை சிறப்பாக வழிப்படுத்த முடியும்.

➢ சுகாதாரக் குறைபாடுடையோர் :-

இவர்களை நோய் பாதிப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ள சிகிச்சையினை பெற்றுக்கொள்ளக் கூடியதாக வழிப்படுத்தவேண்டும். மேலும் வகுப்பறைகளில் பிள்ளை ஆரோக்கியமாக இருக்கின்றதா எனவும் உரிய மருந்துகளை உட்கொண்டு வந்துள்ளதா எனவும் மேற்பார்வை செய்ய வேண்டும். மேலும் இப்பிள்ளைகளுக்குச் சாதாரண பாடங்களைப் பிள்ளையின் ஆரோக்கியத்தினைக் கருத்திற் கொண்டு கற்பிக்க வேண்டும்.

➢ மூளை பாதிக்கப்பட்டோர் :

இவர்களுக்கு சிகிச்சை முறைகளை தேடிப் பெற்றுக்கொடுக்க வேண்டும். மேலும் மகிழ்ச்சிகரமான செயற்பாடுகள் மற்றும் மகிழ்ச்சியான விளையாட்டுக்கள் என்பவற்றில் இவர்களை ஈடுபடுத்த வேண்டும் என்றும் சாதாரண கற்பித்தலினை மேற்கொள்வது கடினமாக இருக்கும்.

➢ அவதானக் குறைபாடு:

இதில் அவதானக் குறைபாடு (Add), அவதானத்துடன் கூடிய அதீத செயற்பாடு (Adhd) எனும் இரு தன்மைகள் காணப்படும். இவர்களின் தன்மைக்கு ஏற்ப வழிப்படுத்த வேண்டும். இவர்கள் சாதாரண கற்றலில் ஈடுபடும் போது அடிக்கடி பெயர் கூறி அழைத்துக் கற்றலின்பால் கொண்டு வரல் வேண்டும்.

இவ்வாறான விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியும். எனினும் விசேட கல்வியினை வழங்கும்போது முதலில் மருத்துவப் பரிசோதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் பிள்ளையின் விசேட தேவையின் தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுடன், அதன் சான்றிதழினையும் பேண வேண்டும். இவ்வாறு மருத்துவப் பரிசோதனை செய்து சான்றிதழைப் பேணுவதன் மூலம் பிள்ளைகளுக்கான பொருத்தமான கற்பித்தலினை திட்டமிட்டுக் கொள்வதுடன், பெற்றோருக்கான ஆலோசனைகள் மற்றும் பொதுப்பரீட்சைகளில் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் என்பவற்றினைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

➢ **விசேட கல்வியின் தோற்றம்**

விசேட கல்வி பற்றிய அறிமுகம் பல ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்து விட்டது. முதலில் இப்பிள்ளைகளை இல்லாதொழிக்கும் செயற்பாடுகள் காணப்பட்டன. பின் 2ம் உலக மகா யுத்தத்தில் மனித குண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டார்கள். யுத்தம் முடிந்த பின்னைய காலத்தில் இப்பிள்ளைகளைப் பராமரிக்கும் இல்லங்கள் அமைத்துத் பராமரிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. பின் பராமரிப்புச் செயற்பாட்டுடன் கல்வியை புகட்டும் எண்ணத்துடன் வதிவிடப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன்படி இலங்கையிலும் 1912 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் "கைதடி நவீல்ட்"பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறு பல வதிவிடப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இப்பிள்ளைகளுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## விசேட கல்வியின் இன்றைய பரிமாணமும் இலக்குகளும்

விசேட கல்வி செயற்பாடுகள் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று சாதாரண பிள்ளைகளுடன் இணைக்கும் "உட்படுத்தல் கல்வி" என்ற பரிமாணமாக மாறியுள்ளது. அதாவது விசேட தேவையுடைய பிள்ளைகளை அவர்கள் வாழும் இடத்திற்கு அருகாமையில் உள்ள சாதாரண பாடசாலையில் அவர்களின் சகோதரர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் சாதாரண பிள்ளைகளுடன் இணைத்து வகுப்பறையில் வைத்து கற்பித்தலினை மேற்கொள்ளல் "உட்படுத்தல் கல்வியாகும்." இது 1994ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டின் அலமன்கா நகரத்தில் நடைபெற்ற உட்படுத்தற் கல்வி மாநாட்டில் இந்த உட்படுத்தல் கல்வி நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இதன்படி இன்று விசேட கல்வியின் இலக்காக மாணவர்களைக் கற்பித்தல் உட்படுத்தல் கல்வியில் இணைத்தலாகக் காணப்படுகின்றது. இதற்கு முன்னதாக இப்பிள்ளைக்குத் தனியான பயிற்சியளிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என விசேட கல்வி அலகுகளினை பாடசாலைகளில் உருவாக்கி செயற் படுத்தும் திட்டமும் காணப்படுகின் றது. எனவே, இன்று விசேட கல்வி யின் திட்டமாகப் பாடசாலைகளில் விசேட தேவையுடைய பிள்ளை களைச் சேர்த்து நேரடியாக வகுப் பறைக்கு உட்படுத்தல் கல்விக்கு அனுப்பக் கூடிய பிள்ளைகளை வகுப் பில் சேர்த்து அல்லது நேரடியாக அனுப்ப முடியாவிட்டால் விசேட கல்வி அலகுகளை உருவாக்கி பயிற்சி யளித்து உட்படுத்தல் கல்விக்கு அனுப்புவதாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசக்கல்வி

திரு.சீவரத்தினம் கமலதாஸ்
ஆசிரியர்,
Dip.in Teaching(English)
யா/தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாலயம்

இலவசக்கல்வி இல்லாதவர்க்குப் பேருதவி
பெருமையுடன் கூறிடுவோர் படித்தறிந்த பண்பாளர்
வீட்டின் பசி போக்க வீதியிலே சாம்பிராணி
விற்கும் சிறுமிகளும்
தந்தை போரிலே சாக வாழ வழியின்றி
அம்மா கூலி வேலைக்குச் சென்றதும்
சிறிய கைகளாலே வீடுபெருக்கி
சமைத்து தம்பி தங்கைகளைக் குளிப்பாட்டி
எதிர்காலச் சுமைகளை இப்போதே சுமக்கும்
பிஞ்சுக் குழந்தைகளும்
கருவிலிருக்கும் சிசு கூடப் பிறக்குமுன்னே
கடனாளியாக்கப்படும் அதிசயம்
இன்றும் எம் மண்ணில் நிகழ்வதால்
கல்லாமை நீங்காது இலவசக்கல்வி வழிகாட்டாது.
இளமையில் கொடுமைதரும்
வறுமை ஒழிக்கப்படும் வரை
ஒழிக்கப்பட்டாலும் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் பள்ளித் தெரிவுக்கு தகுதிமட்டும்
திறமையாக அமைய வேண்டும் என
கல்வியதிபதி கூறினாலும்
பெரிய பள்ளியதிபரின் தெரிவு
தகுதி மட்டுமல்ல பண அன்பளிப்பும் தான்!
என்ற நிலை மாறுமட்டும்
இலவசக்கல்வி என்ற பேச்சு
இலவசம் என்பது மட்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

தீவகக்கல்வி வலயத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் மகாநாட்டை முன்னிட்டு "தீவக ஒளி" என்ற மலரினை வெளியிடுவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"தீவக ஒளி" என்ற நூல் மலர்வதற்குச் சகல வழிகளிலும் ஆக்கமும், ஊக்கமும் வழங்கி, வழிகாட்டியாக நின்று நெறிப்படுத்திய தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.சு.சுந்தரசிவம் அவர்களுக்கு என்றென்றும் நன்றிகள் உரித்தாகட்டும்.

"தீவக ஒளி " என்ற மலருக்கு ஆசிச்செய்திகள்,வாழ்த்துச் செய்திகள் வழங்கிய வடமாகாணக் கல்வியமைச்சர், கல்வியமைச்சின் செயலாளர், மாகாணக்கல்விப்பணிப்பாளர், வலக்கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப்பணிப்பாளர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

10658

அத்துடன் பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் பெருமனது கொண்டு மிகக்குறுகிய காலத்திற்குள் ஆக்கங்களைத் தந்துதவிய அதிபர், ஆசிரியர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் அனை வருக்கும் நன்றிகள் என்றும் உரித்தாகட்டும்.

மேலும் "தீவக ஒளி" என்ற நூல் மலர்வதற்கு இரவு,பகல் பாராமல் பாடுபட்டுழைத்த மலர்க்குழு உறுப்பினர்களுக்கும், ஆலோசனைகள் தந்துதவிய அன்புள்ளங்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

இதற்கும் மேலாக மிகக்குறுகிய காலத்தில் ஆசிரியர்களின் ஆக்கங்களை அச்சுப்பதிப்புச் செய்து, நூலுருவாக்கித்தந்த தீபம் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளருக்கும், சக ஊழியர்களுக்கும் என்றென்றும் நன்றிகள் உரித்தாகட்டும்.


அத்துடன் "தீவக ஒளி" மலர் வெளியீட்டில் பங்குபற்றிச் சிறப்பித்த நல்லுள்ளங்கள் அனைவருக்கும் நன்றிகள். இந்நூல் வெளியீட்டிற்குப் பல வகையிலும் தம்மாலான பங்களிப்பை வழங்கி உதவிய அனைவருக்கும் தீவக வலயத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது."**

"நன்றி"

என்றும் அன்புடன்

"தீவக ஒளி" மலர்க்குழுவினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தீபம் பிறிண்டேர்ஸ் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org